# பிரபந்த தீபிகை

ஆசிரியர்

வேம்பத்தூர் முத்துவேங்கட சுப்பைய நாவலர்

பதிப்பும் உரையும்

ச. வே. சுப்பிரமணியன்
அன்னி தாமசு

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES
டி. டி. டி. ஐ. அஞ்சல், சென்னை - 600 113.

# BIBLIOGRAPHICAL DATA


| | | |
|---|---|---|
| Title | — | Pirapanta Tipikai |
| Author | — | Vempattur Muttuvenkata Cuppaiya Navalar |
| Editors | — | Dr.S.V. Subramanian M.A.,Ph.D<br>*Director*<br>Dr. Annie Thomas M.A ,Ph.D.,<br>*Senior Research Fellow*<br>International Institute of Tamil Studies<br>TTTI Post, Madras-600 113 |
| Publisher & Copy right | — | International Institute of Tamil Studies<br>TTTI Post, Madras-600 113 |
| Publication Number | — | 55 |
| Language | — | Tamil |
| Edition | — | First, October-1982 |
| Paper used | — | Mandya |
| Size of the book | — | 21×14 Cms |
| Printing types used | — | 10, 12 points |
| Number of Copies | — | 1,200 |
| Number of Pages | — | xxiv + 217 |
| Price | — | 12-00 (Rupees Twelve) |
| Printers | — | Meipporul Achagam, Ayanpuram, Madras-600 023. |
| Binding | — | Card Board, lamination |
| Artist | — | Eswari |
| Subject | — | Treatise on Literary genres and connected aspects. |
| Special Information | — | Manuscript Edition |

# முகவுரை

டாக்டர். ச.வே. சுப்பிரமணியன்
இயக்குநர்,
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்.

அச்சில் வராத, தேவையான பல நூல்களை இந் நிறுவனம் சுவடிகளிலிருந்து வெளியிட்டு வருகின்றது. அதில் இந்நூல் பத்தாவதாக அமைகின்றது. ஏற்கெனவே பாட்டியல் மரபில் வருகின்ற நூலுள் ஒன்றாகிய பிரபந்தத் திரட்டை இந்நிறுவனம் 1980-இல் வெளியிட்டுள்ளது. இப்போது அவ்வரிசையில் பிரபந்த தீபிகை என்ற நூலையும் வெளியிடுகின்றது.

இந்நூலுள் வெறும் பிரபந்தப் பட்டியல்கள் மட்டுமன்றிப் பல புதிய செய்திகளும் கூறப்பட்டுள்ளன. இச் செய்திகள் இன்னும் ஆராயப்பட வேண்டிய நிலையில் உள்ளன. இதுபோன்ற பல நூல்கள் தமிழ்ப் பண்பாட்டை அறியத் துணைபுரியும் ஆதலால் நிறுவனம் இதுபோன்ற நூல்களை வெளியிடுகின்றது.

இந்நிறுவனப் பணிகளுக்கெல்லாம் ஆக்கமும், ஊக்கமும் தருகின்ற கல்வியமைச்சர் மாண்புமிகு செ. அரங்கநாயகம் அவர்களுக்கு மிக்க நன்றியுடையோம்.

அன்புள்ள,
23-10-'82 ச. வே. சுப்பிரமணியன்

# நன்றியுரை

நிறுவனத்தில் சுவடியியல் துறையைத் தொடங்கி எங்களைச் சுவடிப்பதிப்பில் ஈடுபடுத்திய எங்கள் நிறுவனத் தலைவர், கல்வி அமைச்சர் மாண்புமிகு செ. அரங்கநாயகம் அவர்களுக்கு எங்கள் நன்றி.

இக் குறிப்பிட்ட சுவடியைத் தேர்ந்து எடுக்க உதவியும், பிரதி செய்து தந்தும், தேவைப்பட்ட விடத்து நூலகப் பிரதியுடன் ஒப்பிடத் துணை நின்றும் அமைந்த நிறுவனச் சுவடியியல் ஆய்வு அலுவலர்கள் திரு. வி. ஆர். மாதவன், திரு. பூ. சுப்பிரமணியன் ஆகியோருக்கும் எம் நன்றி.

அச்சகத்திற்கு அனுப்புமுன் பதிப்பைப் பார்வையிட்டு, விளக்கக் கருத்துகளும், தெளிவுக்கேற்ற மாற்றங்களும் கூறி யமைந்த, நிறுவனத் தொல்காப்பிய உரைவளப் பதிப்பாளர் திரு. ஆ. சிவலிங்கனாருக்கும், வடமொழி மரபு தொடர்பான ஐயங்களை நீக்கி, செய்திகள் தந்து உதவிய நிறுவன முதுநிலை ஆராய்ச்சியாளர் டாக்டர் ஆர். விஜயலட்சுமி அவர்களுக்கும் எமது நன்றி.

நூலைச் செவ்வையாக அச்சியற்றிய மெய்ப்பொருள் அச்சகத்தாருக்கும் எம் நன்றி உரித்து.

சென்னை - 113 பதிப்பாசிரியர்

அக்டோபர் '82.

# உட்பொருள்


| | பக்க எண் |
|---|---|
| முன்னுரை | vii |
| Introduction | xxi |
| பிரபந்த தீபிகை | 1—208 |

கடவுள் வாழ்த்து 1, பாயிரம் 4, புலவர் 5, பொருத்தம் 8 பிரபந்தப் பட்டியல் 12, பிரபந்தங்கள் தொண்ணூற்றாறின் இலக்கணம் 25, மன்மதன் 89, கருப்பொருள் 91, இரட்டைநாக பந்தம் 96, நூறணி 97, தண்டியின் அணி 105, கீழ்க்கணக்கு 112, பத்துப் பாட்டு 113, விண்மாதர் 114, நாயகி நாயகன் வகை 116, தாளம் 121, ஏழிசை 123, ஏழிசை உரிமைகள் 126, முப்பத்திரு இராகம் 128, புருட ராகம் 129, வகுப்புறு இராகம் 131, இராகத் தொகுதி 132 குணராகம் 134, காலராகம் 134, வேதம் 136, உப வேதம் 137, ஸ்மிருதி 137, உபநிடதம் 139, சிவாகமம் 140, சிற்பத் தொழில் 140, சிற்ப நூல் 141, சிவ தீட்சை 142, சைவம் 142, சோடச தானம் 143, புராணம் 152, உப புராணம் 154, உடற் குற்றம் 154, அறம் 155, கலை 156, முகம் 158, மணம் 161, தசாவதாரம் 163, ஆழ்வார் பிறப்பு 165, எழுவகைப் பிறப்பு 171, நாயன்மார் 172, சங்கப் புலவர் 175, தசாங்கம் 180, சின்னம் 181, அரச, இயல்பு 181, அரசர் குழு, துணைவர், சுற்றம் 183, அரசியலணி, வகை 183, கிருதயுக மன்னர் 185, திரேதா யுக மன்னர் 186, துவாபர யுக மன்னர் 187, கலியுக மன்னர் 189, திருவிளையாடலின் பாண்டிய மன்னர் 191, வாணர் 192, வடுக மன்னர் 197, நவாபுகள் 197, மாலைகள் 201, நாற்கவி 202, நாற்புலவர் 202, தேசம் 204, பாயிரம், வாழி 207.

| | |
|---|---|
| பாடல் முதற்குறிப்பு | 209 — 210 |
| சொல்லகராதி | 211 — 217 |

# சுருக்க விளக்கம்

## குறியீடு

| | | |
|---|---|---|
| இ-கு | — | இலக்கணக் குறிப்பு |
| இ-ள் | — | இதன் பொருள் |
| ப., பக். | — | பக்கம், பக்கங்கள் |
| வி-ரை | — | விளக்க உரை |

## நூல்கள்

| | | |
|---|---|---|
| இலக்கணம் | — | இலக்கண விளக்கம் |
| சிதம்பரம் | — | சிதம்பரப் பாட்டியல் |
| சுவாமி | — | சுவாமிநாதம் |
| தண்டி | — | தண்டியலங்காரம் |
| திரட்டு | — | பிரபந்தத் திரட்டு |
| தீபம் | — | பிரபந்ததீபம் |
| தீபிகை | — | பிரபந்த தீபிகை |
| தொன்னூல் | — | தொன்னூல் விளக்கம் |
| நவநீதம் | — | நவநீதப் பாட்டியல் |
| பன்னிரு | — | பன்னிரு பாட்டியல் |
| மரபியல் | — | பிரபந்த மரபியல் |
| முத்து | — | முத்துவீரியம் |
| வெண்பா | — | வெண்பாப் பாட்டியல் |

# முன்னுரை

பிரபந்த தீபிகை, பாட்டியல் இலக்கண மரபில் அமைந்த நூல். சுமார் நூறு விருத்தங்களிலான இதன் ஒரு பகுதி மட்டும் முன்பு அச்சேறியுள்ளது. இப்பொழுது, முழுநூலும் சுவடியிலிருந்து பதிப்பிக்கப்படுகின்றது.

அச்சு

மதுரைத் தமிழ்ச் சங்கப் பத்திரிகையான செந்தமிழ், பிரபந்த தீபிகையின் முதல் இருபத்தாறு பாடல்களை (26-வது பாடலில் ஒன்றரை அடி வரை), 1918-19-இல் வந்த 17-வது தொகுதியில் (பக். 153-158) முதன் முதல் வெளியிட்டது.

உ

சிவமயம்

பிரபந்த தீபிகை

1. மதிநாக நதிவேணி .......

எனத் தொடங்கிச் செல்லும் இதனைத் தந்து உதவியவராக வேம்பத்தூர் பி. பாஸ்கரையர், தமிழ்ப்பண்டிதர், சேதுபதி ஹைஸ்கூல், மதுரை, குறிக்கப்படுகின்றார். 'பிரபந்த தீபிகை' என்பதன் அடிக் குறிப்பு,

> இது வேம்பத்தூர்ச் சங்க வித்துவான்களி லொருவரா கிய பெரிய சாமாவையரவர்கள் புத்திரர் பாப்புவைய ரென்ற முத்து வேங்கட சுப்பையரவர்க ளியற்றியது. ஏட்டுப் பிரதியிலுள்ள படியே வெளியிடப் படுகிறது. இனிப் பரிசோதித்துக் குறிப்புரையுடன் புத்தக ரூப மாக வெளியிடப்படும்.

என நூலாசிரியர், ஏட்டுப் பதிப்பு என்பனவற்றைக் குறிக்கின்றது. ஆயின் முழுமையாகப் பிரபந்த தீபிகை செந்தமிழிலோ, தனி யாகவோ இந்நாள் வரை வெளிவந்ததாகத் தெரியவில்லை.

சுவடி

சென்னை அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம், சுவடி எண்: R. 3479-ஆக இப் பிரபந்த தீபிகையின் கையெழுத்துக் காகிதப்பிரதி ஒன்றைக் கொண்டுள்ளது.

இதற்கு மூலமாக அமைந்தது மதுரைத் தமிழ்ச் சங்க ஏடு என்ற குறிப்பும் உள்ளது. 1952-53-இல் எஸ். விஸ்வநாத சாஸ்திரி என்பவரால் இவ் ஏடு பிரதிசெய்யப்பட்டுள்ளது. மூலத்தின் மொத்தச் சுவடி ஏடுகள் எண்ணிக்கை 62 என்பதும் புலப்படுகின்றது. அதில் இரு பக்கங்களும் எழுதப்பட்டுள்ளமையும். தலைப்பு ஏடு ஒன்றும் அமைந்தமையும் குறிப்பாகப் புலப்படுகின்றன அத்துடன், இந்த ஓலைச் சுவடியும் மூலமன்று பிரதியே என்பது, 'இந் நூலாசிரியர் கைப்பட எழுதிய சுவடியிலிருந்து படியெடுத்து வைக்கப்பட்டுள்ளது' என்ற குறிப்பால் வெளிப்படுகின்றது.

சுவடியின் பொருள், அமைப்பு, நிலை போன்றன குறித்த சிந்தனைகள் கையெழுத்துப் பிரதிக்குரிய நூலகக் குறிப்பில் புலப்படுத்தப்படுகின்றன.

> இந்நூல் முற்றும் உள்ளது. 100 பாடல்கள் கொண்டது. வேம்பத்தூர் முத்துவேங்கிட சுப்பய்ய நாவலன் என்னும் புலவரால் பாடப்பட்டதாகும். 96 வகைப் பிரபந்தங்களைப் பாட எடுத்துக் கொள்ளும் இலக்கண முறைகளைப் பற்றியும், பொருள்களைப் பற்றியும், தொகுத்துப் பாடல் வடிவில் கொடுக்கப்பட்டிருக்கிறது. இதனால் பிரபந்தங்களின் இலக்கணங்களும் பொருள்களும் விளக்கமுறலாம். நன்றாக உள்ளது. பயன்படத் தக்கது.

இக்கையெழுத்துப் பிரதி யொன்று மட்டுமே, இப்பதிப்பிற்கு அடிப்படையாக அமைகின்றது.

இதன் முதற்பக்கம் பிள்ளையார் சுழியுடன் ஆரம்பித்து

> இஃது - வேம்பத்தூரிலிருக்கும் கவிராச பண்டிதர் வம்ச உற்பவரான பெரிய சாமாவய்யன் புத்திரன் பாப்புவய்யனாகிய முத்து வெங்கிட சுப்பய்ய பாரதிகளால் செய்யப்பட்ட பிரபந்த தீபிகை;

எனச் செல்கின்றது. ஏட்டில், தலைப்பு ஏட்டின் கீழ்ப்பகுதி யில் இது அமைந்திருக்க வேண்டும்.

தொடர்ந்து வரும் இரண்டாம் பக்கம்,

இது யாவருக்கும் தெரிய வேண்டியது.

என்ற குறிப்புடன் கிரந்த எழுத்துப் பகுதிகள் சிலவும் கொள் கின்றது. இவை சுபமஸ்து, ஸ்ரீமதே ராமானுஜாய நம: பிரபந்த தீபிகை என அமைவதாகத் தெரிகின்றது.

தொடர்ந்து, எண்ணிக்கை இடாத இரு பாடல்கள் (ப, 1,3) வந்த பின் மீண்டும் இத்தகு கிரந்த எழுத்துகள் சில உள. இந்த இரு பாடல்களும் முன் சுட்டிய செந்தமிழ்ப் பத்திரிகை வெளியீட்டில் இல்லாமை குறிபிடத் தக்கது.

மீண்டும், பிரபந்த தீபிகை என்ற தலைப்புடன் 'மதிநாக' எனும் முதற்பாடல் தொடங்கி நூல் மேற் செல்வதால் நூலின் உண்மையான தொடக்கம் இதுதானோ எனும் எண் ணமும் ஏற்படுகின்றது.

கையெழுத்துப்பிரதி, ஒன்று முதல் நூறுவரை எண் இட்டு விருத்தங்களைத் தந்த பின்,

குரோதன ௵ ஆவணி ௴ 23.

எனத் தருவது ஏட்டுப் பிரதியின் காலக்குறிப்பு ஆகலாம். இறுதிப்பக்கம், மீண்டும் கிரந்த எழுத்துகளில், பெரிய சாமா வய்யன், ஸ்வஸ்த லகிதன், ஹரி ஓம், பிரபந்த தீபிகை, ஸ்ரீ ராமானுஜாய நம: என்பனவற்றைத் தருகின்றது. தொடர்ந்து

பிரபந்த தீபிகை முற்றும்.

என்னும் குறிப்புடன் கையெழுத்துப் பிரதி நிறைவுறுகின்றது.

நூல்

நூலின் பெயர் பிரபந்த தீபிகை என்பது' அச்சில் வெளி வந்த பகுதியின் தலைப்பாலும், கையெழுத்துப் பிரதியின் தொடக்கம், இடை, முடிவுக் குறிப்புகளாலும் புலப்படுகின்றது. ஆயின் 'பிரபந்த தீபம்' என நூலாசிரியரே இறுதிப் பாடலில் (100) இதனைக் குறிப்பிடுவது எண்ணற்குரியது. விளக்கு என்ற பொதுப் பொருண்மை தீபிகை - தீபம் ஆகிய இரண் டிற்கும் அமைவதால், மாறுபாடின்றியே இச் சொல் வேறுபாடு பெயரில் ஆளப்படுகின்றது போலும்.

பிரபந்தம் எனும் பெயர் நிலை இலக்கியத்துக்கும் இலக்க ணத்துக்கும் பெயர்ப்பகுதியாக வருகின்றது. நாலாயிர திவ் வியப் பிரபந்தம், பிரபந்த மரபியல் என்பனவற்றைச் சான்றாக் கலாம். இவற்றுள் பின்னது, பாட்டியல் நூல்களுள் 'பிரபந்த'த் தலைப்புக் கொள்ளும் முதல் நூல் (16-ஆம் நூ). பிரபந்த தீபம், பிரபந்தத் திரட்டு எனப் பின் நூல்களிலும் இப் பெயர்த் தொடர்ச்சி உண்டு.

தீபிகை எனும் நூற்பெயர், பிரபந்த தீபிகைக்கு முன் எவ் இலக்கண நூலுக்கும் அமைந்ததாகத் தெரியவில்லை. ஆயின் ஒத்த பொருளுடைய விளக்கம் (விளக்கு) என்பது, தமிழ் நெறி விளக் கம் (12-ஆம் நூ.முன்), அகப்பொருள் விளக்கம்(12-ஆம் நூ),இலக் கண விளக்கம் (17-ஆம் நூ), தொன்னூல் விளக்கம் (18-ஆம் நூ எனப் பல வகை இலக்கணங்களில் பெயர்ப்பகுதியாகின்றது.

நிகண்டுகள், தீபம், தீபிகை, விளக்கம் என்ற பெயர்கள் பெறுவது இங்குச் சுட்டத்தக்கது. பாரதி தீபம் (17-ஆம் நூ), அரும் பொருள் விளக்க நிகண்டு(18-ஆம் நூ), நாம தீப நிகண்டு (19-ஆம் நூ), நானார்த்த தீபிகை (1850) என்பன. எனவே தெளி வும், விரிவுமுடைய பொருண்மை யமைப்புக் காரணமாக இலக் கணமும், அதனுடன் தொடர்புடைய நிகண்டும் விளக்கம்-தீபம்- தீபிகை எனப் பெயர் பெறுதல் புலப்படுகின்றது. இலக்கண நூல் களுள் இப் பிரபந்த தீபிகை மட்டுமே இப் பெயர்ப் பொருத்தம் கொள்வதும் எண்ணத் தக்கது.

நூலாசிரியர் பற்றிய முதற் குறிப்பு, செந்தமிழ்ப் பத்திரிகை யில் 'வேம்பத்தூர் சங்க வித்துவான்களி லொருவராகிய பெரிய சாமாவையரவர்கள் புத்திரர் பாப்புவைய ரென்ற முத்து வேங் கட சுப்பையர்' என அமைகின்றது.

> வேம்பத்தூர்ப் புலவர் பரம்பரை புறநானூற்றுக் கால முதலே தொடங்குகின்றது. வேம்பற்றூர்க் குமரனார் சங்கப் புலவர் ஆவர். திருவாலவாயுடையார் திருவிளை யாடற் புராணம் பாடிய பெரும்பற்றப் புலியூர் நம்பி வேம்பத் தூரினரே. இவ்வூரில் இருந்த புலவர் குழாத் தினர் வேம்பத்தூர்ச் சங்கத்தார் என்று பண்டுதொட்டு வழங்கப் பெற்றனர்.*

எனவும், இவர் சோழிய வகுப்பினர் எனவும் தீபிகையாசிரியரின் வரலாற்றை நினைப்பர்.

---

* இலக்கண வரலாறு- சோம. இளவரசு, தொல்காப்பியர் நூலகம், சிதம்பரம், 1963, ப. 209.

பிரபந்த தீபிகைக் கையெழுத்துப் பிரதியுடன் தொடர்புடைய செய்திகள், இவர் பெயரை, வேம்பத்தூர்முத்து வேங்கிட சுப்பைய நாவலன் எனவும், வேம்பத்தூர் முத்து வேங்கிட சுப்பய பாரதி எனவும் தருகின்றன. எனவே புலமை பற்றி இவருக்கு நாவலன், பாரதி எனும் பட்டங்கள்-விருதுகள் வழங்கப்பட்டிருக்கலாம் என எண்ண முடிகின்றது.

தீபிகையின் உட்சான்று, ஆசிரியரே தன் பெயர் மொழிந்தமையைத் தருகின்றது. தீபிகையின் இறுதிப் பாடலான நூறாவது விருத்தம் இவ் உட்சான்றுக்கு இடமளிக்கின்றது.

> அளகையி, னோங்கு வேம்பத்தூர் வளர்
> வேதியன் முத்துவெங் கிடசுப்ப நாவலன்
> விள்ளும் பிரபந்த தீப
> மிக்க தமிழ் (100)

ஆசிரியரின் பெயரும், ஊரும், நாவலன் எனும் விருது அல்லது தகுதியும் இதில் குறிப்புப் பெறுகின்றன.

ஆசிரியர் மிகுதியாக மதுரை நகருடன் சார்பு கொண்டவர் என்பதும் அவர் நூலை நோக்கப் புலப்படுகின்றது. தமிழ் மன்னர், புலவர் பற்றிப் பேசுவது இவ் எண்ணத்தை அளிக்கின்றது. மதுரையை ஆண்டவரை மட்டும் கவிஞர் எண்ணுகின்றார்; மதுரை மீனாட்சி அருள்பெற்ற சங்கப்புலவரை மட்டும் பட்டியல் செய்கின்றார். அத்துடன் நூலின் இறுதியான தற்சார்புப் பாடலில் மதுரை மீனாட்சியை மிகுதியாக எண்ணுகின்றார்.

> பாதி மதி கங்கையுந் தும்பையணி சோமேசர்
> பங்கில் வளர் தேவி நீலி
> பனிவரைப் புதல்வி வானரவீர மதுரை நகர்
> பாலி யானந்த வல்லி... (100)

இவர் வேதியர், சைவர், மீனாட்சியை வழிபடு கடவுளாகக் கொண்டவர் போன்ற எண்ணங்களும் இம் மேற் குறிப்புகளிலிருந்து வெளிப்படுகின்றன.

நூலின் காலம் பற்றிய எண்ணத் தெளிவும் தீபிகையின் இறுதியான நூறாவது விருத்தம்வழி அமைகின்றது,

> ...சகாப்தம்
> ஓதுவர் சகத்திரத் தெழுநூற்றி யெழுபதி
> னொன்று வருடம் சவும்யம்
> உவா மீனரவி... (100)

சகம் 1771 என அமைவதால், அதற்கு நேரான ஆண்டு, கி.பி. 1849 என அமைகின்றது.

நூலின் யாப்பு, கழிநெடிலடி ஆசிரிய விருத்தமாக அமைகின்றது. பெரும்பாலும் பன்னிருசீர் விருத்தங்களே காணப்படுகின்றன. இருபத்து நான்கு சீருடையனவும் உள.*

நூறு விருத்தங்களுக்கு முன் அமையும் இருபாடலில் ஒன்று நூற்பகுதி போன்றே விருத்தமாகிப் பதினான்கு சீர் நிலை காட்டினும், தொடர்ந்து வருவது சிதைந்த வெண்பாவின் ஈரடிகளாக அமைகின்றது. பெரும்பாலும் வடிவச் செவ்வி பெறினும் சீர்நிலையில் குறை தோன்றுதலும் உண்டு.

விருத்தங்கள் அனைத்தும் எதுகை பெற்றும், மிகப் பெரும்பான்மையின், அடிகள் மடங்கியமையுமிடத்து மோனை கொண்டும் வருகின்றன. ஆயின் விருத்தங்கள் சிலவற்றில் ஒவ்வொரிடத்து இம் மோனை முழுமையாக அமையாமையும் உண்டு**. பொருளுக்கு முதன்மையளிக்கும் இலக்கணமாகையால் தொடையின் இத்தகு குறைபாடு ஏற்பட்டிருக்கலாம். யாப்புச் சரியில்லாத பாடலும் காணப்படுகின்றது (37).

தொகுத்தல் விகாரம், ஓசைகருதி ஏற்பட்டிருக்கலாமோ எனும் எண்ணம், பதின் > பன் (26), முதற் > முற் (8), செயுள் (8,12), வணம் (8), தொணூறு (23 அச்சு) போன்றனவற்றைப் பார்க்க ஏற்படுகின்றது.

நூற்பொருள், நூலின் பெயர் சுட்டுவதற்கேற்பப் பிரபந்தம் தொடர்பானதாக அமைகின்றது. பாட்டியல் மரபில் வரும் நூற்பகுதியிலேயே இவையும் அடக்கப்படுகின்றன. பாட்டியல்கள் பெரும்பாலும், பொருத்தம், பிரபந்தம் இவற்றுடன் சில ஒழிபுப் பொருள்களும் தருகின்றன. பிரபந்தப் பெயருடைய நூல்கள் பெரும்பான்மையும் பல்வகைப் பிரபந்தம் பற்றியே மொழிகின்றன (பிரபந்த மரபியல், பிரபந்த தீபம்). அருகிப் பொருத்தவியல், நிகண்டுத் தொடர்பான செய்திகளும் தருவது உண்டு (பிரபந்தத் திரட்டு). தீபிகை ஓரளவு பிரபந்தத்திரட்டைப் பொருள் நிலையில் ஒத்துச் செல்கின்றது.

---

* 3, 4, 7, 26, 28, 29, 33, 40, 41, 42, 43, 47, 48, 50, 52, 72, 73 74, 89, 93, 94, 95, 96, 98.

** முதற்பாடல்; 16, 21, 23, 25, 29, 41, (94), 96.

பொருத்தம் பொருளாகும்போது பத்துப் பொருத்தங்களைப் பற்றியும் கூறுதல் நூல்கள் இயல்பு. வரையறுத்த பாட்டியல் மட்டும் மங்கலப் பொருத்தத்துடன் அமையும். அவ்வாறே தீபிகையும் (3) அமைகின்றது.

பிரபந்தங்களை விளக்கும் முதல் பாட்டியல் நூலாகப் பன்னிரு பாட்டியல் அமைகின்றது. இந் நூலின் முன்பும் பிரபந்தம் சில பற்றிய எண்ணம் இருந்ததைத் திவாகரம், யாப்பருங்கல விருத்தியுரை போன்றவற்றின் வித்தார கவி விளக்கமும், திவாகரம், பிங்கலம் போன்றவற்றின் ஆண்பாற்பிள்ளைக் கவியின் விளக்கமும் காட்டுகின்றன.

பிரபந்தங்கள் தொண்ணூற்றாறு என்ற எண்ணமும், அவற்றின், தெளிவான பட்டியலும் எல்லா நூல்களிலும் காணப்படவில்லை. அருகிச் சில நூல் எண்ணையும், வேறு சிலவும் பட்டியலையும் தருகின்றன. பிரபந்த மரபியல், பிரபந்தத் திரட்டு என்பன எண்ணிக்கையையும், பொருட்டொகை நிகண்டு, சதுரகராதி போன்றன எண்ணிக்கையுடன் பட்டியலையும் தெளிவாகத் தருகின்றன. தீபிகை பிரபந்தங்களைப் பட்டியல் செய்தும் தொடர்ந்து விளக்கியும் செல்கின்றது (4—33). முன் பின் நூல்கள் கூறாப் புதுப் பிரபந்தம் இதன்கண் இல்லை.

பொருத்தமும், பிரபந்தமும் தவிர இன்னும் பலவகைச் செய்திகளும் தீபிகையில் அமைவது தனித்தன்மையாம். பிரபந்தத் திரட்டு, நிகண்டுகள், தொகையகராதிகள் போன்றன கூறும் சில பல செய்திகளும், பிறவுமாக இவ்வாறு தீபிகையின் பெரும்பான்மை (34-99) அமைதல் தனிச் சிந்தனைக்கு உரியது. மன்மதன் (34), ஐவகை நிலக் கரு (35-38), இரட்டை நாக பந்தம் (39), தண்டி-சந்திராலோகம் கூறும் அணிகள் (40-43), கீழ்க்கணக்கு நூல் (44), பெருங்காப்பியம் என்ற பெயரில் பத்துப்பாட்டு முதலியன (45), அரம்பையர் (46), நாயகன் நாயகி வகை குறித்த வடநூற் செய்திகள் (47,48), தாள இராக எண்ணங்கள் பல (49-56), வேதம் (57), ஸ்மிருதி(58), உபநிடதம் (59), சிவாகமம் (60), சிற்பத்திற்குரிய பொருள்(60), சிற்பநூல் (61), தீட்சையும் சைவமும் (62), தானங்கள் (63-68), புராணம் (69), உபபுராணம் (70), உடற்குற்றம் (70), அறங்கள் (71), கலைகள் (72), முகங்கள் (73), திருமண வகை (74), திருமால் அவதாரம் (75), ஆழ்வார்கள் பிறப்பு (76-80), உயிரினத் தோற்றம் (81), சைவ அடியார் (82-84), தமிழ்ப் புலவர் (85,86), அரசனுக்குரிய தசாங்கம், சின்னம், இயல்பு, துணைவர், சுற்றம்,

குழு, அரசியலணி, அரசியல் வகை முதலியன (87-89), யுக மன்னர் (90-93), திருவிளையாடற்படிப் பாண்டியர், வாணர் (94-95), நாயக்கர், நவாபுகள் (96), பலருக்குரிய மாலைகள் (97) புலமையோர் (98), தேசங்கள் (99) என்பன.

இம் மேற்கண்டவற்றுள் ஒரு பகுதி, முன் நூல் கருத்துகளை வழி மொழிந்து அமைவதாயினும், பிறிதொரு பகுதி புதுமையுடையது. தமிழ் நூல்கள் மட்டுமன்றி வடமரபினவும் கருத்துகள் வழங்கியமையை, நாயகன், நாயகி, தாளம், இராகம், தானம், முகவகை போன்றன காட்டுகின்றன.

கடவுள் வணக்கத்தில் தொடங்கி 'வாழி'யில் முடியும் இந் நூல், பெயரால் பிரபந்தத்திற்கு இலக்கணம் மொழிதலைச் சுட்டுகின்ற போதும், பிற செய்திகளையும் ஏன் கூறுகின்றது என்ற கேள்வி சிந்தித்தற்குரியது. பிரபந்தம், தொடங்குவதிலேயே மங்கலம் கொண்டிருக்க வேண்டும் என்பதற்காக மங்கலச் சொல், தலைவன் பெயரின் முதலெழுத்து ஆகியன பொருந்திச் செல்வதை நினைத்திருக்கலாம். பிரபந்தம் பாடுவதற்குத் தேவையான ஒருசில மொழியப்பட வேண்டும் என்ற நோக்கில், மேற் கண்ட பிற பல செய்திகள் தரப்பட்டிருக்கலாம். சான்றாக, அகப் பொருட் கோவையும் ஐந்திணைச் செய்யுளும் பாடுதற்கு உதவும் என்ற நிலையில் ஐவகைத் திணைக்கரு கூறப்பட்டிருக்கலாம்; தசாங்கப்பத்து, தசாங்கத்தயல், சின்னப்பூ பாடும் வண்ணம் அரசனின் தசாங்கமும் சின்னங்களும் பட்டியல் செய்யப்பட்டிருக் கலாம்; உற்பவ மாலை பாட வாய்ப்பாக மாயவனின் அவதாரங் கள் விரிக்கப்பட்டிருக்கலாம்; சாதகத்துடன் தொடர்புறும் வண்ணம் ஆழ்வாரின் பிறப்புச் செய்திகள் அமைக்கப்பட்டிருக் கலாம்; அன்றியும், இலக்கியம் பாடப்புகுமுன் பல்பொருள் புலமை, செய்தியறிவு தேவை என்ற எண்ணம் பற்றியும் இத்தகு பல செய்திகள் இணைக்கப்பட்டிருக்கலாம். பல நூல்களில் தேடித் திரட்டிக் கொள்ளும் தேவையின்றி அனைத்தையும் ஓரிடத்தில் தொகுத்துக் கொடுக்கும் 'பிரபந்தத் திரட்டின்' முயற்சி போன்றே இத் தீபிகையையும் கருதல் ஒவ்வலாம்.

இயல் தமிழுடன் நின்றுவிடாது, இசை - நாடகச் செய்திகளையும் பொருளாக்கும் முயற்சி இதில் வெளிப்படுகின்றது. தான இராகங்கள் இசைத்தொடர்பும், பலவகை அபிநயத்தை உணர்த்தும் முகங்களும், காதல் நிலையை உணர்த்தும் நாயகன் நாயகியரும் மெய்ப்பாடு பற்றி, நாடகச் சார்பும் காட்டுகின்றன எனலாம்.

இலக்கண நூன்மரபுகள் ஒருசில இப் பிரபந்த தீபிகையின் கண்ணும் தொடர்கின்றன. முன்னிலைத் தொடர்கள் இலக்கண நூல்களில் அமைதல் உண்டு. அறிவுரை கூறும் அறவிலக்கி யங்கள் போன்று, விதிகளை வகுத்துக் கேட்போருக்கு அறிவு றுத்தும், அறிவிக்கும் பாங்காக இதனை இலக்கண நூலுள் கொள்ளலாம். மகடூஉ முன்னிலைகளும், பொதுவான முன் னிலைகளும் இடம் பெறலாம். தீபிகையில் ஏவல் சொல் காரணமாக அங்கங்கு இப் பொதுமுன்னிலை உண்டு.

சப்தத் தாளத்தின் வகையோ கேள் (49)
சங்கீத முறைமை கேள் (50)
இராகத்துள் கருதிடச் சொல் (55)
எனப் புகல் வளர்வுற்ற சிற்ப நூலே (61)
கோ தானமாய்ச் சாற்று (68)

நூலாசிரியர், தான் கூறப் புகுந்த பொருளைத் தன் புது மைப் படைப்பாக, ஆக்கமாகக் கூறாது, முன்னோர் மரபை வழிமொழிந்ததாகக் காட்டுதல் தொல்காப்பியம் முதலே உண்டு. துறைவல்லோர், புலவர், மக்கள், 'இவ்விவ்வாறு கூறு வர்' என்பதால் கருத்துக்கு உறுதியும் அளிக்கப்படுகின்றது எனலாம். முன்னோர் மரபு, உலக மரபு என இவை இணை கின்றன.

அறிந்து வகை பேசுவர்கள் புலவோர்களே (2)
தேர்ந்த பாவலர்களுரை செய்வரே (3)
நீணிலத் துரை செய்வரே (7)
நாயகன் நாயகி வகை சொல்வர்க ளறிஞோர்களே (48)
கூறுவர்கள் பாகவதரே (49)
பாகவதர் கழறுஞ் சங்கீத முறையே (52)
வழுத்துவர் செய்யுளுக்கே (54)
சொல்லுவர்க ளறிஞோர்களே (56)
செப்புவர்கள் பெரியோர்களே (64)
என்று உரை செய்வர் இப் புவியில் மானிடர்க்கே (70)
எனச் சொல்லும் அவனியிற் சுருதி நூலே (75)

தண்டி, சந்திராலோகம் போன்று நூற்பெயர்க் குறிப்புடனும் அமைதலும் சுட்டத்தக்கது.

நூலாசிரியர், நுதலிப் புகுதல் முதலிய உத்தியால் தன்னை நூலுள் வெளிப்படுத்திக் கொள்ளுதலும், பிற ஒவ்வொரு நூல் போன்று தீபிகையிலும் காணப்படுகின்றது. கடவுள் வாழ்த்து, நூல் தொடங்குமிடம் போன்றவற்றில் இவ்வாறு ஆசிரியர் தன்னை நூலில் உட்படுத்திக்கொள்ளுதல் இயல்பாகலாம்.

மலரடி வழுத்தல் செய்வாம் (1)
ஆசிரியமெனும் விருத்தத்தினாற் கூறுதும் (5)

ஆயின் நூலின் உள்ளேயும், எடுத்துக் கொண்ட பொருளை விரிக்கு முன்பு இவ்வாறு மொழிதல் உண்டு.

எழுவகைத் தோற்ற முரைசெய்குவம் (81)
மன்னவர் தசாங்கம் வகுத்துரைப்பாம் (87)
வடுக ரரசாட்சி பகர்வாம் (96)

இவ்வாறு, இத்தீபிகை இலக்கண நூன்மரபுகள் பலவும் பெற்று அமைகின்றது.

**பதிப்பு**

பிரபந்த தீபிகையின் மூலம் மட்டுமமைந்த ஒரு தாள் பிரதியும், சுமார் முதல் இருபத்தாறு பாடலுமுடைய அச்சுப் பகுதியும் அடிப்படையாக இப்பதிப்பு அமைகின்றது.

உரையுடன் அமைத்தால் இந்நூல் ஓரளவேனும் தெளிவுறும் என்பதால், இப்பதிப்பு பதிப்பாசிரியரின் உரையுடன் அமைக்கப்படுகின்றது. பாடலைத் தொடர்ந்து, அது கூறும் பொருண்மை ஓரிருசொற்றொடரில் தொகுத்துத் தரப்படுகின்றது; பின்பு பாடலின் பொழிப்புரை (இ-ள்) என்பதில் அமைக்கப்படுகின்றது; தொடர்ந்து, ஏதேனும் விளக்கக் குறிப்புகள் இருப்பின் (வி-ரை) என அளிக்கப்படுகின்றன. பாடலின் மொழியிலக்கணம் பற்றிய ஏதேனும் குறிப்பு உண்டாயின் (இ-கு) என்பதில் தரப்படுகின்றது. ஒரு பொருள் பற்றிப் பல பாடல் தொடரும் போது அவை இணைத்துத் தரப்படுகின்றன.

தீபிகையின் முதல் இருபத்தாறு பாடல் வரை மட்டுமே ஒப்புமை வாய்ப்பாக அமைந்ததால், அச்சில் உள்ள வேறுபாடு அடிக்குறிப்பாக வாட் குறியுடன் † தரப்படுகின்றது. அச்சில் உள்ள அமைப்பு ஏற்றுக் கொள்ளப்படும் போது, ஏட்டின் பகுதி அடிக்குறிப்பாக உடுக்குறியுடன் * அளிக்கப்படுகின்றது. அன்றியும், அச்சுப் பகுதியில்லாத விடத்தும், பொருள் தெளிவு பற்றியும், பிற நூல் ஒப்புப்பற்றியும் பதிப்பாசிரியரால் கொள்ளப்பட்ட செவ்விகள் நூலுள் அமைக்கப்பட்டு, ஏட்டுப் பாடம் அவ் வுடுக்குறியுடனே அமைத்துவிடப்படுகின்றது. அத்துடன், பாடல் தொடர்பாக எழுகின்ற எண்ணம்-செய்தி சில அடிக் குறிப்பில், குறிப்பு எனத் தரப்படுகின்றன.

அச்சுப்பகுதி கிடைக்கின்ற பாடலிலும், அதற்கு அதிக முதன்மை அளிக்கப்படாது கையெழுத்துப் பிரதியே பதிப்புக்கு அடிப்படையாக்கப்படுகின்றது. எனினும் விடுபாடுகள் நிரப் பவும், தெளிவில்லாத இடத்தைச் செவ்வையாக்கவும் பிறவும், அச்சுப் பகுதி முழுமையாகப் பயன் கொள்ளப்படுகின்றது.

அச்சுப் பகுதிக்கும், எழுத்துப் பிரதிக்கும் சில சிறுசிறு வேறு பாடுகள் உள்ளமை அடிக்குறிப்பில் தரப்படவில்லை. உடம்படு மெய்யுடன் அல்லது உடம்படுமெய் இன்றி அச்சும், சுவடியும் மாறுபடலாம்;

யஃறிணை — அஃறிணை (2)
அம்புய — யம்புய (7)

அல்லது உடம்ப டுமெய்யில் ய—வ வேறுபாடு அமையலாம் ;

தவேயமர் — தவேவமர் (16)
முதலாவெம — முதலாயெம (16)
வுழிஞை — யுழிஞை (17)
வெதுகை — யெதுகை (20)

அச்சில் புணர்ச்சி வடிவு பெறுவது சுவடியில் பிரித்து அமைக்கப் படுகின்றது ;

செய்யுட், செய்யுண் — செய்யுள் (13, 18)

அச்சில் குறுகியது, சுவடியில் விரிகின்றது ;

தொணூறு — தொண்ணூறு (23)

அச்சில், எழுத்துகளிடையே ஒற்றுகள் காணப்படுவது சுவடியில் இல்லை.

கெக்கே கொக்கோ – கெ கே கொ கோ (3)

சுவடியில் அடித்தல், திருத்தல், எழுதியதன் மேல் எழுதுதல் என் பன உள்ளமையால் அச்சிலுள்ள தெளிவுகொள்ளப் படலுண்டு.

பூத்தரணி — முத்தாணி (3)

இயல்பாக, நகல் ஏட்டில் அமையும் பல்வகைப் பிழைகள் இங்கும் உள்ளமை நீக்கப்படுகின்றன. ஓலைச் சுவடியில் காணப் படவியலாத சில பிழைகள் கையெழுத்தால் அமைந்த தாள் பிரதியில் ஏற்பட வாய்ப்புள்ளமையால் அவையும் விலக்கப் படுகின்றன.

எழுத்துப் பிழையில், ஓரெழுத்திற்குப் பதிலாக இன்னொரு எழுத்து மாற்றி எழுதப்படுதல், தேவையான எழுத்து விடுபடுதல், தேவையில்லாத எழுத்து மிகுதியாக இடம்பெறல் போன்றன உள.

ஓரெழுத்துக்குப் பதிலாக இன்னோரெழுத்து அமையக் காரணம், ஒத்தவுருவமைப்புடைய எழுத்து நிலையும் ஆகலாம். விரைந்தெழுதும் கையெழுத்துக் காரணமாகப் போதுமான வேறுபாடு தோன்றாமையுமாகலாம்.

| | | |
|---|---|---|
| பிக்க | > | மிக்க (36) |
| கங்கை | > | சங்கை (41) |
| நாமக்கிரியை | > | ராமக் கிரியை (51) |
| சிரணம் | > | கிரணம் (60) |
| உந்வாகித | > | உத்வாகித (73) |
| எலிதிரை | > | ஒலி திரை (80) |
| மலிவாறா | > | மலிவாரு (80) |
| மன்றுமே | > | மன்னுமே (92) |

அன்றியும், ர-ற, ன-ண, ழ-ள போன்ற ஒலிமயக்கமாகிய இயல்புக் காரண நிலையும் உண்டு.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| திரமான | > | திறமான (5) | சேறந | > | சேர்ந் (45) |
| நவிர்ச்சி | > | நவிற்சி (40), (42) | ஆவுறிஞ்சி | > | ஆவுரிஞ்சு (71) |
| எரிச்சலூர் | > | எறிச்சலூர் (85) | சக்கிறபாணி | > | சக்கிரபாணி (79) |
| யினைமணி | > | யிணைமணி (4), (10) | வண்பாலை | > | வன்பாலை (6) |
| கொனேரிசை | > | கொணேரிசை (4) | பன்ணைந்து | > | பன்னைந்து (74) |
| சிறுபானாற்று | > | சிறுபாணாற்று (45) | | | |
| மெளு | > | மெழு (69) | வேழ்வியார் | > | வேள்வியார் (85) |
| சோள | > | சோழ (97) | | | |

பேச்சுமொழி காரணமாகவும் இவ் எழுத்து மாற்றம் ஏற்பட இடம் அமைகின்றது.

| | | |
|---|---|---|
| எழுவது | > | எழுபது (31) |
| அன்பது | > | ஐம்பது (44) |
| மாசம் | > | மாதம் (77) |

பிரதி செய்வோரின் கவனக்குறைவும் இத்தகு மாறுபாட்டிற்குக் காரணமாகலாம். நெடில்-குறில் வேறுபாடு, ஐ-ஏ உயிர்மெய் வேறுபாடு, ன-ள வேறுபாடு போன்றன.

எது > ஏது (43)
மைகம் > மேகம் (43)
ஆளக > ஆனக (57)

சுழிப்புக் காரணமாக நெடில்-குறில் வேறுபாடு காட்டுமிடத்து இந்நிலை பெருகி அமைவதாகத் தோன்றுகின்றது.

முர்த்த > மூர்த்த (62) ஞுதாரம் > ஞூதாரம் (32)
னிதல் > னீதல் (68) வீண் > விண் (46)
மிளி > மீளி (90) தலைவீ > தலைவி (2)

ஓலைச்சுவடியில் புள்ளியின்மை காரணமாகவும், எகர-ஏகார, ஒகர-ஓகார வேறுபாடு காட்டாத 'ெ' எனும் ஒரே வடிவவுண்மை பற்றியும் மயக்கம் ஏற்படுவது, தாள் பிரதியில் தவிர்க்கப்பட இயலும். அன்றி, ஓலையிலுள்ளது போன்றே பிரதி செய்யினும் குறைவில்லை. ஆயின் புள்ளியிடல், ே எனும் அடையாளம் பயன் கொள்ளல் போன்றவற்றால் இப் பிரதியில் தேவையின்றிப் பிழைகள் ஏற்பட்டுள்ளன.

மல்கரி > மலகரி (51)
கேதா > கெதா (41)
தோடை > தொடை (97)

எழுத்து மிகுதிப்படுமிடத்துப் பெரும்பாலும் வந்த எழுத்தே மீண்டும் எழுதப்படலும், நெடிற்குறியீடான ா மிகுதலும் அமைகின்றது.

தாானை > தானை (4)
வீராறககப் > வீராறகப் (8)
வனசஞ்ஞு > வனசஞ் (97)

எழுத்துக் குறையுமிடம், கவனக் குறைவைக் காட்டுவதாகவே தோன்றுகிறது. உச்சரிப்பும் காரணமாகலாம்.

மதுரக் காஞ்கி > மதுரைக் காஞ்சி (45)

உயிர்முன் உயிர் வரும்போது ஏற்படவேண்டிய உடம்படு மெய், மெய் முன் உயிர் வரும்போதும் அமைதல் இப்பிரதியில் அருகி அமைவது குறிப்பிடத் தக்கது.

வருடம் யெல்லி (78)
கிளர் யெவ்விதம் (87)

பதிப்பிக்கும் போது, விடுபாடுகள் நிரப்பப்படல் வேண்டும். ஆயின் சில போது இதற்குத் தெளிவின்மை பற்றி வாய்ப்பு இல்லாதாகின்றது†. பிரதி செய்தவர் அடைப்புக்குறியினுள் இட்டு ஒரு சில எழுத்து—பகுதிகளைத் தருகின்றார்*. பதிப்பித் தவராலும் அடைப்புக்குறியுள் விடுபாடுகள் நிரப்பப்படு கின்றன.** அன்றியும் அச்சு கிடைக்கும் பகுதியில் அது பயன் கொள்ளப்படுவதால், அடைப்புக்குறி தரப்படவில்லை. நிறைக்க வியலா இடங்கள் புள்ளியிட்டுக் காட்டப்படுகின்றன. இவை ஒவ்வொரெழுத்திலிருந்து அரையடிவரை நீண்டு செல்கின்றன.

பிரதி செய்தவர், விடுபாடுகளை அடைப்புக் குறியுள் நிரப்பு வது போன்று, ஐயம் தோன்றியவிடத்தும், மாற்று எழுத்தை அவ்வாறு குறியிட்டுத் தருகின்றார் அவற்றின் செவ்விய வடிவு கொள்ளப்பட்டுப் பகுதி உடுக்குறியுடன் ஏட்டுப்பாடமாகத் தரப் படுகின்றது.

முன், பின் நூல்களின் கருத்துகளைத் தெரிவிக்கு மிடத்தும், தெளிவுக்காகவும், ஆங்காங்கே பதிப்பாசிரியரால் அட்டவணை களும் பட்டியல்களும் சேர்க்கப்படுகின்றன. பாடல் முதற் குறிப்பு, சொல்லகராதி போன்றன நூல் முடிவில் இணைக்கப்படு கின்றன.

---

† முதலிரு பாடல் (பக்1,3), 34
* 40, 41, 91, 95.
* 35, 36, 43.

# INTRODUCTION

*Pirapanta Tipikai*, a paper manuscript of the Madras Oriental Manuscripts Library, on literary genres and miscellaneous matters connected to literature, is now being brought out in print, with the commentary of the editors.

This work is by one *Muttu Venkita Cuppaiya Navalar* of *Vempattur*. The period of the work is known through its last verse, as Saka year 1771, *ie.*, A. D. 1849. As many other Tamil treatises this is also in verse form and the metre used is *aciriya viruttam*. There are altogether one hundred verses. These are preceded by two invocatory verses, one in *viruttam* and the other in *venpa* metre, both not numbered and the latter very badly damaged.

The available paper manuscript is a copy of the palm-leaf manuscript of the Madurai Tamil Sangam, and was transcribed by one S. Viswanatha Sastri in 1952-53.

The Madurai Tamil Sangam's monthly journal, *Centamil* took the first effort to bring out this treatise in print. It's 17-th volume (P. 153-158) of 1918-19, contains the first twenty-five verses and a part of the twenty-sixth verse of the treatise, as per an available palm leaf manuscript. Though the publisher's note gives the intention of bringing out the manuscript in print soon, no further effort seems to have been taken in that matter.

So the present edition is attempted, basing on the available paper manuscript and the printed portion.

An analysis of the content of the treatise, shows aspects of *pattiyal* and *nikantu* tradition. The former deals with augury in verse and the different genres of literature. The latter, with different poetic and material aspects like collection of things, types of men and matter, etc., etc.,.

In the *pattiyal* works, generally, augury in verse *is* dealt under ten headings. But the present work considers only one type, viz., *mankalam*. This has a precedent in the only work *Varaiyarutta pattiyal*.

Discussions on literary genres hold the maximum portion in most *pattiyals*. But *Pirapanta Tipikai* allots only about 30 verses (4–33) out of 100, to this subject. According to traditions laid down by *Pirapanta marapiyal* and *Caturakarati*, it gives the number of varieties as ninety-six. But the items of the first list (4) are not exactly followed in the elaboration that comes after (5-33). In the former, there are altogether 92 varieties, while in the latter it is 99.

*Caturakarati* is the very first work to clearly list the names of all the ninety six varieties. This catalogue is followed in *Pirapanta tipikai*, with the addition of a further variety, viz, *vannam* and so the final number comes to ninety-seven. But *Pirapanta tipikai* might not be the first work to refer to *vannam*, as a work of the same period, *Cuvaminatam* has a passing reference to it.

The varieties *irattai mani malai* and *tantakam* included in the list of 96, are considered to have twin types each, and so the list expands to 98, and the addition of *vannam* makes the list seem to have ninety-nine varieties. Generally *Kappiyam* (epic) is considered as a single variety and otherwise as two, viz , *Perunkappiyam* and (*Ciru*)*Kappiyam* ie., the large one and (small) epic. So if these two are compressed into one, the total list can still be ninety-six only.

As we have noted earlier, the major part of *Pirapantatipikai* (34-99) deals with matters which can roughly be classed under *nikantu* tradition. Collective matters hold a greater part of this. Both Sanskritic and Tamil traditions are found here. Literature, Culture, Religion, Arts, History, Sociology, etc, are the few aspects,

dealt with in this. Tamil works of the ancient period like *Pattuppattu* and *Patinenkilkkanakku* are listed (44,45). The forty-nine poets of the Ancient *Cankam* period are catalogued (85,86). Aspects of man and Nature, that form a part of *Akam* poetry are widely given (35-38). The poets of the devotional literature, viz., *Alvar* and *Nayanmar* are duely listed (76-80,82-84). The four types of learned people and the four types of poets and poetry are considered (98,39). Following the Sanskritic tradition, the very many different figures of speech to be followed in literature, are listed under the two schools of thought of Dandin and Chandraloka (40-43).

Of Sanskrit, the religious works are given due impor tance. Vedas (57), Smritis (58), Upanishads (59), Siva-Agamas (60), Puranas (69), Upa Puranas (70) are the different ones considered and listed. Different types of Saivism (62), Dikshas (62), Avataras of Madhava (75), Names of Celesitial ladies (46), Manmadha's acts (34), etc. reveal religious aspects and puranic facts.

Music is given due consideration by listing Talas and Raghas (49-56). Nayaka Nayika Varieties (47-48) and the fourteen facial expressions (73) have a dramatic approach. The sixtyfour types of arts (72), and facts about sculpture (60-61) can also be thought of here. We may consider these as cultural aspects.

Historical material are not wholly authentic as most are fictional, pseudo-historic and Puranic. Kings of the four Yugas (90-93), the ancient Pandya Kings of Madurai (94-95), Banas, Nayaks, Nawabs and others who reigned in Madurai (95-96), the fifty-six kingdoms (99), etc., are such. Organs of a kingdom (87), Signs of royalty (88), the different organizations and acts of a ruling monarch (89) are general aspects related to monarchy.

Social factors like marriage (74), charities (71), sixteen benevolent gifts (63-68) are duly listed. The defects of the human physic like disease, hunger, etc (70), the different garlands worn by celestials, kings and people belonging to various castes (97) are also found.

Some of these details have a precedent in the earlier *nikantu* works or follow ups in the later dictionaries like *Tokaiyakarati*. But others are not much popularly recorded, and the unavailability of authentic source materials leave matters quite vague.

Though this work comes in the *pattiyal* and *nikantu* tradition it has some new aspects untold by the earlier authors. Deciding about the character of the bride on the basis of the soil she collects is quite novel (74); Grouping of the kings under the four yugas is also such (90-93); Prescribing garlands to even humans according to castes is yet another (97). May be this author is the very first 'historian' to have listed the Banas Nayaks, Nawabs, etc, who ruled Madurai (95,96). To put it in a nutshell, this *Pirapanta tipikai* has both traditional and novel aspects.

# பிரபந்த தீபிகை

கண்ட மாலயமொடு பாம்பின....

...வாதத்திரள்

கண்ணி லாதவர் சந்து போனவர்

காய மேயிரு [1]பிளவையர்

பிண்ட மேற்பவர் தோலு டுப்பவர்

பெற்ற தாய்தம ரற்றவர்

பிள்ளை தின்பவர் பேய்பி டித்தவர்

பேரி லேமகள் மோகமே

கொண்ட பேதமை யேது காளத்தி

நாதர் கோலமெண் ணாமலே

கொண்டல் மேனியன் றங்கை ஞானப்பூங்

கோதை யாகிய பேதையை

அண்டர் காணவு நல்கி யீதறி

யாம லீந்தன மென்றுமே

அள்ளி மண்ணையுண் டுள்ள மேங்கிச்சென்

றாழி வீழ்ந்தனன் மாலுமே.

---

*ஏடு—பாடம்

1 பிளைவேயர்

குறிப்பு: இப்பாடல் தனி ஏட்டில் அமைவதால், நூலுக்குப் புறம்பானதாகலாம். 'செந்தமிழ்' இப்பாடலைத் தரவில்லை' ஏட்டில் இதற்குத் தொடர் எண்ணும் அளிக்கப்படவில்லை.

சிதைந்த பகுதி தெளிவுபடவில்லை. 'கண்ட மாலமா யாடு பாம்பினர்' என்பது போல நஞ்சுண்ட கண்டரானமை கருதப் பட்டிருக்கலாம்.

இது, கடவுள் வாழ்த்து.

இ-ள்)...கண்ணில் சூரியனை யுடையவர், சுந்தரருக்காகத் தூது போனவர், உடல் இரு பிளவாகக் கொண்டவர், பிச்சை ஏற்பவர், தோலாடை உடுப்பவர், பெற்ற தாயும் சுற்றமும் இல்லாதவர், பிள்ளைக் கறி உண்பவர், பேய் பிடித்தவர். இத்தகையவரிடம், மலைமகள் அன்பு கொண்ட அறிவின்மை எத்தகையது? காளத்திநாதரின் இத்தகு கோலத்தை நினைக்காது, மேகநிறத்தினனான திருமால் தன் தங்கையாகிய ஞானப்பூங்கோதை எனும்பேதைப் பருவத்தினளை, தேவர்கள் காணும்படித் திருமணம் செய்து அளித்து, காளத்தி நாதரின் உண்மை நிலையை அறியாது கொடுத்து விட்டேன் என வருந்தி, மண்ணை அள்ளி உண்டு, கடலில் வீழ்ந்தனன்.

(வி-ரை) பழிப்பது போல் புகழ்வதாக இவ் இறைவணக்கம் அமைகின்றது சிவன், அம்மை, மால் ஆகியோர் இயல்புகளை, புராணச் செய்திகளை, திருவிளையாடல்களைச் சுட்டலாகத் தொடர்கள் அமைகின்றன. சிவனுக்குக் கதிரவன், மதி நெருப்பு ஆகியன முக்கண்களானதால், வேறு கண் இல்லாதவர் என்பது குறிக்கப்படுவதாகக் கொள்ளலாம். அல்லது இலிங்க உருவம் பற்றிக் கண் இன்மை சுட்டப்பட்டிருக்கலாம். இருபொருள்படும்படி, 'கண்ணில் ஆதவர்', 'கண் இல்லாதவர்' என இது அமைகின்றது.

மாதொருபாகனாக, உடல் இரு கூறுபட்ட நிலை, 'காயமே யிரு பிளவையர்' எனக் குறிப்பிடப்படுகின்றது போலும். பிரமனின்தலை பிச்சையோடாகத்தாருகாவன முனிமனைவியரிடம் பிச்சை கேட்டமை (பிச்சாடனர்), தக்கன் வேள்வியில் புறப்பட்ட யானையை அழித்து அதன் தோலை ஆடையாகக் கொண்டமை, பிறப்பில்லா மூல முதல் ஆனமை (தாயுமிலி தந்தையிலி தான்றனியன் — திருச்சாழல் 3, மாணிக்க வாசகர்), சிறுத்தொண்டரைச் சோதிக்கப்பிள்ளைக்கறி வேண்டியமைசுடலையில் பேயோடு ஆடுகின்றமை — அல்லது, காரைக்காலம்மை யாகிய பேயால் பிடிக்கப்பட்டவர் என்றமை — அல்லது சுந்தரர் 'பித்தா' எனப் பாடியதற்கு இயையப் பித்தனாகக் கருதப்பட்டமை என்பன நினைக்கப்படுகின்றன எனலாம்.

கண்ணன் மண்ணையுண்டதும், திருமால் பாற்கடலில் துயின்றதும் காரணகாரியத் தொடர்பு கற்பிக்கப்பட்டு, தங்கையைக் காளத்திஈசுவரனுக்கு இயல்பு அறியாமற் கொடுத்த வருத்த வெளிப்பாடாக நயமுறத் தரப்படுகின்றன.

சீ...ரும் பொன்கமலத் தேயிருந்த மின்னாளுங்
கார.ரு மாயவனுங் கண்டு மனமகிழ
.......... .......... .......... ..........

---

குறிப்பு: முதலில் அமைந்த தனி ஏட்டின் பின்பக்கத்தில் இப் பாடல் அமைவதால், இதுவும் நூலுக்குப் புறம்பான தாகலாம். செந்தமிழ் இதனையும் தந்திலது.

சிதைந்த முதற்சீர்கள், 'சீராரும்', 'காராரு' என அமையலாம். வெண்பா, முழுமையும் கிடைக்கா வண்ணம் சிதைந்துள்ளது.

நூல் முழுமையும் ஆசிரிய விருத்தத்தில் அமைய, இங்கு வெண்பா வருவதால், ஏட்டைப்படி செய்தவர், அல்லது ஏடு கற்றவர் இத்தகு பகுதிகளிணைத்திருக்கலாம்.

1. [1]மதிநாக நதிவேணி யன்சுதனை யஞ்ஞான
மதவந்த காரதீப
மயமான போதமரு டேசிகக் கடவுளிரு
மலரடி வழுத்தல்செய்வாம்
[2]பதினாறை யாறிற் பெருக்குபிர பந்தாதி
பலவகை யெடுத்துரைக்கின்
[3]பாரின்வரு ணந்நாலி னந்தகன் செவிடூமை
பாஷண்டி யலியுலோபன்
அதிபால னங்கவீ னன்முதிய ரைத்தள்ளி
யருளுதா ரன்குலீனன்
அர்த்தமுளன் விற்பனச லட்சணன் புலவர்தமி
ழருமைகண் [6]டிலகுவோர்பால்
இதமான பத்துப் பொருத்தமு மிலக்கண
[4]விலக்கியப் பொருள்சிறக்க
இசைபெற வுரைப்பரென் சிற்றறிவி னாற்[5] சொல்லு
மின்சொற் றழைக்க வென்றே.

இது, கடவுள் வாழ்த்து, நுவல் பொருள், கேட்போர், அவை யடக்கம், நோக்கம் என்பனவற்றைக் கூறுகின்றது.

(இ-ள்) சந்திரன், பாம்பு,கங்கை இவற்றையுடையசடையினை யுடைய சிவபெருமானின் மகனும், அஞ்ஞானம் மதம் எனும் இருளுக்கு ஒளிமயமான அறிவு தருகின்ற தேசிகக் கடவுளும் ஆகிய விநாயகனின் இரு மலர் போன்ற பாதங் களை வாழ்த்துவோம். தொண்ணூற்றாறு பிரபந்தம் முதலிய பல வகைகளைக் கூறினால், உலகின் நான்கு வருணத்தோரில், குருடன் செவிடு ஊமை பாஷண்டி அலி உலோபன் †மிக்கஇளவயதினன் உடற்குறையுடைய வன் முதியவன் ஆகியோர் நீங்க, கொடையாளி குலச்

---

* 1 மதி... ... வேணி 2 பதினாறை ...ப ..பெருக்கு 3 பாரின் வ .....நாலின
4 வி......ப் 5 சொல...மின்

குறிப்பு: இப் பாடல் தொடக்கமாகச் 'செந்தமிழ்' பிரபந்த தீபிகையைத் தருகின்றது. அதன் அடிப்படையில், மேற்கண்ட வண்ணம் விடுபட்ட சிதைவுகள் நிறைக்கப்பட்டுள்ளன.

† அச்சு-பாடம்

6 டீகு

சிறப்புடையவன் கருத்தாழம் உடையவன் நல்இலக்கண
அறிவுடையவன் புலவர்களது படைப்புகளின்
அருமையை உணர்வோன் ஆகியோருக்கு, பத்துப்
பொருத்தமும் இலக்கண இலக்கியப் பொருள் சிறக்கும்
படி, புகழ் அடையக் கூறுவர். எனது சிறுமையுடைய
அறிவினால் சொல்லுகின்றவை செழிக்க, என்று.

(வி-ரை) கடவுள் வாழ்த்துடன் நூல் தொடங்கும் மரபுத் தொடர்ச்சி இங்கு அமைகின்றது.

பிரபந்தங்கள் தொண்ணூற்றாறு என்ற எண்ணிக்கை வரையறையும், முன்நூற் கருத்துத் தொடர்ச்சி காட்டுகின்றது. 16-ஆம் நூற்றாண்டுக் குரியதாகக் கருதப்படும் பிரபந்த மரபியல். முதன் முதல் இச் செய்தியைத் தருகின்றது.

...பிள்ளைக் கவி முதல் புராணம் ஈறாகத்
தொண்ணூற்றாறு எனும் தொகைய தான
முற்பகர் இயல்பை முன்னுறப் பாடும்
பிரபந்த மரபியலது பிரபந்த மரபியலே (1)

பின்பு, பதினெட்டாம் நூற்றாண்டில் வீரமாமுனிவரது சதுர கராதியும், சுப்பிரமணிய பாரதி என்பாரின் பொருட்டொகை நிகண்டும், இவ் எண்ணிக்கைக் கேற்பப் பிரபந்தப் பட்டியலும் தருகின்றன.

(இ-கு) 'மகனை' என்பது மகனும் என நின்று பொருள் தருகிறது.

2. ஆசுமது ரஞ்சித்ர வித்தார நாற்கவியி
னான்வெண் பாமுதலின
மாகிய வினைப்பத மொலிப்பதம் பெயர்வினை
யாருமுயர் திணைஅஃறிணை
[3]மாசிலா திலகுபன் மைதன்மை முன்னிலை
[1]மாட்சியள பெடைகாலமும்
வளமுறு [2]முயிர்ச்சந்தி மெய்ச்சந்தி பகுபதம்
வருமா ரியந்தேசிகந்
[4]தேசுவல் லினமிடை மெல்லினங் குறில்னெடிற்
சீரான வுயிர்மெய் களும்

---

* 1 மாட்சி ய(க)ள பேடை 2 முயிர்ச் சந்தி

† 3 மாசிலா வொருமை தன்மை பன்மை முன்னிலை

4 தேசுமிக வல்லிடை மெல்லினங்

செப்புகுற் றியலுகர மாகிய குறுக்கஞ்
சிறந்திடுந் தலைவிதலைவன்
பேசரிய நவரதம் விருத்திபா கம்ரீதி
பின்புபொரு ளணியக்கரப்
பிறப்புவினை முற்றுப்பெயர் முற்றொடு மறிந்துவகை
பேசுவர்கள் புலவோர்களே.

இது, புலவர், கவிதை ஆக்கத்திற்குத் தெரிந்துகொள்ள வேண்டியனவற்றைக் கூறுகின்றது.

(இள்) ஆசு, மதுரம், சித்திரம், வித்தாரம், ஆகிய நால்வகைக் கவிகளாலான வெண்பா முதல் அவற்று இனம்; வினைச்சொல்; ஒலிக் குறிப்புச் சொற்கள்; பெயர், வினை; உயர்திணை; அஃறிணை; பன்மை, தன்மை; முன்னிலை; அளபெடை; முக்காலம்; உயிரெழுத்துப் புணர்ச்சி; மெய்யெழுத்துப் புணர்ச்சி; பகுபதம், வடசொல்; திசைச்சொல்; வல்லினம்; இடையினம் மெல்லினம், குறில், நெடில், உயிர்மெய், குற்றியலுகரம்; முதலான குறுக்கம், தலைவி, தலைவன் பற்றிய செய்திகள் மெய்ப்பாடுகளாகிய ஒன்பது சுவைகள்; விருத்தி பாகம் ரீதி ஆகியன; பொருளணிகள்; எழுத்துப் பிறப்பு; வினை முற்று, பெயர்முற்று- முதலியவற்றை அறிந்து, புலவர்கள் கவிதை வகைகளைப் படைப்பர்.

(வி-ரை) ஐந்திலக்கணக் கல்வியும் உடையவனாகக் கவிவலவன் அமைதலின் தேவை வலியுறுத்தப்பட இது கூறப்பட்டிருக்கலாம். 'அந்தமில் கேள்வி ஆசிரியன்' பற்றி யாப்பருங்கல இறுதி நூற்பா (96) தொகுத்துரைப்பதை இங்கு முன்னோடியாக நினைக்கலாம்.

ஆசு முதலிய நாற்கவிகள் பற்றிய எண்ணத்தை இந்நூல் (98) பிற் பகுதியில் விளக்குகின்றது. பெரும்பான்மையான பாட்டியல்களும் இதனைத் தம் ஒழிபுக் கருத்தாகக் கொள்வதுண்டு.

வெண்பா, ஆசிரியம், கலி, வஞ்சி எனும் நாற்பாவும் அவற்றின் தாழிசை, துறை, விருத்த மெனும் இனங்களும் பாவடிவாகின்றன. பரிபாடல், மருட்பா, போன்றவற்றையும் காலத்திற்கேற்ப வளர்ந்த கண்ணி சிந்து போன்ற வடிவங்களையும் கருதலாம்.

வினைப்பதம் எனக் கூறிவிட்டு, மீண்டும் வினை என்பதால் முன்னதில் தொழிற் பெயர் கருதப்பட்டதாக நினைக்கலாம். ஒலிப்பதம் என்பதால், ஒலிக்குறிப்புச் சொற்களைக் கொள்வதுடன் இரட்டைக் கிளவியையும் கருதலாம்.

'சிறந்திடுந் தலைவன் தலைவி' என்பதால் இந்நூல் பிற்பகுதியில் விளக்கும் நாயகன் நாய்கி வகை (47-48) கருதப்பட்டதாகக் கொள்ளலாம் அன்றி, அகப் புற மரபிலக்கணங்கட்கேற்பத் தலைவர்தலைவியர் பண்பு-செயல்நிலை கருதப்படலாம்·

விருத்தி, பாகம், ரீதி என்பன விளக்கப்பட வேண்டியன. விருத்தி என்பதை விரிவுரை, உரிய பொருள், உரிய சொல். நாடக நூலின் நால்வகைநடை (சிலம்பு 3.13உரை) எனப் பலவாறு கொள்ள இடனமைகின்றது (தமிழ் லெக்சிகன், 6, 3702)' உச்சரிக்கும் முறை அல்லது அளவு எனவும், நாடகச் செய்யுள் ஆக்க நெறி எனவும், வழி மோனை எனவும் கூடக் கொள்ள வடமொழி இடம் தருகின்றது.*

பாகம் என்பது, செய்யுள் நடை. திராட்சா பாகம், கதலீ பாகம், நாரிகேள பாகம் என அது மூவகைப்படும் (தமிழ் லெக்சிகன், 5, 2579). இக் கனிகளை உண்ணும் நிலை —அணுகும் முறை போன்று, கவிச்சுவை காணலின் எளிமையும் இடர்ப்பாடும் அமைதல் பற்றிப் பாகம் குறிக்கப்படுகின்றது.

ரீதி என்பதை, நெறி எனத் தண்டியலங்காரம் (13) குறித்து வைதருப்பம், கௌடம் என அதன்கண் இருவகைகளை அமைக்கின்றது. பாஞ்சாலம் என்பது இணைய மூவகை எனவும் லாதிகா சேர நான்கு எனவும், ஆவந்திகா (யாவந்திகா) மாகதீ என்பன வர ஆறு எனவும் கொள்ளவும் இடம் உண்டு.**

---

* A Sanskrit English Dictionary- Monier Williams. P 1010

Vritti ...... Mode or measure of pronunciation and recitation (said to be three fold, viz Vilambita, madhyama and druta).

Style of composition (especially dramatic style, said to be ot four kinds. 1. Kaisiki, 2. Bharati, 3, Satvati, 4. Arabhati. The first three are described as suited to the Sringara, Vira, and Raudra Rasas respectively, the last common to all).

( in rhet.) Alliteration, frequent repetition of the same consonan (five kinds enumerated- madhura, praudha, purusha, lalita and bhadra).

**Ibid. P. 881.

3. அரியதமிழ் பத்துப் பொருத்தங் களைத் [4]தெளிந்
தபிதா நமாம் பொருத்தம்
அகரமுத னான்கிற்கு முந்நீர தாகுமே
அ-ஆ விரண்டி னுக்கும்
[5]ஆருமணி கடல்கா ருடன்பூவு மெய்துமே
யாம் உ-ஊ- முத லைந்தினுக்
கானபொன் [1]னேமியும் ஒகரமுதன் மூன்றுக்கு
மாழிநீர் கார்பொ ருந்துந்
தருககா வுஞ்சீர் கிகிக் குறுஞ் சீர்வேலை
தானே குகூச்சொ லாகுஞ்
சாருமணி கெ-கே-கைகொ கோ விரண்டிற்குஞ்
சானவி யுடன்கா ருமாஞ்
[6]சகரசா காரமும [2]முதமணி பாலுறுந்
தருவேழ மேசி சிக்குச்
சாத்திய சு-சூ முத லைந்துக் குறும்[7]பூவே
சாதரு; பஞ்சீர் சொ சோ
[8]தெரிதிஞா வுக்கமுத [9]மொழித தாவைத்
திருத்தி கிரியே பொருந்துந்
திதீ யெனுஞ் [10]சொற்கு நீரே து தூ வைந்து
செல்வமும் வேலைத் தொ தோ
சீர்மதி நநாமுத லாறு முல கெய்துமே
சீர்நிநீ யாதி யாகுஞ்
சேருமே நுநூச்சொல் நெ நே நை யமுதமணி
சிந்து நொ நோ வமுதமாம்
பரவுபம் முதனான்கு பூத்தரணி தேர்புபூ
பார் பொன் சொல் பெ பே [3]யுறும்
பார்தருவு மகரமுத னான்குபூ [11]முமூப்பூ
பாருமெ மே மை பிறை யாரம்
பகர் மொ மோ பிறை யயா சீர்யுயோ [12]வுலகு வரு
பங்கசை தேர்வி வீக்குப்
பதுமைபின் னான்கிற்கு [13]மதிமணி யெனத்தேர்ந்த
பாவலர்க ளுரைசெய் வரே.

---

* 1 னேறியும் 2 முத-ணி 3 யறும் †4 தெரிந் தபிதா னமாம்
5 அருமணி 6 சகரமொடு சகரவாகார மணி பால் கதை 7 பூவை
8 தெரிஞுஞா 9 மாழ் 10 சொல்லுக்கு 11 மும்முப்பு 12 புவி வ வா
13 மதியணி

**குறிப்பு:** அச்சுப் பிரதியில், மெய் எழுத்துகள் சுட்டப்படுமிடங்களில் பெரும்பாலும் இடையில் ஒற்று தோன்றுகின்றது-- கெக்கே கொக்கோ, நெந்நே, நொந்நோ, பெப்பே, மும்மு.

இது, அபிதாநப் பொருந்தம் கூறுகின்றது. அ த ா வ து இன்னின்ன எழுத்தால் தொடங்கும் பெயருக்கு இன்னின்ன மங்கலச் சொல் பொருத்தமுடையது எனும் பெயர்ப் பொருத்தம்.

(இ-ள்) அருமையானதமிழில்பத்துப்பொருத்தங்களைத்தெரிந்து பெயர்ப் பொருத்தத்தை, (கீழ்க்கண்டவாறு) தேர்ந்த பாவலர்கள் கூறுவர். அ, ஆ, இ, ஈ என்ற நான்கிற்கும் முந்நீர் என்ற சொல். அ,ஆ — மணி, கடல், கார், பூ. உ, ஊ, எ, ஏ, ஐ— பொன், நேமி. ஒ, ஓ, ஔ— ஆழி, நீர், கார். க, கா—சீர். கி, கீ —சீர், வேலை. கு, கூ— சொல். கெ, கே, கை— மணி. கொ, கோ — சானவி, கார். ச, சா — அமுதம், மணி, (அணி?), பால். சி, சீ— தரு, வேழம். சு, சூ, செ, சே, சை— பூ. சொ, சோ — சாதரூபம், சீர். ஞா— அமுதம், மொழி, (ஆழி). த, தா— திரு, திகிரி. தி, தீ— நீர். து, தூ, தெ, தே, தை— செல்வம், வேலை. தொ, தோ— சீர், மதி ந, நா, நி, நீ, நு, நூ—உலகு. நி, நீ—சீர். நு, நூ— சொல். நெ, நே, நை— அமுதம், மணி, சிந்து. நொ, நோ—அமுதம். ப, பா, பி, பீ— பூ, தரணி, தேர். பு, பூ— பார், பொன், சொல். பெ, பே— பார், தருவு. ம, மா, மி, மீ—பூ. மு, மூ— பூ, பார். மெ, மே, மை— பிறை, ஆரம். மொ, மோ—பிறை. ய, யா—சீர். யு, யோ— உலகு, பங்கசை, தேர். வி, வீ— பதுமை. வெ, வே, வை, வௌ—மதி, மணி.

(வி-ரை) பிரபந்த தீபிகை தவிர, வரையறுத்த பாட்டியல் ஒன்றே (4-9), ஏறத்தாழ இது போன்று மங்கலச் சொற்களையும் மொழிமுதல் எழுத்தையும் இணைத்து நினைக்கின்றது. தீபிகையில் இன்ன எழுத்துக்கு இன்ன சொல் என்ற முறை அமைய, பாட்டியலில் இன்ன சொல்லுக்கு இன்னின்ன எழுத்து எனத் தொடர்புபடுத்துதல் காணப்படுகின்றது.

மொழிமுதல் எழுத்துகள் அனைத்தும் இங்குக் கூறப்படவில்லை. உயிரில் பன்னிரண்டும் சுட்டப்பட்ட போதும், மெய்யில் சில, அருகிய பயிற்சியாற் போலும் விடப்படுகின்றன. ககர வரிசையில் 'கௌ' சுட்டப்படவில்லை, சௌவும் இல்லை. ஞகர வரிசையில் ஞா ஒன்றே உண்டு. தௌ, நௌ. பை, பொ, போ,

பௌ, மௌ, என்பனசுட்டப்படவில்லை.ய, யா, யு, யோ என்பன யகரவரிசையிலும் வி, வீ, வெ, வே, வை, வௌ என்பனவே வகர வரிசையிலும் அமைக்கப் படுகின்றன. வ, வா கூறப்படாமை சுட்டி யறியத் தக்கது.

தீபிகையில் ஓரளவு முழுமை காட்டும் இவ் எழுத்துநிலை வரையறுத்த பாட்டியலில் இல்லை. எழுத்துக்கு அன்றி மங்கலச் சொற்கு முதன்மை யளித்ததே காரணமாகலாம். பி, பீ, பௌ, ஆகிய எழுத்துகள் சுட்டப்பட்டில. ஞகர வரிசையில் ஞா, ஞெ ஞொ என்பனவும், யகர உயிர் மெய்யுள் யா, யூ, யோ, என்பனவும், வகரத்தில் வ, வா, வி, வீ, வெ, வே, வை, வௌ என்பனவும் தரப்படுகின்றன.

பாட்டியல், பதினான்குசொற்களைத் தர, தீபிகை, பரியாயச் சொற்களும் இணைய முப்பத்தியேழு சொல் அமைக்கின்றது. ஐந்து நூற்றாண்டுக்கு மேற்பட்ட கால வேறுபாட்டாலமைந்த கருத்து வேறுபாடாக இதனைக் கருதலாம்.

| பிரபந்த தீபிகை | | வரையறுத்த பாட்டியல் | |
|---|---|---|---|
| மொழிமுதலெழுத்து | மங்கலச் சொல் | எழுத்து | சொல் |
| அகர முதல் நான்கு | முந்நீர் | அ, ஆ | கங்கை |
| அ ஆ இரண்டு | மணி | | |
| | கடல் | | |
| | கார் | | |
| | பூ | இ, ஈ | குஞ்சரம் |
| உ ஊ முதல் ஐந்து | பொன் | உ, ஊ, எ, ஏ, ஐ | தேர் |
| | நேமி | | |
| ஓகர முதல் மூன்று | ஆழி | ஒ, ஓ | கங்கை |
| | நீர் | | |
| | கார் | ஔ | சொல் |
| க, கா | சீர் | க, கா, கி, கீ | சீர் |
| கி, கீ | சீர் | | |
| | வேலை | | |
| கு, கூ | சொல் | கு, கூ | பொன் |
| கெ, கே, கை | மணி | கெ, கே | மணி |
| | | கை | நீர் |
| கொ, கோ | சானவி | கொ, கோ | திங்கள் |
| | கார் | | மணி |
| | | கௌ | பூ |

| | | | |
|---|---|---|---|
| ச, சா | அமுதம் | ச, சா | பார் |
| | மணி | | |
| | பால் | | |
| சி, சீ | தரு | சி, சீ | நீர் |
| | வேழம் | | |
| சு, சூ முதலைந்து | பூ | சு,சூ,செ,சே | சொல் |
| | | சை | பூ |
| சொ, சோ | சாதருபம் | சொ,சோ | சீர் |
| | சீர் | | |
| | | சௌ | பொன் |
| ஞா | அமுதம் | ஞா | குஞ்சரம் |
| | மொழி | ஞொ,ஞோ | வாரணம் |
| த, தா | திரு | த, தா | கங்கை |
| | திகிரி | | |
| தி,தீ, | நீர் | தி,தீ | நீர் |
| து, தூ வைந்து | செல்வம் | து,தூ,தெ,தே | பொன் |
| | வேலை | | |
| | | தை | நீர் |
| தொ, தோ | சீர் | தொ, தோ | கங்கை |
| | மதி | தௌ | சொல் |
| ந, நா முதலாறு | உலகு | ந,நா,நி,நீ | சீர் |
| நி,நீ | சீர் | | |
| நு,நூ | சொல் | நு,நூ | எழுத்து |
| நெ, நே, நை | அமுதம் | நெ, நே | பொன் |
| | மணி | | |
| | சிந்து | நை | தேர் |
| நொ, நோ | அமுதம் | நொ, நோ | நீர் |
| | | நௌ | சொல் |
| பமுதல் நான்கு | பூ | ப,பா | உலகம் |
| | தரணி | | |
| | தேர் | | |
| பு,பூ | பார் | பு,பூ | பொன் |
| | பொன் | | |
| | சொல் | | |
| பெ, பே | பார் | பெ,பே,பொ,போ | பார் |
| | தருவு | பை | நீர் |
| மகர முத னான்கு | பூ | ம,மா,மி,மீ,மு,மூ | பூ |
| மு,மூ | பூ | | |
| | பார் | | |
| மெ, மே, மை | பிறை | மெ,மே,மொ,மோ, | பொன் |
| | ஆரம் | மௌ | |

| | | | |
|---|---|---|---|
| | | மை | தேர் |
| மொ ,மோ | பிறை | | |
| ய, யா | சீர் | யா | சீர் |
| | | யூ | எழுத்து |
| யு, யோ | உலகு | யோ | கங்கை |
| | பங்கசை | | |
| | தேர் | வ,வா,வி,வீ | சீர் |
| வி, வீ | பதுமை | | |
| பின் நான்கு | மதி | வெ,வே | பார் |
| | மணி | வை,வௌ | பூ |

4. சாதகம் பிள்ளைக் கவிப்பரணி கோவையர
சன்விருத் தந்தொகைநிலை
சாருமைந் திணையெண் டருஞ்செய்யு ளங்கமொடு
தானை யநுராகநாமந்
தாரகை யிரட்டைமணி பன்மணி புகழ்ச்சிபல்
சந்தமெய்க் கீர்த்திகாப்புத்
தண்டகந் தும்பையிணை மணிவேனின் மும்மணிவ
சந்தமுற் பவநான்மணி
ஓத நவ மணிவீர வெட்சியுட னேவாகை
யுழிஞைமணி நொச்சிகாஞ்சி
உயர்வருக்கம் பெருமகிழ்ச்சி நூறோடு பதிற்
[1]றொலியலந் தாதிதூதோ
[2]டுலவலங் காரபஞ்சக மும்வா யுறைவாழ்த்
துலாவள மடற்கைக்கிளை
யூர்பெயர்கொ ணேரிசையோ டின்னிசை குறத்தியோ
டுழத்திப்பாட் டுக்குழமகன்
பாதாதி கேசவர லாற்றுச் [3]செருக்களம்
படுவஞ்சி பெருமங்கலம்
[4]பதிகமுஞ் செவியறிவு றூஉவொடூர் கடிகைவெண்
பாவட்ட மங்கலமுநாற்
பதுசதக மெழுகூற்றிருக் கைச்சின்னப் புவொரு
பாவொருப திருபாவிரு
பதுதசாங் கப்பத்து நயனப்ப யோதரப்

---

* 1 றொலியந் 2 டுலா 3 செருக்க...ம...டு வஞ்சி 4 பதிகஞ்

பத்துத் [5]தசாங்கத்தயற்
காதுமாற் றுப்படை விருத்தலக் கணமூசல்
காப்பிய மிரண்டுபவனி
[6]காதல்லா தோரணம்வெற் றிக்கரந்தை மஞ்சரி
கலம்பகம் விளக்குக்
கண்படை புறங்கையறு துயிலெடைக் கடையெனுங்
கருதுநிலை யாறோடுமுது
காஞ்சிமங் கலவெள்ளை தாண்டக மிரண்டோடு
கண்டபுற நிலைவாழ்த்துளே

இது, சாதகம் முதலாகப் புறநிலைவாழ்த்து ஈறாகப் பிரபந்தம் தொண்ணூற்றாறின் பட்டியல் தருகின்றது.

---

5 தசாங்கத்துயல் 6 காதல்வா...தோரணம்

குறிப்பு: அச்சில் இப்பாடல் மேற்கண்ட விதம் முழுமையாக அமைகின்ற போதும், பதிப்புக்கு அடிப்படையாகக் கொண்ட காகிதப் பிரதியில் ஈரிடங்களில் குறைபடுகின்றது. மூன்றாம் நான்காம் அடிகளில் ஏற்பட்டுள்ள இவ் விடுபாடுகள் ஏடு பிரதி செய்தவரால் ஏற்பட்டிருக்க வேண்டும்.

மூன்றாம் நான்கா மடிகள் இப்பிரதியில் கீழ்வருமாறு காணப்படுகின்றன.

பாதாதி கேசவர லாற்றுச் செருக்க...ம
....டுவஞ்சி பெருமங்கலம்
பதிகஞ் செவியறிவு றூஉவொடூர் கடிகைவெண்
பாவட்ட மங்கலமுநாற்
பதுதசாங் கப்பத்து நயனப் பயோதரப்
பத்துத் தசாங்கத்துயல்
காதுமாற் றுப்படை விருத்தலக் கணமூசல்
காப்பிய மிரண்டுபவனி
காதல்வா... தோரணம் வெற்றிக் கரந்தை
கண்படை புறங்கையறு துயிலெடைக் கடையெனுங்
கருதுநிலை யாறொடுமுது
காஞ்சிமங் கலவெள்ளை தாண்டக மிரண்டோடு
கண்டபுற நிலைவாழ்த்துளே.

(இ-ள்) சாதகம், பிள்ளைக்கவி, பரணி, கோவை, அரசன் விருத்தம், தொகைநிலை, ஐந்திணை, எண்செய்யுள், அங்கம், தானை, அநுராகம், நாமம், தாரகை, இரட்டை மணி, பன்மணி, புகழ்ச்சி, பல்சந்தம், மெய்க்கீர்த்தி, காப்பு, தண்டகம், தும்பை, இணைமணி, வேனில். மும்மணி, வசந்தம், உற்பவம், நான்மணி, நவமணி வீரவெட்சி வாகை, உழிஞை, மணி, நொச்சி, காஞ்சி, வருக்கம், பெருமகிழ்ச்சி, நூறு, பதிற்று, ஒலியலந்தாதி, தூது, உலவு, அலங்கார பஞ்சகம், வாயுறை வாழ்த்து, உலா(மடல்), வளமடல், கைக்கிளை, ஊர் நேரிசை பெயர் நேரிசை, ஊரின்னிசை, பெயரின்னிசை, குறத்திப் பாட்டு, உழத்திப்பாட்டு, குழமகன், பாதாதிகேசமப் வரலாற்று வஞ்சி, செருக்களவஞ்சி, பெருமங்கலம், பதிகம், செவியறிவுறூஉ, ஊர் வெண்பா, கடிகை வெண்பா, அட்டமங்கலம், நாற்பது, சதகம், எழுகூற் றிருக்கை, சின்னப்பு, ஒருபா ஒருபது, இருபாவிருபது தசாங்கப் பத்து, நயனப்பத்து, பயோதரப்பத்து, தசாங்கத்தயல், ஆற்றுப்படை, விருத்தலக்கணம் ஊசல், காப்பியம் இரண்டு, பவனி காதல், ஆதோரணம், வெற்றிக் கரந்தை மஞ்சரி, கலம்பகம், விளக்கு நிலை, கண்படை நிலை, புறநிலை, கையறுநிலை, துயிலெடை, கடைநிலை, முதுகாஞ்சி, மங்கலவெள்ளை, தாண்டகம் இரண்டு, புறநிலை வாழ்த்து.

(வி-ரை) தீபிகையின் முதற்பாடல் பிரபந்தம் தொண்ணூற்றாறு என்றபோதும், இப்பாடலின் பட்டியல்படி, 92 வகைகளே புலப் படுகின்றன. ஆயின், நூலின் உள் வரும் விளக்கங்கள், இதன்கண் 96 காண இடம் தருகின்றன. 22-வது வகையான இணைமணி மாலை இருவகை கொள்கின்றது. அவ்வாறே, 24-வது, மும்மணி யில்மும்மணிமாலை மும்மணிக்கோவை என்பன உட்படுகின்றன அவ்விதமே 35-வதான வருக்கம் என்பதில் வருக்க மாலையும் வருக்கக் கோவையும் இடம் பெறுகின்றன. 54-வது பாதாதி கேசம், கேசாதிபாதத்தையும் இணைத்துக் கொள்கின்றது எனவே மொத்தம் 96 என்ற நிலை பொருந்துகின்றது.

தொடர்ந்து வரும் தீபிகையின் விருத்தங்கள் (5-33), இப் பிரபந்தங்களுக்கு விளக்கம் கூறும் போது, மீண்டும் எண்ணிக்கை யில் வேறுபாடு அமைகின்றது; அவற்றுள், 99 வகைகள் அமை

கின்றன. மேற்கண்ட பட்டியலில் போர்க்கெழு வஞ்சி(15), இன்மொழி வாழ்த்து(31), வண்ணம் (32) என்பன இணைக்கப்படுகின்றன. இணை மணி மாலை (10) காப்பியம்(33) தாண்டகம் (26) என்பவற்றில் இவ்விரண்டு வகைகள் கொள்ளாது, ஒவ்வொரு எண்ணாகக் கொண்டால், 99 என்பது, **96 ஆக** அடங்கலாம்.

பிரபந்தப் பட்டியலின் வைப்பு முறை, அவ்வாறே பின் பற்றப்படாது வேறுபட்டு அமைதலைத்தொடர்ந்து வரும் பகுதியில் காணமுடிகின்றது(அட்டவணை 1 பார்க்க).

தீபிகை விளக்கும் பிரபந்தங்கள் பெரும்பாலும் முன்—பின் நூல்களால் கூறப்பட்டவையாகும். எனினும் முத்துவீரியம் பிரபந்த தீபம் என்பன பெருமளவு ஒத்துச் செல்வது குறிப்பிடத்தக்கது (அட்டவணை 2 பார்க்க).

**அட்டவணை—1**

பிரபந்த தீபிகை- பிரபந்தங்கள்*

| முறை எண் | பட்டியல்-1 | முறை எண் | பட்டியல்-2 |
|---|---|---|---|
| 1 | சாதகம் | 1 | சாதகம் (5) |
| 2 | பிள்ளைக்கவி | 2 | பிள்ளைக்கவி (5) |
| 3 | பரணி | 3 | பரணி (6) |
| 4 | கோவை | 7 | அகப் பொருட் கோவை (8) |
| 5 | அரசன் விருத்தம் | 67 | அரசன் விருத்தம் (24) |
| 6 | தொகை நிலை (ச் செய்யுள்) | 45 | தொகை நிலைச் செய்யுள் (18) |
| 7 | ஐந்திணைச் (செய்யுள்) | 8 | ஐந்திணைச் செய்யுள் (8) |
| 8 | எண் செய்யுள் | 37 | எண் செய்யுள் (15) |
| 9 | அங்க (மாலை) | 9 | அங்க மாலை (9) |
| 10 | தானை (மாலை) | 30 | தானை மாலை (14) |
| 11 | அநுராக (மாலை) | 11 | அநுராக மாலை(9) |
| 12 | நாம (மாலை) | 17 | நாம மாலை (11) |
| 13 | தாரகை (மாலை) | 28 | தாரகை மாலை (13) |

*இப்பட்டியல்கள், முறையே, நூலின்,தொடக்கத்தில் (4), தொகுத்து உரைத்ததும் தொடர்ந்து விளக்கப்பட்டனவும் ஆகும். முதல் எண் முறை வைப்பையும், அடைப்புக்குறி எண் பிரபந்தம் விளக்கப்படும் விருத்தத்தையும் குறிக்கும்.

| | | |
|---|---|---|
| 14 இரட்டைமணி (மாலை) | 12 | இரட்டைமணி மாலை (10) |
| 15 பன் மணி (மாலை) | 19 | பன் மணிமாலை/கலம் பக மாலை (12) |
| 16 புகழ்ச்சி (மாலை) | 21 | புகழ்ச்சி மாலை(12) |
| 17 பல் சந்த (மாலை) | 18 | பல் சந்த மாலை (11) |
| 18 மெய்க் கீர்த்தி (மாலை) | 24 | மெய்க்கீர்த்தி மாலை (13) |
| 19 காப்பு (மாலை) | 25 | காப்பு மாலை (13) |
| 20 தண்டக (மாலை) | 32 | தண்டக மாலை (14) |
| 21 தும்பை (மாலை) | 42 | தும்பை மாலை (17) |
| 22 இணைமணி (மாலை) | 13, 14 | இணைமணி மாலை (10) |
| 23 வேனில் (மாலை) | 26 | வேனில் மாலை (13) |
| 24 மும்மணி (மாலை) | 6 | மும்மணிக் கோவை (7) |
| | 31 | மும்மணி மாலை (14) |
| 25 வசந்த (மாலை) | 27 | வசந்த மாலை (13) |
| 26 உற்பவ (மாலை) | 29 | உற்பவ மாலை (13) |
| 27 நான்மணி (மாலை) | 16 | நான்மணி மாலை (11) |
| 28 நவமணி (மாலை) | 15 | நவமணி மாலை (11) |
| 29 வீர வெட்சி (மாலை) | 33 | வீர வெட்சி மாலை (14) |
| 30 வாகை (மாலை) | 43 | வாகை மாலை (17) |
| 31 உழிஞை (மாலை) | 41 | உழிஞை மாலை (17) |
| 32 மணி (மாலை) | 20 | மணி மாலை (12) |
| 33 நொச்சி (மாலை) | 40 | நொச்சி மாலை (16) |
| 34 காஞ்சி (மாலை) | 39 | காஞ்சி மாலை (16) |
| 35 வருக்க (மாலை) | 5 | வருக்கக் கோவை (7) |
| | 22 | வர்க்க மாலை (12) |
| 36 பெரு மகிழ்ச்சி (மாலை) | 23 | பெரு மகிழ்ச்சி மாலை (12) |
| 37 நூற் (றந்தாதி) | 48 | நூற்றந்தாதி (19) |
| 38 பதிற் (றந்தாதி) | 47 | பதிற்றந்தாதி (19) |
| 39 ஒலியலந்தாதி | 46 | ஒலியலந்தாதி (18) |
| 40 தூது | 79 | தூது (26) |
| 41 உலவு | 49 | உலா (19) |
| 42 அலங்கார பஞ்சகம் | 71 | அலங்கார பஞ்சகம் (24) |
| 43 வாயுறை வாழ்த்து | 85 | வாயுறை வாழ்த்து (27) |
| 44 உலா (மடல்) | 50 | உலாமடல் (20) |
| 45 வள மடல் | 51 | வள மடல் (20) |
| 46 கைக்கிளை | 52 | கைக்கிளை (20) |
| 47 ஊர் (நேரிசை) | 62 | ஊர் நேரிசை (23) |
| 48 பெயர் (நேரிசை) | 61 | பெயர் நேரிசை (23) |

| | | | |
|---|---|---|---|
| 49 | ஊர் (இன்னிசை) | 60 | ஊரின்னிசை (22) |
| 50 | பெயர் (இன்னிசை) | 59 | பெயரின்னிசை (22) |
| 51 | குறத்தி(ப் பாட்டு) | 87 | குறவஞ்சி (28) |
| 52 | உழத்திப் பாட்டு | 88 | உழத்திப் பாட்டு (29) |
| 53 | குழமகன் | 76 | குழமகன் (26) |
| 54 | பாதாதி கேசம் | 69 | பாதாதி கேசம்(24) |
| | | 70 | கேசாதி பாதம் (24) |
| 55 | வரலாற்று (வஞ்சி) | 36 | வரலாற்று வஞ்சி (15) |
| 56 | செருக்களம் படு வஞ்சி | 38 | செருக்கள வஞ்சி (16) (பறந்தலைச் சிறப்பு) |
| 57 | பெருமங்கலம் | 99 | பெருமங்கலம் (33) |
| 58 | பதிகம் | 75 | பதிகம் (26) |
| 59 | செவியறிவு றூஉ | 84 | செவியறிவுறூஉ (27) |
| 60 | ஊர் வெண்பா | 63 | ஊர் வெண்பா (23) |
| 61 | கடிகை வெண்பா | 91 | கடிகை வெண்பா (30) |
| 62 | அட்ட மங்கலம் | 10 | அட்ட மங்கலம் (9) |
| 63 | நாற்பது | 78 | நாற்பது (26) |
| 64 | சதகம் | 82 | சதகம் (26) |
| 65 | எழுகூற்றிருக்கை | 90 | எழுகூற்றிருக்கை (30) |
| 66 | சின்னப்பு | 93 | சின்னப்பூ (31) |
| 67 | ஒருபா ஒருபது | 53 | ஒருபா ஒருபது (21) |
| 68 | இருபா விருபது | 54 | இருபா இருபது (21) |
| 69 | தசாங்கப் பத்து | 74 | தசாங்கப் பத்து (25) |
| 70 | நயன (ப் பத்து) | 65 | நயனப் பத்து (23) |
| 71 | பயோதரப் பத்து | 66 | பயோதரப் பத்து (23) |
| 72 | தசாங்கத் தயல் | 68 | தசாங்கத் தயல் (24) |
| 73 | ஆற்றுப் படை | 55 | ஆற்றுப்படை (21) |
| 74 | விருத்த லக்கணம் | 94 | விருத்த விலக்கணம் (31) |
| 75 | ஊசல் | 89 | ஊஞ்சல் (30) |
| 76, 77 | காப்பியம் இரண்டு | 97 | பெருங்காப்பியம் (33) |
| | | 98 | காப்பியம் (33) |
| 78 | பவனி காதல் | 83 | பவனிக் காதல் (26) |
| 79 | ஆதோரணம் (மஞ்சரி) | 44 | ஆதோரணத்து உலவு மஞ்சரி (17) |
| 80 | வெற்றிக் கரந்தை மஞ்சரி | 34 | வெற்றிக் கரந்தை மஞ்சரி(15) |
| 81 | கலம்பகம் | 4 | கலம்பகம் (7) |
| 82 | விளக்கு (நிலை) | 64 | விளக்கு நிலை (23) |
| 83 | கண்படை (நிலை) | 57 | கண்படை நிலை (22) |
| 84 | புற (நிலை) | 56 | புறநிலை (21) |

| | | | |
|---|---|---|---|
| 85 | கையறு (நிலை) | 73 | கையறு நிலை(25) |
| 86 | துயிலெடை (நிலை) | 58 | துயிலெடை நிலை (22) |
| 87 | கடை நிலை | 72 | கடை நிலை (25) |
| 88 | முதுகாஞ்சி | 92 | முதுகாஞ்சி (30) |
| 9 | மங்கல வெள்ளை | 77 | மங்கல வெள்ளை (26) |
| 90, 91 | தாண்டகம் இரண்டு | 80, 81 | தாண்டகம் (26) |
| 92 | புறநிலை வாழ்த்து | 86 | புறநிலை வாழ்த்து (27) |
| | | 35 | போர்க்கெழு வஞ்சி (15) |
| | | 95 | இயன் மொழி வாழ்த்து (31) |
| | | 96 | வண்ணம் (32) |

குறிப்பு: பிரபந்தங்கள் 96 என தீபிகையின் தொடக்கத்தில் குறிப்பிட்ட போதும், தரப்படும் இருபட்டியல்கள் முறையே 92, 99, பிரபந்தங்களைக் குறிப்பிட்டு வேறுபடுவதாகத் தோன்கின்றன.

முதற்பட்டியலில், இன்னும் நான்கு வகைகள் விரிய இடனமைகின்றன. 22-இல் உள்ள இணைமணி மாலையில் இரு வகைகள் அமைவதும், 24-இல்உள்ளமும்மணியில் மாலைகோவை என இரு வகைகள் அமைவதும், 35- இல் உள்ள வருக்கம் என்பதில் மாலை, கோவை என இரு வகைகள் அமைவதும், 54-இல் உள்ள பாதாதி கேசம் என்பதில் கேசாதி பாதம் அமைவதும்- கருதப்படின் எண்ணிக்கை 96 அமையும்.

முதற்பட்டியல் கூறாத மூன்று வகைகள் நூலுள்ளே விளக்கப்படுதலால் இரண்டாம் பட்டியலில் எண்ணிக்கை 99 ஆகின்றது. ஆயின் இணைமணிமாலை, காப்பியம், தாண்டகம் என்பன இரண்டிரண்டு வகையடக்கினதாகக் கருதவில்லை யெனின் எண்ணிக்கை 96 என அமையும்.

அட்டவணை-2

# தீபிகையின் பிரபந்தங்கள் பிற இலக்கண நூலில் வருமிடம்

| | தீபிகை | பன்னிரு | வெண்பா | நவநீதம் | மரபியல் | இதம்பரம் | இலக்கணம் | தொன்னூல் | முத்து | தீபம் | சுவாமி | இரட்டு |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | சாதகம் | 100 | .... | .... | .... | ... | ... | ... | 1038 | 93 | .... | 2 |
| 2 | பிள்ளைக்கவி | 101-115 | 29-31 | 26-32 | 2-3 | 28 | 806-811 | 257 | 1039 | 94 | 167 | 3-5 |
| 3 | பரணி | 142-145 | 61-62 | 56-61 | 19 | 41 | 838-39 | 259 | 1040 | ... | 174 | 45-46 |
| 4 | கலம்பகம் | 129-130 | 33-35 | 33-35 | 4-6 | 29 | 812-13 | 258 | 1041 | 95 | 170 | 32-34 |
| 5 | வருக்கக்கோவை | ... | .... | .... | 7 | ... | .... | ... | 1044 | 23 | 167 | .... |
| 6 | மும்மணிக்கோவை | 156 | 36 | 36 | 8 | 31 | 815 | 281 | 1405 | 24 | 169 | 7 |
| 7 | அகப்பொருட்கோவை | 221 | 38 | 54 | 7 | 30 | 816 | 277 | 1042 | 1 | 167 | 42 |
| 8 | ஐந்திணைச் செய்யுள் | ... | ... | .... | ... | ... | 840 | ... | 1043 | 22 | ... | ... |
| 9 | அங்கமாலை | ... | 52 | 43-44 | 12 | 35 | 835 | 262 | 1046 | 2 | ... | 23 |
| 10 | அட்டமங்கலம் | 189 | 47 | 52 | 11 | 34 | 843 | 274 | 1047 | 3 | ... | ... |

| | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 11 | அநுராகமாலை | .... | ... | ... | 15 | 38 | 864 | ... | 1048 | 4 | 168 | .... |
| 12 | இரட்டைமணிமாலை | 151 | 40,59 | 37 | 8 | 31 | 819,829 | 278 | 1049 | 8 | (169) | 12 |
| 13 | இணைமணிமாலை | 150 | 40 | 37 | 8 | 31 | 818 | 282 | 1050 | 9 | ... | 12 |
| 14 | நவமணிமாலை | 183 | 47 | 52 | 11 | 34 | 837 | 274 | 1051 | 25 | .... | 21 |
| 15 | நான்மணிமாலை | 153-154 | 39 | 36 | 10 | 33 | 821 | 272 | 1052 | 26 | ... | 11 |
| 16 | நாமமாலை | 176 | 58 | 48 | 13 | 36 | 866 | 269 | 1053 | 27 | .... | ... |
| 17 | பல்சந்தமாலை | 149 | 32 | 38 | 12 | 35 | 834 | 275 | 1054 | 28 | .... | 6 |
| 18 | பன்மணிமாலை (கலம்பகமாலை) | 155 | 41 | 39 | 7 | 30 | 814 | 280 | 1055 | 29 | 170 | 15 |
| 19 | மணிமாலை | .... | ... | ... | .... | ... | ... | 279 | 1056 | 30 | .... | .... |
| 20 | புகழ்ச்சிமாலை | .... | 58 | 48 | ... | 36 | 866 | 269 | 1057 | 31 | .... | ... |
| 21 | வர்க்கமாலை | 175 | 59 | .... | 10 | 33 | 826 | 267 | 159 | 33 | .... | 28 |
| 22 | பெருமகிழ்ச்சி மாலை | ... | .... | ... | 13 | .... | ... | ... | 1058 | 32 | ... | ... |
| 23 | மெய்க்கீர்த்திமாலை | 198 | 57 | 53 | 13 | 36 | 831,865 | ... | 1060 | 34 | ... | .... |
| 24 | காப்பு மாலை | ... | .... | ... | ... | ... | 832 | .... | 1061 | 35 | ... | .... |
| 25 | வேனில் மாலை | ... | ... | ... | ... | ... | 833 | .... | 1062 | 36 | .... | .... |
| 26 | வசந்தமாலை | ... | .... | ... | ... | ... | 836 | ... | 1063 | 37 | ... | ... |
| 27 | தாரகை மாலை | 193 | 55 | .... | 17 | 39 | 867 | .... | 1064 | 38 | ... | 27 |

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 28 | உற்பவமாலை | 188 | 47 | 52 | 18 | 40 | 868 | ... | 1065 | 12 | ... | 21 |
| 29 | தானைமாலை | ... | 54 | ... | 17 | 39 | 869 | 268 | 1066 | 39 | — | ... |
| 30 | மும்மணிமாலை | 152 | 39 | 36 | 10 | 33 | 820 | 281 | 1067 | 40 | .... | 8 |
| 31 | தண்டகமாலை | .... | .... | ... | ... | ... | .... | ... | 1068 | 41 | ... | ... |
| 32 | வீரவெட்சிமாலை | .... | ... | ... | 17 | 39 | ... | .... | 1069 | 42 | .... | ... |
| 33 | வெற்றிக்கரந்தை மஞ்சரி | .... | .... | ... | 17 | 39 | ... | ... | 1070 | 43 | ... | .... |
| 34 | போர்க்கெழு வஞ்சி | ... | 54 | .... | 17 | 39 | ... | 268 | 1071 | 57 | .... | .... |
| 35 | வரலாற்று வஞ்சி | ... | 60 | ... | 18 | 40 | 869 | 271 | 1072 | 44 | .... | ... |
| 36 | எண்செய்யுள் | ... | ... | .... | .... | .... | 848 | .... | 1080 | 21 | .... | .... |
| 37 | செருக்கள வஞ்சி | 201 | 60 | ... | 18 | 40 | 869 | 270 | 1073 | 45 | .... | .... |
| 38 | காஞ்சி மாலை | .... | ... | .... | 17 | 39 | .... | ... | 1074 | 46 | ... | ... |
| 39 | நொச்சி மாலை | .... | ... | ... | 17 | 39 | .... | ... | 1075 | 47 | .... | ... |
| 40 | உழிஞை மாலை | ... | .... | ... | 17 | 39 | .... | ... | [illegible] | 13 | .... | .... |
| 41 | தும்பைமாலை | ... | .... | ... | 17 | 39 | ... | .... | 1077 | 48 | ... | .... |
| 42 | வாகைமாலை | .... | 54 | ... | 17 | 39 | ... | 268 | 1078 | 49 | ... | .... |
| 43 | ஆதோரண மஞ்சரி | .... | ... | ... | ... | ... | ... | ... | 1079 | 50 | ... | ... |
| 44 | தொகைநிலைச் செய்யுள் | ... | ... | ... | ... | ... | 817 | .... | 1081 | 51-53 | ... | .... |

| | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 45 | ஒலியலந்தாதி | 159-161 | 36 | 39 | 8 | 31 | 824 | ... | 1082 | 56 | .... | 75 |
| 46 | பதிற்றந்தாதி | — | — | — | — | — | 841 | — | 1083 | 54 | ... | ... |
| 47 | நூற்றந்தாதி | ... | .... | ... | .... | .... | 842 | .... | 1084 | 55 | (170) | .... |
| 48 | உலா | 131-138 | 49-50 | 45-46 | 14 | 37 | 858-63 | 260 | 1085 | 15 | 167 | 31 |
| 49 | உலாமடல் | .... | .... | ... | 15 | 38 | 857 | .... | 1086 | 14 | 168 | .... |
| 50 | வளமடல் | 146-147 | 51 | 47 | 14 | 37 | 856 | 261 | 1087 | 58 | 168 | 22 |
| 51 | கைக்கிளை | 184-187 | 38 | 42 | 13 | 36 | 827 | .... | 1109-10 | 74 | ... | ... |
| 52 | ஒருபா ஒருபஃது | 219 | 41 | ... | 11 | 34 | 823 | 264 | 1088 | 59 | .... | ... |
| 53 | இருபாஇருபஃது | 220 | 40 | 37 | 8 | 31 | 822 | 265 | 1089 | 10 | ... | .... |
| 54 | ஆற்றுப்படை | 202-204 | 53 | 53 | 12 | 35 | 873 | 266 | 1090 | 7 | ... | 27 |
| 55 | புறநிலை | ... | ... | ... | .... | .... | .... | ... | 1098 | 65 | .... | ... |
| 56 | கண்படைநிலை | 205 | .... | .... | ... | ... | ... | ... | 1091 | 60 | ... | .... |
| 57 | துயிலெடை நிலை | 206 | ... | ... | ... | ... | ... | .... | .... | 61 | ... | .... |
| 58 | பெயரின்னிசை | .... | .... | .... | ... | .... | 825 | .... | 1092 | 62 | ... | ... |
| 59 | ஊரின்னிசை | ... | 37 | .... | ... | .... | 825 | ... | 1093 | 16 | .... | .... |
| 60 | பெயர் நேரிசை | .... | ... | ... | ... | ... | 830 | ... | 1094 | 63 | .... | .. |
| 61 | ஊர்நேரிசை | ... | 37 | .... | .... | .... | 830 | .... | 1095 | 18 | ... | .... |
| 62 | ஊர் வெண்பா | ... | 45 | 41 | ... | .... | .... | ... | 1096 | 17 | ... | ... |

| | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 63 | விளக்கு நிலை | 207 | ... | .... | .... | ... | .... | ... | 1097 | 64 | .... | ... |
| 64 | நயனப் பத்து | 215 | 48 | 50 | 8 | 31 | 852 | .... | 1104 | 70 | ... | 22 |
| 65 | பயோதரப்பத்து | 215 | 48 | 50 | 8 | 31 | 852 | ... | 1105 | 71 | .... | 22 |
| 66 | அரசன் விருத்தம் | ... | .... | 51 | .... | ... | ... | .... | 1103 | 5 | ... | ... |
| 67 | தசாங்கத் தயல் | .... | — | .... | ... | ... | .... | .... | 1102 | 69 | ... | .... |
| 68 | பாதாதிகேசம் | 214 | 52 | 43 | 12 | 35 | 871 | ... | 1106 | 72 | .... | 23 |
| 69 | கேசாதிபாதம் | .... | 52 | 43 | 12 | 35 | 871 | .... | 1107 | 73 | ... | 23 |
| 70 | அலங்கார பஞ்சகம் | .... | 45 | 42 | 14 | 34 | 844 | 282 | 1108 | 6 | 16 | 16 |
| 71 | கடைநிலை | 229 | .... | ... | ... | ... | .... | ... | 1099 | 66 | ... | ... |
| 72 | கையறுநிலை | 230-231 | (57) | .... | ... | .... | .... | ... | 1100 | 67 | .... | ... |
| 73 | தசாங்கப்பத்து | 140 | 42-43 | 40 | 9 | 32 | 840 | .... | 1101 | 68 | .... | (9) |
| 74 | பதிகம் | 197 | ... | .... | ... | ... | ... | .... | 1116 | 80 | 168 | .... |
| 75 | குழமகன் | ... | 50 | 45 | .... | .... | 870 | ... | 1114 | 78 | ... | ... |
| 76 | மங்கல வெள்ளை | 192 | 55 | .... | 13 | 36 | 828 | ... | 1111 | 75 | ... | ... |
| 77 | நாற்பது | ... | ... | ... | ... | ... | 851 | ... | 1113 | 77 | ... | .... |
| 78 | தூது | .... | ... | 45 | 15 | 38 | 874 | ... | 1112 | 76 | ... | ... |
| 79 | தாண்டகம் | 196 | ... | ... | .... | ... | ... | ... | 1115 | 79 | .... | ... |
| 80 | சதகம் | .... | .... | ... | ... | .... | 847 | ... | 1117 | 81 | 168 | .... |

| | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 81 | பவனிக்காதல் | .... | ... | ... | ... | .... | .... | .... | 1121 | 82 | 168 | ... |
| 82 | செவியறிவுறூஉ | (213), | ... | (55) | — | .... | .... | ... | 1118 | 85 | .... | ... |
| 83 | வாயுறை வாழ்த்து | (213) | ... | (55) | .... | ... | .... | ... | 1119 | 84 | ... | .... |
| 84 | புறநிலை வாழ்த்து | (213) | .... | (55) | ... | ... | ... | ... | 1120 | 83 | ... | ... |
| 85 | குறவஞ்சி | (217-218) | ... | ... | .... | ... | ... | ... | .... | 92 | .... | 18 |
| 86 | உழத்திப்பாட்டு | 216 | ... | .... | ... | ... | ... | ... | — | ... | ... | 19 |
| 87 | ஊஞ்சல் | .... | 46 | 50 | 10 | 33 | 845 | 276 | 1122 | 19 | .... | 20 |
| 88 | எழுகூற்றிருக்கை | .... | ... | ... | .... | ... | .... | ... | 1123 | 20 | ... | .... |
| 89 | கடிகை வெண்பா | 180-182 | 46 | 54 | 18 | 40 | 850 | .... | 1124 | 86 | .... | ... |
| 90 | முது காஞ்சி | ... | .... | ... | ... | .... | ... | .... | 1127 | 89 | ... | ... |
| 91 | சின்னப் பூ | 139-141 | 43 | 40 | 9 | 32 | 846 | 263 | 1125 | 87 | ... | 15 |
| 92 | விருத்தவிலக்கணம் | 178 | 44 | 41 | 9 | 32 | 853 | 273 | 1126 | 88 | .... | 16 |
| 93 | இயன்மொழி வாழ்த்து | .... | ... | .... | .... | .... | ... | .... | 1128 | 11 | .... | ... |
| 94 | வண்ணம் | ... | .... | ... | ... | .... | .... | ... | ... | ... | 172 | ... |
| 95 | காப்பியம் | (224-226) | 63-66 | 62-65 | 20-21 | 42-43 | (854) | 254-256 | ... | 91 | 162-164 | 76 |
| 96 | பெருமங்கலம் | ... | ... | ... | .... | ... | ... | ... | ... | 90 | ... | ... |

ஆதியி னிலக்கணக் கடலெனும் பலநூல்க
ளராய்ந்து ணர்ந்தவதனை
ஆசிரிய மெனும்விருத் தத்தினாற் கூறுது
மலகுறு [5]சகாத்தமாண்டு
தேதியுடு வோரையுந் திங்களுஞ் சாதகன்
திசைசித்ர மபகாரமும்
[1] திரமான கிரக நிலை யறிந்து சொல் சாதகஞ்
செப்புபிள் [2]ளைக்கவிக்கு
மாதமிரு திங்களிற் காப்பைந்து செங்கீரை
மாதமே ழிற்றாலமாம்
வரை[3]நவஞ் சப்பாணி முத்தமோ பன்னொன்று
வாரானை சம்வற்சரம்
ஓதுமொன் றரைவருட மிந்திரண் டிற்சிற்றி
லொலிபறை முழக்கன்மூன்றி
லூரிரத [4]நாலிலாண் பால்கழங் கம்மானை
யூசல்பெண் பாலாகுமே.

இது, நூலியல்பும் யாப்பும் கூறுகின்றது. அத்துடன் பிரபந்தங்களுள் சாதகம், பிள்ளைக்கவி என்பனவற்றை விளக்குகின்றது.

(இ-ள்) பழமையான, இலக்கணக் கடல் எனக் கூறத்தகும் பல நூல்களை ஆய்ந்து உணர்ந்த செய்திகளை, ஆசிரிய விருத்தத்தால் கூறுகிறேன். பகுப்புகளுடைய சகாப்தம், ஆண்டு, தேதி, நட்சத்திரம், இராசி, மாதம் என்பனவும் பிறந்தவனுடைய திதி, சித்ரம் எனும் சிறப்பு, அபகாரம் எனும் தீமை என்பனவும், நிலையான கிரக அமைப்பும் அறிந்து சொல்வது சாதகமாம். கூறப்படுகின்ற பிள்ளைக் கவிக்கு, இரண்டாம் மாதம் காப்பு, ஐந்தாவதில் செங்கீரை, ஏழாம் மாதத்தில் தாலம், ஒன்பதாம் மாதம் வரைச் சப்பாணி, பதினொன்றில் முத்தம், ஒரு வயதில் வாரானை, ஒன்றரை வருடத்தில் அம்புலி கூற வேண்டும், இரண்டு ஆண்டில் சிற்றில், மூன்றாமாண்டில் ஒலிக்கின்ற பறை முழக்குதல், தேர் ஊர்தல் நான்காம் ஆண்டு, இவை ஆண்பாற்கு உரியன. கழங்கு, அம்மானை, ஊசல் என்பன பெண்பாற்கு ஆகும்.

---

†*1 திறமான க்ரக 2 புள்ளை 3 நலஞ் 4 நூலி
5 சகாப்த

(வி-ரை) பிரபந்த இலக்கணங்கள் மரபுவழி நின்று கூறப்படு கின்றதை ஆசிரியர் தெளிவு படுத்துகின்றார். நூல் முழுமையும் ஆசிரியவிருத்தயாப்பில் அமைதல் சுட்டப்படுகின்றது. சீர்நிலையும் எண்ணிக்கையும் வேறுபடுகின்ற பலவகை ஆசிரிய விருத்தங்களாக இவை அமைகின்றன. முந்தைய பாட்டியல்கள் நூற்பா வெண்பா, கட்டளைக்கலித்துறை யாப்பின வாதலும், சிதம்பரப் பாட்டியல் எண்சீர் ஆசிரியவிருத்தத்தா லாகுதலும் இங்கு நினைக்கத் தக்கன.

சாதகம் என்பதை இலக்கிய வகையாகப் பன்னிருபாட்டியல் 100), பிரபந்த தீபம் (93), பிரபந்ததிரட்டு (2), முத்து வீரியம் (1038) போன்றன சுட்டி விளக்குகின்றன. சதுரகாரதி, பொருட் டொகை நிகண்டும் இதனை விளக்கும்.

கலியுகத்தின், சகாப்தம், ஆண்டு, ஞாயிறு, பக்கம், வாரம், இராசி என்பனவற்றைச் சாதக உறுப்பாகப் பன்னிரு பாட்டியல் சுட்டுகின்றது. பிரபந்த தீபம், திதி, வாரம், நாள்மீன், யோகம், கிரணம், ஓரை, கிரகம் என ஏழு எனக் கூறுகின்றது. பிரபந்தத் திரட்டு இவ்வேழுடன் மாதம், வருடம் என்பனவற்றையும் இணைக் கின்றது. முத்துவீரியத்தின்படி, இவ்வேழுவகை நிலைகளால் தலை மகனுக்கு அடைவன எவை எனக் கூறல் வேண்டும். சிறப்பு, தீமை என்பன கருதப்படல் சுட்டப்படுவதாகக் கொள்ளலாம்.

தீபிகை, சித்ரம்- அபகாரம் என்பதால் நன்மை, தீமைகளைச் சாதகனுக்குக் கொள்ளுதலை வேண்டுகின்றது.

சாதகம் எனும் தனியிலக்கிய வகை கிடைக்காத போதும் காப்பியங்கள் சில தலைவன் பிறப்பைச் சார்ந்து இதனைத் தரு கின்றன. இராமனாதியர் பிறப்புச் சூழலை (கம்பராமாயணம் 287) இங்கு நினைக்கலாம். ஆசிய ஜோதியின் புத்தர் பிறப்பையும் கருதலாம். இத்தீபிகையின் பிற்பகுதி, ஆழ்வார் பிறப்பினைத் தரு வதும் (76-80) இங்கு எண்ணத்தக்கது.

அனைத்துப் பாட்டியலும் கூறும் வகையாகப் பிள்ளைக்கவி அமைகின்றது. இது பிள்ளைப்பாட்டு எனவும் அருகிப் பிள்ளைத் தமிழ் எனவும் பாட்டியலில் சுட்டப்படுகின்றது பாட்டியல்கள் மட்டுமன்றி சில நிகண்டுகளிலும் சுட்டி விரிக்கப்படும் வகையாக இது அமைகின்றது.

பத்துப் பருவம் பாடுதல் என்பது பொதுவரையறையாக அமையினும், முன் பாட்டியலும் நிகண்டும் பல பருவம் கூறல் உண்டு. பிறப்பு, உவகை, வளர்ச்சி, அச்சமுறுத்தல் எனச்சிலவற்றை இந்திரகாளியம் தருகின்றது. சிற்றில் இழைத்தல், சிறுசோறாக்கல் குழமகன், காமன் நோன்பு எனச் சிலவற்றைப் பன்னிருபாட்டியல் பெண்பாற்குத் தருகின்றது.

பாடற் பருவங்களை வயதுடன் இணைத்துத் தரும் நிலை தீபிகையிலே வெளிப்பட்டு நிற்கின்றது. குழந்தையின் மூன்றாம் திங்கள் முதல் 21 – ஆம் திங்கள் வரை ஒற்றைப் படையெண்கள் உரியன என்பது பிற நூல்களில் பெரும்பான்மை. ஆயின் இந்திர காளியம். ஆடவனுக்குப் பதினாறு வயதை எல்லையாக்கி, பெண்ணுக்குப் பூப்புப்பருவத்தைச் சுட்டுகின்றது. ஆணுக்கு நான்கு வயதும் பெண்ணுக்கு ஆறு வயதும் தருவது பிரபந்தத் திரட்டு.

பிள்ளைக்கவியின் காப்புக் கடவுள், பாடல் எண்ணிக்கை, பயன் கொள் யாப்பு போன்றன குறித்த பாட்டியல் எண்ணங்கள் தீபிகையில் சுட்டப்படவில்லை.

பெரியாழ்வார் கண்ணனைச் சில பிள்ளைப் பருவங்களில் பாடியமை இவ்வகையின் தோற்றத்தைக் காட்டுகின்றது. ஒட்டக் கூத்தரிடம் இது பத்துப் பருவங்களுள்ள தனிஇலக்கியவகையாகின்றது. இக்குலோத்துங்க சோழன் பிள்ளைத் தமிழுக்குப்பின் இன்றுவரை நூற்றுக்கு மேல் நூல்கள் இவ்வகையில் கிடைக்கின்றன. பருவத்துக்குப் பதினோரு பாடல், பத்து, ஏழு, ஐந்து மூன்று, ஒன்று என வகைகளும் அமைகின்றன.

பெரியோரையும், கடவுளரையும் குழந்தையாகப் பாவித்துப் பாடும் பொது மரபு நிலைக்கு மாறாகக் குழந்தையையே இப் பருவங்களில் பாடுதலும் இன்று உண்டு (நாரா. நாச்சியப்பன் பாடல்கள்-1, 1980).

6. வெம்போர் முகத்தாயி ரம்யானை யைக்கொன்ற
வீரனைத் தலைவனாக
வேண்டிப் புகழ்ந்துபின் கடவுளரை வாழ்த்தலு
மேலிளைஞர் கடைதிறப்பும்
வண்பாலை யிற்காளி கோயிலிற் காளிகள்
வண்பேய்க ளோடாடியும்

மற்றுமொரு கூளிபேய் சொற்கருது தலைவனான்
மாறாத கீர்த்திபொங்கப்
பண்பா யவன்வழிப் [1]புறப்பொருள்க டோன்றவுமு
பாயமாஞ் சமரம்விரும்
பலுமவன் வென்றியைக் கருதியிரு சீரடிப்
பாவுமுச் சீரடியுமிற்
செம்பாக மாகநாற் சீர்முத லமைந்திடச்
சீருற்ற தடியிரண்டாய்ச்
செப்பு[2]பதம் றாழிசையி னோரொரு கவிதையாய்ச்
செப்பிடிற் பரணியாமே.

இது, பரணிக்கு இலக்கணம் மொழிகின்றது.

**(இ-ள்)** சினமுடைய போர்க்களத்தில் ஆயிரம் யானையை கொன்ற வீரனைத் தலைவனாகக் கொண்டு, அவனைர் புகழ்ந்து, பின்பு கடவுளரை வாழ்த்துதலும், அதன் மேல் இளைஞர்க் கேற்ற கடை திறப்பும், வன்மையான பாலை நிலமும், அதன் காளி கோயிலும், அங்குக் காளி கள் வலிய பேய்களொடு ஆடுதலும், மற்றும் ஒரு கூளிப் பேய் சொல்லுதலும், அதில் கருதப்படுகின்ற தலைவனது மாற்றமற்ற புகழ் வெளிப்பட, பண்பாம் அவன் செயல் வழிப் புறப் பொருள்கள் தோன்றவும், சூழ்ச்சித் திறமுடைய போரை விரும்புதலும், அவனுடைய வெற்றியைப் பொருளாகக் கொண்டு, இருசீரடிப்பாவும் முச்சீரடியினதும் இல்லாது, செவ்வையான நாற்சீக் முதலாக அமையும்படி, சிறப்புற்ற ஈரடிகளாய் கூறுகின்ற இசையுடைய தாழிசையில், ஒவ்வொரு கவிதையாய் கூறுவது பரணி.

**(வி-ரை)** பெரும்பான்மையான பாட்டியல்களும் கூறும் வகை யாக இது அமைகின்றது. யானைகள் கொல்லப்படும் போர்க் களமே பரணி பாடற்கு இடம் தருகின்றது. ஆயிரம் யானை எனும் எண்ணம் பிரபந்த மரபியலுக்குப்பின் அமைய, பன்னிரு பாட்டியல், 'ஏழ் தலைப் பெய்த நூறுடை இபம், என எழுநூற்

---

* 1பிறர் பொருள் † 2 பஃறாழிசை

குறிப்பு: வன்பாலை, வன்பேய் என இருப்பின் சிறக்கும்.

றைக் குறிக்கின்றது. மூன்று நாழிகை ($3\frac{3}{4}$ நாழிகை என்பர்) நேரப் போரில் ஆயிரம் யானை கொல்லப்படல் எனக்கால வரையறை பிரபந்தத் திரட்டிலும், ஒருநாள் எல்லை சுவாமிநாதந்திலும் உண்டு.

பரணியின் உறுப்புகள் பட்டியல் செய்யப்படல் பாட்டியல் இயல்பாக அமைகின்றது. நாற்சீரடி முதலான தாழிசைகள் யாப்பு ஆதலும் பொதுமை கொள்கின்றது.

யானைப் போர் முதன்மை பெறுவதும், தனியாகப் பாடு பொருளாகுதலும் களவழி நாற்பதில் முதலில் அமைகின்றது கடை திறப்புக் காரணமாக அகமும் கலந்து, செயங்கொண்டாரின் கலிங்கத்துப் பரணியில் சிறப்புவகையாகின்றது. மன்னவனின் போர் மட்டுமன்றி இறைவனின் போரும் (இரணிய வதைப்பரணி), புறப் போரன்றி தத்துவமும் (மோக வதைப் பரணி, பாசவதைப் பரணி, அஞ்ஞைவதைப் பரணி) இதன் பொருளாகி வளர்ச்சி கொள்கின்றன.

7. அரியவொரு[1]போகு வெண்பாக் கலித்துறையும்
அன்பாய்க்கலி யுறுப்பினாலே
அம்புய வகுப்பு [5]மாதங் கழுமற முங்கால
மம்மானை கார்குறம்பா
ணாடுமூ சற்றவஞ் சம்பிரதம் வண்டுகளி
யலர்தழைத் தூதிரங்க
லானகைக் கிளை[2]சித்து வென்றுவகை யீரொன்ப
தாமுறுப் புக்களியைய
வருமருட் பாக்கலிப் பாக்கலி விருத்தம்
மடக்குக்க லித்தாழிசை
[3]மன்னு மாசிரிய விருத்த[4]மா சிரியமும்
வஞ்சித் துறைவெண்டுறை
வஞ்சிச் செயுள்வஞ் சியாம்விருத் தங்களுமி
வற்றாலு மிடையிடையினின்
மருவுவெண் பாக்கலித் துறைவிரவி யந்தாதி
வரன்முறைத் தொடையதாக
வுரியதே வர்க்குநா றந்தணர்க்குத் தொண்ணூ

---

* 1 போக  2 சித்(ந்)து  3 மன்று  4 மாசரியமும்  † 5 மாதங்கழற

றுடனைந்து மரசருக்கே
யுற்றிடுந் தொண்ணூறு வணிகருக் கைம்பதா
யுரைசதுர்த் தர்க்குமுப்பா
னோதுவர் கலம்பகத் துரியதா மகரமுத
லுறுமெழுத் துக்கடம்மி
லுயிர்முதன் மொழிக்குரிய வக்கரத் தாதியா
யுயர்காரி கைத்துறையினா
னெரிசுரிக் குழன்மாதர் காட்சிமுத லாய்க்கூறி
னிலைவருக் கக்கோவைபா
நேருமா சிரியமும் வெண்பாவு நேரசை
நிரையசை யெழுத்துமெண்ணி
நீள்கலித் துறைபுடன் முப்பதந் தாதியின்
னெறிபெறத் தொடையதாக
நிலைபெற வுரைப்பதே மும்மணிக் கோவையாய்
நீணிலத் துரைசெய்வரே;

இது, கலம்பகம், வருக்கக் கோவை, மும்மணிக் கோவை ஆகிய வற்றின் இலக்கணம் தருகின்றது.

(இ-ள்) அருமையான ஒருபோகு, வெண்பா, கலித்துறையும், கலியுறுப்பால் அழகிய புயவகுப்பு, மாதங்கமும், மறம், காலம், அம்மானை, கார், குறம், பாண், ஆடுகின்ற ஊசல், தவம், சம்பிரதம், வண்டு, களி, அலர்கின்ற தழை, தூது, இரங்கல், கைக்கிளை; சித்து என்று பதினெட்டு வகையான உறுப்புகள் இயைய, வருகின்ற மருட்பா, கலிப்பா, கலிவிருத்தம், மடக்கு, கலித்தாழிசை, நிலைபெறுகின்ற ஆசிரிய விருத்தம், ஆசிரியம், வஞ்சித்துறை, வெண்துறை, வஞ்சிப்பா, வஞ்சி விருத்தம் என்பனவற்றாலும், இவற்றின் இடையிடையே பொருந்துகின்ற வெண்பா, கலித்துறை விரவி இயன்று, அந்தாதித் தொடையை வரன் முறையாகக் கொண்டு, தேவர்க்கு நூறு, அந்தணர்க்குத் தொண்ணூற்றைந்து, அரசருக்குத் தொண்ணூறு, வணிகருக்கு ஐம்பது, நான்காம் வகுப்பினர்க்கு முப்பது பாடல் உரியது, எனக் கலம்பகத்திற்குரிய இலக்கணம் கூறுவர், அகரம் முதலாக வரும் எழுத்துகள் தம்மில், உயிர் எழுத்துகள், முதன் மொழிக்கு உரியதான எழுத்துகள் என்பனவற்றைத் தொடக்கமாக கொண்டு, உயர்வுடைய காரிகைகளால்-கட்டளைக் கலித்துறைகளால், நெரிந்த சுருண்ட

குழலுடைய மாதரைக் 'காட்சி' முதலான அகத் துறைகளில் கூறுவது வருக்கக் கோவை. நேரிசையாசிரியப் பாவும், வெண்பாவும், நேரசையும் நிரையசையும் வந்து எழுத்து எண்ணிக்கையுடன் அமையும் கலித்துறையும் முப்பது பாடலாக, அந்தாதி எனும் நெறி பெற்ற தொடையுடையதாக, நிலைபெறச் கூறுவது மும்மணிக் கோவை என்று உலகில் கூறுவர்.

(வி-ரை) கலம்பகம் பாட்டியல்களனைத்திலுமமைவதுடன், இலக்கிய வகையாகவும் பரந்து சிறக்கின்றது, ஒருபோகு, வெண்பா, கலித்துறை எனும் தொடக்கம் அனைத்துப்பாட்டியல்களாலும் இலக்கியங்களாலும் பின்பற்றப்படுகின்றது. பதினெண் உறுப்புப்பற்றிய எண்ணம் அமையினும் அவை மிக்கும் குறைந்தும் பயில்கின்றன. பன்னிருபாட்டியல், புயம், அம்மனை, ஊசல், களி மறம், சித்து, காலம் மதங்கி, வண்டு, கொண்டல், சம்பிரதம்' தவக என்ப் பொருண்மை உறுப்புகளில் குறைவு கொள்கின்றது, வெண்பாப் பாட்டியலே, கைக்கிளை, பாண், தழை, இரங்கல், தூது முதலியவற்றை இணைக்கின்றது. கலம்பகத்தில் பயிலும் யாப்பு, பாடலெண் பற்றிய எண்ணங்களும் பாட்டியல்களில் அமைகின்றன. மருட்பா, மடக்கு, அந்தாதி போன்ற கூறுகள் இன்றியமையாமை பெறுகின்றன.

இலக்கிய நிலையில், கலம்பக உறுப்புகள் 32 வரை அமைகின்றன. பிச்சியார், கொற்றியார், போன்றன வெல்லாம் இணைகின்றன. நந்திக் கலம்பகம் முதல் நூலாக அமையினும், அரசருக்கு 90 பாடல் என்ற நிலை கொள்ளவில்லை. இறைவனைப் பாடுதல் இரட்டைப்புலவரின் திருத்தில்லைக்கலம்பகத்தில் அமைகின்றது. மரபு மாறலாகித் தலைவனைப் பாடாது, இறைத்தலைவியைப் போற்றுதல் வீரமாமுனிவரின் திருக்காவலூர்க்கலம்பகத்தில் வருகின்றது.

கோவை எனப் பெயர் பெறும் இலக்கியங்கள் அகப் பொருட்சார்பு கொள்வதைப் பாட்டியல்களின் அகப்பொருட் கோவையுடன் வருக்கக் கோவையும், மும்மணிக் கோவையும் காட்டுகின்றன. முழுமையான அகப் பாடல் நிலை முன்னதிலும், அகப் பொருட்டுறைச் செய்யுட்கள் விரவல் பின்னிரண்டிலும் அமைவதை இலக்கியங்களும் காட்டுகின்றன. அகப்பொருட் கோவை போன்றே வருக்கக் கோவையும் கட்டளைக் கலித்துறையான காரிகைச் செய்யுளில் அமைகின்றது. பிரபந்த மரபியல் (7), முத்துவீரியம், சுவாமிநாதம் (167) போன்ற பிற்கால நூல்களே

இவ்வகையைக் கூறல். அகரவரிசை பற்றிய எண்ண வளர்ச்சிக்குப் பிந்திய நிலையைக் கருதச் செய்கின்றது. ஆத்திசூடி, அகராதி நிகண்டுபோன்றனவற்றை இயைபுபற்றி இங்கு நினைக்கலாம். ஒரு எழுத்துக்குஒருசெய்யுளாக மொழிமுதலெழுத்து அனைத்தும்வரப் பாடப்பாடல் (பிரதீபம்23) நினைக்கப்பட்டு அகப் பொருள் நிலை சுட்டப்படாமையும் உண்டு. ஆயின், நெல்லை வருக்கக் கோவை, மதுரைச் சொக்கநாதர் வருக்கக் கோவை போன்றன இலக்கிய நிலையில் அகப் பொருள் பாடு பொருளாதலைத் தருகின்றன.

மும்மணிக் கோவை 11–ஆம் திருமுறையிலேயே பரந்து பயின்று காலப்பழமை கொள்கின்றது. முப்பது பாடல், மூவகையாப்பு-நேரிசை ஆசிரியம், நேரிசை வெண்பா, கட்டளைக் கலித்துறை, அந்தாதித் தொடர்பு என்பனசுட்டப்பட்டுப் பொருள் குறிக்காது பாட்டியல்கள் அமைந்த போதும், இலக்கியம் அகச் சார்புப் பொருள் அளிக்கின்றது.

8. இருவகைப் பட்டமுற் பொருளுடன் பன்னான்
கெனுங்கருப் பொருளுமதுவும்
ஈரைந் துரிப்பொருள் பொருந்துகைக்கிளை[3]யாதிய
லியவுற்ற வன்புடைத்தாய்ப்
பெருகுகா மப்பகுதி யாங்கள வொழுக்கமும்
பெண்கற் பொழுக்கத்தினும்
பேதமன் றிக்கட்ட ளைக்கலித் துறையினைப்
[4]பெறுமேநா னூற்றாற்றிணை
யுரியகைக் கிளைமுதற் றுறையிறுதி யாமொழி
[1]யுற்றவீ ராறகப்பாட்
டுறுப்பும் வழுவின்றிச் சிறப்புட னோதலு
முறுமகப் பொருட்கோவையாம்
வருபுணர்தல் முதலைந்து ரிப்பொருள்[2]பிர காசிக்க
வரையாதி யையைந்திணை
வகுத்துச் சிறப்பித்த லைந்திணைச் செயுள்வெள்ளை
வஞ்சிகலி வணமகவலே.

---

* 1 யுற்ற வீராற கைப் 2 ப்ரகாசிக்க †3 யாதி யியைவுற்ற 4 பெறுமொர்

குறிப்பு: 'கைக்கிளை முதற் றுறை, என வருவது 'கைகோள் முதற் றுறை' என வந்திருப்பின் அகப்பாட்டுறுப்பிற்கு ஏற்ற பொருத்தம் கொண்டிருக்கும்.

இது, அகப்பொருட் கோவை, ஐந்திணைச் செய்யுள் என்பன வற்றின் இயல்பு கூறுகின்றது.

(இ-ள்) நிலம் பொழுது என்னும் இருவகையான முதற் பொருளுடன் தெய்வம் முதலிய பதினான்குகருப்பொருளும் அத்துடன் புணர்தலும் அதன் நிமித்தமும் முதலிய பத்து உரிப் பொருளும், பொருந்துகின்ற கைக்கிளை முதலியன இசைகின்ற அன்புடையதாகி, பெருக்கமுடைய காமப் பகுதியான களவொழுக்கமும், பெண்ணின் கற்பொழுக்கமும் வேறுபாடில்லாத கட்டளைக் கலித்துறையினைப் பெறுகின்ற நானூறு செய்யுட்களால், திணை, உரிய கைக்கிளை முதலாகத்துறை இறுதியாகக்கூறப்படுகின்ற பன்னிரு அகப்பாட்டு உறுப்புகளும் வழுவாது சிறப்புடன் கூறப்படுவது அகப்பொருட் கோவையாம். வருகின்ற புணர்தல் முதலான ஐந்து உரிப்பொருள் விளங்க, மலை முதலியனவற்றை, ஐந்து திணைகளாக வகுத்துச் சிறப்பிப்பது ஐந்திணைச் செய்யுளாம். வெண்பா, வஞ்சி, கலி, வண்ணம், அகவல் என்பன யாப்பு.

(வி-ரை) அகப்பொருட் கோவை, அடையின்றிக் கோவை எனவும் விகுதி பெற்றுக் 'கோவையார்' எனவும் அமைதலை இலக்கண இலக்கியங்கள் காட்டுகின்றன. அகப்பாட்டுறுப்புகள் வரல் பற்றிய எண்ணம், இலக்கண விளக்கம் (816) முதல் அமைகின்றது. தொல்காப்பியச் செய்யுளியல் சுட்டும்,

திணையே கைகோள் பொருள்வகை எனாஅ
கேட்போர் களனே காலவகை எனாஅ
பயனே மெய்ப்பா டெச்சவகை எனாஅ
முன்னம் பொருளே துறைவகை எனாஅ (1259)

எனும் பன்னிரு செய்யுள் உறுப்புகளும், நம்பியகப் பொருள் போன்றவற்றில் அகப்பாட்டுறுப்பாகப் பெயர் சுட்டப்படுகின்றன அவ்வாறே, தொல்காப்பியம் கருப்பொருட்களை,

தெய்வம் உணாவே மா மரம் புட் பறை
செய்தி யாழின் பகுதியொடு தொகைஇ
அவ்வகை பிறவும் கருவென மொழிப

என எட்டாகக் கொண்டது நம்பியகப் பொருளில்பதினான்காக விரிகின்றது. இவை, தொல்காப்பியப் பொருளதிகார வளர்ச்சி

யாக அகப்பொருட் கோவையைக் கருதச் செய்கின்றன. மாணிக்க வாசகரின் திருக்கோவையார் சிறப்பிலக்கியமாக அமைய, பாண்டிக் கோவை 8-ஆம் நூற்றாண்டெனும் காலப் பழமை கொள்கின்றது. பலதுறைகள் பாடப்படும் நிலை மாறி, ஒருதுறையே பொருளாகின்றமையை அமிர்தகவிராயரின் ஒரு துறைக் கோவை—நாணிக்கண்புதைத்தல் போன்றன காட்டுகின் றன.பிரபந்தத் திரட்டு, இந்நிலையை,வருக்கக் கோவை போன்ற வற்றை வரவேற்பதாகத் தெரியவில்லை.

கொடுப்பா ரில்லர்மையினாற் கோவையைக் கூறிட்டுக்
குலவு வருக்கம் பிறவாய்ப் பா வெவற்றும் புனைந்தார்.
(471)

ஐந்திணைச் செய்யுள் எனத் தனிவகை கருதப்படுதல் இலக்கண விளக்கம் (849) முதலே அமைகின்றது. பொருள் நிலை யால் அகப் பொருட் கோவையை ஒத்துச் செல்கின்ற போதும் யாப்பு நிலையால் மாறுபடுகின்றது. முத்து வீரியம் அகப்பொருட் கோவை பற்றிப் பேசும் போது யாப்பு வேறுபாடாக, அகவல் வெண்பா, கலி, வண்ணம், வஞ்சி என மொழிவது இங்கு இணைத்து நினைக்கலாம். வகைகள் தென்படாத போதும் ஐங்குறுநூறு, அகநானூறு (அகவல்), கலித் தொகை (கலிப்பா கீழ்க்கணக்கின் ஐந்திணை நூல்கள்(வெண்பா) போன்றனவற்றைக் கருதல் பொருந்தும். அகப்பொருள் தழுவி 'வண்ணம்' பாடப் பட்டமையைப் பத்தொன்பதாம் நூற்றாண்டின் தண்டபாணி சுவாமிகள் போன்றோர் பாடல் சில காட்டுகின்றன.

9. மேவுமால் மகனுடன் பெண்மகட் குரியதாய்
வெண்பாவி னாலாயினும்
வெளிவிருத் தத்தினா லாயினும் வழுவற
விலம்புபா தாதிகேசம்
ஆவதாய்க் கேசாதி பாதம்வரை தொடர்புற
வாற்றுவது வங்கமாலை
அரியகட வுளர்மீது பாடியக் கடவுளே
யனுதினங் காக்கவெனவுந்
தாவிலா சிரியவ் விருத்தமெட் டந்தாதி
சாற்றட்ட மங்கலந்தான்

[1]றலைவனோ மங்கையைக் கனவினிற் கண்டுமயல்
றருமவட் கினிமையுறவே
காவின் புணர்ந்ததைத் தன்னுயிர்ப் பாங்கனைக்
கருதியே நேரசையெனுங்
கலிவெள்ளை யாற்கூற [2]லநுராக மாலையாய்க்
கவிஞர்க [3]ளுரைப்பராகவே.

இது, அங்கமாலை, அட்டமங்கலம், அநுராகமாலை என்பவற்றின் விளக்கம் தருகின்றது.

(இ-ள்) ஆணுக்கும், பெண்ணுக்கும் உரியதாக, வெண்பாவிலோ, வெளி விருத்தத்திலோ, குற்றமில்லாது கூறுகின்ற, அடி முதல் முடியாக அல்லது முடிமுதல் அடியாகத் தொடர்பு கொள்ளும் வண்ணம் கூறுவது அங்கமாலை. அருமையுடைய தெய்வங்கள் மீது செய்யுள் பாடி, அக் கடவுளரே எல்லா நாளும் காக்க வேண்டும் எனவும், குறைவில்லா ஆசிரிய விருத்தங்கள் எட்டில் அந்தாதியாகக் கூறுதல் அட்டமங்கலம். தலைவன் தன் கனவில், பெண்ணைக் கண்டு, மயக்கம் தருகின்ற அவள் இன்புறும்படி சோலையில் அவளைச் சேர்ந்து அமைந்ததைத் தனது இனிய தோழனுக்குக் கூறுவதாக, நேரசை எனப்படுகின்ற கலிவெண்பா யாப்பில் தருவதைக் கவிஞர்கள் அநுராகமாலை என்று கூறுவர்.

(வி-ரை) அங்கமாலை பெரும்பான்மையான பாட்டியல்களால் சுட்டப்பட்ட போதும் இலக்கிய வகை வேறுபட்டு அமைவதை அப்பர் சுவாமிகளின் அங்கமாலை காட்டுகின்றது. நவநீதப் பாட்டியல், பாடப்படுகின்ற உறுப்புகளின் பட்டியல் தருவது புதுமை. அத்துடன் பெண்ணுக்கு முதன்மையும் தோன்றுகிறது.

அகங்கால் உகிர் விரல் மீகால் பரடு கணை முழந்தாள்
மிகுங்கால் நிதம்பமும் உந்தி உதரம் அரை முலையும்
நகம் சார்விரல் அங்கை முன்கை தோள் கண்டம்
முகம் நகைவாய்
நகும்காது இதழ் மூக்குக் கண் புருவம் நெற்றித்
தாழ் குழலே(44)

உறுப்புச் சிறப்புப் பற்றிய எண்ணங்கள், அங்கங்களின் அழகிலக்

---

1 றலைவனொரு 2 லனுராக 3 ளுரைப்பார்களே

கணம் பற்றிய குறிப்புகள் (சாமுத்திரிகாலக்ஷணம்), அங்கவியல்பும் பண்பும் தொடர்புறல் பற்றிய சிந்தனைகள் என்பன இவ்வகை இலக்கியத்திற்கு அடிப்படை கோலியிருக்கலாம்.

அட்டமங்கலம் பற்றிய எண்ணத்தில் நூல்களிடையே வேறுபாடு அமைகின்றது. ஒருவனைக் காக்க என இறைவனை வேண்டும் பொதுப் பொருண்மை, இறைவனைப் புகழ்தல் என்பதுடன் மட்டும் அமைந்துவிடுவதைப் பிரபந்த தீபம் (3) காட்டுகின்றது. எட்டுப்பாடல் அமைதல் எனப் பொருள் பற்றிச் சிந்தைகொள்ளாமை வெண்பாப் பாட்டியலில் உண்டு. பிரபந்த மரபியல் (11) முதலான சில நூல்கள், அந்தாதி அமைவதை இன்றியமையாக் கூறாகக் கொள்கின்றன. யாப்பு பற்றிய எண்ணம், பொதுவாக விருத்தம் எனலும் சிறப்பாக ஆசிரிய விருத்தம் என விதந்தோதுதலும், வண்ணச் செய்யுளாகுதலும் (நவநீதப்பாட்டியல்-52) என அமைகின்றது. இலக்கியமாக இவ்வகை புலப்பட்டிலது.

அனுராக மாலை பிரபந்த மரபியலிலேயே (15) சுட்டப்பட்ட போதும் தீபிகையை யொத்தத் தெளிந்த விளக்கம் இலக்கண விளக்கம் (864) முதல் அமைகின்றது. தீபமும், முத்துவீரியமு இதன் யாப்பினை நேரிசைக்கலி வெண்பா எனத் தருகின்றன கனவில் உற்றதை பாங்கற்குக் கூறல் எனும் இவ் வகையினை கனவு நிலையுரைத்தல், பாங்கற் கூட்டம் போன்ற பழந்துறை களுடன் இணைத்துக் கருதலாம். தனியிலக்கியவகை பெறாமை அமைகின்றது:

10. வெண்பாக் கலித்துறையு மிருபதந் தாதியாய்
[1]மேவுதொடை யாய்வருவதின்
[2]மிக்கவா சிரியவ் விருத்தமொரு பத்துநேர்
வெண்பாவு மொருபத்துடன்
பண்பா [4]யுரைப்பதே யிரட்டைமணி மாலையாய்ப்
பாடுவது முறையினால்வெண்
பாவுமக வலும்வெள்ளை யுங்கலித் துறையுடன்
[5]பகுத்ததே யிரண்டிரண்டாய்
நண்பா யிணைத்துவெண் பாகவன் மணிமாலை
நவிலுமெழில் வெண்பாவுடன்
நற்கலித் துறையிணை மணிமாலை யென்னவே

* 1 மேவு...தா 2 பிக்க † 4 யுரைப்பத திரட்டை 5 பகுத்தே

நவினூறு நூறதாக
வெண்பா வலர்க்கியை [6]வுறுஞ்சிறப் பாகவு
மெய்துமந் தாதியாற்சொற்
கிசைந்ததொடை யோநால [3]தாகவும் பண்புட
ணியம்பலிணை மணிமாலையே.

இது, இரட்டை மணிமாலை, இணைமணி மாலையை விளக்கு கின்றது.

(இ-ள்) வெண்பாவும் கலித்துறையுமாக இருபது பாடல் அந்தாதியான தொடை பெற்று வருவது, அல்லது மிக்க சீர்களுடைய ஆசிரிய விருத்தங்கள் பத்தும் நேரிசை வெண்பா பத்தும் வரும்படி கூறுவது இரட்டை மணி மாலை. முறையாக, வெண்பாவும் அகவலு மாகவோ, வெண்பாவும் கலித்துறையுமாகவோ பகுத் தது இரண்டிரண்டாக, செவ்வையாக இணைத்து வெண்பா வகவல் மணிமாலை எனவும், கூறுகின்ற அழகிய வெண்பாவுடன் நல்ல கலித்துறையுடைய இணைமணி மாலை (வெண்பா கலித்துறை இணை மணிமாலை) எனவும், நூறு நூறு பாடலாகக் கூறுதல்; அறிவுடைய கவிஞர்க்குப் பொருந்துகின்ற சிறப்பாக வருகின்ற அந்தாதியால், சொல்லுக்கு இசைகின்ற நால்வகைத் தொடையுடனும், பண்புடன் கூறுதல் இணைமணி மாலையாம்.

(வி-ரை) இரட்டைமணிமாலை, பாட்ல் எண்ணிக்கை, யாப்பு வரையறைகளைக் கொண்டு பொருண்மை வரையறை கொள் ளாது பாட்டியலில் அமைகின்ற போதும், காரைக்காலம்மையின் இரட்டை மணிமாலை இறைமையைப் பாடுபொருளாக்குகின் றன. வெண்பா, கலித்துறைகளையே யாப்பாகக் கூறல் பன்னிரு பாட்டியலிலும் பிறவற்றிலும் அமைந்த போதும், பிறிதொரு வகையையும் சேர்த்தல் வெண்பாப் பாட்டியல் முதல் வருகின் றது. சுவாமி நாதத்தின் படி (169) வெள்ளையைத் தொடர்ந்து, கலித்துறையோ, அகவலோ, அகவல் விருத்தமோ அமையக் கூடும் என்பது கருத்து வேறுபாடாகத் தெரிகின்றது.

---

* 3 தாகவம் † 6 யுறுஞ்

இணைமணிமாலை, இலக்கியம் பெறாமையால், பொருள் வரையறை புலப்படாத போதும், பாட்டியல்களில் யாப்பும் பாடலெண்ணும் சுட்டப் பெறுகின்றன. இதன்கண், யாப்பு வரன் முறையால் இருவகைகள் அமைகின்றன. வெண்பா அகவல் இணைமணிமாலை எனவும், வெண்பாக் கலித்துறை இணைமணி மாலை எனவும் முத்து வீரியம் பெயர் தருகின்றது. பின்வகை ஒன்றையே பன்னிருபாட்டியல் போன்ற சில கூறுகின்றன. அந்தாதி பெற்ற நூறுபாடல் என்பது பொது எண்ணம். ஆனால் பிரபந்த தீபம், 'இரண்டிரண்டு அந்தாதித்து இரு நூறு இயம்பலே' என வேறுபட்ட எண் தருகின்றது.

(இ-கு) 'வருவதின்' என்பது, வருவதும் எனப் பொருள் கொள்ளப்படுகின்றது

11. பகரும்வெண் பாமுதல் வேறுபடு [1]பாவும்
பாவினம தாயொன்பதாய்ப்
[2]பண்பொரு ளுறுசெய்யு ளந்தாதி யாகவே
பாடனவ மணிமாலையாம்
நிகரில்வெண் பாக்கலித் துறைவிருத் தம்மகவ
னேருமந் தாதித்தொடை
நிலைபெறவே யெண்ணஞ்சு செய்யுளாய்ச் சீருற
நிகழ்த்தனான் மணிமாலையா
மகவலடி யுங்கலியி னடிமயங் கிய்வஞ்சி
யானவப் பாவினாலே
யாண்மகனை யேபுகழ்ந் தேகருத் தளவினி
[3]லாற்றுவது நாமமாலை
மகிழ்வுறுஞ் செய்யுள்பப் பத்தாக வொவ்வொரு
வகைக்குமோர் சந்தமாகி
வரநூறு செய்யுளாய்ச் சொல்வதே பல்சந்த
மாலையாய்ச் [4]சொல்வோர்களே.

இது, நவமணிமாலை, நான்மணிமாலை, நாமமாலை, பல்சந்த மாலை எனும் வகைகளின் இலக்கணம் கூறுகின்றது.

(இ-ள்) கூறப்படுகின்ற வெண்பா முதல் வேறுபடுகின்ற பிற பாவும் பாவினமுமாக, ஓசையினிமையும் பொருள் நிறைவுமுடைய ஒன்பது செய்யுள் அந்தாதியாகப் பாடல் நவமணிமாலையாம். ஒப்பற்ற வெண்பா, கலித்

---

† 1 பாவும்மப் 2 பண்பு 3 லரற்றுவது 4 சொல்வார்

துறை, விருத்தம், அகவல் என்பன அந்தாதித் தொடை பெற்று நாற்பது பாடலாய் முறையாக கூறப்படுதல் நான்மணிமாலையாம். அகவல் பாவின் அடிகளும் கலிப்பா அடிகளும் விரவிய வஞ்சிப் பாவினால், ஒரு ஆடவனைப் புகழ்ந்து, கருத்தளவில் பேச, அது நாம மாலையாகும். இன்பம் தருகின்ற பாடல்கள் பத்துப் பத்தாக, ஒவ்வொரு பத்துப்பாடலாலான வகைக்கும் ஒரு சந்தமாகி வரும்படி நூறு செய்யுளாய்க் கூறுவது பல்சந்தமாலை எனச் சொல்லுவர்.

(வி-ரை) நவமணிமாலையும் யாப்பு பாடலெண்ணிக்கையுடன் அமையும் வகையாகக் காணப்படுகின்றது. பாவும் இனமுமாக வரல் எனப் பொதுவாகப் பன்னிருபாட்டியலும், விருத்தம் ஒன்பது என வெண்பாப் பாட்டியல் முதலியனவும், வெண்பா முதலாக வேறேதேனும் ஒன்பது பா என இலக்கண விளக்கமும் பலவாறு யாப்பு நிலையைத் தருகின்றன. அந்தாதியாகுதல் பிரபந்தமரபியல் முதல் காணப்படுகின்ற எண்ணமாகும்.

அட்டமங்கலத்துடன் நவமணிமாலையைச் சில பாட்டியல்கள் தொடர்புபடுத்துகின்றன. இறைவனை ஏத்தித் தலைவனைக் காக்கும்படி வேண்டும் பொருள் நிலை, இதனால், இங்கும் இணைய சிதம்பரப் பாட்டியல் தொன்னூல் விளக்கம் போன்றன வாய்ப்பளிக்கின்றன. சிவப்பிரகாசரின் பிக்ஷாடணர் நவமணி மாலை, பாரதியின் நவரத்தினமாலை போன்றஇலக்கியம்பொருள் வேறுபாடு காட்டுகின்றன.

நான்மணிமாலை நான்குவித யாப்புச் சேர்க்கையுடைய வகையாகும். நால்வகை யாப்பில் ஒன்றாக 'விருத்தம்' சுட்டப் படுவதால் எவ்வகை விருத்தமும் வரலாம் எனும் எண்ணம் ஏற்படினும், பாட்டியல்கள் அகவல் விருத்தம் என விதந்தோது தலும் காணப்படுகின்றது. அகவலும் அகவல் விருத்தமுமாக நாற்பது பாடலும் வரலாம் எனும் எண்ணம் பன்னிருபாட்டி யலில் தோன்றுகின்றது. விருத்த வகைகள் நாற்பதால் ஆவது எனும் கருத்து தொன்னூல் விளக்கத்தில் (272) தொனிக்கின்றது. பட்டினத்தாரின் கோயில் நான்மணிமாலை, சிவப்பிரகாசரின் நால்வர் நான்மணிமாலை, பாரதியின் விநாயகர் நான்மணிமாலை போன்றன இதற்கும் பக்திப்பொருண்மை கொள்ளஉதவுகின்றன.

ஆடவனைப் புகழ்கின்ற நாம மாலையின் பொருண்மை, அவன் குணம், பெயர் என்பனவற்றை ஏத்தலாகச் சிதம்பரப் பாட்டியலில் விளக்கம் பெறுகின்றது. பலவகை அடிகள் மயங்கிய வஞ்சி எனப் பன்னிரு பாட்டியல் முதலியன கூறுகின்ற போதும், முத்து வீரியம் அகவல், கலி எனும் பாவடிகளின் கலப்பைத் தெளிவுபடுத்துகின்றது. பிரபந்த தீபம் (27) 'வஞ்சிப்பா' எனக் கூறாமை கருத்து வேறுபடாம். தனி இலக்கிய வகை கிடைக்காத போதும், 'நாமாவளி'ப் பாடல்களை இங்கு நினைக்கலாம், புறத்தின் இயன் மொழி வாழ்த்தும் கருதத் தக்கது.

பல்சந்தமாலை பற்றிய எண்ணத்தில் நூல்களிடையேகருத்து வேறுபாடு அமைகின்றது. பன்னிருபாட்டியல் இதனைக் கலம்பகத்துடன் இணைத்து வேறுபடுத்துகின்றது. கலம்பகத்தின் உறுப்புகள் நீங்கி யாப்பு மரபு தொடர்ந்து பத்து முதல் நூறு பாடல்கள் அமைவது என்பது அதன் விளக்கம். வெண்பாப் பாட்டியல் முதலியன பத்து முதல் நூறு என்ற எண்ணிக்கை வரையறையின் ஈரெல்லையைச் சுட்ட, முத்துவீரியம் முதலியன நூறுபாடல் என மட்டும் மொழிகின்றன. தொடக்க கால நூல்கள் பலசந்தமாகப் பாடல் வருதல் எனப் பொதுவாகக்கூற, பின் நூல்கள் பத்துவகைச் சந்தம் எனச் சுட்டுகின்றன. பிரபந்த மரபியல் அகவல் விருத்தம் அல்லது வகுப்பு என யாப்புவடிவினை வகுக்கின்றது. இதற்கு இலக்கிய வகை பரவலாகக் கிடைக்காத போதும்,பத்துப்பாடல்கள் தோறும்யாப்பு வேறுபாடும் அதனால் ஓசை வேறுபாடும் காட்டும் மணிவாசகரின் திருச்சதகம் போன்றவற்றை இணைத்து நினைக்கலாம்.

12. அலகுறு கலம்பகத் துள்வரு மொருபோகு
வம்மானை யூசன்மூன் றும்
அன்றிமேற் சொல்லிய வுறுப்பமைத் தவ்வா
றரற்றல் பன் மணிமாலையாஞ்
சொலுவரிது வேகலம் பகமாலை யாகுமே
சொல்லுமெப் பொருளின்மேலுந்
தூயவெண் பாவிரு பஃதுநாற் பதுகலித்
துறைவிரவின் மணிமாலையாஞ்
சிலதகவ லடியுடன் கலியடி மயங்கிவஞ்
சிப்பாவி னான்மாதர்கள்
சீர்மையைக் கூறல்பு கழ்ச்சியின் மாலையாஞ்
செப்பும்மொ ழிக்குமுதலாம்

பெலமிகும் வருக்கத் தெழுத்திற்கொவ் வோர்செயுட்
பேசுவது வர்க்கமாலை
பெறுதலைவி யழகுகுண மாக்கஞ் சிறப்போதல்
பெருமகிழ்ச்சி யின்மாலையே.

இது, பன்மணிமாலை யென்னுங்கலம்பகமாலை, மணிமாலை புகழ்ச்சி மாலை, வர்க்க மாலை, பெருமகிழ்ச்சி மாலை எனும் வகைகளை விளக்குகின்றது.

(இ-ள்) அளவுடைய கலம்பகத்தின் உள்ளே வருகின்ற ஒரு போகு அம்மானை, ஊசல் எனும் மூன்று உறுப்புகளும் அல்லாது மேலேகூறிய உறுப்புகளை அமைத்து அவ்வாறே கூறுவது பன்மணிமாலை. இதுவே கலம்பக மாலை எனவும் சொல்வர். சொல்லுகின்ற எந்தப் பொருளின் மீதும் தூய்மையுடைய வெண்பா இருபதும், கலித்துறை நாற்பதும் விரவினால் அது மணிமாலையாகும். சில அகவலடிகளும் கலியடிகளும் விரவிய வஞ்சிப்பாவினால் பெண்களின் சிறப்பைக் கூறுதல் புகழ்ச்சி மாலையாகும். கூறப்படுகின்ற சொற்களுக்கு முதலெழுத்தாக வரும் ஆற்றலுடைய வருக்க எழுத்துகளுக்கு ஒவ்வொரு செய்யுளாக அமைப்பது வர்க்கமாலை. பெறுகின்ற தலைவியின் அழகு குணம், ஆக்கம், சிறப்பு இவற்றைக் கூறுதல் பெருமகிழ்ச்சி மாலையாம்.

(வி-ரை) பிரபந்த தீபிகை மட்டுமே பன்மணிமாலைக்குக் கலம்பக மாலை எனும் பெயர் மாறுபாடுண்மையைச் சுட்டுகின்றது. பன்னிருபாட்டியல் கலம்பகமாலை எனும்பெயரை மட்டும் தர, வெண்பாப்பாட்டியல் முதலான பிற பன்மணிமாலை எனும் பெயரை மட்டும் தருகின்றன. இரண்டும் ஒன்று என்ற கருத்துத் தெளிவைத் தீபிகை தருவது, 'கலம்பகப்பா ஒண்மாலை பேசிய பன்மணியாம்' என்ற வெண்பாப் பாட்டியலை அடிப்படையாகக் கொண்டது எனலாம். கலம்பக உறுப்புகளுள் நீக்கப்பட வேண்டியன ஒருபோகு அம்மனை எனப் பன்னிரு பாட்டியல் கூற ஊசலையும் பின் நூல்கள் இணைக்கின்றன. சுவாமி நாதம்(170) கலம்பகச் சிதைவாக இதனைக் கருத உதவுகின்றது. பிரபந்தத் திரட்டோ, ஊசல், ஒருபோகு எனபனவற்றை நீக்குகின்றது (15). இதற்கு இலக்கியம் கிடைப்பதாகத் தெரியவில்லை.

தொன்னூல் விளக்கம் முதலான ஒருசில நூல்களே மணி மாலை எனத் தனிவகை கூறுவது, காலக் கோட்பாடு, பிரபந் தத்தின் பல்கிய வளர்ச்சி, என்ற எண்ணத்தில் அணுகத் தக்கது. வெண்பாவும் கலித்துறையும் விரவ வேண்டும் எனக் கருதப் பட்ட போதும் சம எண்ணிக்கை இன்மையும், இவ்விரு பாவும் விரவும் இருபா இபருஃது, இரட்டைமணிமாலை. இணைமணி மாலை என்பனவற்றிலிருந்து மொத்த எண்ணிக்கையில் மாறு படலும் சுட்டி யறியத்தக்கன. எப்பொருள் மீதும் பாடப்பட லாம் எனும்பொருட்பொதுமை இருப்பினும், இலக்கியம் பெறாமையால் எண்ணம் தெளிவுபட்டிலது.

ஆடவரைப் புகழும் நாமமாலைக்கு இணையாக மகளிரை ஏத்தும் புகழ்ச்சிமாலை அமைகின்றது. வஞ்சிப்பாவில் பல்வகை யடிகள் மயங்குதல் யாப்பாக வருதல், பிரபந்த தீபம், முத்து வீரியம் போன்றனவற்றில் இன்னும் தெளிவாக, அகவல், கலியடி விரவும் வஞ்சி என அமைக்கப்படுகின்றது. தொன்னூல் விளக்கம் அடிமயங்குதலைக் குறிக்கவில்லை. சீரும்பேரும் சிறக்க உரைத்தல் எனவும், ஏத்தல் எனவும், குணம் ஓதுதல் எனவும், குலம் உரைத் தல்எனவும், மாண்பு கூறுதல்எனவும், வழுத்தல் எனவும், நூல்கள் சிறிது விளக்க வேறுபாடு கொள்கின்றன. மகளிரைப் பாடுதல் என்பது இறைவிக்கு ஆதலைத் 'தையல் நாயகி அம்மன் புகழ்ச்சி மாலை' எனும் இலக்கியம் காட்டுகின்றது.

வருக்கமாலை, எழுத்தடிப்படை இலக்கிய வகையாக அமைகின்றது. பன்னிரு பாட்டியல் முதலே இப் பிரபந்தம் விளக் கப்படுகின்றது. மொழி முதலாகிய எழுத்துக்கு வருக்கம் உரைப்பது எனத் தெளிவு இல்லா முன் நிலை, சிதம்பரப்பாட் டியலில், உயிர், க, ச, த, ந, ப, ம, வ, எட்டினை ஒட்டி அகவற்பா அமைதல் என ஓரளவு விளக்கம் பெறுகின்றது. ஒவ்வொரு வருக்கத்திற்கு ஒருபாவாக, மொழி முதல் எழுத்துகளால் அகவலடிகள் முறையே தொடங்கலாக, தொன்னூல் விளக்கம் போன்றன தெளிந்து மொழிகின்றன. அகவல் எனவிதந்தோ தாது, செய்யுள் எனப் பொதுவாக முத்துவீரியம் கூறுகின்றது பிரபந்த தீபமும் இதனையே மொழிகின்றது.

அகரவரிசையில் இலக்கியம் அமையும் வருக்கக் கோவை யையும் இங்கு நினைக்கலாம். திருவேங்கட வருக்கமாலை இலக்கியநிலை காட்டுகின்றது. உயிர் வருக்க மாலை எனத் தனிவகையும் அமைய வாய்ப்புள்ளமை, மீனாட்சியம்மன், உயிர் வருக்கமாலை போன்றவற்றில் காணப்படுகின்றது.

பெருமகிழ்ச்சிமாலையின் விளக்கம் பிரபந்த மரபியல், பிரபந்த தீபம், முத்துவீரியம்போன்றபிற்கால நூல்களில் மட்டும் காணப்படுகின்றது. பெண்ணின் மனம் மகிழும்படி குணம், பெயர் அடுக்கி மொழியும் பொருள் பற்றிய பெயர்ப்பொருத்தம் இப்பிரபந்தத்திற்கு அமைகின்றது. பின் நூல்கள், இந் நோக்கத்தைக் கூறாது பாடு பொருளை விரிக்கின்றன—பெண்ணின் அழகு, பண்பு, ஆக்கம், சிறப்பு, குலம், என. தனியிலக்கியம் பெறாமையால் யாப்பு, அமைப்பு போன்றன வெளிப்படுமாறு புலப்படவில்லை.

13. மருவுசொற் சீரடி யெனுங்கட் டுரைச்செய்யுள்
மரபு வழி யிற்செய்திடு
மற்புயன் கீர்த்தியை விரித்தெடுத் தோதலே
வளருமெய்க் கீர்த்திமாலை
யரியதெய் வங்காத்த லாகமூன் றைந்தேழி
னறைசெய்யுள் காப்புமாலை
யருவேனின் முதுவேனி லைச்சிறப் பித்தோத
லாகுமே வேனின்மாலை
[1]விரவிளந் தென்றலை வருணித் துரைப்பதே
மேலாம் வசந்தமாலை
வெகுதூசி யின்படை யினணியைப் புகழ்ந்திடும்
வெகுவகுப் பா[2]முறையினை
யுரையருந் ததிகற்பின் மாதர்கள் குணங்களை
யோதறா ரகைமாலையா
முயர்மால் பிறப்பா சிரியவிருத் தத்தா
லுரைத்த[3]லுற் பவமாலையே.

இது, மெய்க்கீர்த்தி மாலை, காப்பு மாலை, வேனில் மாலை வசந்த மாலை, தராகை மாலை, உற்பவ மாலை எனும் பிரபந்தங்களை விளக்குகின்றது.

(இ-ள்) பொருந்துகின்ற சொற்சீரடி என்னும் கட்டுரைச் செய்யுளில், முன் மரபு வழியினோர் செய்த உடல் திறன் காட்டுகின்ற புகழை விரித்துக் கூறுவது வளருகின்ற மெய்க்கீர்த்தி மாலையாம். அருமையுடைய கடவுள் காப்பதாக மூன்று, ஐந்து அல்லது ஏழு செய்யுளில் கூறப்படுவது காப்புமாலை. அருமையான இள

---

* 1 விரளந் 2 முறையின 3 லுற்பல

வேனிலையும் முதுவேனிலையும் சிறப்பித்துப் பாடுதல் வேனில் மாலையாகும். விரவுகின்ற இளந்தென்றலை வருணித்துக் கூறுவது மேலான வசந்தமாலையாம். மிக்கதான தூசிப்படையின் அணிவகுப்பைப் புகழ்கின்ற மிகுதியான வகுப்புப் பாடல் முறையினையும், கூறுகின்ற அருந்ததி போன்ற சீரிய கற்புடைய பெண்டிர் குணங்களையும், ஓதுதல் தாரகைமாலையாம். உயர்வுடைய திருமாலின் பிறப்புகளை ஆசிரிய விருத்தத்தால் கூறுதல் உற்பவமாலை.

(வி-ரை) மெய்க்கீர்த்தி மாலை எனும் வகையை இலக்கண விளக்கம் (865) முதல் காணமுடிகின்றது. முன்நூல் மெய்க்கீர்த்தி என மட்டும் கூறி விளக்க, இலக்கண விளக்கம் இருவகையையும் கூறுகிறது. பிரபந்த மரபியல் மெய்க்கீர்த்தி வஞ்சி எனும் பெயர் தருகின்றது. இலக்கண விளக்கம் உட்பட அமைந்த நூல்கள் அரசனின் புகழைப் பாடுபொருளாக்க, பின் வந்த நூல்கள் குலமரபுப் புகழைப் பொருண்மையாகக் கொண்டு வேறுபடுகின்றன. பன்னிரு பாட்டியல், அரசன் புகழ்கூறி அவன் வரலாறும் சுட்டி, அரசியுடன் வாழ்க என முடித்தல் வேண்டும் எனப் பொருள் விரிவு காட்டுகின்றது. பெரும்பான்மை நூல்களும் சொற்சீரடியை யாப்பாகத் தர, பிரபந்த மரபியல் வஞ்சிப்பா என யாப்பு சுட்ட, பிரபந்த தீபம் போன்றன எக்குறிப்பும் தந்தில. அரசர்களின் மெய்க்கீர்த்திகள் கல்வெட்டு, செப்பேடுகளில் அமைவது இலக்கிய நோக்கில் கருத்தத் தக்கதாம்.

காப்புமாலையும் இலக்கண விளக்கம் முதலான பின் நூல்களிலேயே உண்டு. நூலின் முன் அமையும் காப்புப் பாடலும், பிள்ளைத் தமிழின் காப்புப்பருவமும் இப்பிரபந்த முன்னோடிகள் போலும். தனி இலக்கியம் புலப்படவில்லை.

வேனில் மாலையும் இலக்கண விளக்கம் முதலான சில நூலில் மட்டுமே காணப்படுகின்றது. அங்கு வேனிலைப்பாடுதல் என மட்டுமமைய, பிற்கால பாட்டியல் நூல்களில் இருவேனிலும் விதந்து கூறப்படுகின்றன. ஐங்குறுநூற்றின் இளவேனில் பத்து இங்கு இலக்கிய நிலையில் ஒப்பிடத்தக்கது.

வசந்தமாலையும் இலக்கண விளக்கத்தில் முதலில் அமைந்து பின் நூல்களில் தொடர்கின்றது. தென்றலைப் புகழ்தல் எனவும் வருணித்தல் எனவும் அலங்கரித்து உரைத்தல் எனவும் பொருண்மை விரிக்கப்படுகின்றது.

தாரகை மாலை, பன்னிரு பாட்டியல் முதலான நூல்கள் முதல் விளக்கப்படும் வகையாக அமையினும் பாடுபொருள் பற்றிய சிந்தனையில் சில வேறுபாடுகள் கொள்ளுகின்றது. பன்னிரு பாட்டியல் இரண்டு பொருளுடைய இருபத்தேழு செய்யுட்களால் இவ்வகை அமையும் என்கின்றது. இருபொருள் எவை என விளக்கப்படவில்லை. சிலேடையாகலாம், பிரபந்த மரபியல் 27 நட்சத்திரத்தையும் கூறும்போது, தூசிப்படையின் அணி, வகுப்பும் போற்றப்படும்படி அமைதலை வேண்டுகின்றது. இலக்கண விளக்கம், கற்புடை மகளிர் இயல்பை வகுப்புச் செய்யுளால் கூறுவதைப் பொருளாக்குகின்றது. இத்தகு முந்நிலையணுகு முறைகளில், ஓரளவு பின்னிரண்டையும் சார்ந்து தீபிகை இணைவிளக்கம் செய்கின்றது. அருந்ததிக் கற்பு என்பதாலும், தீபம் 'அருந்ததிக் கற்புக்கு ஒப்பாக அறைதல்' (38) என்பதாலும் 'தராகை' என்ற பெயர்ப்பொருத்தம் விளங்குகிறது. கற்புடை மகளிரைப் பாடும் நிலையில் சிலம்பின் வஞ்சினமாலைக் கதைகள் அமைகின்றனவே யொழியத் தனியிலக்கியம் கிடைத்திலது. படையணியைப் புகழும் பாங்கிலும் தனியிலக்கியம் பெறாத போதும் கம்பனின் தானைகாண் படலம் போன்றன பொருள்நிலை காட்டுகின்றன.

உற்பவமாலை, குவளை மலர் போன்ற கருநீல வண்ணனான மாலினைப் பற்றியதானமையால், உற்பவமாலை (உற்பலம்-குவளை) எனவும் சுட்டப்படுவதாகக் கொள்ளலாம். பன்னிரு பாட்டியல், ஆழியோன் பிறப்பு எனவும், வெண்பாப் பாட்டியல் தசப்பிராதுற்பவம் எனவும் பெயர் வேறுபாடு காட்டுகின்றன. பெரும்பான்மையான நூல்கள், மாலின் தசாவதாரத்தைப் பாடுதல் எனவும் வாழ்த்துதல் எனவும் கூற, பன்னிருபாட்டியல் திருமால் பிறப்புகள் பத்தினையும் பாடிப் பரவி, பாட்டுடைத் தலைவனைக் காக்கும்படிவேண்டுதல் எனப் பொருட்பெருக்குக் கொள்கின்றது. அகவல் விருத்தம் என யாப்பும், பத்துப்பாடல் என அளவு எண்ணும் குறிக்கப்படுகின்றன. இதற்கும் தனி இலக்கியம் பெறப்படாத போதும் ஆழ்வார் பாசுரம், பெரிய திருமொழியில் (11.4) இதற்குத் தனியிடம் அளிக்கின்றது.

உற்பவ மாலை பாடுதலின் பொருள் நிலைக்கு வாய்ப்பாக இந்நூலின் பிற்பகுதியில்(75) தீபிகை ஆசிரியர் திருமாலின் அவதாரச் செய்திகளை வகுக்கின்றார்.

14. அகவலி னோசைபிற ழாதவா சிரியமா
[2]யதின்முன ரெடுத்துச்செலு
மாடிய [1]கொடிப்படையி னைப்புகழ்ந் துரைசெய்வ
தாகுமே தானைமாலை
பகரும்வெண் பாக்கலித் துறையகவன் முப்பதும்
பன்னுதொடை யந்தாதியாய்ப்
பாடல்மும் மணிமாலை வெண்பாமுந் நூறுகவிப்
பாடறண் டகமாலையாம்
மிகுசுத்த வீரன்மாற் றார்புரஞ் சென்றுபசு
வேட்டுநிரை கவருதற்கு
வெட்சியின் மாலைசூ டியவண்ண [3]மேகியே
மீட்டாவி னிரைகவர்ந்தே
யிகறுறந் தூர்வருந் தலைவன் மேற்[4]பாலினுக்
கியைதசாங் கம்பொருந்த
விசைவெற்றி யைக்கருதி யேபாட லதுவீர
மெனும் வெட்சி மாலையாமே.

இது, தானைமாலை, மும்மணிமாலை, தண்டகமாலை வீரவெட்சி மாலை ஆகிய பிரபந்த[†]இலக்கணம் கூறுகின்றது.

(இ-ள்) அகவல் ஓசை சிதையாத ஆசிரியத்தில், படையின், முன்னர் எடுத்துச் செல்லுகின்ற ஆடும்கொடிப்படையணியைப் புகழ்ந்து கூறுவது தானைமாலை. கூறுகின்ற வெண்பா, கலித்துறை, அகவல் என முப்பது பாடல் பொருந்தும் அந்தாதித் தொடையுடன் பாடுவது மும்மணிமாலை. வெண்பாவில் முந்நூறு பாடல் அமைவது தண்டகமாலை, மிகுந்த வீரமுடைய தலைவன் பசுக்களை விரும்பி ஆனிரை கவருவதற்காக, வெட்சிமலர் மாலை அணிந்து கொண்டு பகைவன் ஊர் சென்று ஆனிரை கவர்ந்து, போர் வென்று ஊர் மீண்டு வரும் போது அத்தலைவன் மீது, பகுப்பு, களுக்கு ஏற்ற தசாங்கம் பொருந்தும்படி, இசைந்த வெற்றியைப் பொருளாகக் கொண்டு பாடுவது வீர வெட்சிமாலை.

(வி-ரை) தானை என்பது படை எனப் பொதுப்பொருள் கொள்வதால், நூல்களிடையே இவ்விலக்கிய வகைக்குச் சிறிய பொருள் மாற்றம் தென்படுகின்றது. படையின் திறனைப் பாடுவது

---

*1 கோடிப்படி † 2 யதன் 3 மேகிய 4 லாவினுக்

எனப் பன்னிரு பாட்டியல் முதலிய முன்நூல்கள் சொல்ல தூசிப்படையினைப் புகழல் என இலக்கண விளக்கமும் கொடிப் படையினை இயம்பல் என முத்துவீரியம் முதலியனவும் கூறுகின்றன. தானை என்பதால் சதுரங்கமாகிய நாற்படையும் பாடுபொருளாகுதலைப் பிரபந்த தீபம் கொள்கின்றது; அகவற்பா யாப்பாதல் பற்றிய எண்ணம் இலக்கண விளக்கம் முதல் அமைகின்றது. தனியிலக்கியம் கிடைக்காத மற்றொரு வகையாக இது காணப்படுகின்றது.

மும்மணிமாலை மூவகையாப்பின் முப்பதுபாடலின் அந்தாதி இலக்கியம் என்ற நிலையில் நூல்களிடையே கருத் திணைவு உண்டு; வெண்பா கலித்துறை அகவல், என்பதில் அகவலுக்குப் பதிலாக அகவல் விருத்தத்தைப் பன்னிருபாட்டியல் கூறுகின்றது. மும் மணிக் கோவைக்கும் இம்மும்மணிமாலைக்கும் யாப்பு முறைவைப்பில் மாற்றம் அமைதலைத் தொன்னூல் விளக்கம் நினைக்கின்றது; பொருண்மை பாட்டியலில் சுட்டப் பெறாத போதும் இறைமை கருவாதலை, காஞ்சீபுரம் வரதராசர்மும்மணிமாலை, திருவல்லிக்கேணி பார்த்தசாரதி மும்மணிமாலை போன்ற இலக்கியங்கள் காட்டுகின்றன.

தண்டகமாலை இலக்கியமாகப் பிரபந்த தீபம், முத்து வீரியம் போன்று ஒருசில நூலில் மட்டும் அமைகின்றது. வெண்பா முந்நூறு என யாப்பும் அளவும் மட்டும் கருதப்படு கின்றன. இலக்கியம் பெறப்பட்டிலது. 'தனிவெண்பா' எனவும் 'எண் புணர்ச்சி' எனவும் பிரபந்த தீபம் கூறுவதால் அந்தாதி இன்மை, எண்ணிலக்கியவகை நிலை என்பன சிறப்புக் கூறாகக் கொள்ளப்படலாம்.

வீரவெட்சி மாலை, முன் நூல்களில் அடையின்றி வெட்சி மாலை எனவும் அமையும், நிரை கொள்ளல் என முன் நூல் களில் சுட்டப்பட்ட பொருள், முத்துவீரியம் முதல் நிரை கவர்ந்து வருபவனின் வெற்றி விளம்பலாக விரிகின்றது. தீபிகையில் மட்டுமே தசாங்கம் முதலியனவும் இதனிடை பொருளாக இணைகின்றன. எவ் யாப்பாலும் முப்பது பாடல் கூறுதல் எனப் பிரபந்த மரபியல் சொன்னபோதும், பிந்திய நூல்கள் யாப்பு-எண் பற்றிக் கருதில, சிலப்பதிகார வேட்டுவ வரி,ஆநிரை கவர்தலைத் தருவது இங்கு ஒப்பிடத்தக்கது.

15. [1]மாற்றலர்கள் கொண்டநிரை மீட்போர் கரந்தைபூ
மாலைசூ டிப்போகிமீள்
வகையினை [2]விரித்தோத லைவெற்றிக் கரந்தையின்
மஞ்சரியெ னக்கூறுவார்
வேற்றுமைப் பகைவர்மேற் போர்குறித் தேகுவது
வேந்தர்[3]வஞ் சிப்பூமாலை
வேய்ந்தெழு ப்படைச்சிறப் பாசிரிய வகையினால்
விள்ளல்போர்க் கெழுவஞ்சியாம்
பார்த்துநற் குலமுறை பிறப்புமேம் பாட்டுடன்
பலசிறப் புங்கீர்த்தியும்
பதியவஞ் சிப்பாவி னாற்றொகுத் தேபுலவர்
பகரின்வர லாற்றுவஞ்சி
யேர்த்திடும் பாட்டுடைத் தலைவனூர்ப் பெயரினை
[4]யிசைத்துமெண் ணாற்பெயர்பெற
வீரைந்து கவிமுத லாயிரம் [5]வரைச்சொல்லல்
எண்செய்யு ளாகுமன்றே.

இது, வெற்றிக் கரந்தை மஞ்சரி, போர்க்கெழுவஞ்சி, வரலாற்று வஞ்சி, எண் செய்யுள் எனும் பிரபந்தங்களை விளக்குகின்றது.

(இ-ள்) பகைவர் கவர்ந்து சென்ற ஆநிரையை மீட்கின்றவர், கரந்தை மலர்மாலை சூடிச்சென்று மீட்டு வருவதனை விரித்துப் பேசுவது வெற்றிக்கரந்தை மஞ்சரி என்பர். மாறுபட்ட பகைவர் மேல் போருக்குச் செல்லும் மன்னருடன் வஞ்சிப் பூமாலை சூடி எழுகின்ற படையின் சிறப்பினை ஆசிரியப்பா வகையால் பேசுதல் போர்க்கெழு வஞ்சி. நல்ல குலமுறையும், பிறப்பும் உயர்வும், பல சிறப்புகளும் பார்த்து, புகழும் பதியும் படி, வஞ்சிப்பாவினால் தொகுத்துப் புலவர்கள் கூறினால் வரலாற்றுவஞ்சி. அழகுடைய பாட்டுடைத் தலைவனின் ஊர்ப்பெயரைக் கூறி எண்ணிக்கையால் பெயர் பெறும்படி பத்து முதல் ஆயிரம் வரைக் கவிதை சொல்வது எண்செய்யுள்.

(வி-ரை) பிரபந்த மரபியல் முதலான நூல்கள் ‘கரந்தை’ என நிரை மீட்டலை மட்டும் சுட்டுகின்றன. முத்து வீரியம்

---

* 1 மாற்றவர்கள் † 2 விரித்தோதன் 3 பூ வஞ்சி 4 எடுத்து 5 வரைசொல்ல

வெற்றிக் கரந்தை எனப் பெயர்சூட்டிச் செயல்விளக்கம் அளிக் கின்றது. வெற்றிக்கரந்தை மஞ்சரி என்ற பெயர்நிலை பிரபந்த தீபம் முதல் காணப்படுகின்றது. மாலையிலக்கிய வகையாகவும் எவ்யாப்பின் முப்பது செய்யுளாலாவதாகவும் பிரபந்த மரபியல் இதனை நுவலுகின்றது. பிற்காலப் பாட்டியலில் இது காணப் படவில்லை.

போர்க்கெழுவஞ்சி என்பது பிற்காலப் பெயர் நிலையாகி யமைவதை முத்துவீரியம் முதல் காணமுடிகின்றது. வெண்பாப் பாட்டியல் 'மேற்செலல்' பொருளையும் வஞ்சி எனும் பெயரை யும் தருகின்றது. தொன்னூல் விளக்கம், அகவலால் வஞ்சி மாலை ஆகுதலைச் சுட்டுகின்றது. ஆசிரியவகை எனத் தீபிகை குறிக்கின்றது. பிரபந்த மரபியலின் புறத்துறை மாலைகளின் பொதுக் கருத்தின்படி எவ்யாப்பிலும் முப்பது பாடலால் இம் மாலையும் அமையலாம்.

வரலாற்றுவஞ்சி, வெண்பாப்பாட்டியலில் வஞ்சி வரலாறு என அமைகின்றது. பெயர் ஒப்புமை அமையினும் காலந்தோறும் இதனுடைய பொருண்மை பற்றிய எண்ணம் மாறுபட்டு அமை கின்றது. வெண்பாப் பாட்டியல், 'வழி உரைத்தல்' என்பதில் அரசனின் குலவழியாகிய வரலாற்றை நினைப்பது, முத்து வீரியம் போன்ற பிற்கால நூல்களில் விரிவிளக்கமாகத் தொடர் கின்றது. பிரபந்த மரபியல் போன்றன 'பல வரலாறு' கூறல் எனப் பொருள் மயக்கம் தோற்றுவிக்கின்றன. இலக்கண விளக்கம் முற்றிலும் மாறுபட்டு 'ஞால மேல் தானை நடப்பது' எனப் படைச்செலவைப் பொருளாக்குகின்றது. தொன்னூல் விளக்கம் இன்னும் வேறுபட்டு வஞ்சிப்பாவில் அறம் முதல் நான்கும் வருமாறு உரைத்தலை வேண்டுகின்றது. பிற்கால நூல்கள் —தீபிகை உட்பட — குலமுறை வரலாற்றை மட்டும் வேண்டாமல் அத்துடன் தலைவனின் சிறப்பியல்புகளையும் பொருளாக்குதல் வளர்ச்சியாம்.

எண்செய்யுள் பற்றிய எண்ணம் இலக்கண விளக்கம் முதல் அமைகின்றது. பாட்டுடைத் தலைவனின் ஊரையும் பெயரை யும் சிறப்பித்துப் பாடல் எனும் இதன் கருத்து, முத்து வீரியத் தில் பத்து முதல் ஆயிரம் என அமையும் எல்லைகளையும், எண்ணால் பெயர் பெறுதலையும் கொண்டது. பிரபந்த தீபம், பொருண்மையை விரித்து, 'ஊரும் பேரும் உயர்குலம் அழகு உரம்' என அமைக்கின்றது.

இப் பிரபந்த வகைகள் பெரும்பாலும் தனியிலக்கியம் பெறாமை எண்ணத்தக்கது. ஈங்கோய்மலை எழுபது, தில்லைத் திருவாயிரம் போன்று எண்செய்யுட்கு 'ஊர்' நிலையில் சான்று உண்டு. ஞாயிறு ஆயிரம் பொருள் வேறுபாடு காட்டுகின்றது.

(இ-கு) 'இசைத்தும்' என்பதன் உம்மை பொருளற்றதாகத் தவிர்க்கப்படுகின்றது.

16. சமரத்தி லறுபட்ட மனிதனுடல் பரியுடற்
றந்தியுட லங்கட[2]லையுந்
தசையிரத் தங்கூளி பேய்ப்பிசா சங்கழுகு
சம்புநாய் காகமுதலா
யெமதெம தெனத்[3]தின்று மாரபா ரத்தேக்
களித்திருக் கப்பூதமும்
இசைபாடி யாடியிங் ஙனமருந் தச்சிறப்
பெய்திட [1]வுரைப்பததுவே
யமர்செருக் களவஞ்சி யாகும், பறந்தலை
[4]யணிச்சிறப் புச்செய்யுளா
மலர்காஞ்சி மாலைசூ டிப்பகைவ ரூர்ப்புறத்
ததினூன்றல் காஞ்சிமாலை
கமையாய்ப் புறத்தகத் [5]தூன்றிவலி பேசிடுங்
கள்ளர்கட் கோடலின்றிக்
கந்தநொச் சியின்மாலை சூடித்தன் மதில்காத்தல்
கழறநொச் சியின்[6]மாலை.

இது, செருக்கள வஞ்சி என்னும் பறந்தலைச் சிறப்பு, காஞ்சி மாலை, நொச்சிமாலை எனும் பிரபந்த இலக்கணம் கூறு கின்றது.

(இ-ள்) போரில் அறுப்புண்ட மனித உடல், குதிரையின் உடல், யானையின் உடல்கள், தலை என்பனவற்றையும், தசை, இரத்தம் என்பனவற்றையும், கூளி, பேய், பிசாசு, கழுகு, நரி, நாய், காகம் முதலான்வை, 'எமது' 'எமது' எனக் கூறி-கருதி- உண்டும் ஆரவாரித்தும் மகிழ்ந்திருக்க, பூதமும் இசைபாடி, ஆடி, இவ்வாறே உண்டு சிறப்புப்

* 1 வுரைப † 2 னையுந் 3 தின்னு 4 யணிசிறப் 5 துன்றி 6 மாலையே

குறிப்பு: ஏட்டிலும், அச்சிலும் 'பரந்தலை' என்பதே காணப் படினும் 'பறந்தலை' என அமைதல் பொருந்தும்

> பெற்றிட உரைப்பது செருக்களவஞ்சி. இது பறந்தலைச் சிறப்பு எனும் அழகிய செய்யுளுமாம். விரிந்த காஞ்சி மலர் மாலை சூடி, பகைவரின் ஊரின் வெளியே படையூன்றுதலைக் கூறுவது காஞ்சிமாலையாகும். பொறுமையுடன், வெளிப்பக்கத்தில் படையூன்றி, வலிமை பேசும் கள்ளர்கள் கொள்ளாவண்ணம், மணமுடைய நொச்சி மலர்மாலை சூடித் தனது மதிலைக் காத்தலைக் கூறுதல் நொச்சிமாலை.

(வி-ரை) செருக்கள வஞ்சிக்குப் பறந்தலைச் சிறப்பு எனப் பெயர் மாறுபாடு கருதுவது இங்கு மட்டுமே அமைகின்றது எனலாம். செருக்களத்தைப் பத்து விருத்தத்தால் பாடுதல் எனப் பன்னிரு பாட்டியலும், வஞ்சிப்பாவில் பாடல் வேண்டும் என வெண்பாப் பாட்டியலும் கூறுகின்ற கருத்துத் தொன்னூல் விளக்கம் வரைத் தொடரினும் முத்து வீரியம், பிரபந்த தீபம் ஆகியன, தீபிகை போன்று களக்காட்சிப் பொருண்மையை விரித்து யாப்பை மொழியாது அமைகின்றன. பரணி இலக்கியக் களக்காட்சியை இங்கு நினைக்கலாம்.

'ஊன்றல் காஞ்சி, மதிலைக் காத்தல் நொச்சி' என மாலைப் பிரபந்தப் பொருளும், 'எப்பாட்டிலும் முப்பது இயம்பல், என யாப்பும் எண்ணிக்கை வரையறையும் பிரபந்த மரபியல் முதல் அமைகின்றன. முத்து வீரியம், பிரபந்ததீபம் முதலான பின் நூல்கள் தனித்தனி வகையாகப் பொருள் விளக்கம் தருகின்றன. காஞ்சிமாலை படையூன்றலைக் கூறும் பொதுமை, தீபத்தில், 'கருதலர் ஊர்ப்புறம் கைப்பற்றல்' என அமைகின்றது. புறத்திணையின் வளர்ச்சியில் உருவாக வாய்ப்புக் கொள்ளும் இம் மாலைப் பிரபந்தம் இலக்கியமாக உருப்பெற்றதாகத் தெரியவில்லை.

17. மருவலர்களூர்ப் புறஞ் சூழவே யுழிஞைப்பூ
மாலைசூ டித்தானையான்
[1]மதியினை யூர்வளைந் தாலென [2]வளைப்பதை
வழுத்தலே யுழிஞைமாலை
பொருதுமாற் றலரோடு தும்பைமா லிகைவேய்ந்து
பொருதுவது தும்பைமாலை
பொருபகையை வென்றவா கைமாலை யணிவதைப்
புகல்வதா சிரியகவியா

---

1 மதிப்பினை 2 விளைப்பதை

[5]லரும் வாகை [3]மாலையாங் கொலைபுரி களிற்றினை
யடக்கினவ ருக்குமெதிரா
யடல்புரி களிற்றைச் சிதைத்தடக் கினவர்க்கு
மமைதல்விட் டோடுகளிறை
யுரமுடன் [4]பற்றிப் பிடித்தடக் கினவர்க்கு
முறும்வீர முஞ்சிறப்பு
மோதுவஞ் சிப்பாவி னாற்சொலவா தோரணத்
துலவுமஞ் சரியாகுமே.

இது, உழிஞை மாலை, தும்பை மாலை, ஆதோரணமஞ்சரி எனும் பிரபந்தங்களை விளக்குகின்றது.

(இ-ள்) உழிஞைப்பூ மாலை சூடிப் பகைவர்களின் ஊரின் புறத்தைச் சந்திரனை ஊர்வட்டம் சூழ்ந்த வண்ண மாகப் படையினால் வளைப்பதனை வாழ்த்துவது உழிஞை மாலை. போர் செய்கின்ற பகைவரோடு, தும்பை மாலை அணிந்து போர் புரிவது தும்பைமாலை. போர்புரிகின்ற எதிரியை வென்றதனால் வாகைமாலை அணிவதனைப் பேசுகின்ற ஆசிரியப் பாடல் அருமை யான வாகைமாலை. கொலைத் தொழில் செய்யும் யானையை அடக்கினவருக்கும், எதிர்த்துப் போர் செய்கின்ற யானையைச் சிதைத்து அடக்கினவருக்கும், அமைதியாக இருத்தலை நீங்கி ஓடுகின்ற யானையை வலிமையுடன் பற்றிப்பிடித்து அடக்கினவருக்கும் உறு கின்ற வீரமும் சிறப்பும் ஓதுகின்ற வஞ்சிப் பாவினால் சொல்ல, அது ஆதோரண மஞ்சரியாகும்.

(வி-ரை) உழிஞை, தும்பை, வாகை மாலைகளுள், வாகை மாலை வெண்பாப்பாட்டியல் முதல் தொடர்ந்து காணப்படு கிறது. அகவல் யாப்புப் பற்றிய எண்ணமும் வெற்றிப் பொருண் மையும் அங்கும் அமைகின்றன. பிற புறமாலைகள் பிரபந்த மரபியல் முதலாக, முன்சுட்டிய வண்ணம் வருகின்றன. தீபிகை மட்டுமே இலக்கிய நயம் தோன்ற 'மதியினை ஊர் வளைந்தா லென' எனஉழிஞை மாலைக்கு உவமை அளிக்கின்றது. இப் புறப் பொருள் மாலைகள் தனியிலக்கியம் கொள்ளாத போதும், 'புறப் பொருள் வெண்பா மாலை' போன்ற முன் நூல்கள், இத் தகு எண்ணம் ஏற்படக் களனாக அமையலாம்.

---

3 மாலையாந் தோலை 4 பத்திப் பிடித்தடிக் † 5 வரும்

வாதோரண மஞ்சரி எனும் பெயர் நிலையும் பொருள் விளக்கமும் முத்து வீரியம், பிரபந்த தீபம் ஆகிய இரு நூலிலும் அமைகின்றன. ஆயின் 'யானைத்தொழில்' எனும் இலக்கிய வகையொன்றைப் பன்னிரு பாட்டியல் முதல் இலக்கண விளக்கம் ஈறாகப் பல நூல்கள் கூறுகின்றன. பன்னிரு பாட்டியல் அரச யானையின் சிறப்பையும் அங்க இலக்கணத்தையும் பாடுதல் எனவும் வஞ்சிப்பா மட்டு மன்றி ஆசிரியமும் வரும் எனவும் இதனைத் தருகின்றது. பின்னுள்ள வெண்பாப் பாட்டியல் முதலியன, இத்தகைய யானையை அடக்குதல் எனவும் அணைதல் எனவும் பற்றிச் சேர்தல் எனவும் பொருளை வேறுபடுத்து கின்றன. இதன் வளர்ச்சி நிலையாக வாதோரண மஞ்சரி கருதத் தக்கது. 'தோரணம்' என்பதையும் பன்னிருபாட்டியல்,

> முன்னர் ஊன்றிய காற்குறி தன்னில்
> பின்னர்ப் பதம் இடுவது தோரணம் என்ப (170)

எனத் தருவது பெயராய்வுக்கு உதவலாம். ஆதோரண மஞ்சரி என்பதே செம்மை வடிவு எனவும் கருதுவர். வாரண மஞ்சரி எனல் பொருந்தலாம். தொல்காப்பியத் தும்பைத்திணை 'களிறு எதிர்ந்தோர் பாடு' பற்றிக் கூறும் பொருளின் இப் பிரபந்த வகை வளர்ச்சி, தனி இலக்கியம் கொள்ளவில்லை

18. நெடிலடிச் செய்யுட் டொகுத்தது நெடுந்தொகையு
        நேர்[4]குறள டிச்செய்யு[1]ளால்
    நிரவித் தொகுத்தது குறுந்தொகை கலிப்பாவி
        னேர்தொகுத் தொகையுமாய்
    முடிவதே போல்வன தொகைநிலைச் செய்யுளா
        முறையினீ ரெண்கலையையு
    முடியவோ ரடியதா யிங்ஙன நாலடியின்
        முடிதலெண் ணெண்கலையதா
    யடிகள்பல சந்தமாய் வண்ணமுங் [2]கலைவைப்பு
        மந்தாதி தவறாமலே
    யலகுமுப் பதுசெய்யுள் பாடுதுஞ் சிறுபான்மை
        யாகுமெட் டுக்கலையெனுந்
    தொடர்புறு மன்றிவெண் [3]பாவகவ லுங்கலித்
        துறையான விம்மூன்றையுஞ்
    சோர்வில்பப் பத்தாக வந்தாதி யாகவுஞ்
        சொல்லொலிய லந்தாதியே.

---

* 1 ளா(ய)ல 2 கல 3 பாவகலுங் † 4 குறிலடிச்

இது, தொகை நிலைச் செய்யுள், ஒலியலந்தாதி எனும் பிரபந்தங்களை விளக்குகின்றது.

(இ-ள்) நீண்ட அடிகளையுடைய செய்யுட்கள் தொகுக்கப்பட்ட நெடுந் தொகையும், குறுகிய அடிகளாலான செய்யுட்களால் வரிசையாகத் தொகுத்த குறுந்தொகையும், கலிப்பாவின் நேரிய தொகுதியான தொகையும் ஆக முடிவது போல்வன தொகைநிலைச் செய்யுளாகும். ஓரடிக்குப் பதினாறு கலை என்ற முறையில் நாலடிகளில் அறுபத்து நான்கு கலையாக, அடிகள் பல சந்தமாய், வண்ணமும், கலைவைப்பும், அந்தாதி தவறாமல், வகுத்து, முப்பது செய்யுள் பாடுவதும்; சிறுபான்மையாக எட்டுக் கலையும் வருவதும்; அன்றியும், வெண்பா, அகவல், கலித்துறை எனும் இந்த மூன்றையும் சோர்வின்றிப் பத்துப் பத்தாக அந்தாதியாகவும் சொல்வதும் ஒலியலந்தாதியாகும்.

(வி-ரை) தொகைநிலைச் செய்யுள் எனும் தனிவகையை உருவாக்குவதன் அடிப்படை, சங்க இலக்கிய நெடுந்தொகை எனும் அகநானூறும், குறுந்தொகையும், கலித்தொகையும் பற்றியாகலாம். இலக்கண விளக்கம் முதல் தான் இவ்வாறு ஒரு வகை அமைகின்றது. முத்துவீரியம், பிரபந்ததீபம் என்பன பின்பற்றுகின்றன.

ஒலியந்தாதி என்ற பெயர் பன்னிரு பாட்டியல் முதல் அமைய, தீபிகை யொன்றே ஒலியலந்தாதி என அமைக்கின்றது. பாடு பொருண்மை வரையறுக்கப்படா வகையாக இது வருகின்றது. 'இலக்கண விளக்கம் வரை, சிறுபான்மை எட்டும் அல்லது பதினாறும் கலைகளுடைய முப்பது வண்ணச் செய்யுள் (அந்தாதித்து) வருதலே யாப்பு-வரையறையாகக் கருதப்படுகின்றது. முத்துவீரியம், பிரபந்த தீபம் ஆகியன மட்டும் தீபிகையைப் போன்றே, மூவகை யாப்பு விரவும் பிறிதொரு நிலையையும் தருகின்றன. வண்ணச் சரபம் தண்டபாணி சுவாமிகள் இதில் சில முயற்சிகள் செய்துள்ளார் - முதலொலியலந்தாதி, நடுவொலியலந்தாதி. குமரகுருதாச சுவாமிகள் கந்தரொலியலந்தாதி என்ற நூல் இயற்றியுள்ளார்.

19. பத்துவெண் பாக்கலித் துறைபத் துடன்பொருள்
பற்றிடுந் தன்மைதோன்றப்
பலசிறப் புற்றவந் தாதியாய்ப் பாடுவது

பண்பதிற் றந்தாதியாம்
வெற்றிவெண் பா நூறி னாலுங் கலித்துறையின்
விண்டுவந் நூறதேனும்
[3]வினாவியந் தாதித் துரைத்த[1]னூற் றந்தாதி
மிக்கவிள மைப்பருவமா
யுற்றதலை மகனைப் பிறப்பும் பரம்பரை
யுறுங்குலமி னானென்பதா
யுயர்[2]தலைமை யாய்மாதர் புடைசூழ வேபருவ
முளபெண்கள் கண்டுதொழவே
மத்தகய மீதுபரி சிவிகைமீ தும்பவனி
வருதலைவ னைத்துதித்து
மானே ரிசைக்கலியின் வெண்பாவி னாற்கூறல்
வருமுலா வாகு[4]மென்றே.

இது, பதிற்றந்தாதி, நூற்றந்தாதி, உலா என்பனவற்றை விளக்கு கின்றது.

(இ-ள்) பத்து வெண்பா, அல்லது பத்துக் கலித்துறை, பொருள் பொருந்தும் வண்ணம், சிறப்புற்ற பல அந்தாதித் தொடை வரப் பாடுவது இனிய பதிற்றந்தாதி. வெற்றி யுடைய வெண்பா நூறினாலும் அல்லது கலித்துறை யில் நூறாகவேனும் அந்தாதித்துக் கூறுதல் நூற்றந் தாதி. மிகவும் இளமைப் பருவமுடைய தலைவனை பிறப்பு, பரம்பரை, உறுகின்ற குலம், இன்னான் என்ப தாக, உயர்ந்த தலைமையுடையதாய், பெண்கள் பக்கத்தில் சூழவும், பருவப் பெண்கள் கண்டு வணங்க வும், மதயானை மீதும், குதிரை அல்லது சிவிகை மீதும் உலா வருகின்றமையைப் புகழ்ந்து சிறப்புடைய நேரி சைக் கலிவெண்பாவினால் சொல்வது உலாவாம்.

(வி-ரை) பதிற்றந்தாதி, நூற்றந்தாதி என இரு தனி வகை களைக் கருதும் எண்ணம் இலக்கண விளக்கம் முதலாகவே காணப்படுகின்றன. ஆயின்பன்னிரு பாட்டியல் முதலிய முன் நூல் கள் அந்தாதி எனவும் அந்தாதித் தொகை எனவும் இவ்விலக் கிய வகையைப் பொதுவாகச் சுட்டுகின்றன. வெண்பா அல்லது கலித்துறையில் ஏதேனும் பொருள் பற்றி வரும் எனவும், நூறு பாடல் வரும் எனவும், விருத்தமும் வரலாம் எனவும் எண்ணுதல் காணப்படுகின்றன. எனவே நூற்றந்தாதி பற்றியே இவை

---

* 1 னூத்தந்தாதி 2 தலமை † 3 வினவி 4 மன்றே

நினைத்தன. பதிற்றந்தாதி பற்றி எண்ணவில்லை எனக் கருதலாம். சுவாமிநாதம் (170) நூற்றந்தாதி எனாது பதின்பத்து (பதிற்றுப் பத்து) அந்தாதி எனக் கூறி, பத்துப் பாடலுக்கு ஒரு சந்தமாக வருநிலையைக் காட்டுகின்றது.

அந்தாதி இலக்கியத் தோற்ற நிலையைப் பத்துப் பாடலமைப்பில் ஆசிரிய யாப்பில் ஐங்குறுநூற்றின் தொண்டிப் பத்தும் பதிற்றுப் பத்தின் நான்காம் பத்தும் காட்டுகின்றன. பதினோராம் நூற்றாண்டின் இராமாநுஜ நூற்றந்தாதியே பெயர்நிலை இயைபு காட்டினும் முதலாழ்வார்களின் வெண்பா அந்தாதிகள் — மூன்றாவதாயிரத்தின்கண் அமையும் ஆறு திருவந்தாதிகளும், திருவாய்மொழி நூற்றந்தாதியும் இதன் முந்தைய பயிற்சியைக் காட்டுகின்றன.

உலா, தொல்காப்பிய புறத்துறை தரும், 'ஊரொடு தோற்றம்' (1029) என்பதன் வளர்ச்சியில் உருவாகிய இலக்கியமாகக் கருதப்படுகின்றது. பன்னிரு பாட்டியல் முதலிய எல்லா நூல்களும் இதன் இலக்கணத்தைக் கூறினும் விரித்தலும், வளர்த்தலும், செப்பஞ் செய்து மொழிதலும் காணப்படுகின்றன. பன்னிரு பாட்டியல், எட்டு பகுதிகளை உடையதாக இவ் உலாவைப் பகுத்துக் கொள்ளுகின்றது. முதனிலை தலைவன்-அவன் உலாவரல் என்பனவற்றையும், தொடர்ந்த ஏழு நிலைகள் ஏழு பருவப் பெண்டிர் செயலையும் கூறியமைதல் என இது தெளிவாக்கப் படுகின்றது. தலைவனின் குடிநெறி மரபு, கொடை போன்றன கூறப்படுவதுடன், அவன் நீராடி அணியணிந்து நகரத்தார் எதிர் கொள்ள யானை மீது உலாவருதல் என்பனவும் முதனிலைப் பொருளாம். கருத்து வேறுபாடாக, மக்கள் குழுமி உலாக்காண வருதலையும் முதனிலை என்று கூறுகின்றது. உலாத் தலைவனின் வயதை 48 எனலும், பெண்கள் அவனைக் கண்டு காதலித்தல் எனவும், அப் பருவப் பெண்டிர்க்குரிய விளையாட்டு இவையிவை எனவும் கூறுதல் பன்னிரு பாட்டியலில் மட்டுமே உண்டு. உலா இலக்கியங்கள், பெண்கள் காதல் கொண்டனர் எனவே காட்டுகின்ற போதும், பிற பாட்டியல்கள், 'செய்கை மறந்து அயர' (வெண்பா) எனவும், 'ஏத்தும்' (நவநீதம், சுவாமிநாதம்) எனவும், 'தொழ' (பிரபந்த மரபியல்முதலியன) எனவும், புகழ்தல் (தொன்னூல்) எனவும், வணங்க (மூத்து வீரியம்) எனவும், பணிய (பிரபந்த தீபம்) எனவும், மயங்க (பிரபந்தத் திரட்டு) எனவும் கூறுவது சிந்திக்கத்தக்கது. வெண்பாப்பாட்டியல், பிரபந்தத்திரட்டு என்பன 'காதலை'யே உணர்த்தின எனலாம்

எனினும் பிற வாழ்த்தல்-வழிபடல் என்பனவே கொண்டு, மரபு மாற்ற விழைந்தன எனலாம். உலா வரும் தலைவன் 'குழமக' னாக அமைவதனைப் பெருப்பாலான இந் நூல்கள் காட்டுவதும் இவ் எண்ணத்திற்கு அடிப்படை நல்கியிருக்கலாம். பிரபந்த மரபியல் முதலாக இவ் எண்ணம் அமைகின்றது. குழமகன்-குல மகன் என்ற மயக்கம் தொன்னூல் விளக்கத்தில் உண்டு. தலைவனின் தசாங்கங்களையும் உலாவில் இணைத்தலைத் தொன்னூல் விளக்கமும் பிரபந்தத் திரட்டும் சுட்டுகின்றன.

உலா இலக்கியமாகத் தோன்றுமுன் முத்தொள்ளாயிரத் தனிப் பாடல் போன்றன உலாவரும் தலைவனைக் கண்டு காமுற்ற கைக்கிளைத் தலைவியரைக் காட்டுகின்றன. தனி முழு வகையாக எட்டாம் நூற்றாண்டின் சேரமான் பெருமாள் நாயனாரது திருக்கைலாய ஞான உலா அமைகின்றது. பருவப் பெண்டிர் செயல் பற்றிய விரிவு இந்நூலில் அமையாது, மூவருலா போன்றவற்றில் முழு வடிவில் அமைகின்றது. உலா எனப் பெயர் பெற்றும், பொருள் தொடர்பின்மையை வேதநாயகரின் ஞானஉலா போன்றன காட்டுகின்றன.

20 கனவிலொரு மாதினைக் கண்டணைந் தின்பங்
கலந்தபின்[1] விழித்துமாதைக்
காணாம லவள்பொருட் டாகமட லூர்வதைக்
கலிவெள்ளை யால[2]ற்றலை
இனையுலா மடலா மறம்பொரு ளின்பங்கள்
இம்மூன்று கூறும் [3]பயனை
யெள்ளிமங் கையர்திறத் துறுகாம வின்பமதை
யேபயன் கொண்டேதலை
வனையியற் பேரினைத் தக்கதே யெதுகையாய்
வரநாட்டி யுந்தனிச்சொன்
மறுத்தின்னி சைக்கலியின் வெண்பாவி னாற்றலை
மகனிரந்தே குறைபெறா
தனைவரறி மடலூர்வ தென்னவீ ரடியெதுகை
யாகவே யறைவளமட
லைவிருத்தம் வெள்ளை [4]நாலெணிற் கைக்கிளைக்
கறையொருத லைக்காமமே.

இது, உலாமடல், வளமடல், கைக்கிளை எனும் பிரபந்தம் விளக்குகின்றது.

† 1 கலந்து 2 ரற்ற லினை 3 பய னெள்ளி 4 நாலெனிற்

(இ-ள்) கனவில் ஒரு பெண்ணைக் கண்டு, நெருங்கி, இன்பமுற இணைந்த பின்பு, கண்விழித்து, அப் பெண்ணைக் காணாமல் அவளுக்காக மடலூருவதைக் கலிவெண்பா வால் கூறுதல் உலாமடல். அறம், பொருள், இன்பம் ஆகிய இந்தமூன்றும் கூறுகின்ற பயனைஇகழ்ந்து, பெண் களின் பால் தோன்றுகின்ற காமமாகிய இன்பமே பயன் எனக்கொண்டு தலைவனது இயற் பெயருக்கு ஏற்ற எதுகை வரும்படி அமைத்து, தனிச் சொல் இல்லாது, இன்னிசைக் கலிவெண்பாவினால், தலை மகன் இரந்தும் குறைவு நிறைக்கப் பெறாமையால், அனைவரும் அறியும்வண்ணம் மடல் ஊர்வது என ஈரடி எதுகையாகக் கூறல் வளமடல். ஐந்து விருத்தம், அல்லது முப்பத்திருவெண்பாவில் ஒருதலைக்காமப் பொருள் வருவது கைக்கிளை.

(வி-ரை) பிரபந்த மரபியல் முதலான பிந்தைய நூல்களே உலாமடல் பற்றிக் கூறுகின்றன. மடலில் உலாவருதல் என்ற நிலையில், இது பெயர் பெற்று, உலாவோடு தொடர்பு கொண்ட போதும், நனவிலன்றிக் கனவில் இணைந்த மாதிற்காக மடலூர்வேன் என்பதால் சூழல் — பொருள் நிலையில் வேறு படுகின்றது. மடல், உலா போன்றே இங்கும் கலிவெண்பா யாப்பாகின்றது. இலக்கியம் அமைந்தது புலப்படவில்லை.

வளமடல் எனத் தீபிகை உரைப்பதைப் பிற நூல்கள் மடல் எனவும் இன்ப மடல் எனவும் வேறு பெயரால் குறிப்பதும் காணப்படுகிறது. மடல் எனும் பெயரே பழமையானதாகப் பன்னிருபாட்டியல் முதல் அமையினும், பிரபந்த மரபியல் இன்ப மடல் எனவும் இலக்கண விளக்கம் வளமடல் எனவும் கூறத் தொடங்குகின்றன. ஆயின் சுவாமிநாதம் இன்பமடலையும் வள மடலையும் இருவகையாகக் கருதுதல் தெரிகின்றது. பவனிக் காதலின் தொடர்ச்சியாக, உலாக்கண்ட தலைவி தன் ஆசை மிகுதியைக் கூறுவது இன்பமடலாகவும், தலைவன் அவ்வாறு இரங்குதல் வளமடலாகவும் இவரால் மொழியப்படுகின்றன. பெண்ணின் கூற்றாகவும் ஆடவனின் கூற்றாகவும் மடல் இலக் கியம் வருதல் பற்றி இவர் இவ்வாறு வகைகள் கருதுகின்றார் எனலாம். பன்னிரு பாட்டியல் மட்டும் பெண்டிர் மடலேறார் என்ற மரபைச் சுட்டி, வழுவமைதியாகப் போலும், கடவுளர் தலைவராய்வரின் ஏறுவர் என்கிறது. திருமங்கை மன்னனின் பெரிய, சிறிய திருமடல்களான முதல் நூல்கள் இவ் எண்ணத்

தை அளித்திருக்கலாம். தொல்காப்பியம் பெருந்திணையில் மடற்செய்தியை அமைப்பதன் சார்புடன், பிரபந்த தீபம், பொருந்தாக்காமத்தால் தலைவன் மடலூர்தலைநினைக்கின்றது (58). இன்னிசைக் கலிவெண்பா யாப்பும், தலைவன் பெயருக்கு ஏற்ற எதுகையும் இம் மடற்குரியதாகப் பெரும்பான்மை நூலால் குறிக்கப்பட, தீபிகையும், முத்துவீரியமும் ஈரடி எதுகையையும் கருதுகின்றன. கண்ணியமைப்புடைய கலிவெண் பாவிலும் வருதல் என்பதை இவ்வாறு குறித்தனர் எனலாம். சித்திர மடல் என்ற சிறப்புறு பெயரும் காணப்படல் உண்டு.

தொல்காப்பியம், பாடுபொருளாக அகனைந் திணைக்குப் புறமே கைக்கிளையையும் குறிக்கின்றது. கலித்தொகை போன்றன தலைவனின் கைக்கிளைக் கூற்றையும், முத்தொள்ளாயிரம் முதலியன தலைவியின் இத்தகு சொற் - செயலையும் தருகின்றன. தொல்காப்பியச் செய்யுளியலில்மருட்பா, வெண்பா என்பன யாப்பாகச் சுட்டப்படுகின்றன. பாட்டியல், இதனைத் தனியிலக்கிய வகையாக்குகின்றது. பன்னிரு பாட்டியல் போன்றன கைக்கிளைமாலை எனப் பெயர் தருகின்றன. அத்துடன் அந்நூல், காமமிக்க கழிபடர்கிளவியான இரங் கலாக இதனைக் காட்டுகின்ற விரிவு பின் நூல்களில் அமைக் கப்படவில்லை.

இவ்வகையின் யாப்பு, பாடல் எண்பற்றியும் கருத்து வேறு பாடு உண்டு. பன்னிரு பாட்டியல் மருட்பா யாப்பு எனும்; அத்துடன் ஆசிரியம், வஞ்சி அல்லாத பா - பாவினங்களால் வரும் என்றும், சிறுபன்மை ஆசிரிய பா - இனத்தில் வரும் என்றும் கூறுகின்றது. இங்குப் பாடலெண்ணிக்கை கூறப் பட்டிலது. வெண்பாப்பாட்டியல் 25 விருத்தம் என இரண்டை யும் நினைக்கும். இலக்கண விளக்கம் 5 விருத்தம் என, தீபம் 32 பாடல் என, நவநீதம் விருத்தம் என மட்டும் கூறுகின்றது; முத்து வீரியமும் தீபிகையும் 5 விருத்தம் அல்லது 32 வெண்பா எனத் தெளிவு படுத்துகின்றன. இந்நிலையின் தனியிலக்கியம் கிடைத்திலது.

21. கலித்துறையி னாலுநேர் வெண்பாவி னாலகவ
லாயினு மொவ்வொன்றினைக்
கணித்தொன்று பப்பத்தி னந்தாதி யாகவே
கழறுமொரு பாவொருபஃ
தொலியகவல் பத்துவெண் பாப்பத்து மந்தாதி

யுற்றதொடை யிருபா[1]னிணைந்
தோதுமிரு [2]பாவிருபஃ தாகு மகவலா
லுயர்விறலி [3]பாணர்கூத்தர்
பலபொருந [4]ரின்னால்வ ரிலொருவர் பரிசுதவு
பரிசினுக் கேகுவாரைப்
பரிசுற்று வருவோர்க ளாற்றினிடை யேகண்டு
பரிசுதவு தலைவன்கொடை
நிலைகீர்த்தி கொற்றமுஞ் சாற்றலாற் றுப்படை
நீவணங் குந்தெய்வமே
நினைப்பாது காப்பநின் வழிவழியு மிகுவதாய்
நிகழ்த்தல்புற நிலையாகுமே.

இது, ஒருபா ஒருபஃது, இருபாஇருபஃது, ஆற்றுப்படை, புற நிலை என்பன வற்றின் இலக்கணம் கூறுகின்றது.

(இ-ள்) கலித்துறை, நேரிசை வெண்பா, அகவல் ஆகியன வற்றில் ஏதேனும்ஒவ்வொன்றினைஏற்று, ஒவ்வொன்றிற் கும் பத்துப் பத்துப்பாடல் அந்தாதியாகக் கூறுவது ஒருபா வொருபஃது. ஒலிக்கின்ற அகவல் பத்தும், வெண்பாப் பத்தும் அந்தாதியாகிய தொடை பொருந்தி, இருபதாக இணைந்து கூறுவதுஇருபா விருபஃது.அகவல் பாவினால், உயர்வுடைய விறலி, பாணர், கூத்தர், பொருநர் ஆகிய இந்த நால்வரில் ஒருவர்,முறையே தருகின்ற பரிசுக்குப் போகின்றவரைப் பரிசு பெற்று வருகின்றவர் இடை வழியில் கண்டு, பரிசு கொடுக்கின்ற தலைவனது வள்ளல் தன்மை, புகழ், அரசாட்சி என்பனவற்றைக் கூறுவது ஆற்றுப்படை. 'நீ வணங்குகின்ற தெய்வமே நின்னைப் பாதுகாக்க, உன்கால்வழி (பரம்பரை)மிகுந்து அமைக' எனக் கூறுதல் புறநிலை.

(வி-ரை) யாப்பும் பாடலெண்ணும் இணைந்து உருவாகும் வகைகளாக ஒருபாவொருபஃது, இருபாவிருபஃது என்பன அமைகின்றன. ஒருபாவொருபஃதுக்கு வெண்பா அல்லது அகவல் எனவே பன்னிரு பாட்டியல் கூற, பின்வந்த வெண்பாப் பாட்டி யல் முதல் கலித்துறையும் கருதப்படுகின்றது. தீபம், வியப்புறும் நிலையில், இம்மூன்றுயாப்பும் பத்துப் பாடலில் கலத்தல் (5) என்று கூறுகின்றது. பிரபந்த மரபியல் முதல் அந்தாதி பெறுதல்

* 1 னினைந் 2 பாலிரு 3 யாணர் † 4 ரிந்நால்வரில்

குறிக்கப்படுகின்றது, எந்தப்பாவும் வரலாம் என்ற எண்ணமும் இந் நூலிலும் சிதம்பரப் பாட்டியலிலும் உண்டு. இருபாவிரு பஃதுக்கு வெண்பா—அகவல் என்ற முறைவிரவலை முன் நூல்கள் எல்லாம் கூற, முத்துவீரியமும் தீபிகையும் அகவல்-வெள்ளை என ஆக்குகின்றன.

பட்டினத்துப் பிள்ளையின் திருவொற்றியூர் ஒருபா ஒருபஃதும், மெய்கண்ட சாத்திரம் பதினான்குள் இடம் பெறும் அருணந்தி சிவாச்சாரியாரின் இருபாவிருபஃதும் இவற்றின் முதல் இலக்கியங்கள் எனலாம். இரட்டை மணிமாலை, இணை மணிமாலைகளிலிருந்து, யாப்பு, பாடல் எண்ணால் இருபாவிரு பஃது வேறுபடுகின்றது.

தொல்காப்பியப் பாடாணில் துறையாகி, சங்கப் பத்துப் பாட்டில் இலக்கியமாகப் பரவிய ஆற்றுப்படை, பாட்டியலில் பிரபந்தமாகச் சுட்டப்படுகின்றது. பாணர், பொருநர், விறலியர் கூத்தரை, அரசப் புரவலனிடம் ஆற்றுப் படுத்தலாகவும், புலவரை அரசனிடத்தும் கடவுளிடத்தும் ஆற்றுப்படுத்தலாகவும் பன்னிருபாட்டியல் மொழிகின்றது. தெளிவான இலக்கிய வகையானமையால் போலும் விரிவான விளக்கம் பல இடைப்பட்ட நூல்களில் அமையாது, பன்னிருபாட்டியல் முத்துவீரியம் போன்ற ஒரு சிலவற்றில் அமைகின்றன. இடை நூல்கள் ஆற்றுப்படுத்தும் முறையையே பொருளாக்க, இவை தலைவனின் பலபுகழ் பேசுதல் என்பதையும் இன்றியமையாது சுட்டுகின்றன. தற்காலத்தில் தமிழ்மொழி, மாணவர் போன்றவரும் ஆற்றுப்படைப் பொருளாகின்றனர்.

புறநிலை எனும் வகை தீபிகை யொழிய முத்துவீரியம் பிரபந்த தீபம் என்பனவற்றில் உண்டு. இவை புறநிலை வாழ்த்து என்ற வகையும் கூறுகின்றன. தொல்காப்பியச் செய்யுளியல் கூறும் புறநிலை வாழ்த்துப் பொருண்மையின் சிறிது வேறுபட்ட நிலையாகவே இப்புறநிலை வருகின்றது. அங்கு 'வழிபடுதெய்வம்' எனவருவது இங்கு 'நீவணங்கு தெய்வம்' எனத் திட்டமாகக் குறிக்கப்படுகிறது. இங்கு வம்சம் சிறக்க மட்டும் கூற, அங்குச் செல்வ வளத்தையும் இணைக்கின்றது. மருட்பா எனும் இலக்கிய வகையைச் சுட்டும்போது, பன்னிருபாட்டியல், நவநீதப் பாட்டியல் என்பன, புறநிலைப் பொருளைத் தருகின்றன. காப்புமாலை என்பதிலும் தெய்வம் காத்தற் பொருண்மை

அமைந்து, சிலபாட்டியலில் வருகின்றது. சங்கப் புறப்பாடல் சில தலைவனை வாழ்த்துவதில் இது தனிப்பாடலாக அமை கின்றது.

22. வேந்தரும் வேந்தரைப் போல்வாரு மவையின்கண்
 மிகநெடிது வைகியவழி
 விறன்[1]மருத் துவரமைச் சர்முதலி யோருக்கு
 விழிதுயில் கொளுமிடமதைச்
 சார்ந்துகரு திக்கூறல் கண்படையி னிலையதாந்
 [2]தானைவலியி னாற்பாசறை
 தனிலொரு மனக்கவலை யன்றித் துயின்றவர
 சர்க்குநற் புகழ்கொடுத்தல்
 நேர்ந்துகரு திய[4]சூதர் துயிலெடுப் [3]புதலாய்
 நிகழ்த்தல்துயி லெடைநிலையதாம்
 நிலைப்பாட் டுடைத்தலைவ னாமமது சாரவின்
 னிசைவெள்ளை தொண்ணூறேனுஞ்
 சேர்ந்தெழுப தேனுமல தைம்ப தேனுஞ்
 சிறக்கவுரை பெயரின்னிசை
 செம்பாட்டு டைத்தலைவ னூரைமுன் செய்யுடொகை
 செப்பலூ ரின்னிசையதே.

இது, கண்படை நிலை, துயிலெடை நிலை, பெயரின்னிசை, எனும் வகைகளை விளக்குகின்றது.

(இ-ள்) அரசர்களும், அரசரைப் போன்றவர்களும், அரச சபையில் மிக நீண்ட நேரம தங்கும் போது, வலிமையுடைய வைத்தியர், அமைச்சர் முதலியவருக்கு,உறக்கம்கொள்ள வேண்டிய இடத்தைச் சார்ந்து எண்ணிச் சொல்லுதல் கண்படை நிலையாம். படையின் வலிமை காரணமாகப் பாசறையில் மனக் கவலை எதுவும் இல்லாது உறங்குகின்ற அரசருக்கு நல்ல புகழ் கொடுத்தலை விரும்பிக் கருதிய சூதர்கள், உறக்கம் நீக்குவதாகக் கூறுதல் துயிலெடை நிலை. நிலைபேறுடைய பாட்டுடைத் தலைவனின் பெயரைச் சார்ந்து வரும்படி, இன்னிசை வெண்பா தொண்ணூறு, அல்லது சேர்ந்த எழுபது, அல்லது ஐம்பது சிறப்புறும்படிக் கூறல் பெயரின்னிசை. சிறந்த பாட்டுடைத் தலைவனின் ஊரை மேற்குறித்த செய்யுள் எண்ணிக்கையில் கூறுதல் ஊரின்னிசை.

---

* 1 மறுத்து வூரமைச்சர் 2 தனை 3 புதவாய் † 4 தூதர்

(வி-ரை) கண்படை நிலை, துயிலெடை நிலை எனும் வகைகள் இடைப்பட்ட பல பாட்டியல்களில் கூறப்படாது, முந்திய பன்னிரு பாட்டியலிலும், பிந்திய பிரபந்த தீபம் போன்ற ஒரு சிலவற்றிலும் மட்டும் அமைதல் நினைத்தற்குரியது. தொல்காப்பியப் பாடாண்டிணையின், 'கண்படை கண்ணிய கண்படை நிலை' என்பதும், 'தாவில் நல்லிசை கருதிய கிடந்தோர்க்குச் சூதர் ஏத்திய துயிலெடை நிலை' என்பதும் இவற்றிற்கு அடிப்படை எனலாம். பின்னது, இலக்கியத்தில் பள்ளியெழுச்சியாக உருவாகியுள்ளது. முன்னது தனி இலக்கியமாக அமையாத போதும் நாட்டுப்புற வாழ்வின் தாலாட்டின் ஒருகூறொப்புமை கொள்கின்றது எனலாம்.

கண்படை என்ற பெயரில் விளக்கும் பன்னிரு பாட்டியல் தரும் பொருண்மை தனித்த நிலையினது. காலை, பகல், மாலை-க்கு உரிய யாழிசை முறைகளையும், அறத்தியல், அமைச்சியல், அரசியல் என்பவற்றையும், இயல், இசை, நாடக இயல்புகளையும், நான்மறையையும் முறையே பெற்று இன்புற்ற அரசனை ஊழிக் காலம் வாழ்க எனவும் இனிய மனைவியருடன் இன்துயில் கொள்க எனவும் உரைத்தலாக இது அமைகின்றது. பின் நூல்கள், நீண்ட நேரம் அரசவையில் இருந்துவிட்ட மன்னனைத் துயிலும்படி உரிய நேரத்து வேண்டுதலாகப் பொருள் சுட்டுகின்றன. தீபிகையும் முத்து வீரியமும், மருத்துவர், மந்திரி என்பவர் அரசன், அரசனைப் போன்றவரை வேண்டுதல் எனக் கூற்று நிலையும் சுட்டுகின்றன.

துயிலெடை பற்றி உரைக்கும் மூன்று நூல்களும் ஒரு சிறு வேறுபாட்டுடன் மூவிதமாகப் பொருண்மையை மொழிகின்றன. 'துயிலும் மன்னனின் முன்பாக விடியற்காலையின் முடிவை இயல்பாகக் கூறி, திறை தந்த மன்னரும், திறை தராது சிறைப் பட்டவரும் உன்னைப் போற்றி, உன் சொல் கேட்டு இனிமையாகச் செயற்படும் வண்ணம் வேண்டுகின்றனர், துயில் நீங்கி எழுக எனக் கூறுதல்' என்பது பன்னிரு பாட்டியல். 'பாசறையின்கண், பகைவரை வென்றதால் மகிழ்ந்து துயிலும் தலைவனைச் சூதர் புகழ்ச்சிப் பாடலால் போற்றி எழுப்புதல்' எனப் பிரபந்த தீபம் கூறுகின்றது. தீபிகை இன்னும் சிறிது வேறுபடத் தருகின்றது. பள்ளியெழுச்சி இலக்கியம், மன்னனையன்றிக் கடவுளரைப் பாடுவதை மணிவாசகரது திருப்பள்ளி எழுச்சி, தொண்டரடிப்பொடியாழ்வார் திருப்பள்ளி எழுச்சி என்பன

காட்டுகின்றன. பாரதி இதனை நாட்டுக்கு ஆக்கியதை பாரதி மாதா திருப்பள்ளி எழுச்சி காட்டுகின்றது.

வெண்பாப் பாட்டியல், முதலில் பெயரின்னிசை, ஊரின் னிசைகளை மொழிந்த போது, இலக்கண விளக்கம், முத்து வீரியம், பிரபந்த தீபம் போன்ற ஒரு சில நூல்களே இதனை விளக்குகின்றன. பொருள், யாப்புப் பற்றிய கருத்தில் நூல்களி டையே கருத்து ஒன்று படுகின்றது. பாடலெல்லை பற்றிப் பிரபந்த தீபம் தவிரப் பிற உரைக்கின்றன. பொருள் - பெயர் நிலையில் முழுமையாக இணையும் இலக்கியம் கிடைத்தில.

23. பாட்டுடைத் [5]தலைவனுட பெயர்சார நேரிசை
வெண்பாவி னாற்றொண்ணூறும்
பத்தே ழெனு[6]மன் பதெனுஞ் சிறப்புடன்
பாடுவது பெயர்நேரிசை
மீட்டுமத் தலைவனூர் சாரமுன் றொகைதொடை
விளம்பலூர் நேரிசையதாம்
வெண்பாவி னாலூர் சிறக்க[1]வீ ரைந்துசெயுள்
விள்ளுமூர் வெண்பாவதாம்
மூட்டுதசை புட்குதவு வேலுமவ் வேற்றலையு
மொன்றாக வோங்குவதுபோ
லூன்றுகோ லொடுவிளக்[2]கொன்றுபட் டோங்குமா
றோங்குதல் விளக்குநிலையாம்
நாட்டந் தனைத்தசச் செய்யுளாற் [3]கூறனய
[4]னப்பத்தெ னப்[7]புகலுவர்
[8]நாரிமுலை யைத்தசச் செய்யுளாற் கூறுவது
நற்பயோ தரப்பத்திதே.

இது, பெயர் நேரிசை ஊர் நேரிசை, ஊர் வெண்பா, விளக்கு நிலை, நயனப்பத்து, பயோதரப்பத்து என்பனவற்றை விளக்கு கின்றது.

(இ-ள்) பாட்டுடைத் தலைவனுடைய பெயரைச் சார்த்தி நேரிசை வெண்பாவினால் தொண்ணூறும், எழுபதும் அல்லது

---

* 1விரைந்து 2 கொண்டு 3 கூறனாய 4 னாப்பத்

† 5 தலைவனொடு 6 மைம் பதேனுஞ் 7 புகலுவார் 8 நனி

குறிப்பு: தலைவனுட என்பதும் (தலைவனுடைய), அன்பது என் பதும் (ஐம்பது) வட்டாரப் பேச்சு மொழி பற்றி, நகல் செய்தவரால் ஏற்பட்டிருக்கலாம்.

ஐம்பதுமாகச் சிறப்புடன் பாடுவது பெயர் நேரிசை யாகும். மீண்டும் அந்தத் தலைவனின் ஊரைச் சார்ந்து முன் கூறிய தொகையுடைய பாடல் கூறுவது ஊர் நேரிசை. வெண்பாவினுல் ஊரைச் சிறப்பித்து நூறு செய்யுள் கூற அது ஊர் வெண்பாவாம். மூட்டுகளு டைய தசையைப் பறவைகட்கு அளிக்கும் வேலும் அதன் தலையும் போல ஊன்றுகின்ற கோலோடு, விளக்கும் இணைந்து ஓங்கும் வண்ணம் உயர்த்திக் கூறுதல் விளக்கு நிலை. கண்களைப் பத்துச் செய்யுளால் கூறுதல் நயனப் பத்து. பெண்ணின் மார்பினைப் பத்துப் பாடலால் கூறு வது நல்ல பயோதரப்பத்து.

(வி-ரை) பெயர், ஊர் நேரிசைகளும், வெண்பாப் பாட்டிய லுக்குப் பின் இலக்கண விளக்கம், முத்து வீரியம் போன்ற ஒரு சிலவற்றால் மட்டும் தொடர்ந்து பேசப் படுகின்றன. பிரபந்த தீபமும் இவற்றைக் கூறிய போதும், ஊர் நேரிசைக்கு மட்டும் பாடலெண் தொகைகளைக் கூறிப் 'பேர் நேரிசை'க்கு அதனைக் கூருது அமைகின்றது. இத்தகு வெண்பா இலக்கியங்கள் தனி வகையாக அமைந்தது புலப்படவில்லை.

ஊர் நேரிசை, ஊரின்னிசைகளைக்கூறிய பின் ஊர் வெண்பா என மற்ருெரு வகையும் அமைக்கப்படல் சிந்தித்தற்குரியது. பாடல் எண்ணிக்கையில் வேறுபாடு அமையினும், முன்னவற்றில், இன்ன தலைவனின் ஊர் எனச் சார்த்திச் சிறப்பித்தல் இங்கு அமையவில்லை என வேறுபாடு கருதலாம். பத்து வெண்பாவில் ஊரைச் சிறப்பித்துக் கூறும் இவ்வகையை, வெண்பா, நவநீதப் பாட்டியல்களுக்குப் பின், முத்து வீரியம், பிரபந்த தீபம் என் பனவே மொழிகின்றன; எனினும் தனியிலக்கியங்கள் கிடைத் தில.

தொல்காப்பியப் பாடாண்,'வேலைநோக்கிய விளக்கு நிலை யும்' எனக் கூறியதன் தனியிலக்கிய வளர்ச்சியாக விளக்கு நிலை யைக் கருதலாம். இதுவும், பன்னிரு பாட்டியலுக்குப்பின் இடைப் பட்ட நூல்களால் கூறப் படாது, மீண்டும் பிரபந்ததீபம், முத்து வீரியம் போன்றவற்றால் பேசப்படும் வகையாகும். முன் நூலுக் கும் பின் நூல்களுக்கும் இதன் பொருண்மைக் கோட்பாட்டில் வேறுபாடு காணப்படுகின்றது. பன்னிரு பாட்டியல், மன்னனின்

விளக்கைப் போற்றுதல் என்பதையே நினைக்கின்றது. ஆயின் பிந்தைய நூல்கள், வேலும் அதன் தலையும் போலக் கோலும் (காலும்)விளக்கும் ஒருங்கே ஒங்குதலைவேண்டிப் பொருள் விரிவும் வெளியிட்டு வேறுபாடும் கொள்கின்றன. தீபிகை மட்டுமே வேலைச்சிறப்பிக்கும் முகமாக, போர்க்களத்தில்பகைவரை அழித்தலால் பிணம்தின்னும் பறவைகளுக்குத் தசையை அளிக்கும் அதன் தொழிலைச் சுட்டுகின்றது. துறையாக இருந்து வளர்ந்த இவ்வகை, இலக்கியம் பெற்றிலது.

நயன பயோதரப் பத்துகள் பற்றிய எண்ணம் பாட்டியலில் பரவலாக அமைந்த போதும் இலக்கியமாகப் பரிணமித்தது தெரியவில்லை. அங்கமாலை,கேசாதி பாதம், பாதாதி கேசம் என உறுப்புகளைத் தொடர்ந்து பாடும் பலவகைகள் இருந் போதும் இவ்வாறு தனியிரு உறுப்புக்குத் தனிப் பிரபந்தம் உருவானமை எண்ணத் தக்கது. நவநீதப் பாட்டியலின் விளக்கம், நயனவிருத்தம், பயோதரவிருத்தம் என்ற பெயருரிமையைத் தருகின்றது. அங்கவிலக்கணம்—சாமுத்திரிகா லட்சணம் — இவ்வகைகட்கு அடிப்படையாகலாம். இப்பத்துகட்கு ஆசிரிய விருத்தம் யாப்பு எனப் பன்னிரு பாட்டியல் கூற, பின் தொடர்ந்த நூல்கள் கலித்துறையையும் இணைக்கின்றன. சிதம்பரப் பாட்டியல் முதல், யாப்புச் சுட்டுதல் அமையவில்லை. பத்துப்பாடல் பெறல் பெயர், நிலையில் இணைவு காட்டுகின்றது.

24. பத்துக் கலித்துறையு முப்பது விருத்தமும்
பகர்கலித் [1]தாழிசையுமாய்ப்
பகர்நாடு மலைகட [2]னிலம்வரு ணனைநீடு
பரவுதோள் வாள்மங்கலம்
பெற்றிடப் பாடிமுடி வேந்தர்க் குரைப்பதாய்ப்
பேசலர சன்விருத்தம்
பெறுமன்ப ணங்கத்தை [3]யாசிரியம் பதினாலு
பேசற்ற சாங்கத்தயல்
உற்றவடி முடிவரை கலியின்வெண் பாவினா
லோதல்பா தாதிகேசம்
ஒளிருமுடி யடிவரை கலியின்வெண் பாவா
லுரைத்தல்கே சாதிபாதம்
அத்த காசிரிய விருத்தங் கலித்துறை
யகவல் சந்த[4]விருத்தம்

† 1 தாழிசையுமாய்ப் 2 னிலவரு 3 யாசிரிய மீரேழு 4 விருத்தமுமாம்.

ஆம்வெள் ளையுமாறி யந்தாதி செயுணூ
றலங்கார பஞ்சகம்மே.

இது, அரசன் விருத்தம், தசாங்கத்தயல், பாதாதிகேசம், கேசாதி பாதம், அலங்கார பஞ்சகம் என்பனவற்றை விளக்கு கின்றது.

(இ-ள்) பத்துக் கலித்துறையும், முப்பது விருத்தமும், கூறுகின்ற கலித் தாழிசையுமாய், பேசும் நாடு, மலை, கடல், நிலம் இவற்றின் வருணனையும், நீண்டதாகப் போற்றப்படும் தோள்மங்கலம் வாள்மங்கலம் என்பனவும் பெறும்படிப் பாடி, முடி மன்னர்க்குக் கூறுவதாகப் பேசுதல் அரசன் விருத்தம். இவற்றைப் பெறுகின்ற அன்புடையவன் (அரசன்) அங்கங்களைப பதினான்கு ஆசிரியப்பாடலால் பேசுவது தசாங்கத்தயல். பொருந்துகின்ற பாதம் முதல் தலைமுடிய கலி வெண்பாவினால்ஓதுவது பாதாதி கேசம். விளங்குகின்ற தலைமுதலாகக் கால் முடிய கலி வெண்பாவால் கூறுதல் கேசாதிபாதம். அழகுபொருந்த ஆசிரிய விருத்தம், கலித்துறை, அகவல், சந்தவிருத்தம், வெண்பாவும் மாறிமாறி அந்தாதியாகும் செய்யுள் நூல் அலங்கார பஞ்சகம்

(வி-ரை) அரசன் விருத்தம் என்ற பிரபந்தத்தை நவநீதப் பாட்டியல் முதலில் கூற, பின்பு முத்து வீரியம் முதலிய பிற்கால நூல் களே தருகின்றன. யாப்புக் கலப்பு, பொருண்மைக் கலப்பு என்பன இதில் அமைகின்றன. இன்னயாப்பில் இன்ன பொருள் என இணைத்தல் வெண்பாப் பாட்டியலிலேயே உண்டு- பத்துக் கலித்துறையில் மலையைப் பாடுதல், நாட்டு நகர்ச் சிறப்பாக முப்பது விருத்தம் கூறுதல், கலித்தாழிசையில் வாள்மங்கலமமைத் தல் என இது செல்கின்றது. கலித்தாழிசை எத்தனை என எந்நூ லும் கூறாததால் ஒன்று எனவே கொள்ளலாம். பிரபந்த தீபம், வெண் கலித்தாழிசை என அமைக்கும். பாடுபொருளை, வெற்பு- நீர்-நாட்டு வருணனையுடன் வாள், தோள் மங்கலம் என முத்து வீரியமும், ஊர்மலை-கடலுடன் வாள்-தோள் மங்கலம்முதலியன எனப் பிரபந்த தீபமும் அமைக்கின்றன. இந்நிலையினையுடைய தனியிலக்கியம் கிட்டவில்லை.

தசாங்கத்தயல் என்ற வகை இந்நூற்குப் புறம்பே பிரபந்த தீபம், முத்து வீரியம் என்பனவற்றுள் மட்டுமே உண்டு; அவை,

அரசனது பத்து அங்கங்களை ஆசிரிய விருத்தம் பத்தால் கூறுதல் என ஒன்றுபட மொழிந்து தீபிகையிலிருந்து வேறு படுகின்றன. தசாங்கத்திற்கு இலக்கியம் கிடைத்த போதும், இத்தசாங்கத் தயற்குக் கிடைக்கவில்லை.

பாதாதிகேசம், கேசாதி பாதம் ஆகிய இணைவகைகள் ஓரளவு எல்லாப் பாட்டியலிலும் விளக்கம் பெறுகின்றன. முப்பத்திரு உறுப்புகள் பாடப்படல் என அவற்றின் பட்டியலைப் பன்னிரு பாட்டியல் அமைக்கின்றது. 'பாதமாதி' என ஒரு வகையே அந்நூல் கூறப் பின் நூல்கள் இருவகையையும் சுட்டிக் கலிவெண் பா யாப்பையும் உரைக்கின்றன. பன்னிரு பாட்டியலின் உறுப்புப் பட்டியல், இதனைப் பெண்ணிற்குக் கொள்ள வாய்ப்பளிப்பினும், எந்நூலும் அதனை விதந்தோதவில்லை. இறைவனுக்கு இது அமைவதனைத் திவ்வியப் பிரபந்தத்தின் திருப்பாதாதிகேச வண்ணம், திருவிசைப் பாவின் திருவாலியமுதனார், திருமாளிகைத் தேவரின் பாடற் பகுதியின் பாதாதிகேச வருணனைகள் என்பன காட்டுகின்றன. ஆயின் இவற்றில் கலிவெண்பா யாப்பு இல்லை. பிற்காலத்து மடல் போன்ற சில இலக்கியங்கள் இதனை தலைவியை வருணிக்கும் கூறாகத் தருகின்றன. கம்பன், இராமன்—சீதையின் கேசாதி பாத-பாதாதி கேசத்தைத் தருவதும் காப்பியத்திலும் இதன் கூறு உறுப்பாதலைக் காட்டுகின்றது எனலாம்.

அலங்கார பஞ்சகம் வெண்பாப் பாட்டியல் முதலாகப் பின் நூல்கள் பெரும் பாலானவற்றில் அமையினும், நூல்களிடையே ஓரளவு கருத்து வேறுபாடு காணப்படுகின்றது. வெண்பா, கலித்துறை, ஆசிரியப்பா, ஆசிரிய விருத்தம், வண்ணம் என்ற ஐவகை யாப்பு இவ்இலக்கியத்தை ஆக்குகின்றது என்பது முதல் எண்ணம். ஆசிரிய விருத்தத்திற்குப் பதிலாக வஞ்சிவிருத்தத்தைக் கூறி, பத்துப்பாடல் அந்தாதித்தல் என்பது பிரபந்த மரபியல். நால்வகைப்பா, வெண்பா, கலித்துறை, ஆசிரியம், ஆசிரிய விருத்தம்—கலந்து வகைக்கு ஐந்தாக (20?) அமைவது எனத் தொன்னூல் விளக்கம் கருதுகின்றது. ஐம்பது பாடல்—அல்லது ஐவகையான எந்தப்பாவும் பாடுதல் என்ற கருத்து மயக்கம் சுவாமிநாதத்தில் உண்டு; தீபமும், தீபிகையும் நூறு பாடல் என அமைக்கின்றன. 19-ஆம் நூற்றாண்டின் தண்டபாணி சுவாமிகள் போன்றோரிடம் இவ்வகை உண்டு. ஐந்து விருத்தம், ஐவகை யாப்பில் வரும் 25 பாடல் எனும் நிலைகள் அவற்றில் காணப்படுகின்றன.

25. தவமுனிவர் சேணிடை வருதலாற்[1]பிறர்வருத்
தந்திர வாயில்காப்போய்
[7]தலைவற்கென் வரவிசை யெனக்கடைக் கண்ணின்று
[2]சாற்றெனச் சொல்கடை நிலை
அவனியின் கணவனோ டில்லாள் [3]கழிந்துழி
யவர்கடப் [8]பட்டவழிவி
னப்பொரு ளெலாம்பிறர்க் கறிவுறுத் தித்தானும்
[4]அப்போதி றந்தேபடா
தெவர்தா மொழிந்தவா யத்தார்க ளும்பரி
சில்பெறும் விறலியோருஞ்
செயறனிப் [5]படருழந் திடுசெயலி னறுநிலை
செப்பிடுங் கையறுநிலை
பவனமுறு வரசனுக் [6]குற்றிடுத சாங்கமும்
பாடுநே ரிசைவெள்ளையால்
பத்துச்செ யுள்கூற லதுவேத சாங்கமுறு
பத்தெனவு ரைப்பார்களே.

இது, கடைநிலை, கையறுநிலை, தசாங்கப்பத்து என்ப வற்றின் விளக்கம் தருகின்றது.

(இ-ள்) தவவாழ்வினரான முனிவர் சேய்மையான இடத்தி லிருந்து வருவதால், பிறர் வந்தவருத்தம் நீங்கும் வண்ணம், வாயில் காப்பவனே, தலைவனுக்கு எனது வரவினைக் கூறு, என வாயில் கடையில் நின்றுசொல்வது கடைநிலை. உலகத்தில், கணவனுடன் இல்லத்தலைவி இறக்கின்றபோது, அவர்கள் கடமையெனக் கொண்ட, அழிவில்லாத பொருள் எல்லாம் புலவர் பிறருக்கு அறிவித்து, அப்போதே இறவாது தன்னைப்போல் யார் ஒழிந்தனரோ, அந்த ஆயத்தாரும், பரிசில் பெறுகின்ற விறலியரும் செய்வதைத் துன்பத்தால் வருந்துகின்ற செயலற்ற நிலையைத் தான் கூறுவது கையறுநிலை. அரண்மனையில் இருக்கின்ற அரசனுக்குப் பொருந்து கின்ற தசாங்கங்களையும் பாடப்படுகின்ற நேரிசை வெண்பாவினால் பத்துச் செய்யுள் கூறுவதே தசாங்கப் பத்து.

*1 ...ர் 2 சாத்தெனச் 3 கழிந்துளி 4 ஒப்போ 5 படறுழந் 6 குத்திடுதே
† 7 தலைவர்க் 8 பட்டவழுவி

குறிப்பு: பிறர் வருத்தம் என்பது, பிறந்தவருத்தம் என அமையலாம் எனும் எண்ணம் முத்துவீரியம் தரும் விளக்கத்தை நோக்க ஏற்படுகின்றது.

(வி-ரை) தொல்காப்பியப் புறத்திணை, பாடாணுள் கடைநிலையை அமைக்கின்றது.

> சேய்வரல் வருத்தம் வீட வாயில்
> காவலர்க் குரைத்த கடைநிலை யானும்

என்பது; பன்னிரு பாட்டியலில் இது பிரபந்தமாக இடம்பெறுகின்றது. இடைப்பட்ட நூல்களால் கூறப்படாத இது மீண்டும் முத்துவீரியம் போன்ற பின் நூல்களில் வருகின்றது. ஆயின் இம்முன்-பின் நூல்களிடையே பொருள் வேறுபாடு அமைந்து, பெயரொப்புமையே காணப்படுகின்றது எனலாம். பன்னிரு பாட்டியல், பரிசில் கொடாத மன்னவனைப் பாவலன் பழித்துரைப்பதைப் பொருண்மை எனமொழிகின்றது பிரபந்த தீபமோ, வாயில் காப்பவர் தூரத்தில் வருகின்ற தேருடை வேந்தரைக் கண்டு,அச்செய்தியைத் தம் மன்னவனுக்கு முன்னறிவித்தலைக் கொள்கின்றது. முத்துவீரியம், தீபிகைக்கருத்தை ஒட்டி வருகின்றது.தனியிலக்கியம் அமையாத போதும் புறநானூற்றின் சில பாடலில் இப்பொருண்மை உண்டு. அதியமான் பரிசில் நீட்டித்தபோது ஔவையார் பாடியதும்(206) பெருஞ்சித்திரனாரின் பாடலும்(162) முறையே பரிசிற்றுறை, பரிசில் விடையாயினும் பொருளால் பன்னிரு பாட்டியலின் விளக்கத்தை ஒக்கின்றன. புறநானூறு கடைநிலைத் துறை எனத் தரும் பாடல்கள் வேறு பொருண்மையின.

கையறுநிலையைப் பிரபந்த மாக்குதல் பன்னிரு, வெண்பாப்பாட்டியலிலும்,முத்துவீரியம்,தீபம் என்பனவற்றிலும் அமைதல் குறிப்பிடத்தக்கது. தொல்காப்பியக் காஞ்சித்திணை,

> கழிந்தோர் தேஎத்துக் கழிபடர் உறீஇ
> ஒழிந்தோர் புலம்பிய கையறு நிலையும்

எனத் தருவதன் விரிவு பாட்டியலின் விளக்கம் எனலாம்.அரசன் மறைவுக்காகப் புலவன் கலங்கிப்பாடல் என எளிமையாகப் பன்னிருபாட்டியல் குறிக்கின்றது. கலி,வஞ்சி யாப்பாதல் கூடாது என்ற இதன் எண்ணத்தை மட்டும் வெண்பாப் பாட்டியல் வழிமொழிகின்றது. பிரபந்த தீபம் கருத்து மாறுபாடு கொள்கின்றது. கணவன்-மனைவி உடனிறக்கத் தோழியர் தம்முள் வருந்தி உரைக்கின்றனர். முத்துவீரியம் தீபிகைக் கருத்தை அடியொற்றி அமைகின்றது. புறநானூறு மன்னனுக்காக

இரங்கும் புலவரைப் பரவலாகக் காட்டுகின்றது. தற்காலத்திலும் இடைக்காலத் தனிப்பாட்டிலும் இப்பொருள் உண்டு. சரமகவி போன்றவற்றையும் கருதலாம்.

தசாங்கப் பத்து ஓரளவு பாட்டியலால் பரவலாகப் பேசப் பட்ட போதும் பன்னிரு பாட்டியல், தொன்னூல் விளக்கம் போன்றன கூறிற்றில ஆயின் முன்னது. சின்னப்பூவில் இதனை இணைக்கின்றது எனலாம். பிரபந்த மரபியலுக்கு முன் தசாங்கம் தசாங்கநிலை எனப்பெயர்வருகின்றது. நேரிசை வெண்பா யாப்பு எனவும் நஞ்செழுத்து வரக்கூடாது எனவும் வெண்பாப் பாட்டியல் கூறுகின்றது. மணிவாசகர் இறைவனுக்கும் பாரதியார் பாரததேசத்திற்கும் இதனை ஆக்கி, 'மன்னன்' நிலையிலிருந்து வேறுபடுகின்றனர். உலா போன்ற இலக்கியங்கள் தலைவனின் தசாங்கத்தைத் தம் கூறாகக் கொள்வது உண்டு.

26. ஒருபொரு டனைக்குறித் துப்பன்செ யுட்பதிக
மோதல்கலி வெண்பாவினால்
உயர்பெண்க டங்கையிற் கண்டவிள மைதன்மை
யுடையகுழ மகனைப்புகழ்ந்
தோதல்குழ மகனாகு முயர்குலப் [3]பெண்ணிலை
யொன்பது வகுப்பின்வெண்பா
வொன்பது செயுள்செய்வ தாகுமங் [4]கலவெள்ளை
யுற்றிடுங் காலமிடமும்
பொருளுமா [1]கியவிவற் றுள்ளினொவ் வொன்றினைப்
பொருந்திநாற் பதுவெள்ளையாற்
புகல்வதே நாற்பதா மாண்பாலு மாதர்பால்
போலுமவ ரவர்காதலைப்
புகழ்பாணன் முதலிய வுயர்திணை யொடுங்கிள்ளை
புள்ளின்முத லுறுமஃறிணைப்
பொருளொடுங் கலிவெள்ளை யாற்றூது
போய்வரல்
புகல்வதே தூதென்பதாம்
இருபதுட னேழெழுத் தாதியாய் மேலுறு
மெழுத்தடிய தாயெழுத்து
மிவல்குருவு மிலகுவு மொத்துவந் தனவள
வியற்றாண்ட கத்துறுப்பா
மெழுத்துமொவ் வாதெழுத் தலகொவா வந்தனவு
[2]மிசையளை வழித்தாண்டக

* 1 இய வியற் 2 மிசையறா † 3 பெண்ணினை 4 கலவள்ளை

மிருவகைப் பட்டதோர் தாண்டக மெனப்புலவ
ரிசைபெற வுரைப்பதாகும்
விரவகப் பொருளொன்றன் மேலாத லாதலுடன்
மேற்புறப் பொருள்களொன்றன்
மேலாதல் கற்பித்து நூறுசெயு ளாகவே
விள்வதே சதகமென்ப
வீதியி னுலாக்காட்சி யாலதிக காமமாய்
மிக்கால வைப்பிறரோடும்
வெட்கா துரைத்தே வருந்துவ துரைத்தலது
மேவுபவ னிக்காதலே.

இது, பதிகம், குழமகன், மங்கல வெள்ளை, நாற்பது, தூது இருவகைப்பட்ட தாண்டகம், சதகம், பவனிக் காதல் என்பன வற்றை விளக்குகின்றது.

(இ-ள்) ஒரு பொருளைப் பற்றிப் பத்துச் செய்யுள் கூறுதல் பதிகம். கலிவெண்பாவால், உயர்வுடைய பெண்கள் கையில் கண்ட இளமைத் தன்மையுடைய குழமகனைப் புகழ்ந்து பேசுதல் குழமகனாகும். உயர்ந்த குலத்தைச் சார்ந்த பெண்ணின் நிலையை ஒன்பது வகுப்பாலும், ஒன்பது வெண்பாவாலும் செய்யுள் செய்வது மங்கல வெள்ளை. பொருந்துகின்ற காலம், இடம், பொருள், ஆகிய இவற்றுள்ளில் ஒவ்வொன்றினைச் சார்த்தி நாற்பது வெண்பாவால் கூறுவது நாற்பது. ஆடவனிடத்தும், பெண்ணினிடத்தும், அவரவரது காதலை, புகழுடைய பாணன் முதலிய உயர்திணையினருடனும், கிளிமுதலியபறவைகளான அஃறிணைப் பொருளுடனும் கலிவெண் பாவால், தூதுபோய்வரும்படிக் கூறுவது தூது. இருபத்தேழெழுத்துமுதல் மேலும் பல எழுத்துக்களையுடைய அடியையுடையதாய், எழுத்தும் இலகுவும் குருவும் ஒத்ததாக வருவன அளவியல்தாண்டகம். தாண்டக உறுப்பான எழுத்து ஒவ்வாதும், எழுத்தலகு ஒவ்வாதும் வருவனவற்றை அளவழித்தாண்டகம் எனக் கூறு. இவ்வாறு இருவகைப்பட்டது தாண்டகம் எனப் புலவர் புகழ்பெறக் கூறுவர். விரவுகின்ற அகப்பொருள் ஒன்றன்மேல் அல்லது புறப்பொருள் ஒன்றன்மேல் நூறு செய்யுளாகக் கற்பித்துக் கூறுவது சதகம். தெருவில் உலா கண்டமையால், மிக்க காமங் கொண்டு, அது மிகுந்ததால் அதனைப் பிறரோடும் நாணுறாமல் கூறி வருந்துவதனைப் பேசுவது பவனிக் காதல்.

(வி-ரை) சதகத்திற்குப் பத்துப்பாடல் எனத் தொகை வரை யறையமைகின்றதேயன்றி பொருள் வரையறை கூறப்பட வில்லை. ஆயின் பன்னிரு பாட்டியல் இருபது பாடலும் வரலாம் என்கின்றது. இதன் யாப்பாக ஆசிரியத்துறை, ஆசிரியவிருத்தம், கலிவிருத்தம், வெண்பா, என்பனவற்றையும் இந்நூல் தருகின் றது. பதிக இலக்கியம் பக்திக் காலத்தில் மிக்க பரப்புப் பெற்ற மையும், அதன் முன்பும், பத்துப்பாடல் இணைந்து வருதலைத் திருக்குறள், ஐங்குறு நூறு, பதிற்றுப்பத்து என்பன காட்டுதலும் நினைக்கத்தக்கன.

வெண்பாப் பாட்டியல் முதல் பல நூலில் அமையினும் குழமகன் பற்றிய எண்ணத்தில் வேறுபாடு அமைகின்றது. உலா விலக்கியம் குழவிப் பருவத் தலைவன் மீது பாடப்படுவது இவ் வகை என்பது வெண்பாப் பாட்டியலின் எண்ணம். பிரபந்த தீபம், மாதர் தாம் இன்புறக் கண்ட இளவலைப் பாடல் (78) என அமைப்பது வேறுபடுகின்றது. பிற நூல்கள் கையில் இருக் கும் குழந்தையைப் பாடலாக இதனை அமைக்கின்றன. தொல் காப்பியத்தின், 'குழவி மருங்கினும் கிழவதாகும்' என்பதனை இங்கும் நினைக்கலாம். குழந்தைக் கண்ணனைப் பாடிய ஆழ்வார் பாடலையும் எண்ணலாம்.

மங்கல வெள்ளை என்பது மங்கல வள்ளை எனவும் வருகின் றது. கற்புடைப் பெண்ணைப் பாடுதல் எனவும், உயர் குலம களைப் பாடுதல் எனவும், மடவரலைப் பாடுதல் எனவும், தலை மையைக் குறிப்பதில் சொல் வேறுபாடு உண்டு. ஒன்பது பாடல் எனவும் சந்தமும் வெள்ளையும் எனவும், பன்னிரு பாட்டியல் கூறியது, பின்பு வகுப்பு வெண்பா எனவும், ஈரொன்பான் எனவும் மாறுகின்றது. ஒவ்வொருபாவுக்கும் ஒன்பது பாடல் என்ற இவ்வெண்ணம் முத்து வீரியம் போன்றவற்றில் தெளிகின் றது, தனியிலக்கியம் கிடைத்திலது.

நாற்பது எனும் இலக்கியப் பெயர்நிலை, முத்து வீரியம், தீபம் ஆகியவற்றில் அமையினும் முதலில் இவ்வகையினைக் குறித்த இலக்கண விளக்கம் நானாற்பது என்ற பெயரே தரு கின்றது. கீழ்க் கணக்கின் நாற்பதுகள் இதற்கு அடிப்படையா கலாம். தீபிகை, முத்துவீரியம் என்பன பொருள் நிலையில் ஒத்து அமையினும்பிறவிரண்டும் மாறுபடுகின்றன. யாப்புக்குறிப் பிடாது,இலக்கண விளக்கம் காலம், இடம், பொருள் கருதி, நாற் பயன்மிகும்படி உரைத்தல் எனக்கூறுகின்றது. தீபம், மிகவும்வேறு

பட்டு நாள், இன்பம், துன்பம், பொருள், இடம், வெற்றி புண்ணியம்எட்டு என்பவற்றில் ஒன்றை நாற்பது வெண்பாவில் பாடுதல்எனக் கூறுகின்றது.

தூது, நவநீதம் முதல் சுட்டப்படினும் பிரபந்த மரபியல், இலக்கண விளக்கம், முத்து வீரியம், தீபம் போன்றனவற்றிலேயே விரிக்கப்படுகின்றது. பிரபந்தத் திரட்டு பத்துவகைத் தூது கூறுதல் புதுமை. புற-அகத் துறை நிலையில் தனிப்பாடலாக அமைந்த தூது அக இலக்கிய வகையாகத் தனித்து வளர்கின்றது. உமாபதி சிவத்தின் நெஞ்சுவிடுதூது முதல் இலக்கியமாகும்.

தாண்டகம்பற்றிய எண்ணம் பன்னிரு பாட்டியலுக்குப் பின் மீண்டும் தீபம், முத்துவீரியம் போன்றவற்றிலேயே தொடர்கின்றது. ஆயின் பன்னிரு பாட்டியல், நாவுக்கரசர் முதலியோரிடம் காணப்படும் குறு நெடுந் தாண்டகங்களையே நினைக்க, பின்னூல்களும் தீபிகையும் வீரசோழியம் கூறும் எழுத்தெண்ணிக்கையடிப் படைச் செய்யுளைச் சொல்கின்றன. திருப்புகழ் போன்ற சந்த-வண்ணச் செய்யுளில் நீண்ட அடியுடையனவற்றை இங்குக் கருதலாம்.

நூறுபாடலாலான சதக வகையை இலக்கண விளக்கம் முதலான சில நூலே உரைத்தன. இந்நூலும் சுவாமி நாதமும் பொருளைச் சுட்டாத போதும், முத்துவீரியம், தீபம் போன்றன அக-புறப் பொருளுள் ஒன்று என நினைக்கின்றன. ஐங்குறு நூறு அகப்பொருள் நிலையிலும், மணிவாசகரின் திருச் சதகம் புற-பக்திப் பொருள் நிலையிலும் கருதத்தக்கன.

பவனிக்காதலை முத்துவீரியம், பிரபந்த தீபம், சாமிநாத ஆகியனவே கூறுகின்றன. பொருண்மை ஒத்து அமைகின்றது. உலாவிலக்கியத் தொடர்ச்சியாகவும், குறவஞ்சியின் உலாக் கண்டு மயங்கிய தலைவியை ஒத்ததாகவும் இதனைக் கொள்ளலாம். தனியிலக்கியம் வெளிப்படவில்லை.

(இ-கு) பன் என்பதுபத்து எனப்பொருள்படுகின்றது. பதின் என்ற வடிவின் இடைக்குறையாகி, யாப்புக்கேற்ப இவ்வாறு அமைந்திருக்கலாம்.

27. பொங்கமன் றிப்[1]புரை யோர்நாப்ப ணவிதல்கடன்
பொற்பவை யடக்கியியலின்
பொருளுற வெள்ளைமுத லாசிரிய மிறுதியாய்ப்
புகலலே செவியறிவுறா
வெங்கடுப் போல்வன வாகிவெஞ் சொற்களை
மேவிமுன் னர்த்தாங்கிட
[2]வேகூடா வாயின பின்பெரிதும் பயன்றரு
மெனப்பொரு ளுறும்வெள்ளையா
லங்குமுத லாகவே யாசிரிய மிறுதியா
யறைதல்வா யுறைவாழ்த்தலா
மானவழி படுதெய்வ நிற்புறங் காப்ப
வப்பழிதீர்ந் துறுஞ்செல்வமோ
டிங்குமோர் காலையிற் கோர்கால் சிறந்துபொலி
யென்னவெண் பாவாதியா
யிறுதியா சிரியமாய்க் கூறுவது புறநிலை
யெனும்வாழ்த்த லாகுமென்றே.

இது, செவியறிவுறூஉ,வாயுறை வாழ்த்து, புறநிலை வாழ்த்து ஆகியனவற்றை விளக்குகின்றது.

(இ-ள்) மிகுதிப்படுத லின்றி, குறையற்றவர் நடுவில் அடங்கி யிருத்தல் கடமை எனப் பொற்புடைய அவையடக்கியல் பொருளை, வெண்பாவில் தொடங்கி ஆசிரியத்தில் முடியும்படிக் கூறுதலே (மருட்பா) செவியறிவுறூஉ. வெம்மையான விடம் போன்றன ஆகி, கொடிய சொற்களைப் பொருந்தி, முன்பு தாங்குவதற்கு அரியன ஆகிப் பின்பு மிகவும் பயன் தரும் என்ற பொருளை வெண்பா முதலாக ஆசிரியம் முடிவாகக் கூறுதல் வாயுறை வாழ்த்து. வழிபடுகின்ற தெய்வம் நின்னைப் புறங்காப்ப, அந்தப் பழியில்லாச் செல்வத்துடன், இங்கு ஒரு காலத்திற்கு ஒரு காலம் சிறந்து விளங்குக என வெண்பா முதலாக ஆசிரியப்பா முடிவாகக் கூறுவது புறநிலை எனும் வாழ்த்து ஆகும்.

---

* 1. புறையோர் 2. வேகூட

குறிப்பு: 'பொங்க மன்றி' என இந்நூல் தருவதைப் பிற நூல்கள் 'பொங்குத லின்றி' எனவே அமைக்கின்றன.

(வி-ரை) தொல்காப்பியம், செய்யுளியலில் பாப்பொருண்மை யைக் கூறுமிடத்து இம் மூவகையின் விளக்கம் தருகின்றது. பாட்டியல்களுள், பன்னிரு, வெண்பாப் பாட்டியல்கள், மருட்பா என இலக்கிய வகையொன்று கண்டு மொழியும் போது, இவற்றின் பெயர்ச்சுட்டு அமைக்கின்றன. முத்து வீரியமும் பிரபந்த தீபமும், தீபிகை போன்று இம் மூவகையையும் தனித் தனிப் பிரபந்தமாகக் கொண்டு ஓரளவு மரபு நிலை விளக்கம் அமைக்கின்றன.

தொல்காப்பியம் அவையடக்கியலைத் தனித்து மொழி யினும் இந் நூல்கள் அதனை, அவையில் அடங்குதல் எனச் செவியறிவுறூஉவின் கண்ணே அமைத்துவிடுகின்றன. தொல் காப்பியம் இப்பொருட்குக் 'கலிநிலை வகையும் வஞ்சியும் பெறா'தெனக் கூற, இவையனைத்தும் வெண்பாவும் ஆசிரியமும் எனவோ (தீபம்), அல்லது இரண்டும் கலந்த (மருட்) பா வெனவோ கொள்கின்றன. புறநானூறு பாடாண் துறையாக அமைக்கும் போது இதில் பொருள் வேறுபாடு தெரிகின்றது. அகவல் யாப்பு வருகின்றது. வள்ளலாரிடம் செவியறிவுறுத்தல் தனித் தலைப்பாக அமைகின்றது

வாயுறை வாழ்த்தைச் சிறிது வேறுபடத் தீபம் விளக்கு கின்றது. 'வன்சொல் பொறுத்து வாழி' என வெண்பா ஆசிரி யத்தில் வகுப்பது (84) என்பது இந்நூல் எண்ணம்.

புறநிலை வாழ்த்தில், 'வழிவழி சிறக்க' என்பதைத் தீபம் விட்டு விடுதல் வேறுபாடாகும். தனியிலக்கிய வகையாக இவை வளர்ந்தமை புலப்பட்டில.

28. தலைவனும் பவனிவர வும்மகளிர் காமுறற்
றலைமைமோ கினிவரவுடன்
சதுப்பதா வுலாவருந் தலைவனைக் கண்டுமய
றங்கிடற் றிங்கடோன்றல்
தருமுபா லம்பனஞ் சகியுற்ற தெனவினாவ
றலைவிபாங் கிக்குரைத்தலை
சாற்றலும் பாங்கிதலை வலனயிகழ்ந் தோதலுந்
தலைவிதலை வனைவழுத்தல்
குலமுறுந் தலைவிபாங் கியைத்தூது வேண்டலுங்
குயிற்றலைவி பாங்கியோடுங்
கூசாது தலைவ னடையாள முங்கூறல்

குறத்திவர வுந்தலைவியாற்
குறத்தியர்கண் மலைவளம் வினாவன்மலை நாட்டினிற்
கோதில்[1]விழு முதலோதிடல்
கோதிறலை வன்றலங் கிளைவள முரைத்தலுங்
குறிசொல்லி வரவுகூறல்
மலைதலை குறிவினவ லன்னாடெய் வம்பரவன்
மாதுகுறி தேர்ந்துபின்னல்
வரவுகூ றற்றலைவி பரிசிலுத வல்குறவன்
வரவுபுள் வரவுகூறன்
மடிகண்ணி குற்றல்புட் படவல்குறத் தியைநேடி
வரல்குறவ னன்பனோடு
வளமுறு குறத்தியடை யாளமுங் கூறல்குற
வன்குறத் தியையுற்றவன்
பலபணிகண் முதலாடை பெறுகுறவ னாண்டாண்டு
பகர்பெரும் பான்மையுடனிப்
பலவுறுப் புக்களாற் கழிநெடில் விருத்தம்வெண்
பாக்கலித் துறைகொச்சகம்
பலகலி விருத்தமுந் தரவகவ லிடையிடை
பகர்சிந்து முதலாகவே
பரிசிடுந் தலைவன்மே னாடகத் துறையெனப்
பாடல்குற வஞ்சியாமே.

இது, குறவஞ்சிக்கு விளக்கம் கூறுகின்றது.

(இ-ள்) தலைவன் உலாவர மகளிர் காமமுறல், தலைமை மோகினி வரவு, உடன் வஞ்சனையாக (?) உலாவரும் தலைவனைக்கண்டு மையல் கொள்ளுதல், சந்திர உதயம், தருகின்ற சந்திரன்பழிப்பு, தோழி உற்றது என்ன என வினவுதல், தலைவி தோழிக்குக் கூறுவதைச் சொல்லுதல், தோழி தலைவனை இகழ்ந்து பேசுதல், தலைவி தலைவனைப் போற்றுதல், நற்குலத்தினளான தலைவி தோழியிடம் தூது செல்லும்படி வேண்டுதல், குயில் போன்ற தலைவி தோழிடம் கூச்சமில்லாமல் தலைவனது அடையாளம் கூறல், குறத்தி வருதல், குறத்தியிடம் தலைவி மலைவளம் கூறக்கேட்டல், மலை நாட்டின் குற்றமற்ற சிறப்பு முதலியவற்றை அவள் கூறுதல், குற்றமில்லாத தலைவனது,

* 1 விளு

நாட்டுவளமும், உறவுச்சிறப்பும் சொல்லுதல், குறத்தி பலவிடத்துக் குறி சொல்லி வந்ததைக் கூறுதல், இணைதல் பற்றிக் குறி கேட்டல், அக் குறத்தி இறைவழிபாடு செய்தல், பெண்ணின் குறிகளை ஆய்ந்து பின்பு நல்வரவு கூறுதல், தலைவி பரிசுகள் கொடுத்தல், குறவன் வருதல், பறவைகள் வருவதனைப் பற்றிச் சொல்லுதல், மடியுடைய வலையால் கண்ணி வைத்தல், பறவைகள் அதில் படுதல், குறத்தியை எண்ணி வருதல், குறவன் தன் தோழனிடம் வளம்நிறைந்த குறத்தியின் அடையாளம் கூறுதல், குறவன் குறத்தியை ஐயுறுதல், அவனுக்கு, பல ஆபரணங்கள் முதல் ஆடை பெறுகின்றமையைக் குறவனுக்கு அங்கங்கே கூறுகின்றமை பெரும்பான்மையுடன் இப் பல உறுப்புகளால், கழிநெடிலடிகளுடைய விருத்தம், வெண்பா, கலித்துறை, கொச்சகம், பலவகைக் கலிவிருத்தம், தரவு, அகவல், இடையிடையே கூறும் சிந்து முதலாக, பரிசு கொடுக்கின்ற தலைவன் மீது, நாடகத் துறையாகப்பாடுதல் குறவஞ்சியாகும்.

(வி-ரை) பன்னிரு பாட்டியல் குறத்திப்பாட்டு என வகை தந்த போதும், முக்காலக் குறிஉரைத்தற் பொருண்மை மட்டுமே அங்குத் தரப்படுகின்றது. குறவஞ்சிக்கு இத்தகு விரிவான இலக்கணம் தீபிகையே முதலில் வகுக்கின்றது எனலாம். சதுரகராதி, பிரபந்த தீபம் போன்றனவும் விரிந்த இலக்கணம் வகுக்கின்றன. பிரபந்தத்திரட்டு குறியறி சிந்து, குழுவநாடகம் (18,109) எனத் தருவதன் விளக்கம், குறவஞ்சியின் குறிகூறல் வரையுள்ள முதற்பாகத்தை ஒத்து வருகின்றது. குறியறி சிந்து என்ற பெயர் நிலைபால் 'சிந்து' யாப்பாகும் எனல் கருதப்படலாம்.

குறவஞ்சியிலக்கியச் சிறப்பைக் குற்றாலக் குறவஞ்சிஉணர்த்துகின்றது. பெரும்பாலும் இறைத்தலைமைச் சார்புடனே குறவஞ்சி இலக்கியங்கள் அமைகின்றன.

29. கடவுளர் வணக்கமும் பள்ளனிரு பள்ளியர்கள்
வரவுமவர் கள்பெருமையைக்
கருதியவர் முறைவர லாறுநாட் டுளவளங்
கரியகுயில் கூவல்வேட்டல்
கார்மாரி வேட்டறெய் வத்துதி மழைக்குறிகள்

கழறனீ ராற்றின்வரவு
காண்டலு மதன்சிறப் புடனதற் கிடையிடைய
கப்பொருட் டுறைகள்கூறி
யிடமுறும் பண்ணையின் றலைவன்வர வும்பள்ளி
யிருவர்முறை யீடுகண்டே
யிளையபள் ளியைவெகுண் டோதலும் பள்ளனு
மில்விட்டு வெளிவருதலு
மேர்நிலம் [1]விரைவினாவ லவனது வுரைத்திடல்பி
னிடையரை வருத்தலவர்கள்
இசைவிளம் பன்மூத்த பள்ளிமுறை யிடல்பள்ள
னேர்கிடையி னின்றுவரல்போல்
திடமுறு வருபள்ள னைத்தொழுவின் மாட்ட
றிகைத்துப் புலம்பலன்பு
சேர்பள்ளனுக் கடிசிலை கொடுமூத்த பள்ளிவரல்
தீமையவளோடுரைத்தல்
தீர்க்கும்வகை வேண்டலை மறுத்தல்பின் [2]சூளுறல்செய்
தல்பண் ணைத்தலைவனைச்
சீருடன் வழுத்திவிடு தல்விரை மாடுசஞ்
சீவமு மெடுத்துமுதலின்
வடமற் றெருதுபாய வேகண்ட பள்ளியர்
மனத்துயர் தவித்தெழுந்து
வருபண்ணை யானறிதல் நாறுநடல் விளைகதிர்
மணிகொய் தடித்தளக்கல்
வருமூத்த பள்ளிமுறை யீடுபள் ளியரேசல்
மன்னுசிந் தடிவிருத்தம்
வகைவிரவி நாயகன் பெருமையைக் கூறியே
வருமுழத் திப்பாட்டிதே.

இது, உழத்திப்பாட்டின் விளக்கம் தருகின்றது.

(இ-ள்) கடவுளர் வணக்கம்,பள்ளனும் இரு பள்ளியரும்வருதல், அவர்கள் பெருமையைக் கருதி,முறையே அவர் வரலாறு கூறல், நாட்டுவளம் கூறுதல், கரிய குயிலைக் கூவ வேண்டுதல், கார்கால மழையை வேண்டுதல், தெய்வத்தைத் துதித்தல், மழை தோன்றுவதற்கான குறிகளைக் கூறுதல், நீர் ஆற்றில் வருதல், அதனைக்

---

* 1 விரைவி வலவனது 2 குழறல்

காணுதல், அதன் சிறப்புக் கூறுதல், அதனிடையிடையே அகப்பொருட் துறைகள் கூறுதல், இடம்பொருந்திய பண்ணையின் தலைவன்வரவு, பள்ளியர் இருவரும் முறையிடுதல், அதனைக்கண்டு இளைய பள்ளியைக் கோபித்தல், அதனைக் கேட்டபள்ளன் வீட்டிலிருந்து வெளியே வருதல், அவனிடம் ஏர், நிலம், விதை என்பன பற்றிக் கேட்டலும் அவன் அதனைக் கூறுதலும், பின்பு இடையர்களை வருவித்தல், அவர்கள் சிறப்புமொழிதல், மூத்த பள்ளி முறையிடல், பள்ளன் சிறந்த கிடையி லிருந்து வருவது போல் வருதல், திடமாக வருகின்ற பள்ளனைத் தொழுவில் மாட்டுதல், அதனால் திகைத்து அவன் புலம்புதல், அன்புடைய பள்ளனுக்கு உணவு கொண்டு மூத்த பள்ளி வருதல், நிகழ்ந்த தீமையை அவளிடம் கூறுதல், அதனைத் தீர்க்கும் வழிவேண்டுதல் , அவள் அதனை மறுத்தல், பின்பு அவன் சூள்மொழிதல், எனவேபண்ணைத் தலைவனைச் சிறப்பாக வாழ்த்தி விடுதல் வாங்குதல், விதை, மாடு, மருந்தும்(?) எடுத்து, முதலில் கயிறு அறுந்து எருது மேலே பாய, அதனைக் கண்ட பள்ளியரின் மனத் துயரம் நீங்க எழுந்து வருதல், பண்ணையான் அறிதல், நாற்று நடுதல், விளைந்த கதிரின் மணிகளைக் கொய்து அடித்து அளக்குதல், வருகின்ற மூத்த பள்ளியின் முறையீடு, பள்ளியர் ஏசுதல், என்பன நிலை பெற்ற சிந்துப்பாடலடிகளால், விருத்தப் பாடல்வகைகள் விரவும்படி தலைவனுடைய பெரு மையைக் கூறி வருவது உழத்திப் பாட்டு,

(வி-ரை) பன்னிருபாட்டியலில் வரும் உழத்திப்பாட்டு மிகவும் வேறுபட்டது. பத்துப் பாடலில், தலைவனைக் கூறி, வாழ்த்தி, வயல் தொழிலை நன்குணர்ந்த உழத்தியைப் பேசுதலாக இது அமைகின்றது; பிறநூல்கள் இதனைக் கூறாதபோதும், பிரபந்தத் திரட்டின்' பண்ணைவிசித்திரம்'(19)என்பது ஓரளவுபொருட்சார்பு கொள்கின்றது. சதுரகராதி முழுவிளக்கம் அமைக்கும் பிறிதொரு நூல். பிரபந்தத்திரட்டு 'சிந்து'என்பதை யாப்பாக்கினும் பல இசைப்பாடல்- யாப்புகள் கலத்தல் பிறவற்றில் சிந்திக்கப் படுகின்றன.

முக்கூடற் பள்ளு இவ்விலக்கியச் சிறப்புக்குச் சான்றாகின்றது. நாடகப் பாங்கும் மக்களிலக்கியப் பான்மையும் இதில் பொருந்து கின்றன.

30. சாரு மாசிரிய விருத்தத்தி னாற்கலித்
தாழிசையி னாலாதல்
சுற்றந்தோ டும்பொலிவ தாயாடி ரூஞ்சலெனச்
சாற்றுவது வூஞ்சலாகும்
பூரியே முரையாக்கிக் குறுமக்கண் முன்னின்று
புக்குபோந் துங்கேளியும்
புகழின்வழு வாமையா லொன்றுமுத லேழிறுதி
புகலெழு கூற்றிருக்கை
நேருமமு தாசன ரிடத்தினு மன்னர்க்கு
நிகழுமித முறுகாரியம்
நேயமுறு கடிகையிற் றோன்றிட நடப்பதாய்
நேரிசையின் வெண்பாவினாற்
காரமிகு முப்பத் திரண்டுகவி சொல்வதே
கடிகைவெண் பாவாகுமே
கழறிளமை யொழியறிஞ ரிளமையுறு மறிவின்மாக்
கட்கறைதல் முதுகாஞ்சியே.

இது, ஊஞ்சல், எழுகூற்றிருக்கை, கடிகை வெண்பா முதுகாஞ்சி என்பனவற்றை விரிக்கின்றது.

(இ-ள்) சாருகின்ற ஆசிரிய விருத்தத்தினுல், அல்லது கலித்தாழிசையினுல், சுற்றத்தாருடன் பொலிவதாக, 'ஆடிர் ஊஞ்சல்' எனக் கூறுவது ஊஞ்சலாகும். கீழ், மக்களின் பேச்சு ஆக்கி, சிறுவர்கள் முன்னே நின்று புகுந்தும் வெளிப்போந்தும் விளையாடியும், புகழிலிருந்து வழுவாது ஒன்று முதல் ஏழுவரைக் கூறுவது எழுகூற்றிருக்கை. நேர்கின்ற தேவரிடத்திலும் மன்னரிடத்திலும் நிகழ்கின்ற இதமான காரியங்கள், விருப்பமுடைய நாழிகைப் பொழுதில் தோன்றும்படி நடப்பதாக நேரிசை வெண்பாவினால் வலிமை மிக்க முப்பத்திரண்டு செய்யுள் சொல்வது கடிகைவெண்பா. கூறப்படுகின்ற இளமை ஒழிந்த அறிஞர்கள், இளமை பொருந்திய அறிவினரான மக்களுக்குக் கூறுதல் முதுகாஞ்சி.

(வி-ரை) வெண்பாப்பாட்டியல் முதலான அனைத்து நூல்களாலும் 'ஊஞ்சல்' இலக்கியமாக விளக்கப்படுகின்றது. ஆயின் ஊசல் என்ற பெயரே அவற்றிலுண்டு. அடையுடன் பொன்னூசல் என நவநீதம் மட்டும் தருகின்றது யாப்பாகக் கலித்தாழிசை யொன்

றையே நவநீதம் கூற, தொன்னூல் விளக்கம் வண்ணகத்தையும் இணைக்கின்றது. பாடலெண்ணிக்கை வரையறை சிலநூலில் மட்டும் உண்டு. ஒன்பான் எனப் பிரபந்த மரபியலும், பத்து எனப் பிரபந்த தீபமும் கூறுகின்றன. ஆடீர்ஊசல், ஆடாமோ ஊசல் என்ற தொடர்கள் வரலைப் பிரபந்த தீபம், முத்து வீரியம் சுட்டுகின்றன. ஊசல், மாணிக்கவாசகரால் திருப்பொன்னூசல் எனத் தனி இலக்கிய மாகின்றது. நாட்டுப்புற விளையாட்டுப் பாடலாகவும், திருமணக் கால வாழ்த்துப் பாடலாகவும் பிற சூழல்-நோக்கிலும், இது வருகின்றது. சிலம்பில் மன்னனை வாழ்த்தியும், கலம்பகம் பெண்பாற் பிள்ளைத் தமிழ் போன்ற வற்றில் தலைவரைப் பாடியும் இது உறுப்பாகின்றது.

எழுகூற்றிருக்கை யாப்பருங்கலத்தில் சித்திரகவியாகக் குறிக் கப்பட்ட பின், முத்துவீரியம், பிரபந்த தீபம் ஆகியவற்றில் பிரபந் தமாக விளக்கப்படுகின்றது. யாப்பருங்கல விருத்தி உரை சம்பந்தர் தேவாரம், பதினோராம் திருமுறை என்பன இவ் இலக் கியத்திற்கு இடனளிக்கின்றன.

கடிகைவெண்பா இலக்கியமாக இன்று பெறப்படாதபோதும் பன்னிருபாட்டியல் முதலான எல்லாப் பாட்டியல்களிலும் விளக் கம் பெறுகின்றது. நாழிகை வெண்பா என்ற பெயரும் பரவலாக உண்டு. முன் நூல்களில், கடவுளருக்கும் மன்னருக்கும் காலத்தை உணர்த்துதல் என்பதே பொருளாகத் தோன்ற, முத்துவீரியம் போன்ற பின் நூல்களில், இவர்கள் செயல் ஒருநாழிகையில், நடப்பதாகக்கூறும் பாங்கு சுட்டப்படுகின்றது. நாழிகைப் பகுப்பு பற்றிய எண்ணங்களைப் பன்னிரு பாட்டியல் மட்டும் தருகின்றது. 30 பாடல் என்ற பன்னிரு பாட்டியல் கருத்து 32 என பின் நூல் களில் மாறுபடுகின்றது. பிரபந்த தீபம் பாடல்தொகையைச் சுட்டவில்லை.

முது காஞ்சியைப் பிரபந்த வகையாக்குவன முத்து வீரிய மும் பிரபந்த தீபமுமே. தொல்காப்பியக் காஞ்சித்திணையில், கழிந்தோர் ஒழிந்தோர்க்குக் காட்டிய முதுமையும் எனவருவதும், புறநானூற்றின், முதுமொழிக் காஞ்சித்துறைப் பாடல்களும், கீழ்க்கணக்கின் முதுமொழிக்காஞ்சியும் இப் பிரபந் தத்திற்கு வழிவகுத்திருக்கலாம். ஆயின் பிரபந்த தீபத்தின் பொருள் விளக்கம் வேறுபட்டு, முதுமையை, பழமையைப் பாடுதல்-என அமைதல் புதுமை.

31. தேறுநே ரசைவெள்ளை யான்மன் றசாங்கஞ்
சிறப்புடன் விரித்துநூறு
செய்யுள்பின் றொண்ணூறு மெழுவதைம் பதுமுப்ப
தேசொல்சின் னப்பூவதாங்
கூறுசெயு மயில்வில்வாள் செங்கோ லுடன்யானை
குதிரையூர் நாடுகொடையுங்
கொண்டுநவ வகையுற விருத்தமும் பப்பத்து
கூர்விருத்த விலக்கண
மேறுமிக் குடிபிறந் தோர்க்கெலா மிக்குண
மியல்பென்று மற்றைநீயு
மியல்பாக வுடையையென் றும்மினோர் போனீயு
மியல்பாக நீயென்றுமே
யாறுதல் பொருந்துயர்ந் தோர்களா லவனையே
யதிகமாய் வாழ்த்துவதுவா
யடைவோடுங் கூறுவது மியன்மொழியின் வாழ்த்தலா
யறைகுவோர் புலவோர்களே.

இது, சின்னப்பூ,விருத்த விலக்கணம், இயன்மொழி வாழ்த்து என்பன வற்றின் இலக்கணம் கூறுகின்றது.

(இ-ள்) தேறுகின்ற நேரிசை வெண்பாவால் மன்னனுடைய சிறப்பான தசாங்கங்களைச் சிறப்போடு விவரித்து நூறு செய்யுளும், பின்பு தொண்ணூறும், எழுபதும் ஐம்பதும், முப்பதுமாய்ச் சொல்வது சின்னப்பூ. பிளக்கின்ற அயில், வில், வாள், செங்கோல் என்பன வற்றுடன், யானை, குதிரை, ஊர், நாடு, கொடை என்பனவற்றையும் கொண்டு ஒன்பது வகை பொருந்த, விருத்தங்கள் பத்துப் பத்து மிகுவது விருத்த விலக்கணம். ஏறுகின்ற இந்தக் குடியில் பிறந்த வர்களுக்கு எல்லாம் இந்தக் குணம் இயல்பு என்றும் அதனைநீயும் இயல்பாகக் கொண்டுள்ளாய் என்றும் இத்தகையோர் போல நீயும் இயல்பாக நீங்கு, என்றும் ஆறுதல் பொருந்துகின்ற உயர்ந்தோர்களால் அவனையே மிகுதியாக வாழ்த்துவதாய் முறையோடும் கூறுவதுஇயன்மொழி வாழ்த்தல் எனக் கூறுவர் புலவர்.

(வி-ரை) பன்னிரு பாட்டியல் முதலாக அனைத்துப் பாட்டி யலும் விளக்கம் கூறும் பிரபந்தங்களுள் சின்னப்பூவும் ஒன்று. ஆனால் பதினைந்தாம் நூற்றாண்டில் தத்துவ ராயரின் ன்னப்பூ வெண்பா தவிர வேறு இலக்கியம் அமையும

தெரியவில்லை. பத்துச் சின்னங்களையும் பன்னிரு பாட்டியல் மட்டும் பட்டியல் செய்கின்றது. இச்சின்னங்களைப் பாடும் முறைபற்றிய நெறியையும் இந்நூலே கூறுகின்றது – சின்னத்தின் தொழில் முதலிரு அடியிலும், தலைவன் உரிமையைப் பின்னிரு அடியிலுமாக வெண்பா அமைக்க வேண்டும் என்பது அது. ஒவ்வொரு சின்னத்துக்கு 10, 7 அல்லது 3 பாடல் என்ற, இந்நூலின் பாடற்றொகை பற்றிய எண்ணம் பின் நூல்களில் மாறியுள்ளது. மொத்தமாக 100, 90, 70, 50 எனக் கூறுவதும் இவற்றுள் நூற்றை விடுவதும் (பிரபந்த மரபியல்), இவற்றுடன் முப்பதை இணைத்தலும் (இலக்கண விளக்கம்), நூறு மட்டும் கூறலும் (பிரபந்த தீபம்) உண்டு. பன்னிரு பாட்டியல் யாப்பாக வெண்பாவையும் அதன் இனத்தையும் கூற, பிற வெண்பா எனவும் நேரிசை வெண்பா எனச் சிறப்பித்தும் கூறும். சின்னங்கள், தசாங்கமாகிய பத்து எனும் எண்ணம் பொதுவாயினும், தீபிகை, பின்பு (88) அரசசின்னங்கள் 21-இன் பட்டியல் தருவது எண்ணத் தக்கது.

விருத்த விலக்கணம் என்பதும் ராச சின்னங்களோடு தொடர்புடையதே. அரசன் விருத்தம் என ஏற்கெனவே அமைந்த வகையிலிருந்து இது சிறிது வேறுபடுகின்றது. பிரபந்தத் திரட்டின் இறுதியிலமையும் பிரபந்தப் பட்டியல் இதனை இராச விர்த்தி எனக்குறிக்கின்றது. பன்னிரு பாட்டியல் முதல் எல்லா நூலிலும் அமையும் இவ்வகை ‘விருத்தம்’ எனவும் குறிக்கப்படுகின்றது. அயில் முதலிய ஒவ்வொன்றையும் பத்து ஆசிரியவிருத்தத்தால் பாடுவதால், இது ஒன்பது தனித்தனி விருத்த வகைகளாக விரியும் எனத்தெரிகின்றது. ஆசிரியப்பாவினை யாப்பாக நவநீதம், பிரபந்தத் திரட்டு போன்றன கூறுகின்றன, தீபிகையைப் போலவே கொடையைப் பாடுபொருளுறுப்பாகக் கொள்ளுதல் ஒருபாலாக, சில ‘குடை’ யைத் தருகின்றன. மன்னனுக்கன்றி இறைவனுக்கு வகுப்பால் இவற்றைப்பாடும் இலக்கிய நிலையை அருணகிரிநாதரின் வேல் விருத்தம் காட்டுகின்றது.

இயன் மொழி வாழ்த்து, முத்துவீரியம், பிரபந்ததீபம் என்பவற்றால் மட்டும் விளக்கப்படுகின்றது. தொல்காப்பியப் புறத்துறையாகி, தனிப்பாடலாக அமைந்து, பின்பு பிரபந்தமாக வளர்ச்சியுறும் இலக்கியப் பான்மையுடன் இதுவும் அமைகின்றது. ‘அடுத்தூர்ந் தேத்திய இயன்மொழி’ எனத் தொல்காப்பியம் தர, புறநானூறு பல பாடல்களை இத்

துறையினதாக அமைக்கின்றது. நல்லியல்புகளைக் கூறி வாழ்த்தலாகவே அவை அமைகின்றன. பிரபந்ததீபம், இத்தகைய குலத்தினனான நீ பயன் அளித்திடு, எனப்பரிசில் விரும்புதலைத் தர, பிற நூல் விரிவாகத் தலைவனை வாழ்த்தலைச் சுட்டுகின்றன.

32. இருநாலு கலையதா யோர்கலை முக்கண்ணி
யிடைவிட் டெதுகையாக
யெண்டொங்க லுந்தொடையு நாலதாய் முன்றெய்வ
மேத்துசௌ ரியமிரண்டிலை
அருளுதா ரங்கீர்த்தி மூன்றுறுந் தலைவனூ
ரந்நாட்டு வளமவன்பே
ரமைத்துரைப் பதுநால தாகுமஞ் சிற்காவி
னரிவையைக் கண்டுதெளிவாய்ச்
சருவலா றிற்பவ்விய மாய்மருவி விளையாடல்
சாற்றுமே ழிற்கலவியின்
றகுமுறைமை யிற்புணர்தல் பின்விழி துயின்றெழல்
[1]சாற்றெட்டினு முபரியாக
மருவல்காந் தருவஞ் சுரம்போக்கி னன்னைசொல்
வருத்தமைந் தாங்கலைமுதல்
வழுத்துமிரு நாலுகலை யீறாயு ரைப்பதே
வண்ணத்தின் மூறைவகுப்பே,

இது, வண்ணம் என்பதனை விளக்குகின்றது,

(இ-ள்) எட்டுக் கலைகளை உடையதாய், ஒருகலைக்கு மூன்று கண்ணிகளும், இடைவிட்ட எதுகையும், எட்டுத் தொங்கலும், தொடைகள் நாலுமாக, முன்பு தெய்வ வணக்கமும், இரண்டில் களவும், தலைவன் அருள், கொடை, புகழ் என்பன மூன்றிலும், தலைவன் ஊர், அந்த நாட்டு வளம், அவன் பெயர் இவற்றை நாலிலும், ஐந்தில் சோலையில் பெண்ணைக் கண்டு தெளிவாகக் கொஞ்சுதலும், ஆறில் பயனுடையதாகப் பொருந்தி விளையாடுதலும், கூறுகின்ற ஏழில் கலவி, இனிமையுடையதகுதியான முறையில் புணர்தலும், எட்டில் விழிதுயின்று எழுதலையும் கூறுதல்; மேலும், மிகுதியாகப் பொருந்துதல், காந்தருவம், பாலை நிலத்தில்

---

*1 சாறறெடிடினு

உடன் போக்கினால் அன்னை சொல்கின்ற வருத்தம் என்பனவற்றை ஐந்தாம் கலை முதல் போற்றுகின்ற எட்டாம் கலை முடிய உரைத்தல்; இவையே'வண்ணம்' என்பதன் பொருள் முறை வைப்பாம்.

(வி-ரை)வண்ணம் எனும் யாப்புநிலைபற்றிய எண்ணம் தண்ட பாணிசுவாமிகளிடம் வண்ணத்தியல்பு எனத் தனிநூலாக உருவாகிய போதும், அவரும் பத்தொன்பதாம் நூற்றாண்டைச் சார்ந்த பிறரும் வண்ண இலக்கியம் படைத்த போதும், பிரபந் தப்பட்டியலில் இது அமைக்கப்படல் ஓரளவு அருமையாகும். சுவாமி நாதம் மட்டும் (172) சிறு விளக்கம் அமைக்கின்றது. தலை வனுக்கு நான்கு கலையும் பொருளுக்கு நான்கு கலையும் எனக்கூறுகின்றதே ஒழிய அகப்பொருள் எனக்கூடக் குறித்திலது. மும்மூன்று துள்ளலும், தொங்கலும், சந்தமும் பற்றிய வடிவ எண்ணங்கள் தரப்படுகின்றன. வண்ணத்திரட்டு, என இத்தகு பாடல்களமைந்த இலக்கியக் கொத்துகள் காணப்படுகின்றன.

வண்ணச் செய்யுள் வடிவ நிலை அருணகிரியாரிடம் செழிப் புற்ற போதும், அகப்பொருட் சார்புடன் அது தனி இலக்கிய வகையாக உருப்பெறல் இங்கே காணப்படுகின்றது.

33. வமிசத் துறுமிட்ட தேவதை வணக்கமும்
வருசெயப் படுபொருளுமிவ்
வற்றிற்கி யையவாழ்த்தன் முன்னுள்ள தாகவே
வருமறம் பொருளின்பமு
மாறாத வீடென்று நாற்பொருள் பயக்கவே
வருநெறி யுடைத்தாகவே
வருநிக ரிலாத்தலைவ னையுடைத் தாய்நகர்
மலையுத்தி நாடுபருவ
மிமிகரன் றினகரன் றோற்றங்கள் மிகவென்
றிவற்றின் வளங்கூறலு
மெ...மையின் மணிமுடி கவிழ்த்தலும் பொழின்மீதி
லேகியே விளையாடனீ
ரெய்திவிளை யாட்ட லுண்டலு மகப்பேறு
மின்புறும் புலவிகலவி
யென்றிவற் றைப்புகழ்ந் தோதலு மந்திர
மொத்திடுந் தூதுசெலவுஞ்
சமரமும் வெற்றியு மிவைதொடர்ந் தோதிச்
சருக்கம் பரிச்சேதமுஞ்

சாற்றுறு மிலம்பக மெனும்பகுதி யுள்ளதாய்த்
தரும்வீர முதலியசுவை
தருமவை விளங்கக் கருத்துயர்ந் தோர்களாற்
சாற்றனாற் பயனிலாது
சாரிவ் வுறுப்பதிற் குறையினுங் குற்றமில
சாற்றுவர் பெருங்காப்பியம்
நமதறம் பொருளின்பம் வீட்டினான் கொன்றுபல
நாட்டவ் வுறுப்பினோடு
நவிலலுங் காப்பிய நாடோறு முயர்ந்துசிறை
நண்ணச்செய செற்றங்களை
நழுவவச் சிறைதனை விடுப்பவம் முதலிய
நற்றொழி லுதித்ததாக்கு
நாட்டுகா ரணமான [1]நாணிகழும் வெள்ளணியை
நவிலல்பெரு மங்கலமீதே.

இது,காப்பியத்தையும் பெருமங்கலத்தையும் விளக்குகின்றது

(இ-ள்) குலப்பரம்பரைக்கு உரிய விரும்புகின்ற கடவுள் வணக்கமும், வருகின்ற செயப்படுபொருளும், இவற்றிற்குப் பொருந்தும்படி வாழ்த்துதலும், முன்பு உள்ளதாக, வருகின்ற, அறம், பொருள், இன்பமும், மாறாத வீடு என்று நாற்பொருளும் விளைய வருகின்ற வழியுடையதாக, வருகின்ற ஒப்பற்ற தலைவனையுடையதாக, நகர், மலை, ஆறு, நாடு, பருவம், (குளிர்ந்தகரங்களையுடைய) சந்திரன், சூரியன், ஆகியவற்றின் உதயம், என்பனமிகும்படி இவற்றின் வளம் கூறுதல்,...மணிமுடி சூடுதல், சோலைக்குச் சென்று விளையாடுதல், நீரில் சேர்ந்து விளையாட்டு, உண்டல், குழந்தைப்பிறப்பு, இன்பமுடைய ஊடல், கலவி என்ற இவற்றைப்புகழ்ந்து கூறுதலும், மந்திரம், ஒத்துவரும் தூது, செலவு, போர், வெற்றி எனும் இவை தொடர்ந்து வருமாறு கூறி, சருக்கம், பரிச்சேதம், கூறத்தகும் இலம்பகம் எனும் பகுதியுடையதாய், தக்கவீரம் முதலிய சுவைதருகின்றன விளங்கும்படி,கருத்து உயர்ந்தோர்களால் கூறப்படுவது; நால்வகைப் பயன் இல்லாது, சார்கின்ற இந்த உறுப்புகளில் குறைந்தாலும் குற்றமில்லை எனப் பெருங்காப்பியத்தைக் கூறுவர். நமக்குரிய அறம்,பொருள்,இன்பம், வீடு ஆகிய நான்கில் ஒன்றோ பலவோ நாட்டி,மேற்

* 1 நாணிகளும்

கண்ட அவ்வுறுப்புகளோடு கூறுவதும் காப்பியம். தினமும் உயர்ந்து, சிறையிடுதல் போன்ற சினத் தொழில்களை விட்டு, சிறைவீடு செய்தல்முதலிய நல்ல தொழில்கள் தோன்றும் வண்ணம் நாட்டும் காரண மான (பிறந்த) நாள் நிகழும் வெள்ளணியைக் கூறுதல் பெருமங்கலம்.

(வி-ரை) பெருங்காப்பியம், காப்பியம் பற்றிய எண்ணங்கள் பெரும்பாலும் தண்டி போன்று அணியிலக்கணப் பகுதியில் அமையினும் சில பாட்டியல்கள் அதனைப் பிரபந்தங்களுடன் இணைத்து நினைக்கின்றன.

பன்னிருபாட்டியலின் விளக்கம் தனித்தன்மையுடையது. தொடர்நிலைச் செய்யுள் என்ற பெயரையே அது தருகின்றது. தலைவனின் வளர்ச்சியைப் பல்வகையாப்பில தரல் எனும் பொதுநிலையைக் கூறி, தலை இடை கடை எனப்பகுப்புகள் அமைத்து முதல்வகையை மட்டும் விளக்குகின்றது. நாற் பொருள் இணைவும், தலைவனது வெற்றி, இருக்கை முதலி யனவும் பொருளாகின்றன. காப்பியத் துணைப்பொருள் உறுப்புகள் பற்றிய எண்ணம் வெண்பாப் பாட்டியல் முதல் விரிகின்றது. ஏறத்தாழ தண்டியினை யொட்டியது இதன் விளக்கம். பெருங்காப்பியம், காப்பியம் என்றிவற்றுடன் புராணம் எனபதனையும் இந்நூல் கூறல் புதுமை. தொன்னூல் விளக்கமும் புராணம் பற்றி நினைக்கின்றது. சிறுகாப்பியம் என்ற தொடராட்சியைக் காப்பியத்திற்கு சுவாமிநாதம் தருகின்றது. பிரபந்தத்திரட்டு,பிரபந்ததீபம் எனபன 'காப்பியம்' என ஒன்றனையே கூறி உறுப்புவிரிவுகள் தராது அமைதல் குறிப்பிடத்தக்கது. முத்துவீரியம் பிரபந்தம் கூறுமிடத்து இக் காப்பியநிலை எதனையும் கருதவில்லை.

பெருமங்கலம் என்பதைச் சதுரகராதி, பிரபந்த தீபம் எனும் பிறநூல்கள் மட்டுமே பிரபந்தமாக இணைக்கின்றன. தொல்காப்பியப் புறத்துறை பலவற்றின் பிரபந்த வளர்ச்சி போன்றதுஇது.

சிறந்த நாளினிற் செற்றம் நீங்கிப்
பிறந்த நாள்வயின் பெருமங்கலமும்

எனத் தொல்காப்பியம் அமைக்கின்றது. பண்டைத்தனிப் பாடல் இதனைத் தராதபோதும், சிலம்பில், சேரன்

செங்குட்டுவன் கண்ணகிக்குக் கோயிலெடுத்த போது இதனை யொத்துச் செயற்பட்டது அமைகின்றது. பிறந்தநாள் செயலாகத் தொல்காப்பியம் அமைப்பதை, சிறந்தநாள் செய லாகப் பாட்டியல் காட்டுகின்றன.

34. மகிதலத் துறுமான வர்க்குநல் லுற்பத்தி
மதனிளம் வாகைவில்லின்
வனசநூ னாணரவிந்தமலர் பூட்டியே
மனதினி னினைக்கவிடுவான்
பகர்தா மரைத்தண்டு வில்பிச்சி மலருநாண்
பாணமோ சூதமலராற்
பசலிக்க வேதனத் தெய்குவான் கன்னல்வில்
பண்வண்டு நாணேற்றியே
புகுமசோ கின்பாண மதினாலும் விழியினிற்
போடவே துயரமாக்கும்
பூசமுறு பாளைவினான் வெட்டிவேர் முல்லைபொரு
பாணமிடை யிற்......
...... ...... ...... ......
...... ......
றானேவ விற்கொலு மெனமதன் வல்லமை
சாற்றுவர்கள் புலவோர்களே.

இது, மன்மதனின் கணைச் செயலை இயம்புகிறது.

(இ-ள்) உலகில் உள்ள மனிதருக்கு நல்ல உற்பத்தியாக, மதன், இளமையுடையை வாகை வில்லில் தாமரை நூலாகிய நாணையும், தாமரை மலராகிய கணையையும் பூட்டி, மனத்தில், நினைக்கும்படி விடுவான். கூறுகின்ற

---

குறிப்பு: யாப்புக்குறை பற்றியும், செய்தி முழுமையின்மை பற்றியுமே இப்பாடலின் சில பகுதிகள் விடப்பட்டமை தெளிவாகின்றது. கையெழுத்துப் பிரதி அமைத்தவரின் கவனக் குறைவால் இது விடப்பட்டிருக்க வேண்டும். புள்ளி போட்டுக் காட்டாது தொடர்ந்து எழுதியுள்ள நிலை அதில் அமைகின்றது. மூல- நகல் ஏட்டில் சிதைவு அல்லது விடுபாடு இருந்திருந்தால் புள்ளியிட்டுக் காட்டியிருக்க வேண்டும். எனவே செய்தி விடப் பட்டிருக்க வேண்டும் எனக் கருதப்பட்ட பகுதியில் இங்குப்புள்ளி யிட்டுள்ளோம்.

தாமரைத் தண்டு வில்லாக, பிச்சி மலர் நாணாக, கணையோ மாமலராக, பசலையுறும்படி, மார்பில் எய்வான். கரும்பு வில்லில் பண்ணிசைக்கும் வண்டாகிய நாணை யேற்றி புகுகின்ற அசோகமலர்ப் பாணம தனாலும் கண்களில் எய்யவே துயரம் உண்டாக்கும். கமுகில் உற்ற பாளை வில்லாக, வெட்டிவேர் நாணாக, முல்லையே பொருகின்ற பாணமாக இடையில் ... .. தான் எய்வதனால் கொல்வான் என்று மன்மதனின் வலிமையைப் புலவர் கூறுவர்.

(வி-ரை) நிகண்டுகளும், பிரபந்தத் திரட்டு போன்றவற்றின் பகுதிகளும் காமன் ஐங்கணை பற்றியும், அவை எய்யப்படும் இடங்கள் பற்றியும், அதன் விளைவு குறித்தும் கூறியுள்ளன எனினும், வில், நாண், அம்பு, இடம், விளைவு எனும் அனைத்துக் கூறுகளையும் பற்றிய எண்ணம் உவமான சங்கிரகத்திலேயே (32-36) அமைதல் புலப்படுகின்றது. தீபிகையின் கருத்து சிலவிடத்து வேறுபடுகின்றமை இதனை நோக்கத் தெரிகின்றது

| | வில் | நாண் | அம்பு | இடம் | விளைவு |
|---|---|---|---|---|---|
| 1. | கதிர்பூக்பச்சைத் தண்டு | பிச்சிக் கொடி | முல்லைப் பூ | சிரசு | கிடை காட்டும் |
| 2. | மாந்தண்டு | தாமரை நூல் | அசோகின் பூ | நேத்திரம் | பல தோற்றம் காட்டி உணவு அகற்றும் |
| 3. | மல்லிகைத் தண்டு | வெட்டி வேர் | மாம்பூ | தனம் | பசலை தரும் |
| 4. | கருப்பந் தண்டு | கார்வண்டு | தாமரைப் பூ | மார்பு | சிந்தையார நினைவிக்கும் |
| 5. | கமலப்பூந் தண்டு | மாந்தளிர் | நீலப்பூ | அரவபடம் | கொல்லும் |

செய்திகள் ஒத்துஅமையாததால், விடுபட்ட பகுதிக்கருத்து முழுமையாகப் புலப்படவில்லை. கிடைகாட்டும்எனும்செயலும்,

மல்லிகைத் தண்டுவில் - மாந்தளிர் நாண்- நீல மலர் அம்பு- அல்குல் இடம் எனும் செய்திகளும் விடுபட்ட பகுதிக் கருத்து ஆகலாம்.

35. ஐந்தெனு நிலக்கருப் பொருளுரைப் பாமதி
 வானமலை யுறுகுறிஞ்சிக்
 கதிபன் பொருப்பன் சிலம்பன் குறத்தியர்க்
 காடவன் குறவருக்குங்
கந்தனே தெய்வமாங் கானவர்கள் கிளிமயில்
 காரானை வேங்கைசீயங்
 கரடிபுலி யுற்றிடும் வரையருவி பாய்சுனை
 கான்யாறு [1]சிறுகுடிறக
ளுந்ததை [2]சுற்றிவரு மோடையுங் காந்தளகி
 லுயர்வேர றேக்கசோகு
 முயர்வேணு கறைநாகம் [3]வன(னெலே)ன றோரையு
 மோகைக் குறிஞ்சியாழுஞ்
செந்தினை புரந்துவிளை யாடறே னிடுதல்பல
 சிலகிழங்கு கிள்ளலுந்
 திரவியந் தக்கோல மகில்குங்கு மங்கோட்டஞ்
 சீருலவு மிளகைந்துமே.

இது, குறிஞ்சிக் கருப்பொருள் கூறுகின்றது.

(இ-ள்) ஐந்து நிலங்களின் கருப்பொருள் கூறுவாம். அதிலான மலைபொருந்திய குறிஞ்சிக்குத் தலைமகன் பொருப்பன் சிலம்பன். பொது மக்களான குறத்தியருக்கும் ஆடவரான குறவருக்கும், கானவருக்கும் முருகனே தெய்வமாம். பறவை கிளி, மயில். கரியயானை வேங்கை, சிங்கம், கரடி, என்பன விலங்காகும் பொருந்துகின்ற நீர், மலையருவி, பாய்கின்ற சுனை, காட்டாறு, சிறுகுடில்களையும், ஆற்றிடைக் குறை யையும் சுற்றி வருகின்ற ஓடை என்பன. காந்தள் மலர். அகில், உயர்ந்த மூங்கில், தேக்கு, அசோகு, சிறந்த பிரம்பு, கரிய நாகம் என்பன மரம். வன (னெல்லும் தினையும்) மூங்கிலரிசியும் உணவு. உவகையான குறிஞ்சி யாழ். செந்தினை காத்தல், விளையாடுதல், தேனெடுத் தல், பல சில கிழங்கு அகழ்தல், என்பன தொழில்.

* 1 சிறுகுபிறக 2 சுத்தி 3 வனடே.,.,ன

திரவியமாக அமைவன தக்கோலம், அகில், குங்குமம், கோட்டம், சீர் பொருந்திய மிளகு எனும் ஐந்துமாம்.

(வி-ரை) அகப்பொருள் இலக்கண நூல்களும், பிரபந்தத் திரட்டின் சில பகுதிகளும் கருப்பொருள் பற்றி நிளைக்கின்றன. தொல்காப்பியம் தெய்வம், உணா, மா, மரம், புள், பறை, செய்தி (தொழில்), யாழ் என எட்டுக் கரு சுட்ட, நம்பியகப் பொருள் பதினான்காக விரித்துப் பட்டியலும் தருகின்றது. இவற்றுடன் நிலத்தின் அடையாளம் என்பதையும் இணைத்துப் பிரபந்தத் திரட்டு பதினைந்து கரு (354) கொள்கின்றது.

தீபிகை தெளிவான பட்டியல் தருவதாகக் கொள்ள முடியவில்லை. கருவகைகளை விரவுவதால், சார்புடைய வகைகள் பிரிந்து அமைகின்றன. கானவர் என்பது குறவர் என்பதுடன் அமையாது, கந்தனைக் குறித்த பின் வருகின்றது. நம்பியகப் பொருட்பட்டியலிலுள்ள வெற்பன், கொடிச்சி போன்றன இங்கு அமையவில்லை. இவ்வாறு பல வேறுபாடு உள. திரவியங்கள் பற்றிய எண்ணம் அகப்பொருள் இலக்கணத்தில் இல்லை. பறை, பண் போன்ற செய்திகள் இந்தத் தீபிகையில் விடப்படுகின்றன.

36. பாலைநில வேடர்க்கு மறவர்கள் மறத்தியர்
பணிதெய்வ மோபகவதி
பரியெழுந் தாடலு மெயினரு மெயிற்றியர்
பதிகவர்த லுழிஞைசெந்நாய்
கோலவிலை யுதிர்கா டிருப்பைவிட லைசிறு
கூவல்பக விற்சூறையுங்
குருவெஞ் சுரம்புறாக் காளைகாட் டெருமைநாய்
கொடுபஞ் சுரம்பருந்தா
மேலுநெய் தற்குமுந் நீர்புலம் பன்பரதர்
மேலுநுழை யர்நுழைச்சி
மிக்கதிரை [1]சேர்ப்பர்க் கதேதெய்வம் வருணனாம்
விளரியாழ் காக்கைகைதை
சேலுவர்க் கேணிபுனை நீபநா வாய்பறை
செறியம்பை [2]புல(ர்மீன்) விற்றல்
சிறுவர்கொள் பறைகூ லுறுசங்கு கவடியுஞ்
செம்பவள முத்துமுப்பே.

---

* 1 சேர்ப்பவர்க் 2 புல...வித்தல்

இது, பாலை நெய்தல் ஆகியவற்றின் கருப்பொருள் கூறுகின்றது.

(இ-ள்) பாலை நிலம் வேடர்க்குரியது. மறவர், மறத்தியர் பணிகின்ற கடவுள் பகவதி. குதிரை மேல் சென்று போர் புரிதலும் பதிகவர்தலும் எயினர் எயிற்றியர் செயல். உழிஞை மலர். செந்நாய், விலங்கு. காளை, காட்டெருமை, நாய் என்பனவும் விலங்கு. அழகிய இலையுதிர்ந்த காடுகள் இருப்பிடம். இருப்பை மரம். விடலை தலைவன். சிறுகிணறு நீர்நிலை. பகலில் கொள்ளையிடுதல் தொழில். அழகிய வெம்மையுடைய சுரம் நிலம். புறா, பருந்து என்பன பறவை. கொடுமை யான பஞ்சுரம் பண். சிறந்த நெய்தலுக்குக் கடல். புலம்பன், பரதர், தலைமகன். மேலும் நுளையர் நுளைச்சியர் மிகுந்த திரையை யுடைய சேர்ப்பர் என்போருக்கு அந்த தெய்வம் வருணனாம். விளரி யாழ். காகம், பறவை. கைதை தாவரம். மீனை யுடைய உப்பு நீர் நிறைந்த கிணறு நீர் நிலை. புன்னை கடம்பு மலர். நாவாய்ப் பறை, செறிந்த பம்பை என்பன பறை. (உலர்ந்த மீன்)விற்பது தொழில். சிறுவர் கொள்ளும் பறையும் உண்டு. நெய்தலுக்குரிய ஐந்து திரவியம் குவிந்தசங்கு,கவடி, செம்பவளம், முத்து, உப்பு என்பன.

(வி-ரை) பாலை, நெய்தல் ஆகிய இரு நிலக்கரு இங்கு விரி வாகத் தரப்பட்டில. நம்பியகப் பொருட்பட்டியல் இங்குச் சுருங்கியே அமைகின்றது. ஆயின் அங்குச் செந்நாய் மட்டும் பாலை விலங்காகக் கூறப்பட்ட இங்குக் காளை, காட்டெருமை, நாய் என்பனவும் இணைதல் பரப்புக் காட்டுகின்றது. காளை என்பதைப் பாலை நில ஆடவன் என முன்னும் கொண்டு இணைக்கலாம்.

நெய்தலுக்கு ஐந்து திரவியம் கூறுதல் தீபிகையை ஒட்டிப் போலும் தொகையகராதிகளில் இடம் பெறுகின்றது.

37. முல்லைக் கருப்பொருள் குறும்பொறை நாடனு
முயங்குகற் பின்மனைவியு
மொய்கிழத் [1]தியர்தோன்ற [2]லாய்ச்சிய ரிடையர்
முடையர்முடை யிடைச்சியர் வணங்குங்

---

* 1 தயர் 2 லாயாச்சி

குல்லைநெடு மாறெய்வ மான்முயல் கானவர்
        குறுஞ்சுனை பாடிசாமை
    கொன்றைபிட வந்தோன்றி முல்லைகா யாமன்றல்
        குல்லைகா னாங்கோழியுஞ்
சொல்லரிய கான்யாறு தாற்றுகதிர் முதிரை
        தூயவரகு முல்லையாழே
    தொனிக்குமேற் றுப்[3]பறை முழக்கல்சா தாரியுஞ்
        கடலைவத்தல் சாமைவரகு
செவ்வலை களைக்கட்ட லரிதல் கடாவிடல்
        சேருமூ வினமேய்த்தலுஞ்
    சிங்குழ லிசைத்தலுங் குரவையு மரக்கிறா
        றேனாவி பீலிதானே.

இது,முல்லைக் கருப்பொருள் கூறுகின்றது.

(இ-ள்) முல்லையின் கருப்பொருள், குறும்பொறை நாடனும் தழுவுகின்ற கற்புடைய மனைவியும் பெருமையுடைய கிழத்தியரும் தோன்றலும் தலைமக்கள். ஆய்ச்சியர், இடையர் (முடையர்), முடை நாற்றமுடைய இடைச்சியர் எனும் மக்கள் வணங்கும் துளசி சூடிய நெடுமால் தெய்வம். மான், முயல் என்பன விலங்கு. கானவருக்கு நீர் தருவது குறுஞ்சுனை. பாடி குடியிருக்கும் இடம். சாமை உணவு. கொத்தான கதிர்களையுடைய முதிரையும், தூய வரகும் கூட உணவாம். கொன்றை, பிடவம், தோன்றி, முல்லை, காயா மணமுடைய துளசி என்பன தாவரம், மலர் என்பனவாம். கானாங் கோழி பறவை. சொல்லுதற்கு அரிய கான்யாறு என்பதும் நீர். முல்லை யாழ். ஒலிக்கின்ற ஏறுகோட்பறை முழக்குதல், சாதாரிப் பண்ணினை ஒலித்தல், சாமை வரகு போடுதல், களை எடுத்தல், கதிர் அரிதல், போர் மிதிக்கச் செய்தல், சேர்கின்ற மூவினங்களை- ஆடு, மாடு, எருமை-மேய்த்தல், சிங்குழல் இசைத்தல், குரவை என்பன தொழில். அரக்கு, இறால், தேன், நாவி, பீலி என்பன தான் ஐந்திரவியமாம்.

(வி-ரை) முடையர், முடையிடைச்சியர் எனும் சொல் நிலைகள் முந்தைய நூல்களின் பொது மக்கள் பட்டியலில் அமைந்தில. சீர் நிலையில், 'முடையர்' என்பது மிக்கு அமைவதாகவே

---

* 3 பாறை

தோன்றுகிறது. முல்லையின் ஐந்து திரவியமும் இங்கு மட்டுமே உண்டு. சில தொகையகராதிகள் இத்தகு செய்திகள் தருகின்றன.

38. மருதக் கருப்பொரு ளுரைத்திடின் மகிணனு
மனைவிகற் பின்கிழத்தி
[1]மன்னுழத் தியருழவர் கடையர் கடைச்சியர்
வணங்குதே வம்வாசவன்
குருகுபோ தாவனங் கம்புடா ராவெருமை
குரன்மழலை வண்டுநாரை
கூத்தினாய் பேரூரி லஞ்சிமூ தூர்நதி
குவளைகழு நீர்தாமரை
யரியவஞ் சிகாஞ்சி பூஞ்சுனை செந்நெலு
மானநெல் வெண்ணெல்களை
யரிகளைந் திடல்கட்ட லுங்கிடா விடுதலும்ம
னைமன்ற லுச்சவங்கள்
[2]இருமருத யாழ்குளங் குடைதலும் பயறுநெல்
லிளவாழை கன்னலிளநீர்
இபம்வான ரம்பித்தன் கண்ணாடி [3]கோட்டர
மியம்புதிர வியநகர்க்கே.

இது, மருதக் கருப்பொருள் தருகின்றது.

(இ-ள்) மருதக் கருப்பொருள் கூறினால், மகிழ்நனும் மனைவியான கற்பின் கிழத்தியும் தலைமக்கள். நிலைத்த உழத்தியர், உழவர், கடையர், கடைச்சியர் பொது மக்கள். இவர் வணங்கும் தெய்வம் இந்திரன். குருகு, போதா, அன்னம், கம்புள், தாரா, குரல் மழலையாக அமையும் வண்டு, நாரை என்பன பறவை. எருமை, கூத்தாடும் நீர்நாய் என்பன விலங்கு. பேரூர், இலஞ்சி, மூதூர் என்பன ஊர்ப் பெயர். நதி, பூஞ்சுனை என்பன நீர்நிலை. குவளை, கழுநீர், தாமரை என்பன மலர். அரிய வஞ்சியும் காஞ்சியும் மரங்கள். செந்நெல்லும் பிற நெல்லும் வெண் நெல்லும் உணவு. இந் நெல் பயிரின் களை நீக்கல், அரிந்து கட்டுதல், போர் அடித்தல், வீட்டில் திருமணம், விழாக் கொண்டாடல், குளம் குடைதல் என்பன செயல். சிறந்த மருதம் யாழும்

---

* 1 மண்ணுழத் 2 இருமத 3 கோட்ட

பண்ணும் ஆகும். பயறு, நெல், இளவாழை, கரும்பு, இளநீர் (என்பன நாடுபடு திரவியம்), யானை அரசன், பித்தன், கண்ணாடி, குரங்கு என்பன நகர்படு திரவியம்.

(வி-ரை) நாடும் நகரமும் மருதத்தில் இணைவதால், இரு வகைப் பார்வையிலும் பத்து திரவியங்கள் கூறப்படுகின்றன எனக் கொள்ளலாம்.

39. ஆதியிடை மூலைவயி றைபைந்து நாலெட்டு
மாகும்வா லரையொன்பதா
மாணரவ மாணைந்து சந்திபெண் பெண்ணைந்தி
னாண்பெணீ ராறதாகும்
பாதிநே ரசையுமாண் பெண்ணாகு மின்னிசைவெண்
பாவுரைத் திடிலெழுத்தின்
பகர்சந்தி நான்குமுப் பத்தெட்டு வெட்டுவைம்
பதுபன்னி ரெண்டினுக்கு
ஓதுபதி னெட்டாகு மிருபதைம் பத்தினா
லொக்குமிரு பத்திரண்டுக்
குறுமஃது விருபத்தி நாலுவைம் பத்திரண்
டுறுமிருப தாறுபத்தா
மோதுமுப் பத்திரண் டுக்குநாற் பத்தெட்டு
முப்பத்தி நாலாறா
முப்பத்தி யாறஃது நாற்பதே நாற்பதறு
மொழிபெணர வுக்குமிவையே.

இது, இரட்டை நாகபந்தத்திற்கு எழுத்து நிலை கூறுகின்றது.

(இ-ள்) முதல், இடை, மூலை, வயிறு எனும் இடங்களில் ஐந்து, ஐந்து, நான்கு, எட்டு என எழுத்து ஆகும்; வால், அரை என்பன ஒன்பது எழுத்தாம், ஆண் பாம்பிற்கு; ஆண் பாம்பு ஐந்திடங்களில் பெண் பாம்பைச் சந்திக்கும்; பெண் பாம்பும் ஐந்திடங்களில் ஆண் பாம்பில் இணையும்; பெண்ணுக்கு ஈராறெழுத்து ஆகும்; முதற் பாதியான நேரசை வெண்பா ஆண்; இரட்டை நாக பந்தத்தின் பின்பாதியான இன்னிசை வெண்பா பெண் பாம்பு ஆகும். இவ்வாறு கூறும் போது, எழுத்துக்கள் ஒன்றாகச் சந்திக்கும் போது, நான்கும்—முப்பத்தெட்டும் எழுத்துகள் ஒன்றாகவும், அவ்வாறே எட்டும்—ஐம்பதும், பன்னிரண்டும்—பதினெட்டும், இருபதும் — ஐம்பத்து னான்கும், இருபத்து இரண்டும் — இருபத்து நான்கும்,

ஐம்பத்து இரண்டும் — இருபத்து ஆறும், பத்தும் — முப்பத்து இரண்டும், நாற்பத்தெட்டும் — முப்பத்து நான்கும், ஆறும் — முப்பத்து ஆறும், நாற்பதும்— நாற்பத்து ஆறும் ஒன்றாகவும் வரும்படியாகக் கூற வேண்டும். பெண் பாம்புக்கும் இவ்வாறே.

**(வி-ரை)** இது இன்னும் தெளிவுபடல் வேண்டும். தண்டியலங் காரம் (98) சித்திரக் கவிப் பட்டியலில் நாகபந்தம் எனக் கூறுவது உரையில் இரட்டை நாக பந்தமாக விளக்கப்படுகின் றது. 'இரண்டு பாம்புகள் தம்முள் இணைவன்வாக உபதேச முறையா னெழுதி,ஒரு நேரிசை வெண்பாவும், ஓர் இன்னிசை வெண்பாவு மெழுதிச் சந்திகளினின்ற எழுத்தே மற்றையிடங் களினு முறுப்பாய் நிற்கப் பாடுவது. மேற்சுற்றுச் சந்தி நான் கினும் நான்கெழுத்தும், கீழ்ச் சுற்றுச் சந்தி நான்கினும் நான் கெழுத்தும், இரண்டு பாம்பிற்கு நடுச்சந்தி நான்கினும் இரண்டு பாட்டிற்கும் பொருந்த நான்கெழுத்துமாகச் சித்திரத்தி லடைப் பது'. தீபிகையின் விளக்கம் இதனினும் விரிவாக அமைவது தெரிகின்றது. தண்டியலங்கார உரையில் தரப்படும் வெண் பாக்களை, தீபிகையின் விளக்க அடிப்படையில் பார்க்கும் போது ஓரளவே எழுத்தமைப்பு நிலை பொருந்துகின்றது.

**40.** உவமையியை பின்மைபுகழ் பொருள்உவமை யெதிர்நிலைக்
குற்றப்[1]பிர தீபமாகும்
உருவகந் திரிபரி ணாமம்பல படைப்புனை
யுல்லேக முடனினைப்பாம்
உறுமயக் கைய[2]மொழிப் பவனுதிச் சொற்குறிப்
புற்பிரேட்சை யுயர்நவிற்சிக்
குத்தியோக்தி துல்லிய மொப்புமைக் கூட்டமு
முயர்விளக் கணிதீபகம்
தவறிலைபின் வரும்விளக் காவர்த்த தீபகஞ்
சாற்றுதொடர் முழுதுவமையே
தக்கபிரவத் துவமையுட னெடுத்துக்காட்
டுவமைசார்ந்
திட்டாந்த நிதர்சனஞ்
சாட்சியாம் விதிரேகம் வேற்றுமை சகோத்தியே

* 1பிற 2 மொளிப்

தரமான வுடனிகழ்ச்சி
சாரும் அவினோக்தி யின்மை நவிற்சிக்குச்
சமாசோக்தி சுருங்க[3]மொழிதல்
குவிகருத் துடையடை கொள்பரிகரம் பரிகராங்
குரம்பல பொருட்சொற்றொடர்
[4]கோதறு சிலேடையப் பிரஸ்துதப் பிரசமிசை
கூறுபுனை [5]விலிபுகழ்ச்சி
கொண்டபுனை [6]வுளிவிளைவு பிரஸ்துதாங் குரமாங்
குலாவுபிறி தினவிற்சி
கூறுப்ரி யாயோக்தி வஞ்சப் புகழ்ச்சியாய்க்
கொள்ளும் வியாஜஸ்துதி
இவர்வியாச நிந்தைக்கு வஞ்சப் பழிப்பாகு
மெதிர்மறைக் காட்சேபாம்
இயல்விரோ தாபாச முரண்விளைந் தழிவணி
யெய்த்துப்பிர தியா[7]ராய்ச்சியே
இசைவிபா வனையென்பர் காரண [8]வராய்ச்சியே
யெய்திய விசேடோக்தியாம்
இலங்கிய அசம்பவங் கூடாமை தொடர்பின்மை
யெய்தசங் கதியாகுமே.

41. தகுதியின் மைக்குவிஷ மந்தகுதி சமமென்பர்
சார்விசித் திரம்வியப்பாம்
சால்பெருமை சிறுமையதி கால்ப்பமொன்
றோர்க்கொன்றி
தவியன்னி யோன்னியமாகும்
தகுதிவிசே டஞ்சிறப்பு நிலைவியா [1]காதமற்ற
தற்காக் கலணியாம்
சாறுகா ரணமாலை யொற்றை மணிமாலை
யேகாவளி தனக்குற்றதாம்
மிகுசார மேன்மே லுயர்ச்சிக்கு மாலை
விளக்கெதா சங்கைநிரையாம்
மிக்கபரி யாயமுறை யிற்படர்ச் சிக்குபரி
விருத்திக்கு மாற்றுநிலையாம்
மீறுபரி சங்கியை தனக்கொழித் துக்காட்டு

---

* 3 மொழித்தல் 4 ... (கோதறு) 5 வலி 6 வளி 7 ராயாச்சியே
8 வராச்சியே
1 காற

மேல்விகற் பமுறழ்ச்சி
மேவுகூட் டஞ்சமுச் சயங்காரக தீபகம்
வினைமுதல் விளக்கதாகும்
தொகுமெளிதின் முடிசமா திக்கிவிறல் கோளணி
சொற்பிறத்திய நீகமாகும்
தொடர்செய் யுட்பொருட் பேறு மேல்வருந்
தொடர்நிலைச் செய்யுட்குறி
துகளற்ற காவியார்த் தாபத்தி பின்புறச்
சொல்காவிய லிங்கமாகும்
துய்யவர்த் தாந்தர [2]நியாயம்வேற் றுப்பொருள்
சூழவைப் பதா[3]மலர்ச்சி
நகையார் விகஸ்வரம்பி ரௌடோக்தி கற்றோர்
நவிற்சிசம் பாவனைக்கு
நாடுமுய்த் துணர்வுமித் தியாத்திய வசதிக்கு
நல்லபொய்த் தற்குறிப்பு
நவிலும் வனப்புநிலை லலிதையின் பொடுதுன்பம்
நற்பிரகர் ஷம்விஷாதம்
நத்தக மலர்ச்சி யுல்லாசம் [4]மிகழ்ச்சிக்கு
நவிலவிக்கினை யாகுமென்றே.

42. வேண்டலணி யேயனுக் ஞாயமா மிலேசம்
விரும்புகுறி நிலைமுத்திரை
மிக்கவர தனமாலை ரத்னா வளிக்காகு
மிகுதொல் லுருப்பெறறகு
மெய்ப்பூர்வ ரூபமாம் பிறிதின் குணம்பெறல்
விளம்புதற் குணமதாகும்
மேவுமதி னெதிர்மறை யதற்குணந் தன்குண
மிகைக்குமனு குணமதாகும்
மாண்டமீ லிதைமறைவு பொதுமைசா மானிய
மறையாமை யுன்மீலிதை
வருவிசே டகமாஞ் [1]சிறப்புத் தரத்தனிறைற்
மாறாத சூட்சநுட்பம்
மன்றுக ளவுவெளிப் படுப்பெனும் பிசிதமாம்
வளர்வியா சோக்திக்குயாம்
வஞ்சம் பொருந்திய நவிற்சிகூ டோக்தியே
வருகுறிப் புறுநவிற்சி

---

* 2 நியாய(ச)ம் 3 மலர்சி 4 மகிழ்ச்சி

1 சிறப்பு தாத்த

தூண்டும் வெளிப்படை நவிற்சிவிவிர் தோக்தியே
துகளற்ற யுக்தியாமே
சொல்லுலோ கோக்தி யுலகவழக் கநவிறல்
துரிசில்வல் லோர்நவிற்சி
துய்யசே ஷோக்தியே வக்கிரோக்தி யாவதே
சூழ் மடங் குதனவிற்சி
சுபாவோக்தி தன்மை நவிற்சி பாவிகமே
துலங்குநிகழ் வினவிற்சி
காண்டகை திருத்திபிரி நிலைநவிற லேவிலக்
கணிபிரதி நிஷேதமாகும்
காதுவிதி யேதுவுட னொருநூற தாமணி
கலந்தொன் றிரண்டுசேரும்
காதலார் சேர்வையணி சம்சிருட்டி சங்கரங்
கலவையணி யாகுமென்ன
[2]களங்கமறு சந்திரா லோகவணி யெனுமிலக்
கணமுநூற் றெட்டென்பரே.

இவை, நூறணிகளின்பட்டியலையும்சந்திராலோகக் கருத்தையும் தருகின்றன.

(இ-ள்) உவமை, இயைபின்மை, புகழ்பொருள் உவமை, எதிர் நிலை என்பதற்கு ஏற்ற பிரதீபம், உருவகம், திரி(பு) எனும் பரிணாமம், பலபடப்புனை (வு)எனும் உல்லேகம், அதனுடன், நினைப்பு, உறுகின்ற மயக்கம், ஐயம், ஒழிப்பு எனும் அவனுதி, சொற்குறிப்பு எனும் உற்பிரேட்சை, உயர்வு நவிற்சிக்கு (பெயர்) உத்தியோக்தி, துல்லியம் எனும் ஒப்புமைக் கூட்டம், உயர்வுடைய விளக்கணி எனும் தீபகம், தவறில்லாத பின்வரும் விளக்கு என்பது ஆவர்த்த தீபகம், சாற்றுகின்ற தொடர்முழுதுவமை என்பது தக்க பிரவத்துவமை,என்பதுடன், எடுத்துக்காட்டுவமை என்பது சார்ந்த திட்டாந்தம், நிதர்சனம் என்பது காட்சி, விதிரேகம் என்னும் வேற்றுமை, சகோத்தி என்பது தரமான உடனிகழ்ச்சி, சார்கின்ற அவினோக்தி என்பது இன்மை நவிற்சி,சமாசோக்தி என்பது சுருங்க மொழிதல்,குவிந்த, கருத்துடையடை என்பது பரிகரம், கருத்துடையடை கோள் என்பது பரிகராங்குரம்,பல பொருளையுடைய சொற்றொடர் குற்றம் இல்லாத சிலேடை, அப்பிரஸ்து

* 2 கலங்க

தப் பிரசம் என்பதன் மேல் கூறுவது புனைவிலி புகழ்ச்சி, கொண்ட புனைவுளி விளைவு என்பது பிரஸ்துதாங் குரமாம், குலவுகின்ற பிறிதினவிற்சியைப் பரியாயோக்தி என்று கூறுக, வஞ்சப் புகழ்ச்சியாய்க் கொள்வது வியா ஜஸ்துதி, இவர்கின்ற வியாச நிந்தைக்கு வஞ்சப்பழிப் பாகும்,எதிர்மறைக்கு ஆட்சேபம் என்பதாம்,இயல்கின்ற விரோதாபாசம் என்பது முரண் விளைந்தழிவணி, அறிகின்ற பிரதியாராய்ச்சி என்பதை இஷைகின்ற விபாவனைஎன்பர், காரணவராய்ச்சி என்பது எய்திய விசேடோக்தியாம், இலங்குகின்ற அசம்பவம் என்பது கூடாமை, தொடர்பின்மை எய்துகின்ற அசங்கதி என்பது ஆகும்.

தகுதியின்மை என்பதற்கு விஷமம், தகுதி என்பது சமம் என்பர், சார்கின்ற விசித்திரம் என்பது வியப்பு, சான்ற பெருமை சிறுமை என்பன முறையே அதிகம் அற்பம், ஒன்றோர்க் கொன்றுதவி என்பது அன்னி யோன்னியம் ஆகும், தகுதியான விசேடம் என்பது சிறப்புநிலையாம்,வியாகாதம் என்பது மற்றதற்காக்கல் எனும் அணியாம், சாரமான காரணமாலை, ஒற்றை மணிமாலை என்பது ஏகாவளி என்பதற்குப் பொருந் தியதாம், மிக்க சாரம் என்பது மேன்மேல் உயர்ச்சி, மாலைவிளக்கு, எதாசங்கை என்பது நிரையாகும், மிக்க பரியாயம் என்பது முறையிற்படர்ச்சி, பரிவிருத்தி என்பதற்கு மாற்றுநிலை, மீறுகின்ற பரிசங்கை என்பதற்கு ஒழித்துக்காட்டு, மேலான விகற்பம் என்பது உறழ்ச்சி, மேவுகின்ற கூட்டம் என்பது சமுச்சயம், காரகதீபம் என்பது வினைமுதல் விளக்கு என்பதாகும். தொகுகின்ற எளிதின்முடி(வு) என்பது சமாதிக்கு ஆகும், விறல்கோளணி எனும் சொல் பிறத்தியநீகம் ஆகும், தொடர்செய்யுட் பொருட்பேறு என்பதும் மேலே வருகின்ற தொடர்நிலைச் செய்யுட்குறி என்பதும் (முறையே) குற்றமற்ற காவியார்த்தா பத்தி எனவும் பின்புபொருந்தச் சொல்கின்ற காவியலிங்கமும் ஆகும், தூய்மையான அர்த்தாந்தர நியாய(ச)ம் என்பது வேற்றுப் பொருள் சூழும்படி வைப்பதாகும். மலர்ச்சி என்பது நகைபொருந்திய விகஸ்வரம், பிரௌடோக்தி என்பது கற்றோர் நவிற்சி, சம்பாவனை என்பதற்கு நாடுகின்ற உய்த்துணர்வு, இத்தியாத்திய வசதி என்ப

தற்கு நல்ல பொய்த்தற்குறிப்பு, கூறுகின்ற வனப்பு நிலை என்பது லலிதை, இன்பம் அதனுடன் துன்பம் முறையே நல்ல பிரகர்ஷம் விஷாதம் எனவரும், சிறந்த அகமலர்ச்சி என்பது உல்லாசம், இகழ்ச்சி என்பதற்கு அவிக்ஞை பொருந்தும் என்று கூறு.

வேண்டல் எனும் அணி அனுக்ஞாயம் ஆகும், இலேசம், விரும்புகின்ற குறிநிலை என்பது முத்திரை, மிகுதியுடைய அரதனமாலை என்பது ரத்னாவளிக்கு ஆகும், மிகுகின்ற தொல்லுருப்பெறல் என்பது தக்க மெய்யையுடைய பூர்வரூபம்ஆகும், பிறிதின்குணம் பெறல் என்பது விளம்புகின்ற தற்குணம் என்பதாகும், மேவுகின்ற அதன் எதிர்மறை அதற்குணம், தன்குண மிகை என்பதற்கு அனுகுணம் என்பதாகும், சிறந்த மீலிதை என்பது மறைவு, பொதுமை என்பது சாமானியம், மறையாமை என்பது உன்மீலிதை, வரு இன்ற விசேடகம் என்பதாம் சிறப்பு, உத்தரம் தனது இறை, மாறாத சூட்சம் என்பது நுட்பம், நிலைத்த களவுவெளிப்படுப்பு என்பது பிகிதமாம், வளர்கின்ற வியாசோக்திக்கு வஞ்சம் பொருந்தியநவிற்சி என்பதாம், கூடோக்தி என்பது வருகின்ற குறிப்புறு நவிற்சியாம், தூண்டுகின்ற வெளிப்படைநவிற்சி என்பது விவிர் தோக்தி, குற்றமற்றயுக்தி(அவ்வாறே) யாகும், சொல்லு இன்ற லோகோக்தி உலகவழக்கம் நவில்தல், குற்ற மில்லாத வல்லோர்நவிற்சி தூய்மையான சேஷோக்தி யாகும், வக்கிரோக்தி என்பதே சூழ்கின்ற மடங்குதல் நவிற்சியாகும், சுபாவோக்தி என்பது தன்மைநவிற் சியாம்,பாவிகம் என்பது விளங்குகின்ற நிகழ்வின்நவிற்சி, காண்டற்குத்தக்க நிருத்தி என்பது பிரிநிலைநவிறல், இலக்கணி என்பது பிரதிநிஷேதம் ஆகும்,கேட்கின்ற விதி ஏது,என்பனவற்றுடன் அணி நூறாகும். கலந்து ஒன்றும் இரண்டும் சேருகின்ற அன்பு நிறைந்த சேர்வை அணி சம்சிருட்டி, சங்கரம் என்பது கலவையணி ஆகும் என்று களங்கம் இல்லாத சந்திராலோகவணி என்னும் இலக் கணமும் நூற்றெட்டு என்பர்.

(வி-ரை) நூறணி எனக்கூறியபோதும், பட்டியலில் 98 மட்டுமே காணப்படுகின்றன. சந்திராலோகத்தில் 95, 96 இடங்களில்

வருகின்ற வீறுகோளணி யென்னும் உதாத்தாலங்காரமும், அத்தியுக்தி என்னும் மிகுதிநவிற்சியுமே இங்குவிடப்பட்டவை.

சந்திராலோகம் (முத்துசாமிஐயங்கார், செந்தமிழ்,1909) நூறு அணிகளை மட்டுமே விரிக்கின்றது. ஆயின் வடமொழி சந்திராலோகத்தின் மொழிபெயர்ப்பான குவலயாநந்தம் (அச்சு, 1895), மேலும் 20 அணிகூறுவதில் சிலவற்றைக் கொண்டல் 108 அணி எனும் எண்நிலைவரலாம். சேர்வை எனும் அணியும், கலவை என்பதில் நால்வகை அணியும் இக்குவலயாநந்தத்தில் அமைகின்றன.

அணிகளின் பெயர்நிலை, சந்திராலோகத்துக்கும் தீபிகைக்கும் அங்கங்குச் சிறிது வேறுபாடு காட்டுகின்றது, உயர்வு நவிற்சி, அதிசயோக்தி எனச் சந்திராலோகத்திலும் உத்தியோக்தி எனத் தீபிகையிலும் அமைகின்றது. காட்சி என முன்னதில் அமைவது சாட்சி எனப் பின்னதில் வருகின்றது. விலக்கணி, பிரதிஷேதம் என அங்கும் பிரதிநிஷேதம் என இங்கும் காணப்படுகின்றது;

## பிரபந்த தீபிகை கூறும் சந்திராலோக அணிகள்

| எண் | தமிழ் | வடமொழி |
|---|---|---|
| 1 | உவமை | — |
| 2 | இயையின்மை | — |
| 3 | புகழ்பொருள் உவமை | — |
| 4 | எதிர்நிலை | பிரதீபம் |
| 5 | உருவகம் | — |
| 6 | திரி | பரிணாமம் |
| 7 | பலபடப் புனை | உல்லேகம் — |
| 8 | நினைப்பு | — |
| 9 | மயக்கு | — |
| 10 | ஐயம் | — |
| 11 | ஒழிப்பு | அவனுதி |
| 12 | சொற் குறிப்பு | உற்பிரேட்சை |
| 13 | உயர்நவிற்சி | உத்தியோக்தி |
| 14 | ஒப்புமைக் கூட்டம் | துல்லியம் |
| 15 | விளக்கணி | தீபகம் |
| 16 | பின்வரும் விளக்கு | ஆவர்த்த தீபகம் |
| 17 | தொடர் முழுவதுமை | பிரவத் துவமை |
| 18 | எடுத்துக் காட்டுவமை | திட்டாந்தம் |
| 19 | சாட்சி | நிதர்சனம் |
| 20 | வேற்றுமை | விதிரேகம் |
| 21 | உடனிகழ்ச்சி | சகோக்தி |
| 22 | இன்மை நவிற்சி | அவினோக்தி |
| 23 | சுருங்க மொழிதல் | சமாசோக்தி |

| எண் | தமிழ் | வடமொழி |
|---|---|---|
| 24 | கருத்துடை-<br>யடை | பரிகரம் |
| 25 | கருத்துடை-<br>யடைகொள் | பரிகராங்<br>குரம் |
| 26 | பலபொருட்<br>சொற்<br>றொடர் | சிலேடை |
| 27 | புனைவிலி<br>புகழ்ச்சி | அப்பிரஸ்து<br>தப்பிரசமிசை |
| 28 | புனைவுளி<br>விளைவு | பிரஸ்துதாங்<br>குரம் |
| 29 | பிறிதினவிற்சி | ப்ரியா<br>யோக்தி |
| 30 | வஞ்சப்<br>புகழ்ச்சி | வியாஜஸ்துதி |
| 31 | வஞ்சப்<br>பழிப்பு | வியாச<br>நிந்தை |
| 32 | எதிர்மறை | ஆட்சேபம் |
| 33 | முரண்<br>விளைந்தழி<br>வணி | விரோதா<br>பாசம் |
| 34 | பிரதிய<br>ராய்ச்சி | விபாவனை |
| 35 | காரண<br>வராய்ச்சி | விசேடோக்தி |
| 36 | கூடாமை | அசம்பவம் |
| 37 | தொடர்<br>பின்மை | அசங்கதி |
| 38 | தகுதியின்மை | விஷமம் |
| 39 | தகுதி | சமம் |
| 40 | வியப்பு | விசித்திரம் |
| 41 | பெருமை | அதிகம் |
| 42 | சிறுமை | அற்பம் |
| 43 | ஒன்றோர்க்<br>கொன்றுதவி | அன்னியோன்<br>னியம் |
| 44 | சிறப்புநிலை | விசேடம் |
| 45 | மற்றதற்<br>காக்கலணி | வியாகாதம் |
| 46 | காரணமாலை | — |
| 47 | ஒற்றைமணி<br>மாலை | ஏகாவளி |
| 48 | மேன்மேலு<br>யர்ச்சி | சாரம் |
| 49 | மாலைவிளக்கு | — |
| 50 | நிரை | எதாசங்கை |
| 51 | முறையிற்<br>படர்ச்சி | பரியாயம் |
| 52 | மாற்றுநிலை | பரிவிருத்தி |
| 53 | ஒழித்துக்<br>காட்டு | பரிசங்கியை |
| 54 | உறழ்ச்சி | விகற்பம் |
| 55 | கூட்டம் | சமுச்சயம் |
| 56 | வினைமுதல்<br>விளக்கு | காரகதீபகம் |
| 57 | எளிதின்முடி | சமாதி |
| 58 | விறல்<br>கோளணி | பிறத்திய<br>நீகம் |
| 59 | தொடர்<br>செய்யுட்<br>பொருட்பேறு | காவியார்த்<br>தாபத்தி |
| 60 | தொடர்<br>நிலைச்<br>செய்யுட்குறி | காவிய<br>லிங்கம் |
| 61 | வேற்றுப்<br>பொருள்<br>வைப்பு | அர்த்தாந்தர<br>நியாய(ச)ம் |
| 62 | மலர்ச்சி | விகஸ்வரம் |
| 63 | கற்றோர்<br>நவிற்சி | பிரௌ<br>டோக்தி |
| 64 | உய்த்துணர்வு | சம்பாவனை |
| 65 | பொய்த்தற்<br>குறிப்பு | மித்தியாத்<br>தியவசதி |

| எண் | தமிழ் | வடமொழி |
|---|---|---|
| 66 | வனப்புநிலை | லலிதை |
| 67 | இன்பு | பிரகர்ஷம் |
| 68 | துன்பம் | விஷாதம் |
| 69 | அகமலர்ச்சி | உல்லாசம் |
| 70 | இகழ்ச்சி | அவிக்கினை |
| 71 | வேண்டலணி | அனுக்ஞாயம் |
| 72 | இலேசம் | — |
| 73 | குறிநிலை | முத்திரை |
| 74 | அரதன மாலை | ரத்னாவளி |
| 75 | தொல்லுருப் பெறல் | பூர்வரூபம் |
| 76 | பிறிதின் குணம்பெறல் | தற்குணம் |
| 77 | (பிறிதின் குணப் பேறின்மை) | அதற்குணம் |
| 78 | தன்குண மிகை | அனுகுணம் |
| 79 | மறைவு | மீலிதை |
| 80 | பொதுமை | சாமானியம் |
| 81 | மறையாமை | உன்மீலிதை |
| 82 | சிறப்பு | விசேடகம் |
| 83 | இறை | உத்தரம் |
| 84 | நுட்பம் | சூட்சம் |

| எண் | தமிழ் | வடமொழி |
|---|---|---|
| 85 | களவு வெளிப்படுப்பு | பிசிதம் |
| 86 | வஞ்சநவிற்சி | வியாசோக்தி |
| 87 | குறிப்புநவிற்சி | கூடோக்தி |
| 88 | வெளிப்படை நவிற்சி | விவிர் தோக்தி |
| 89 | — | யுக்தி |
| 90 | உலக வழக்க நவிறல் | உலோ கோக்தி |
| 91 | வல்லோர் நவிற்சி | சேஷோக்தி |
| 92 | மடங்குத னவிற்சி | வக்கிரோக்தி |
| 93 | தன்மை நவிற்சி | சுபாவோக்தி |
| 94 | நிகழ்வி னவிற்சி | பாவிகம் |
| 95 | பிரிநிலை நவிறல் | நிருத்தி |
| 96 | விலக்கணி | பிரதி நிஷேதம் |
| 97 | விதி | — |
| 98 | ஏது | — |
| 99 | சேர்வை | சம்சிருட்டி |
| 100 | கலவை | சங்கரம் |

**43.** சீருறுந் தெண்டியா சிரியர்சொல் லணிவகை
(சேரும்)முப் பத்தைந்தினில்
சேர்தன்மை நான்கதா முவமைமுப் பத்தைந்து
தேறுமூ வேழுருவகம்
தீவகம் பன்னிரெண்டு பின்வரும் நிலைநான்கு
சேர்முன்வி லக்கையைந்தே
செய்யவேற் றுப்பொருள் வைப்புமோ ரெட்டதாந்
தேறும்வேற் றுமையுமொன்பான்
ஆரும்வி பாவனை யயந்தொட்டு நான்குறு
மிசைய வணிக்குமாறாம்
ஆதற்கு றிப்பேற்ற மொருமூன்று ஏதுவணி

அறுமூன்று நுட்பம்இரண்டு
ஆமிலே சமிரண்டு நிரைநிரையு மொன்றதாம்
ஆர்வமொழி யணியுமொன்று
அரியசுவை யெட்டுதன் மேம்பாட் டுரையொன்று
ஆனபரி யாயமொன்று
பேருறு சமாயித மொன்றுதாத் தமிரண்டு
பின்னுமவ னுதியுமூன்றாம்
பெபரரிய சிலேடையொரு பஃதுபின் விசேடமும்
பேசுவர்க ளைந்ததாக
பிரியமுறு மொப்புமைக் கூட்ட மிரண்டதாம்
பீடுறுவி ரோதமொன்றே
பெறுயாறு பாடுபுகழ் நிலையணியு மொன்றதாம்
பின்புபுக [1]ழாப்புகழ்ச்சி
நேநமொன் றாகுநிதர் சனமு மொன்றுபுணர்
நிலையொன்று பரிவர்த்தனை
நின்னயமு மொன்றதாம் வாழ்த்தணியு மொன்றாகு
நீடுசங் கீர்ணமேகம்
நீதமுறு பாவிக வலங்கார மொன்றெனை
நிகழ்த்துவர்க ளணிவகையினை
நீடிலக் கணவாழி நீந்துபுல வோர்களே
நிச்சயித் துரைசெய்வாரே.

இது, அணிகள் முப்பத்தைந்து எனும் தண்டியின் கருத்தைக் கூறுகின்றது.

(இ-ள்) சீர் உறுகின்ற தண்டியாசிரியர் கூறும் அணிவகை முப்பத்தைந்து. அதில்சேர்கின்ற தன்மைஅணி நான்காம். உவமை முப்பத்தைந்து. தேறுகின்ற இருபத்தொன்று உருவகம், தீவகம் பன்னிரண்டு. பின்வருநிலை நான்கு. சேர்கின்ற முன்ன விலக்கு இருபத்தைந்து. செம்மையான வேற்றுப் பொருள்வைப்பும் எட்டாம், தேறுகின்ற வேற்றுமையும் ஒன்பது. நிறைகின்ற விபாவனை ஐந்து, ஒட்டு நான்கு, உறுகின்ற அதிசய அணிக்கும் ஆறு ஆகும். அந்த தற்குறிப் பேற்றம் மூன்று. ஏது அணி பதி

---

* 1 ழாய்ப்

குறிப்பு: முதலடியில் சீர்க் குறைவு தோன்றியதால், பிரதியில் விடுபாடும் காட்டப்படாததால், 'சேரும்' என்ற சொல் வருவித்துக் கொள்ளப்பட்டுள்ளது.

னெட்டு. நுட்பம் இரண்டு. ஆகின்ற, இலேசம்இரண்டு, நிரல் நிறை ஒன்று, ஆர்வமொழியணியும் ஒன்று. அரிய சுவை எட்டு. தன்மேம்பாட்டுரை ஒன்று ஆன பரியாயம் ஒன்று. பெயர்பெற்ற சமாயிதம் ஒன்று. உதாத்தம் இரண்டு. பின்னும் அவநுதியும் மூன்று ஆகும். பெயர் அரிய சிலேடை பத்து. பின் விசேடம் என்பதும் ஐந்து என்று பேசுவர்கள். பிரியமுறுகின்ற ஒப்புமைக் கூட்டம் இரண்டு. பீடுறுகின்ற விரோதம்ஒன்று. பெறுகின்ற மாறு படுபுகழ்நிலையணியும் ஒன்று, பின்பு புகழாப்புகழ்ச்சி நேரும் ஒன்று ஆகும். நிதர்சனமும் ஒன்று. புணர்நிலை ஒன்று. பரிவர்த்தனை நிர்ணயம் என்பதும் ஒன்று ஆகும். வாழ்த்தணியும் ஒன்று ஆகும். சிறப்புடைய சங்கீர்ணமும் ஒன்று. தகுதியுடையபாவிக அலங்காரமும் ஒன்று எனக் கூறுவார்கள். அணிவகையினை, பெருமை யுடைய இலக்கணக் கடலை நீந்துகின்ற புலவர்களே (இத்துணை என) நிச்சயமாகக் கூறுபவர்கள்,

(வி-ரை) அணிகள் முப்பத்தைந்து, உட்பகுப்புகளுடன் விரிவாகத் தண்டியில் அமைவதால் அவ் வெண்ணிக்கையையும் தரும் முயற்சி இப்பட்டியலில் காணப்படுகின்றது. ஓரணி பிறிதொரு அணியோடு கலந்து உருவாகும் வகைகளும், உள்வகை நிலைகளுடன் சுட்டப்படுகின்றன. சான்றாக, உவமையில், பண்பு - தொழில் - பயன் என மூன்றும், விரி - தொகை முதலிய இருபத்து நான்கும், அற்புதவுவமை - சிலேடை யுவமை முதலிய எட்டுமாக முப்பத்தைந்து அமைவதால் 'உவமை முப்பத்தைந்து' எனத் தீபிகை கூறுகின்றது. இவ்வாறே பிறவும் வருகின்றன (அட்டவணை பார்க்க).

நிரனிறையை 'நிரைநிரை' எனலும், பரிவர்த்தனையைப் பரிவர்த்தனை நிர்ணயம் என்பதும் இங்கு அமையும் சிறு பெயர் நிலை வேறுபாடம். அத்துடன் எண்ணிக்கை தரும்போது தண்டியிலமைவதினும் ஒருசில மாற்றம் இங்கு உண்டு. தீவகம் பன்னிரண்டு எனத் தீபிகை கூறத் தண்டியில் பதினொன்றும் முன்னவிலக்கு 25 என்றது 23- ஆக அமைவதும் போன்றன.

## தீபிகை - தண்டியின் அணி வகைகள்

| முறை எண் | அணி (தீபிகை) | எண்ணிக்கை (தீபிகை) | வகைகள் (தண்டி) |
|---|---|---|---|
| 1 | தன்மை | 4 | பொருட்டன்மை, குணத்தன்மை, சாதித் தன்மை, தொழிற்றன்மை. |
| 2 | உவமை | 35 | பண்புவமை, தொழிலுவமை, பயனுவமை, விரியுவமை, தொகையுவமை, இதர விதரவுவமை, சமுச்சய வுவமை, உண்மை உவமை, மறுபொருளுவமை, புகழுவமை, நிந்தை யுவமை, நியமவுவமை, அநியமவுவமை, ஐயவுவமை, தெரிதரு தேற்ற வுவமை, இன்சொலுவமை, விபரீத வுவமை, இயம்புதல் வேட்கை யுவமை, பலபொருள் உவமை, விகார வுவமை, மோக வுவமை, ஆபூதவுவமை, பல வயிற் போலி யுவமை, ஒருவயிற் போலி யுவமை, கூடாவுவமை, பொது நீங்கு வுவமை, மாலை யுவமை; அற்புதவுவமை, சிலேடையுவமை, அதிசயவுவமை, விரோதவுவமை, ஒப்புமைக் கூட்ட வுவமை, தற்குறிப்பேற்ற வுவமை, விலக்குவமை, ஏது வுவமை. |
| 3 | உருவகம் | 21 | தொகையுருவகம், விரியுருவகம் தொகை விரியுருவகம், இயைபுருவகம், இயைபிலுருவகம், வியநிலை யுருவகம், சிறப்புருவகம், விருபகவுருவகம், சமா |

| | | | |
|---|---|---|---|
| | | | தானவுருவகம், உருவகவுருவகம், ஏகாங்க வுருவகம், அனேகாங்க வுருவகம், முற்றுருவகம், அவயவ வுருவகம், அவயவியுருவகம்; உவமையுருவகம், ஏதுவுருவகம், வேற்றுமை யுருவகம், விலக்கு வுருவகம், அவநுதி யுருவகம் சிலேடை யுருவகம். |
| 4 | தீவகம் | 12 | குணத்தீவகம், தொழில்தீவகம், சாதித் தீவகம், பொருட்டீவகம்; முதனிலைத் தீவகம், இடை நிலைத் தீவகம், கடை நிலைத் தீவகம்; மாலா தீவகம், விருத்த தீவகம், ஒரு பொருள் தீவகம், சிலேடை தீவகம் (11), |
| 5 | பின்வருநிலை | 4 | சொற்பின் வருநிலை, பொருட் பினவருநிலை, சொற் பொருட் பின் வருநிலை, உவமப் பொருட் பின்வருநிலை. |
| 6 | முன்னவிலக்கு | 25 | இறந்த வினை விலக்கு, எதிர் வினை விலக்கு, நிகழ்வினை விலக்கு, பொருள் விலக்கு, குணவிலக்கு, காரணவிலக்கு, காரிய விலக்கு; வன்சொல் விலக்கு, வாழ்த்து விலக்கு, தலைமை விலக்கு, இகழ்ச்சி விலக்கு, துணைசெயல் விலக்கு, முயற்சி விலக்கு, பரவச விலக்கு, உபாய விலக்கு, கையறல் விலக்கு, உடம்படல் விலக்கு, வெகுளி விலக்கு, இரங்கல் விலக்கு, ஐயவிலக்கு; வேற்றுப் பொருள் வைப்பு விலக்கு, சிலேடை விலக்கு, ஏது விலக்கு (23). |

| | | | |
|---|---|---|---|
| 7 | வேற்றுப் பொருள் வைப்பு | 8 | முழுவதுஞ் சேறல், ஒருவழிச் சேறல், முரணித் தோன்றல், சிலேடையின் முடித்தல், கூடா வியற்கை, கூடுமியற்கை, இருமை யியற்கை, விபரீதப் படுத்தல். |
| 8 | வேற்றுமை | 9 | ஒரு பொருள் வேற்றுமைச்சமம் இரு பொருள் வேற்றுமைச்சமம், உயர்ச்சி வேற்றுமை; குணவேற்றுமை, பொருள் வேற்றுமை, சாதி வேற்றுமை, தொழில் வேற்றுமை; விலக்கியல் வேற்றுமை, சிலேடை வேற்றுமை; |
| 9 | விபாவனை | 5 | அயற்காரண விபாவனை, இயல்பு விபாவனை; வினையெதிர் மறுத்துப் பொருள் புலப்படுத்துவது, பொதுவகையாற் காரணம் விலக்கிக் காரியம் புலப்படுத்துவது (4). |
| 10 | ஒட்டு | 4 | அடையும் பொருளும் அயல்பட மொழிதல், அடைபொதுவாக்கிப் பொருள் வேறுபட மொழிதல், அடை விரவிப் பொருள் வேறுபட மொழிதல், அடையை விபரீதப் படுத்துப் பொருள் வேறுபட மொழிதல். |
| 11 | அதிசயம் | 6 | பொருளதிசயம், குணவதிசயம், தொழிலதிசயம், ஐயவதிசயம், துணிவதிசயம், திரிபதிசயம். |
| 12 | தற்குறிப்பேற்றம் | 3 | பெயர் பொருள் தற்குறிப் பேற்றம், பெயராத பொருள் தற்குறிப் பேற்றம் (2). |

| | | | |
|---|---|---|---|
| 13 | ஏது | 18 | கருத்தா காரக வேது, பொருட் காரக வேது, கருமகாரக வேது, கருவிகாரக வேது, ஏற்பது காரக வேது, நீக்க நிலைகாரக வேது; ஞாபக வேது; என்றும பாவம், இன்மைய தபாவம், ஒன்றினொன்றபாவம், உள்ள த னபாவம், அழிவுபாட்டபாவம்; தூரகாரிய வேது, ஒருங்குடன் றோற்ற வேது, காரண முந்து றாஉங் காரிய நிலை, யுத்தவேது, அயுத்த வேது, ஐயவேது. |
| 14 | நுட்பம் | 2 | குறிப்புநுட்பம், தொழில்நுட்பம் |
| 15 | இலேசம் | 2 | புகழ்வது போலப் பழித்தல், பழிப்பது போலப் புகழ்தல். |
| 16 | நிரனிறை | 1 | நிரலே நிறுத்தி நேரே பொருள் கொள்வது, நிரலே நிறுத்தி மொழி மாற்றிப் பொருள் கொள்வது (2). |
| 17 | ஆர்வமொழி | 1 | — |
| 18 | சுவை | 8 | வீரம், அச்சம், இழிப்பு, வியப்பு, காமம், அவலம், உருத்திரம், நகை. |
| 19 | தன் மேம்பாட்டுரை | 1 | — |
| 20 | பரியாயம் | 1 | — |
| 21 | சமாயிதம் | 1 | — |
| 22 | உதாத்தம் | 2 | செல்வ மிகுதி, உள்ள மிகுதி. |
| 23 | அவநுதி | 3 | சிறப்பு, பொருள், குணம். |
| 24 | சிலேடை | 10 | செம்மொழி, பிரிமொழி; ஒரு வினை, பலவினை, முரண்வினை, நியமம், நியம விலக்கு, விரோதம், அவிரோதம்(9). |

| | | | |
|---|---|---|---|
| 25 | விசேடம் | 5 | குணக்குறை விசேடம், தொழிற் குறை விசேடம், சாதிக் குறை விசேடம், பொருட் குறை விசேடம், உறுப்புக் குறை விசேடம், |
| 26 | ஒப்புமைக் கூட்டம் | 2 | புகழ், பழிப்பு. |
| 27 | விரோதம் | 1 | பொருள் விரோதம், சொல் விரோதம் (2). |
| 28 | மாறுபடு புகழ்நிலை | 1 | — |
| 29 | புகழாப்புகழ்ச்சி | 1 | — |
| 30 | நிதரிசனம் | 1 | புகழ்மை, தீமை (2). |
| 31 | புணர்நிலை | 1 | வினை, பண்பு (2). |
| 32 | பரிவருத்தனை | 1 | — |
| 33 | வாழ்த்து | 1 | — |
| 34 | சங்கீரணம் | 1 | — |
| 35 | பாவிகம் | 1 | — |

**44.** ஈரொன்ப தின்கீழ்க் கணக்கினுட் படும்வகை
யியம்புநா லடிநானூறாம்
இன்னாமை நாற்பது [1]நான்மணிக் கடிகைசதம்
இனியநாற் பான்[2]காரதே
ஆருகள வழிநாற்ப தைந்திணையு மைம்பதாம்
ஐம்பது ஐம்பால்மொழி
அலகிலா சாரக்கோ வைசதந் [3]திரிகடுகம்
ஐயிருப தாகுமென்பர்
சீருறும் பழமொழிகள் நானூறு நூறதாஞ்
[4]சிறுபஞ்ச மூலம்நூறு
சேர்முது மொழிக்காஞ்சி யேலாதி யெண்பதாஞ்
சிறுகைநிலை யறுபதாகும்
வாரிதிணை மாலைநூற் றைம்பதாந் திணைமொழி
வழுத்தன்ப தாம்வள்ளுவ
மாலை[5]யோ டீரொன்ப தாய்ச்சாற்று பிரபந்தம்
வழுத்துவர்கள் புலவோர்களே.

---

* 1 நன்மணிக் 2 கள்ளதே 3 திரிகடம் 4 சிற் 5 யோரொன்ப

இது, கீழ்க்கணக்கு நூல் பட்டியல் அமைக்கின்றது.

(இ-ள்) பதினெட்டான கீழ்க்கணக்கில் உட்படுகின்ற வகை, கூறுகின்ற நாலடி நானூறு, இன்னாமை நாற்பது, நான் மணிக்கடிகை நூறு, இனிய நாற்பான், கார் நாற்பது, நிறைவுடைய களவழி நாற்பது, ஐந்திணையும் ஐம்பதாம், ஐம்பால் மொழி ஐம்பது, அலகிலாத ஆசாரக் கோவை நூறு, திரிகடுகம் நூறு என்பர், சீர் பொருந்துகின்ற பழமொழிகள் நானூறு, சிறுபஞ்ச மூலம் நூறு, சேர்ந்த முதுமொழிக் காஞ்சி நூறு, ஏலாதி எண்பது, சிறிய் கைந்நிலை அறுபதாகும், மிகுதியான திணைமாலை நூற்றைம்பதாம், திணை மொழி வாழ்த்துகின்ற ஐம்பதாம், வள்ளுவ மாலையொடு பதினெட்டாகக் கூறப்படுகின்ற பிரபந்தங்களைப்புலவர் வழுத்துவர்.

(வி-ரை) பதினெண் நூல்களில் மரபுப்படியுள்ள ஐந்திணை யெழுபது அமையாது 'ஐம்பால் மொழி ஐம்பது' என அமைவது வேறுபாடு. கீழ்க்கணக்கு நூல்கள் எவை எனத் தனிவெண்பா அமைகின்றது:

நாலடி நான்மணி நானாற்ப தைந்திணை முப்
பால் கடுகங் கோவை பழமொழி மாமூலம்
இன்னிலைய காஞ்சியுட னேலாதி யென்பவே
கைந்நிலைய வாங்கீழ்க்கணக்கு.

45. பூதலத் துறுபெருங் காப்பியத் தமிழினைப்
புகலுமுரு காற்றுப்படை
பொருநராற் றுப்படை சிறுபாணாற் றுப்படை
பொங்குமது ரைக்காஞ்சியும்
பேதமை [1]யிலாதமுது புலவருக் கமுதமாம்
பெரியபா ணாற்றுப்படை
பெருகுநவ ரசமொழுகு மதுரமுல் லைப்பாட்டுப்
[2]பின்னுநெடு நல்வாடையும்
ஓதரிய யுயர்கலைக் கோடுதண் டுஞ்சேர்ந்
துயர்மலை படுங்கடாமும்
ஓதுகவி வாணருக் [3]குரியபட்டி னப்பாட்டு

*1 யிலாதமுத 2 பின்று 3 குரியபடி

மோயாத கவிமாரியின்
நீதிபெறு பலபொருள் பகர்ந்துரைக் குந்துய்ய
நிகரிலாச் சிந்தாமணி
நீடுபல முறுகுறிஞ்சிப் பாட்டு முதலாக
நிச்சயித் துரைசெய்வரே.

இது, தமிழின் பெருங்காப்பியம் என்ற முகவுரையுடன் பத்துப் பாட்டு முதலியவற்றின் பட்டியல் தருகின்றது.

(இ-ள்) உலகில் பொருந்துகின்ற பெருங்காப்பியத் தமிழை, கூறுகின்ற முருகாற்றுப்படை, பொருநராற்றுப்படை சிறுபாணாற்றுப்படை, பொங்குகின்ற மதுரைக் காஞ்சி, பேதமை இல்லாத முதுபுலவருக்கு அமுதமான பெரிய பாணாற்றுப்படை, பெருகுகின்ற ஒன்பது சுவையும் ஒழுகுகின்ற இனிமையான முல்லைப் பாட்டு, பின்னிடு கின்ற நெடுநல்வாடை, ஓதுவதற்கரிய உயர்வுடைய கலைக் கோட்டுத் தண்டும், சேர்ந்து உயர்ந்த மலை படுங்கடாமும், ஓதுகின்ற கவிவாணருக்கு உரியபட்டினப் பாட்டும், ஓயாத கவி மழையின் நீதி பெறுகின்ற பல பொருளைப்பகர்ந்து கூறும் தூய்தான ஒப்பற்ற சிந்தா மணி, பெருமைப் பயன் பொருந்திய குறிஞ்சிப்பாட்டு, முதலாக நிச்சயித்து உரை செய்வர்.

(வி-ரை) சிந்தாமணி ஒன்றே பெருங்காப்பியமாக அமைய, அதனுடன் பத்துப்பாட்டுகளையும், இழந்து போன கலைக் கோட்டுத் தண்டு என்பதையும் கூறுவது எண்ண வேறுபாடாம்.

பத்துப் பாட்டு எவை எனப் பழைய வெண்பா ஒன்று கூறு கின்றது.

முருகு பொருநாறு பாணிரண்டு முல்லை
பெருகுவள மதுரைக் காஞ்சி - மருவினிய
கோல நெடுநல்வாடை கோல் குறிஞ்சிப் பட்டினப்
பாலை கடாத்தொடும் பத்து.

46. வானநா டுற்றிடும் பொதுமாத ருருவசி
மனோகரை யிமாவதியுடன்
மதனமோ கினிரம்பை காந்திமதி சந்திரகலை
வளர்சந்திர ரேகைகிருது
தேனனைய மொழிவிசு வாவசு வுலோமிசை
திலோத்தமை யுடன்கிருதாசி

சீதமதி வதனபுஞ் சிகையுஞ் சுபானனை
தேடரிய தபசுவர்க்கை
மேனகை யலம்புசை அனங்கதில கையிரதி
மேவுமே லாதபத்தினா
மேலான சுருசி புலோமிசை கிருதஸ்தலை
விண்ணாடர் மெச்சுபரத
ஞானமுறை தெளிமஞ்சு கோஷையிஷு கோஷையு
நடனகுஞ் சிதசுவர்க்கை
நகைகலா நிதிகலா வதிமுதல் விண்மாதர்
நவிலுது நூல்கடாமே.

இது, விண்மாதர் இவரிவர் எனப்பட்டியல் செய்கின்றது.

(இ-ள்) வான நாட்டைச் சேர்ந்த பொதுப்பெண்டிர் உருவசி மனோகரை, இமாவதியுடன், மதனமோகினி, ரம்பை, காந்திமதி, சந்திரகலை, வளர்கின்ற சந்திரரேகை, கிருது, தேன்போன்ற மொழியினையுடைய விசுவாவசு, உலோமிசை, திலோத்தமையுடன், கிருதாசி, குளிர்மதி முகத்தினளான புஞ்சிகையும், சுபானனை, தேடுதற்கரிய தபசுவர்க்கை, மேனகை, அலம்புசை, அனங்கதிலகை, இரதி, (தெளிவில்லை) மேலான சுருசி, புலோமிசை, கிருஸ்தலை, விண்நாட்டினர் போற்றுகின்ற பரத ஞானமுறைதெளிந்த மஞ்சுகோஷை,இஷு கோஷையும், நடனகுஞ்சித சுவர்க்கை, நகை கலாநிதி, கலாவதி முதல் விண்ணுலகமாதர்களை நூல்கள் கூறுகின்றன.

(வி-ரை)அபிதான சிந்தாமணி(பக்84)அரம்பையர்உலகம்என்பதை விளக்கும் போது, 'இவ்வுலகத்திற் பாற்கடலிற் பிறந்த அலம்புசை, மனோகரை, உருப்பசி, உமாவதி, கிருது, திலோத்தமை, சந்திரகலை, சுநகை, மேனகை, கலாவதி, காந்திமதி,கலாநிதி, மோகினி, அரம்பை, சந்திரலேகை, முதலிய 60, 000 தெய்வப் பெண்கள் இருப்பர்' எனக்கூறுவதில் தீபிகையின் பட்டியலில் அடங்குபவர் சிலர் சுட்டப்படுகின்றனர்.

பிரபந்தத் திரட்டு, 'வச்சிராங்கியின் அரம்பையார் பெயர் சிலமொழிவாம்' (494)எனக்கூறி இருபாடலில் நீண்டபட்டியல் அமைப்பதும் (495-96) இங்கு எண்ணத்தக்கது.ஆயின் பெயரொப்புமை அருகியே அமைகின்றது.

47 செய்யபா வினமுதற் குரியநா யகிவகை
சேர்நாய கன்விபரமும்
செப்புமுயர் மாதரஞ் சுவீயையங்கு ரிரையோடு
சிறியயஞ் ஞாதயவன
சிலமுறு ஞாதயவ னைநவோ டைவிச்
சிரப்பித்தையுந் தூயகுணமே
சேருஞ் சமானலச சாமதள வோடையுந்
தேடரிய யுயர்பிரகல்பை
துய்யயிர திப்பிரதி ஆனந்த சம்மோனக
துலங்குதிரை யினிலாறாம்
சொல்லுதீ ராச்சேட்டை ஆறுபர கீயையின்
றோன்றுகன் னிகைபரோடை
தோராத [1]குப்தையில் மூன்றுவாச் சாதுரியை
துவயமிலட் சிதையுடன்
துக்குலடை யுடனனுச கன்னிகை சம்போக
துக்கிதையி னொருமூன்றதாம்
மையாரும் விழிமான வதிமுத லவத்தையால்
மருவுவகை பனனிரண்டாம்
மன்னுதே சாந்திரஞ் செல்கணவன் வருமளவு
மாழ்ஃபுரோ ஷிதைபத்திரிகை
மறுமங்கை யைச்சேர்ந்து வருகணவ னங்கித
மனத்தோர்ந் திடுங்கண்டிதை
மையலொடு வருகணவ னைத்துரத் தியபின்
மயங்குமவள் கலகாந்தரி
மெய்யுரைசெய் கணவனை சங்கேத முற்றதல
மீதுகா ணாதுருகுவாள்
விப்பிரலப் தையுமாகு முன்சொனீ குஞ்சத்தின்
மேவுநா யகன்வரவிலா
வெம்மையுற் றவளூர்க்கை சுரதசா மக்கிரியை
வேண்டிவைத் துக்கணவனை
மேவுதற் கேவரவு பார்த்திருக் கின்றவள்
விளம்புவா சகசச்சீயே.

48. கொண்டகண வன்தனக் கேவலாய்க் கொண்டிடுங்
கோதைசுவா தீனபதிகை
குடிலவிழி யாலுமுயர் வேடத்தி னாலுங்

---

1 குப்பை

குறித்தவா டவர்களுயிரைக்
கொள்ளைகொண் டிடுவனிதை சாமானியை
யிறுதியாய்க்
கூறுமொவ் வொன்றுஐந்தாம்
குறித்தகம னத்தைத் தடுத்துழுது மோகித்த
கோதைபுரோ ஷிதபதிகையின்
விண்டாடு மைந்துவகை இதகா ரணியுடன்
வின்ளகித காரணிவகை
மேவுமிரு மூன்றிலு பாலம் பனமுதல்
மிக்கநா யகியைழுதலாம்
விள்ளுநா லாயிரத் தறுநூற்றி யெட்டென
விளம்புமே நாயகன்வகை
வேதமுறை யிற்செய்து மங்கையை மணந்தவன்
மிக்கவனு கூலனாகும்
கெண்டைவிழி யார்ந்தபல மாதரை யணைந்தவன்
கெருவதெக் கணாநாயகன்
கெந்தபுஷ் பாதிபல பணிபணய மீய்ந்துமத
கேளிசெய் வோன்கபடனாம்
கிளிமொழிப் பாவையர்க் கஞ்சிநின் றேகியே
கெஞ்சியணை வோன்றிட்டனாம்
கிருபையன் னியிலிச்சை கூட்டசீ லங்கள்செய்
கெம்பீர னதமனாகும்
தொண்டையங் கனியிதழ்ப் பொதுமாத ரைச்சேர்ந்த
தூர்த்தன்வை சேடிகன்வகை
சொல்வரொரு மானியு மஃதபிக் கியனோ
தோராத பீடமர்த்தன்
துருவிடன் சந்தான சாதுரன் விதூஷகன்
றுகையுமீ ரெட்டதாகத்
தொல்புவியின் மீதுநா யகிநாய கன்வகை
சொல்வர்க ளறிஞோர்களே.

இவை, நாயகி, நாயகன் வகைகளைக் கூறுகின்றன.

(இ-ள்) செவ்வியுடைய பாவினம் (பிரபந்தம் ?) முதலியன வற்றிற்குரிய நாயகி வகையும், அவரைச் சேர்கின்ற நாயகன் செய்தியும்: கூறுகின்ற உயர்வுடைய பெண்டிர்-அழகிய சுவீயை (சிவ்யா), அங்குரிரையோடு (தீரா ?), சிறிய அஞ்ஞாத யௌவனை, சீலம் உறுகின்ற ஞாத

யௌவனை; நவோடை விச்சிரப் பித்தையும் (?), தூய குணம் சேருகின்ற சமானை (சாமான்யா) லசசாமதளவோடையும் (?), தேடற்கரிய உயர்வுடைய பிரகல்பை, தூய்மையான இரதி, பீரதி, ஆனந்த சம்மோனகை; துலங்கு திரையினில் (தீரா ?) ஆறு ஆகும். சொல்லுகின்ற தீரா, சேட்டையில் (ஜேஷ்டா?) ஆறு; பரகீயை என்பதில் தோன்றுவன கன்னிகை (கன்யகா), பரோடை (பரோடா); தோராத குப்தையில் மூன்று. வாசகச் சாதுரியை இரண்டு; இலட்சிதை; அத்துடன் துக்குலடை (?) என்பதுடன், அனுசகன்னிகை என்பன சம்போக துக்கிதையில் அமையும் மூன்று ஆகும். மை பொருந்திய விழியின் மானவதி முதலாக, அவத்தை காரணமாக அணைக்கும் வகை பன்னிரண்டாகும். அயல் நாடு சென்ற கணவன் வரும்வரையும் வருந்துபவள் புரோஷித பத்ருகா; வேறு பெண்ணைக் கூடியபின் வருகின்ற கணவனின் அடையாளங்களை மனத்தில் கொள்பவள் கண்டிதை; காதலுடன் வருகின்ற கணவனை நிராகரித்துப் பின்பு ஏங்கி வருந்துகிறவள் கலகாந்தரிதா; உண்மை மொழிந்த கணவனைக் குறியிடத்துக் காணாது உருகுகின்றவள் விப்ரலப்தை யும் ஆகும்; முன்பு சொன்ன கொடிப்பந்தரில் - குடிலில் பொருந்துகின்ற நாயகன் வராமையால் வெய்துற்றவள் (ஊர்க்கை?). புணர்ச்சிக்குரிய பொருட்களைத் தயாராக வைத்துக் கணவன் அணைவதற்கு வரும் வழியைப் பார்த்திருக்கின்றவள் கூறுகின்ற வாஸகஸஜ்ஜிகா.

கொண்ட கணவன் தன் விருப்பங்களை நிறை வேற்றும்படியாகக் கண்ட பெண் சுவாதீன பதிகை. வஞ்சனை நிறைந்த கண்களாலும், உயர்வான அலங் காரத்தாலும் குறிப்பிட்ட ஆண்களின் மனத்தைக் கவர்ந்த பெண் சாமானியை, இவை முடிவாகக் கூறுகின்ற ஒவ்வொன்றும் ஐந்து ஆகும். தலைவன் செல்லக் குறித்ததைத் தடுத்து, அவனைப் பொருந்தி விரும்பியிருக்கும் பெண்ணான புரோஷிதபதிகையின் கண் அமைகின்றன ஐந்து வகை; இதகாரணி என்பதுடன் அகிதகாரணியின் வகைகள்; பொருந்துகின்ற ஆறான உபாலம்பனம்; இவை முதலாக, உயர்ந்த நாயகியை

நாலாயிரத்து அறுநூற்று எட்டு என முதலில் கூறுக நாயகன் வகையைக் கூறும்: வேத முறையில் செயல்கள் செய்து பெண்ணை மணந்தவன் மிக்க அனுகூலன்; மீன் போன்ற விழியுடைய பல பெண்களை அணைந்தவன் கர்வமுடைய தக்ஷிணன் எனும் நாயகன்; மணமுடைய மலர் முதலிய பல பொருட்களைப் பணயமாகக் கொடுத்துக் காதல்களியாட்டம் செய்பவன் கபடன்; கிளி போன்ற பேச்சினரான பெண்களுக்கு அஞ்சி விலகிப் பின்பு கெஞ்சி அணைகின்றவன் திட்டன் (திருஷ்டன்). கிருபையின்றி இலச்சை, துட்ட சீலங்கள் (?) செய்கின்ற கெம்பீரன் அதமன் ஆகும். தொண்டைக் கனி போன்ற இதழுடைய பொதுப் பெண்களைச் சேர்கின்ற தூர்த்தன். வைசேடிகன் வகை சொல்வர் ஒரு மானியும் அஃது அபிக்கியன் (?). தோராத பீடமர்த்தன், துர்விடன், சந்தான சாதுரன், விதூஷகன்; தொகையும் பதினாறாக, பழமையுடைய உலகில் நாயகன், நாயகி வகைகளை அறிஞர் சொல்வர்.

(வி-ரை) நாடக-நாட்டியத் தலைவன் தலைவியர் பண்பு-செயல் நிலைப் பாகுபாடாக இது அமைகின்றது. ஆயின் முழுமையான விளக்கமும், எண் நிலையும் தெளிவுபட்டில.

மகாபரத சூடாமணி (உ. வே. சா, 1955) 'அஷ்டவித, நாயகிகளை' அபிநயவழி வெளிப்படுத்தலைக் கூறி விளக்கும் சூழலில் (664- 672), வாஸகஸஜ்ஜிகா, விரஹோத் கண்டித, ஸ்வாதீன பர்த்ருகா, கலஹாந்தரிதா, கண்டிதா, விப்ரலப்தா, ப்ரோஷிதபர்த்ருகா, அபிசாரிகா எனும் பெயர் விளக்கங்களைத் தருகின்றது.

சம்போகம், விப்ரலம்பம் எனச் சேர்க்கை, பிரிவு காரணமாக சிருங்காரத்தில் இருவகைகள் காண்கின்றனர். நாயகி நாயக பேதங்களை விரிவாகச் 'சிருங்கார மஞ்ஜரீ' என்ற ஆந்திர தேச நூல் பேசுகின்றது; இந்தத் துறையைப் பற்றிப் பரதர் முதல் க்ஷேத்ரக்ஞர் முடிய பல கவிகளும், ரஸ சாஸ்திரக் காரர்களும், பதம் பாடியவர்களும் எழுதியுள்ளனர்.

தலைவனை மணந்தவள் (ஸ்வீயா), பிறன் மனைவி(பரகீயா), பொதுமாது (சாமான்யா) எனத் தலைவி மூவகைப்படுவாள்.

ஸ்வீயா நாயகி, மேலும் முக்தா (பேதை), மத்யா (நடுத்தரம்), பிரகல்பா அல்லது பிரௌடா (தேர்ச்சியானவள்) என மூவகைப் படுவாள். முக்தா, ஞாதயௌவன, அஞ்ஞாத யௌவன என இருவகைப்படுவாள்.

மத்யா, பிரௌடா வகைகளில், பெண்ணின் மனவுறுதிக் கேற்ப, தீரா, அதீரா, தீராதீரா என மும்மூன்று வகை உண்டு.

மேற்கண்ட இருவகைகளிலும் ஜேஷ்டா, கனிஷ்டா எனவும் இவ்விரண்டு வகை உள. ஒரு தலைவனுக்குரிய இரண்டு நாயகிகளில், நாயகனுடைய அதிக அன்புக்கு உரியவள் ஜேஷ்டா; மற்றவள் கனிஷ்டா.

பரஸ்திரீயான பரகீயாவில் கன்னிகை, பரோடை என இருவகை உள. மணமான பரஸ்திரீயில் (பரோடை), பல பிரிவுகள் இருக்க, முதன்மையானவை மூன்று: ரகஸியமாகத் தன் கள்ளக் காதலை நடத்துபவள் குப்தா; வேறொரு, தோழியின் துணையின்றி தானே சமாளிப்பவள் நிபுணா (சாதுரியை?); வெளிப்படையாகச் செய்பவள் லக்ஷிதா (இலட்சிதை).

எண்வகைத் தலைவியரில் 'கண்டிதை' வகையின் கீழ் 'சம்போக துக்கிதை' அமைகின்றது. இதில் நாயகி, தனக் காகத் தோழியைத் தூதனுப்ப, காதலன் அத் தூது சென்ற வளையே அணைய, அதனால் தலைவிக்கு ஏற்பட்ட துயர நிலை பொருந்துகின்றது.

இதுபோல் தலைவனை எடுத்துக் கொண்டால், பதி, உபபதி, வைசிகன் என முதன்மை நிலையில் மூவர் அமைவர். அநுகூலன், தக்ஷிணன், திருஷ்டன், சடன் (கபடன்) என்பது பிறிதொரு பகுப்பு. குணங்களுக்கேற்ப உத்தமன், மத்யமன், அதமன் எனவும் பிரிக்கலாம். பிடமர்த்தன், விடன், சேடன், விதூஷகன் என்பவர் தலைவனுக்கு உதவுபவராக அமை கின்றனர் (நாட்டியக்கலை-வே.ராகவன், கலைமகள், 1974; பரதகலைச் சித்திரம்-டி.கே.ராஜலட்சுமி, டி.ஆர்.அருணாசலம் பழனியப்பா, 1964).

நாடகவியலில் வி.கோ. சூரியநாராயண சாஸ்திரியார் பீட மர்த்தனை இவ்வாறு விளக்குகின்றார்:

இராமற் குற்ற சுக்கிரீ வன்போற்
றலைவனிற் சிறிது தாழ்ந்ததன் மையனாய்த்
தலைவனைச் சார்ந்த வினைபல வற்றினும்
வருவோன் பீட மர்த்த னென்ப (93)

நாயகர்களைப் பற்றிக் கூறியபின் தீபிகைப்பாடல் முடிவில் 'ஈரெட்டு' எனக் கூறப்படும் தொகை தெளிவுபடவில்லை.

'மானவதி முதல் அவத்தையால் மருவு வகை பன்னிரண்' டெனத் தீபிகை தருவது விளக்கம் பெற்றில்து. காதலனால் ஏமாற்றப்பட்ட விப்ரலப்தா, காதலனின் தவறான நடத்தையால் கோபம் கொண்ட கண்டிதா என்பவற்றில், "மானவதீ", தீரா முதலாக பல விதமாகத் தன் கோபத்தைக் காட்டும் நாயிகா பேதங்கள் ஏற்படும் என்ற கருத்து (பக்79, நாட்டியக்கலை) இதனை ஓரளவு விளங்கிக் கொள்ள உதவுகின்றது.

போஜரின் 'சிருங்கார பிரகாச' தலைவியரில்பலவேறுவிதமான பகுப்புத் தருகின்றது.* முதன்மையான நான்கு வகை நாயகிகள் ஸ்வகீயா, பரகீயா, புனர்பூ, சாமான்யா. இவற்றுள் முதலிரண்டும் மீண்டும் கீழ்க்கண்ட விதமாகப் பிரிக்கப் படுகின்றன- உத்தம, மத்யமா, கனிஷ்டா; ஊதா, அனூதா; தீரா அதீரா; முக்தா, மத்யமா, பிரகல்பா. புனர்பூ என்பதில் அக்ஷதா, க்ஷதா, யாதாயாத, யாயாவரா எனும் வகைகள் வரும். சாமான்யாவில் இருபெரும்பிரிவு உண்டு. முதற் பிரிவில், ஊதா, அனூதா, ஸ்வயம்வரா என்பன வகைகள். இரண்டாம் பிரிவில் ஸ்வைரிணீ, வேசியா என்பன வகைகள். இறுதியாக அமையும் இவ் வேசியாவில், கணிகா, விலாசினீ, ரூபாஜீவா என மீண்டும் மூவகை உள. இப்படிப் பல.

நாட்டியத்திற்காகப் பாடப்படும் அகப்பொருட் பாடலான பதங்களில் இவை வருதல் பற்றித் தீபிகை ஆசிரியர் இத்தகு செய்திகளையும் இணைக்க விரும்பினர் எனலாம். அதோடு, தொடர்ந்து இசை பற்றியும் மொழிவதில், இலக்கணம் 'இயல்' என்பதில் நின்று விடாது முத்தமிழையும் இணைத்துத்தரலை விரும்பினர் எனலாம்.

49. தாளமோ சச்சர்ப் புடஞ்சா சர்ப்புடஞ்
சட்பிதா புத்தரீகம்
சம்பத்து வேட்டமொடு முற்கடித மைந்துமாஞ்

*Bhoja's S'rngāra Prakās'a— V. Ragavan, 1978, P 32

சப்தத்தா ளத்தின்வகையோ

கேள்துருவ தாளமுடன் மட்டிய [1]முருபகங்
கெம்பீர சம்பைதாளம்
கெணித்திடுந் திரிபுடை தாள மடைதாளங்
கியாதியா மேகதாளம்
மீளுமொன் பான்வகைத் தாளமோ நிவிர்தாள
மிக்கான அருமதாளம்
விடதாள மரிதாளஞ் சிங்கார செயதாள
விள்ளரிய சித்திரதாளம்
கோளறுஞ் சமதுருவ படிமதா ளத்தின்வகை
கொண்டிசைகள் மாத்திரைகளும்
குறையாம லுப்ராம லேயைஞ் ஞானமாய்க்
கூறுவார்கள் பாகவதரே.

இது, தாளம் பற்றிய பல்வகைகளைக் கூறுகின்றது.

(இ-ள்) தாளம் என்பதுவோ, சச்சற்புடம், சாசற்புடம், சட்பிதா புத்திரிகம், சம்பத்து வேட்டம் என்பவற்றுடன் உற்கடிதம் எனும் ஐந்தும் ஆகும். ஏழு தாளங்களின் வகையோ, துருவதாளமுடன், மட்டியம், உருபகம், கெம்பீரமான சம்பைதாளம், கணித்திடுகின்ற திரிபுடைதாளம், அடைத்தாளம், போற்றுதற்குரிய ஏகதாளம் என்பன. மீள்கின்ற ஒன்பதுவகைத் தாளங்களோ, நிவிர்த தாளம், மிக்கதான அருமதாளம், விடதாளம், அரிதாளம், சிங்காரமான செயதாளம், கூறுதற்கரிய சித்திரதாளம், குற்றம் நீங்கிய சமதாளம், துருவதாளம், படிமதாளம் என்பன. இவற்றைக் கொண்டு, இசைகளும், மாத்திரைகளும் குறையாமலும் கூடமாலும், இலயம் பற்றிய அறிவோடு பாகவதர்கள் கூறுவர்.

வி-ரை) கருப்பொருளில் ஒன்றாக அமைகின்ற 'பண்'ணின் விரிவு கூறல் என்னும் நிலையில் இசைத் தொடர்பான செய்திகள், இங்குத் தொடர்ந்து அமைக்கப்படுவதாகக் கருதலாம். அன்றியும் பின்பு(54) யாப்புவகை- இலக்கிய வகைக்கு ஏற்ற இராகம் கூறுவதால், முன்பு தாள- இசைச்செய்திகள் சுட்டப்படுவதாக நினைக்கலாம்.

---

1 முருலகங்

தாளப் பகுப்பில் 5, 7, 9 என மூவகை அமைதலை இது உணர்த்துகின்றது.

'தாளவகையோத்து' எனும் இழந்து போன நூல்பற்றிச் சிலப்பதிகார அடியார்க்கு நல்லார் உரையால் (3.26 உரை)தெரிய முடிகின்றது. தாளசமுத்திரம் (தஞ்சை சரசுவதி மகால்,1955), எனும் நூலும் இப் பொருள்பற்றி இயல்கின்றது.

50. சங்கீத முறைமைகேள் மந்திர மத்திமந்
தாரமூன் றென்னுமிசையின்
தருமந்தி ரம்விடா துச்சரித் திடலுமாஞ்
சமனிசை மத்திமந்தான்
தாரம்வல் லிசையெனச் சொல்வரே ழிசைகுரல்
சாற்றுதுத் தங்கைக்கிளை
தளராத வுழையிளி விளரிதா ரமேழ
தாகுமிடற் றாற்குரல்
மங்காத விசைமயிலை சுவைபய சுவாச
மௌவல்விசு வாமித்திரன்
மகிபனா விற்றுத்த மோசையிட பஞ்சுவை
மதுவாச முல்லையாகும்
மன்னவன் சமதக்கினி யண்ணமெழு கைக்கிளை
மறியோசை சுவைகிழானாம்
வாசனை கடம்பதின் மன்னவன் சந்திரன்
வன்சிரத் துதயமுழையாம்
சிங்கார விசைகொக்கு சுவைகிருதம் வாசனை
சேரும்வஞ் [1]சியதிபனோ
சீர்பரிதி நெற்றியி லுதிக்குமிளி யிசைகுயிற்
றேறுசுவை யேலம்நாற்றம்
செறிநெய்த லதிபனோ கவுதம னெஞ்சிற்
செனித்திடும் விளரிவிசையின்
செல்குதிரை கதலிசுவை வாசம்பொன் னாவரை
சீர்காசிப னாசியின்
பங்கான தாரமிசை யானைசுவை மாதுளம்
பழம்புன்னை மலர்வாசனை
பதியீச னன்றியுந் தாரத்தி லெழுமுறை

---

* 1 சியதிபனோ

பகருழையி னுட்குரலுமாம்
பகர்குரல் மீதினி லிளிதுத்த மதிலுற்
பவம்[2] விள்ளரு விளரியிடமும்
பத்திகைக் கிளைபிறப் பாமிவைக ளெழுசுரம்
பாண்வீணை யெழுநரம்பே.

இது, சங்கீத முறைமை ஏழிசைச் செய்திகளைக் கூறுகின்றது.

(இ-ள்) சங்கீத முறைமை, மந்திரம், மத்திமம், தாரம் என்ற மூன்று இசையில், தருகின்ற மந்திரம் என்பது விடாது உச்சரித்திடலுமாம், சமன் இசை மத்திமம் தான், தாரம் வல்லிசை என்று சொல்வர்; ஏழிசை என்பன குரல், சாற்றுகின்ற துத்தம், கைக்கிளை, தளராத உழை, இளி, விளரி, தாரம் என்ற ஏழதாகும். மிடற்றால் குரல் பிறக்கும், அதன் மங்காத இசைக்கு உவமை மயில், சுவை பால், மணம் மௌவல், விசுவாமித்திரன் இவ்இசைக்கு அரசன்; நாவின்கண் துத்தம் பிறக்கும், ஓசை இடபம், சுவை தேன், வாசனை முல்லையாகும், அரசன் சமதக்கினி; அண்ணத்தில் எழுகின்ற கைக்கிளையின் ஓசை ஆடு, சுவை தயிர், வாசனை கடம்பு, அதின் மன்னவன் சந்திரன்; வன்மையான தலையில் உதிப்பது உழையாகும். அழகிய இசைகொக்கு, சுவை நெய், வாசனை சேர்கின்ற வஞ்சி, மன்னன் சீருடைய கதிரவன்; நெற்றியில் தோன்றும் இளிக்கு இசைகுயில், தேறுகின்ற சுவைஏலம், நறுமணம் செறிந்த நெய்தல்; அரசனோ கவுதமன், நெஞ்சில் பிறந்திடும் விளரி, விரைவாகக் செல்லும் குதிரை அதன் ஓசைக்கு உவமை, வாழைக்கனிச்சுவை, பொன்னாவரையின் மணம், சீருடைய காசிபன் மன்னன்; மூக்கின் பங்கானது தாரம், யானை ஓசை யொப்பு, சுவை மாதுளம்பழம், புன்னைமலர் வாசனை, தலைவன் ஈசன். அன்றியும் (இசைபிறக்கும் வகை கூறின்) தாரத்தில் உழை எழும், பகரும் உழையினுள் குரலு மாகும், பகரும் குரல் மீதில் இளி; அவ்இளியின் மீதில் துத்தம் உற்பவிக்கின்றது, அதில் விளரி, விளரியிடத்தும் முறையாகக்கைக்கிளை பிறக்கின்றது. இவைகள்ஏழுசுரம்

---

* 2 விள்ளரி.

எனவும் பண்ணுடைய வீணையின் ஏழுநரம்பு எனவும் கூறப்படும்.

(வி-ரை)சிலப்பதிகாரம் போன்ற இலக்கியமும்,அவற்று உரையும் இசை பற்றிய பண்டைச் சிந்தனைகளைக் காட்டுகின்றன.ஏழு நரம்புப் பெயருடன் குரவையாடும் மகளிர் அமைந்ததை ஆய்ச் சியர் குரவை தருகின்றது. அதன்உரை, 'இவற்றுள், தாரத்து உழைபிறக்கும்; உழையிற்குரல்பிறக்கும்; குரலுள் இளி பிறக்கும்; இளியுள் துத்தம் பிறக்கும்; துத்தத்துள்விளரிபிறக்கும்; விளரியுட் கைக்கிளை பிறக்குமெனக்கொள்க' எனஅடியார்க்கு நல்லார் கருத்தைத் தருகின்றது.

சங்கீத ரத்னாகரம் என்ற வடமொழி நூலைப் பெரும்பாலும் பின்பற்றி எழுதப்பட்டதாகக் கருதப்படும் 'சங்கீதாதி ராகமேள லட்சணம்' என்ற மகாபரத சூடாமணியின் நான்காவது அதிகாரம், சில ஒத்தசெய்திகளைத் தருகின்றது.மந்தரம்,மத்யம் தாரம் என்பன (பக்22) மூலநூல் செய்தியாகவும் அடிக்குறிப்பில் தரப்படுகின்றன(பக் 5).

இம்மகாபரத சூடாமணிப் பகுதி, ஏழிசைக்கும் உரிய பல பண்புப் பேறுகள் தருவதில்(பக் 6-18) ஒரு சில மட்டுமே தீபிகை யில் அமைகின்றன.வம்சம், ஜாதி,நிறம்........போன்ற பல கூறுகள் தரப்படுகின்றன(பட்டியல் பார்க்க). அத்துடன், சப்தசுரங்கள் பிறக்கும்போது பார்த்தவர்கள், அவற்றிற்குரிய தீவு,சந்தஸ், வாரம்,நட்சத்திரம், லக்னம்,முகம் முதலிய உறுப்பு,வயது,பலன், எழுத்து, இசைஸ்தானங்கள்,இசைபற்றும் இடம் போன்ற மிகப் பல அங்கமைவது எண்ணத்தக்கது.

**பட்டியல் ,**

## ஏழிசை உரிமைகள்

| | | சட்சம் | ரிஷபம் | காந்தாரம் | மத்திமம் | பஞ்சமம் | தைவதம் | நிஷாதம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | வம்சம் | தேவர் | ரிஷிகள் | தேவர் | தேவர் | பிதுரர் | ரிஷிகள் | இராக்ஷதர் |
| 2 | சாதி | பிராமணன் | க்ஷத்திரியன் | வைசியன் | பிராமணன் | பிராமணன் | க்ஷத்திரியன் | வைசியன் |
| 3 | நிறம் | சிவந்த தாமரை | பச்சை | பொன் | வெண்மை | கறுப்பு | ஊதா | பஞ்ச வர்ணம் |
| 4 | தேவதை | அக்கினி | பிரமன் | சரஸ்வதி | உருத்திரன் | விஷ்ணு | கணபதி | சூரியன் |
| 5 | உணவு | தயிர்ச் சாதம் | பாயசம் | பலகாரம் | சித்திரச் சாதம் | மா | சுத்தான் னம் | காப்பரிசி |
| 6 | வஸ்திரம் | வெள்ளை | பீதாம் பரம் | சிவப்புத் துகில் | நீலம் | சிவப்புத் துகில் | சித்திரம் | ஊதா |
| 7 | கந்த லேபனம் | குங்குமம் | அகரு | கஸ்தூரி | பச்சைக் கருப்பூரம் | கோரோ சனம் | சந்தனம் | கதம்பப் பொடி |
| 8 | மலர் | பிச்சி | சண்பகம் | புன்னை | மல்லிகை | தாழம்பூ | அலரி | தாமரை |
| 9 | ஆபரணம் | முத்து | நீலம் | வைரம் | வைடூர்யம் | மரகதம் | கோமே தகம் | புஷ்ப ராகம் |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 10 | ஆயுதம் | கத்தி | குந்தம் | தண்டாயுதம் | சக்கரம் | பிண்டி | நாராசம் | அங்குசம் |
| 11 | வாகனம் | அன்னம் | சிங்கம் | கண்ட பேரண்டம் | மான் | சாளுவம் | கிளி | நாகண வாய்ப்புள் |
| 12 | வாச விருக்ஷம் | மா | பேரீந்து | கதலி | நாவல் | மாதுளை | திராக்ஷை | புன்னை |
| 13 | பெண் | கந்தருவர் | கின்னரர் | இயக்கர் | கிம்புருடர் | நாகர் | தெய்வம் | அரக்கர் |
| 14 | கோத்திர ரிஷி | அக்கினி | வேத புருஷன் | சந்திரன் | கண்ணன் | ஈசன் | நாரதன் | தும்புரு |
| 15 | இரசம் | வீரம் | அற்புதம் | ரௌத்ரம் | பீபசம் | பயாநகம் | ஆசியம் | சிருங் காரம் |
| 16 | ஒலி | மயூரம் | ரிஷபம் | மேஷம் | கிரௌஞ்சம் | குயில் | குதிரை | யானை |
| 17 | பக்ஷி | வல்லூறு | ஆந்தை | காகம் | கோழி | வல்லூறு, ஆந்தை | மயில் | வல்லூறு, காகம் |
| 18 | வாசனை | வன மல்லிகை | முல்லை | கடம்பு | வஞ்சி | நெய்தல் | பொன்னா வரை | புன்னை |
| 19 | சுவை | பால் | தேன் | கிழான் | நெய் | ஏலம் | கதலி | மாதுளங்கனி |

51. பயிரவி பூபாள மிந்தோள மலகரி
பல்லதி தேவக்கிரியை
படைமஞ்ச ரீதேசீ யிலலிதை சாவேரி
பங்காள மேகவிருஞ்சி
கயிசிக மாளவி தோடிரா மக்கிரியை
காம்போதி தன்னியாசி
காந்தாரி சாரங்கம் வேளாவ ளிபவுளி
கவுளி குறிஞ்சிநாட்டை
மயிலுறுதே சாட்சரி கூர்ச்சரி ஸ்ரீராகம்
வராளியுங் குண்டக்கிரியை
வசந்தநா ராயணி முப்பத் திரண்டினில்
மருபயிர விராகமோ
அயல்புருட ராகமாம் சாதியோ வந்தணன்
அதின்மனைவி தேவக்கிரியை
ஆருமே மேக விருஞ்சி குறிஞ்சியு
மாகுமீ சன்றெய்வமே.

இது, முப்பத்திரு இராகங்களைப் பட்டியல் செய்து, பயிரவிக்கு பால், சாதி, மனைவி, இறை என்பன கூறுகின்றது.

(இ-ள்) பயிரவி, பூபாளம், இந்தோளம், மலகரி, பல்லதி, தேவக்கிரியை, படைமஞ்சரீ, தேசீ, இலலிதை, சாவேரி, பங்காளம், மேகவிருஞ்சி, கயிசிகம், மாளவி, தோடி, ராமக்கிரியை, காம்போதி, தன்னியாசி, காந்தாரி, சாரங்கம், வேளாவளி, பவுளி, கவுளி, குறிஞ்சி, நாட்டை, மயிலுறுகின்ற தேசாட்சரி, கூர்ச்சரி, ஸ்ரீராகம். வராளி, குண்டக்கிரியை, வசந்தம், நாராயணி எனும் இராகம் முப்பத்திரண்டினில், மணமுடைய பயிரவி ராகமோ புருடராகமாம். அதன் சாதியோ அந்தணன். அதின் மனைவிகள் தேவக்கிரியை, நிறையும் மேகவிருஞ்சி, குறிஞ்சியும் ஆகும். ஈசன் அதன் கடவுளாம்.

(வி-ரை) 32 இராகம் எனக் கூறுவது பொதுக் கருத்தாகத் தோன்றுகின்றது. பரத சாஸ்திரம் இப்பட்டியலைத் தருகின்றது. (பார்க்க. தமிழ் லெக்சிகன், தொகுதி 1, பக் 317).

புருடராகங்கள் எட்டு, அவற்றிற்குரிய பெண் ராகங்கள் இருபத்து நான்கு என்பனவற்றைத் தீபிகை இங்கு முதலாகத் தொடர்ந்து வரும் சில பாடலில் தருகின்றது. இப் புருட ராகங்

களுக்கு மனைவி தவிர சாதி, இறை என்பனவற்றையும் தொடர்ந்து கூறுகின்றது (-52). ஆயின், மகாபரத சூடாமணியின் பகுதிகள் (105-139), புருஷ ராகம், பெண்ராகம், தூதிராகம், புத்திர ராகம் என்பனவற்றைக் கூறுவதுடன், புருஷராகத்திற்கு வேதம், தீவு, ஜாதி, வம்சம், கோத்திர ரிஷி, தேகம் முதலிய உறுப்புகள், நிறம், வஸ்திரம், ஆபரணம், கந்தம், புஷ்பம், ஆகாரம், வாகனம், ரஸம், கிழமை, நஷத்திரம், லக்னம், விருக்ஷம், அதிதேவர், ஆயுதம் ஆகியனவற்றையும் தருவது புதுமையாகும்.

52. விள்ளரிய பூபாள மோபுருட ராகமாம்
வேதியன் சாதிமனைவி
வேளவளி பவுளி மலகரி தெய்வமோ
வேதனுக் கையனாகும்
மிக்கஸ்ரீ ராகமோ புருடரா கத்துறும்
விள்ளரச சாதிமனைவி
விள்ளுமிந் தோளமும் பல்லதி சாவேரி
வேதன்மனை தெய்வமாம்
தெள்ளுபுகழ் படமஞ் சரிபுருட ராகமாஞ்
செப்பரச சாதிமனைவி
தேசியில விதைதோடி தெய்வ மிலக்குமி
சீருறும் வசந்தராகம்
சேருமால் புருடரா கம்சாதி வணிகனாஞ்
சேர்மனைவி ராமக்கிரியை
சீருறுங் கைசிகை யுடன்சொல் வராளியாந்
தெய்வமோ பானுவாகும்
தள்ளரிய மாளவி புருடராகஞ் செட்டி
தாரமோ குண்டக்கிரியை
சாற்றுகூர்ச் சரியுட னாராயணி நாரதன்
றெய்வமா குமேலே
தகுதிசேர் பங்காள மோபுருட ராகமாஞ்
[1]சாதிசதுர்த் தன்மனைவி
தன்னியாசி கவுளி காம்போதி தெய்வமோ
சாற்று[2]மொற் றைக்கொம்பனே

* 1 சாது 2 மொத்தைக்

கள்ளொழுகு நாட்டையெனும் ராகமோ புருடன்மால்
காலுற்ப வன்மனைவியுங்
காந்தாரி சாரங்க முந்தேசாட் சரியுறுங்
கானம்ப யில்தும்புரு
காத்திடுந் தெய்வமோரெட் டாகுமே புருடரா
கம்எட்டுநா லாறுரா
கம்பாவை நாலெனுஞ் சாதியும் பாகவதர்
கழறுஞ்சங் கீதமுறையே.

இது, பூபாளம் முதலிய இன்னும் சில புருடராகங்களுக்குச் சாதி, மனைவி, இறை போன்றன கூறுகின்றது.

(இ-ள்) கூறுவதற்கு அரிய பூபாளமோ புருடராகமாம். சாதியில் வேதியன். மனைவி வேளாவளி, பவுளி, மலகரி, தெய்வமோ வேதனுக்குத் தந்தையான திருமால். மிகுதியுடைய ஸ்ரீராகமோ புருடராகத்தில் பொருந்தும். கூறுகின்ற அரசசாதி. மனைவி, கூறும் இந்தோளம், பல்லதி, சாவேரி என்பன. பிரம்மாவின் மனைவியான சரஸ்வதி தெய்வம். தெளிந்த புகழையுடைய படமஞ்சரி புருடராகம், கூறுகின்ற அரச சாதி. மனைவியர் தேசி, இலலிதை, தோடி. தெய்வம் இலக்குமி. சீர் பொருந்துகின்ற வசந்த ராகம் உயர்வுடைய புருடராகத்தைச் சேரும். சாதியில் வணிகனாம். மனைவியர் ராமக்கிரியை, சீருறுகின்ற கைசிகையுடன், சொல்கின்ற வராளி யாகும். தெய்வமோ கதிரவன். தள்ளுதற்கு அரிய மாளவியும் புருடராகம். செட்டி சாதி, மனைவியரோ குண்டக்கிரியை, கூறும் கூர்ச்சரியுடன், நாராயணி. நாரதன் தெய்வமாகும். மேற்பட்ட தகுதிகள் சேர்ந்த பங்காளமோ புருடராகமாம். சாதி, நான்காவதான சூத்திரன். மனைவியர் தன்னியாசி, கவுளி, காம்போதி. தெய்வம், கூறுகின்ற ஒரு கொம்புடைய விநாயகன். கள்ளொழுகும் இனிய நாட்டை என்னும் இராகமோ புருடனாம். திருமாலின் காலில் உற்பவித்தவரான சூத்திர சாதி. மனைவியர், காந்தாரி, சாரங்கம், தேசாட்சரி. உறுகின்ற இசை பயில்கின்ற தும்புருவே காப்பாற்றுகின்ற தெய்வம். மொத்தமாக, தெய்வம் எட்டும், புருடராகம் எட்டும், இருபத்திநான்கு இராகமான மனைவியரும், நான்கு என்ற சாதியும், பாகவதர் கூறுகின்ற சங்கீத முறையாம்.

(வி-ரை) இராகங்கட்கு இத்தகு பகுப்பு-உறவு, பண்புச் சார்புகள் தரப்படுவதன் நோக்கம்தெளிவுறவில்லை. தமிழில்பாட்டியல் நூல்கள் பொருத்தம் பற்றிப் பேசும் போதும் பிற சில சூழலிலும் எழுத்துக்கும் பாவுக்கும் சாதி முதலியன தரும் எண்ணமும் இங்கு ஒத்து நோக்கத் தக்கது.

53. ஆனந்த பயிரவி முகாரிகலி யாணியும்
சாவேரி நீலாம்பரி
ஆகிரி சாவந்தி கேதார கௌளமுட
னாரபி சௌராட்டிரந்
தேனுந்து யமுனா கலியாணி கெண்டைபரசு
தேவகாந் தாரிகாபி
செகமோ கனமத்திய மாவதி சுருட்டியுந்
தேவராத் திரமடாணா
கானுந்து யதுகுல காம்போதி பியாகடை
கவுளிபந் துடனுசேனா
கண்டார வம்[1] ராம கலியுடன் மங்கள
கவுசிகை பந்துவராளி
மானுந்து சங்கரா பரணமும் புன்னாக
வராளிநவ ரோசுசோக
வராளியுடன் முப்பத் திரண்டிரா கத்தினுள்
வரும்வகுப் புறுராகமே.

இது, இராகத்துள் வரும் வகுப்புறு இராகங்களின் பட்டியல்.

(இ-ள்) ஆனந்த பயிரவி, முகாரி, கலியாணியும், சாவேரி, நீலாம்பரி, ஆகிரி, சாவந்தி (ஸாமந்த), கேதாரகௌளமுடன், ஆரபி, சௌராட்டிரம், தேன்சொரியும் யமுனா கலியாணி, கெண்டை, பரசு(பருஜு), தேவகாந்தாரி, காபி, செக(ஜகன்) மோகனம், மத்தியமாவதி, சுருட்டியும், தேவராத்திரம்(தேவராஷ்ட்ரம்), அடாணா, செறிவு பொருந்திய ய(எ)துகுல காம்போதி, பியாகடை (பேகடை),கவுளிபந்து (கௌரிபந்து), உசேனா (உசேனீ) கண்டாரவம், ராமகலியுடன், மங்களகவுசிகை, பந்துவராளி, சிறப்புடைய சங்கராபரணமும், புன்னாகவராளி, நவரோசு, சோகவராளியுடன், முப்பத்திரண்டு, இராகத்தின் உள் வரும் வகுப்புறு ராகமாம்.

---

* 1 நாமகலி

(வி-ரை) இவ் இரண்டாவதான பட்டியல் பற்றிய எண்ணம் ஓரளவே தெளிவுறுகின்றது. முப்பத்திரண்டு வகுப்புறு இராகம் எனும் இப் பட்டியல் வரும் பிறிதோரிடம் தெளிவுபட்டால் இதுவும் விளக்கமுறும்.

தேவகாந்தாரி போன்றன 'ஜன்யா ராகா' (P 108 A Dictionary of South Indian Music and Musicians- P. Sambamoorthy, 1952) எனக் குறிக்கப்படுகின்றன. மகாபரத சூடாமணி, மேளகர்த்தா ஜன்யங்கள் என, 'கனகாங்கி' முதல் 'இரசிகப் பிரிய' வரை 72 இராக மேளகர்த்தாக்களில் பிறக்கின்ற மிகப் பல ஜன்யா ராகங்களைத் தருகின்றது. தீபிகையின் இப்பட்டியலில் உள்ளன பெரும்பாலும் அவற்றில் அங்கங்குப் பொருந்துகின்றன. சான்றாக, ஆனந்த பயிரவி என்பது, 20-ஆவதான 'நடபைரவி' மேளத்தில் பிறக்கின்ற பல ஜன்யா ராகங்களுள் ஒன்று ஆகும்.

54. இராகத் துறுந்[1]தொகுதி நாலிடஞ் செய்யுள்குண
மெய்துகா லமவற்றுள்
இடமுறு மிராகமைந் திணையுஞ் செயுள்பற்றிடு
மிராகம் வெள்ளைசங்
கராபரண மாமகவல் தோடிகலி ராகமோ
கருதுபந் துவராளியாம்
கலித்துறை யிராகமோ பயிரவி விருத்தமோ
கலியாணி காம்போதியும்
சராக மத்திய மாவதி [2]பலதோடியோ
தாழிசைசௌ ராட்டிர[3]முலா
சௌராட்டிர நாட்டை [4]தோடைய விராகமாந்
தருமங்க ளத்துறுந்தே
வராத்திர மங்கள கவுசிகை பூபாளம்
வருமேகே தாரகௌளம்
மதலைக் கவிபரணி ராகமே கண்டாரவம்
வழுத்துவர் செயுளுக்கே.

இது, இராகத் தொகுதிகளின் தொகை, வகை, விரி கூறி அவற்றுள் இடம், செய்யுள் இராகங்களையும் தருகின்றது.

(இ-ள்) இராகத்தில் சேர்கின்ற தொகுதி நான்கு. அவை, இடம், செய்யுள், குணம், எய்துகின்றகாலம் என்பன. அவற்றுள் இடம் சார்ந்த இராகம் ஐந்திணை இராகமாம். செய்

* 1 தகுதி 2 பலா 3 முதலா 4 தோடை

யுளைப் பற்றுகின்ற இராகம், வெண்பாவுக்குச் சங்கரா பரணமாம். அகவலுக்குத் தோடி. கலிராகமோ கருது கின்ற பந்துவராளியாகும். கலித்துறையின் இராகமோ பயிரவி, விருத்தத்திற்கோ கலியாணி, காம்போதி, அத்துடன் சிறந்த ராகமான மத்திய மாவதியும் பலவு மாம். தோடி இராகமோ தாழிசைக்கு. உலாசெளராட் டிரம். செளராட்டிரம், நாட்டை தோடையத்தின் இராகமாம். தருகின்ற மங்களத்தில் இணைகின்ற இராகம் தேவராத்திரம், மங்கள கவுசிகை, பூபாளம். கேதார கெளளம் பிள்ளைக்கவிக்கு வரும். பரணியின் ராகம் கண்டாரவம், என்று செய்யுளுக்குக் கூறுவர்.

(வி-ரை) மகாபரத சூடாமணி (236) போன்றன இத்தகு செய்தி களையும் அறிய உதவுகின்றன.

இடம் பற்றிய இராகம் பற்றிய விரி இம் மகாபரத சூடா மணியில் கூறப்படாதபோதும், ஐந்திணை இராகம்எனத் தீபிகை தருவதால், குறிஞ்சி முதலிய நிலப்பாகுபாடுகளில் அமையும் பண் எனும் கருவினைக் கருதலாம். தொல்காப்பியம் கருவகையில் 'யாழ்' எனக் குறிப்பிட்டதில் பண்ணையும் உட்படுத்தலாம். நம்பியகப் பொருள் முதலியன ஒவ்வொரு திணைக்கும் யாழ்-பண் மொழிந்தன. குறிஞ்சி, பஞ்சுரம், சாதாரி, மருதம், செவ்வழி என்பன முறையே குறிஞ்சி, பாலை, முல்லை, மருதம், நெய்தற் குரிய பண்ணாகும்.

செய்யுள் பற்றிய இராகம் பதினொன்றை மகாபரத சூடாமணி தருகின்றது (237-39).

| | | |
|---|---|---|
| வெண்பா, தாழிசை | — | சங்கராபரணம் |
| அகவல் | — | தோடி |
| கலிவிருத்தம் | — | பந்துவராளி |
| கலித்துறை | — | பைரவி |
| தேவாரம் | — | பூபாளம் |
| விருத்தம் | — | காம்போதி, மத்திமாவதி, கல்யாணி |
| தோடயம் | — | சவுராட்டிரம், நாட்டை |
| உலா | — | மங்கள கவுசி |
| பிள்ளைக் கவி | — | கேதார கெளளம் |
| பரணி | — | கண்டாரவம் |

இவை பெரும்பான்மை தீபிகைக் கருத்தோடு ஒத்தும் சிறுபான்மை வேறுபட்டும் அமைகின்றன.

55. ஆனகுண முறு [1]விரக் கத்துள்ளி ராகமோ
ஆகரீ கண்டாரவம்
ஆலல் புன்னாக வராளிநீ லாம்பரிபி
யாக்கடை யிராகத்திலும்
ஈனமுறு துக்க விராகம் வராளியிலு
மியல்பா மகிழ்ச்சிராகம்
இணையிலாக் காம்போதி சாவேரி தன்னியாசி
யிகல்யுத்த ராகம்நாட்டை
கானமிய லுங்கால முற்றிடு மிராகத்துள்
கருதிடச் சொல்வசந்த
காலத் துறும்ராக மோஅசா வேரியுங்
காம்போதி தன்னியாசி
வேனின்மா லையின்ராக மோகன்ன டங்காபி
மிக்ககாம் போதியுடனே
விந்தைபெறு கலியாணி யாம்யாம வேளைதனில்
விள்ளுமா கரிராகமே.

56. வைகறை யிராகமோ யிந்தோளம் ராமகலி
மன்னுபூ பாளநாட்டை
வருமே தசாட்சரி யுச்சயினி ராகமோ
மாலவிலத சாட்சரியேனும்
ஆகரீ பூபாள மிந்தோளம் [1]ராமகலி
ஆனசா ரங்கநீக்கி
ஆகுமே மற்றுள்ள ராகமெக் காலமு
மாற்றுவர்கள் பொதுவாகவே
பாகம்மீ ரிதியெழு சுரமுடன் றாளமும்
பண்புறு லயக்கியானமும்
பகர்நாய கன்றலைவி யுறுமலங் காரமும்
பகரும்வா சனையிரதமும்
தோகையர்கண் மையலுங் கூடல்விளை யாடலுந்
தோன்றவிசை மூன்றுமிலகத்
துரிதமுறு மிருதுவாய் கவிதையொரு ராகமாய்ச்
சொல்லுவர்க ளறிஞோர்களே.

இவை, இராகத்தில் சேர்கின்ற தகுதிகளான குணம், காலம் என்பனவற்றின் விரியும், கவிதை ராகம் பற்றிய சிறப்பெண்ணமும் கூறுகின்றன.

---

* 1 விரா
1 நாமகலி

(இ-ள்) ஆன குணம் பொருந்துகின்ற இரக்கத்திற்கு உள்ள இராகமோ ஆகரீ, கண்டாரவம், ஒலிக்கின்ற புன்னாக வராளி, நீலாம்பரி, பியாக்கடை என்பன. இவ் இராகத்திலும், ஈனமுறுகின்ற துக்கவிராகம், வராளியிலும் வரல் இயல்பாம். மகிழ்ச்சி ராகம் இணையில்லாத காம்போதி, சாவேரி, தன்னியாசி. போர்புரியும் யுத்த ராகம் நாட்டை. இசை பொருந்திய காலம் சார்ந்த இராகத்துள், கருதும்படி கூறுகின்ற வசந்தகாலத்தில் உறும் இராகமோ அசாவேரியும், காம்போதி, தன்னியாசி. வேனிற்கால மாலை நேர இராகமோ கன்னடம், காபி, மிக்க காம்போதியுடன், விந்தை பெறுகின்ற கலியாணி பாம். யாம நேரத்திற்குக் கூறுவது ஆகரி இராகமே.

வைகறை நேரத்தின் இராகம் இந்தோளம், இராமகலி, மன்னுகின்ற பூபாளம், நாட்டை, வருகின்ற தசாட்சரி, உச்சை நேர இராகம் மாளவஸ்ரீ, தசாட்சரி. எனினும், ஆகரீ, பூபாளம், இந்தோளம், ராமகலி, சாரங்கம் என்பனவற்றை நீக்கிப் பிறிதான ராகம் எக்காலமும் கூறுவர், பொதுவாக. பாகம், ரீதி, எழுசுரம் என்பனவற்றுடன், தாளமும், பண்பு பொருந்திய இலயம் பற்றிய ஞானமும் (சுருதி ஒப்புமை காணும் அறிவு), நாயகன் - தலைவி, பொருந்துகின்ற பொருளணிகள், கூறும் வாசனை, சுவையும், பெண்களிடமுள்ள மயக்கமும், கூடல், விளையாடல் என்பனவும் தோன்ற, மூவகை இசையும் விளங்க, விரைவும், பொருந்தும் மென்மையுமாக கவிதையை ஒரு இராகமாகச் சொல்வர் அறிஞர்.

(வி-ரை) மகாபரத சூடாமணிப் பகுதி குணம் பற்றிய இராகம் நான்கு எனவும் காலம் பற்றிய இராகம் ஆறு எனவும் தொகுத்து மொழிகின்றது (236). பின் விரிக்கின்றது (240; 241-243). கால இராகங்களில் வசந்தம், வேனில்மாலை, வைகறை, யாமம், உச்சி என ஐம்பொழுதுகட்கு இராக வரையறை குறிக்கப்பட்டு, பிற எல்லா இராகங்களும் பொழுதுவரையறையற்றன எனவும் சுட்டப்படுகின்றது.

உச்சிப்பொழுதின் இராகம் ஸ்ரீராகம் என மகாபரத சூடாமணி குறிப்பிட்ட போதும் அதன் இணையான மாளவஸ்ரீ (மாலவில?) என்பதையே தீபிகை குறிப்பதாகத் தெரிகின்றது.

தீபிகையின் 56-வது பாடலின் பிற்பகுதி கவிதைக்குரிய கூறுகளான பலவற்றை இணைத்து மொழிந்து, முன்மொழிந்த பல செய்திகளையும் சென்று மாட்டெறிந் தொழுகுகின்றது எனலாம்.

பாகம், திராக்ஷா பாகம் முதலியன; ரீதி, வைதருப்பம் போன்றன; சுரம் குரல் துத்தம்... ஆகியன; தாளம் சச்சற்புடம் முதலானவை; தண்டி-சந்திராலோகம் கூறும் அணிகள்; இசை, மத்திமம் முதலிய மூன்று- எனப் பல முன்மொழியப்பட்டன.

வாசனை-இரதம் என்பதில் பின்னது எண்வகைச் சுவைக் குறிப்பாதல் வேண்டும்; முன்னதில் எதைக் குறித்தார் எனப் புலப்பட்டிலது.

'தோகையர் கண் மையலுங் கூடல் விளையாடலுந் தோன்ற' என்பதால் அகப்பொருள் பாடற்பொருளாதல் கருதப் படுகின்றது எனலாம். 'வண்ணம்' எனும் பிரபந்தம்பற்றித் தீபிகை கூறியது இங்கு நினைக்கத்தக்கது.

57. வேதநான் முகமதின் கீழ்முகத் [1]ததிருக்கு
வேதமோர் சாதிவணிகன்
மெய்நிற மையாகுந் தெற்கான னத்தினெசுர்
வேதப்வெண் மையரசனாம்
சாதிமேன் முகமதின் மெய்புட்பரா கத்தின்மெய்ச்
சாமவே தம்வேதியன்
சாற்றுவட முகமதின் உதித்திடு மதர்வணந்
தான்குமுதம் வருணநான்காம்
ஓதிடு முதாத்தமோ வேதிய னனுதாத்த
முயர்மன்ன வன்சுவரிதமோ
ஊருசன் பிரசயும் பாதசன் இவ்வுரு
வுறும்வேத புருடனுக்கு
பாதங்கள் சந்தச்சு கல்பமிரு கைகளாம்
பார்வைசோ திடநிருத்தம்
பலகேள்வி சிட்சைநா சிகைவியா கரணமோ
பகருமுக மாறங்கமே.

இது, வேதத்தின் நான்கு முகம், வேதஸ்வரம் நான்கு, ஆறங்கம் முதலியன கூறுகின்றது.

---

* 1 துதிருக்கு

(இ-ள்) வேதத்திற்கு நான்கு முகங்கள். கிழக்குப் பக்கத்து முகம் இருக்கு வேதம், அழகிய சாதி வணிகன், அதன் உடல் நிறம் கருமையாகும்; தெற்குத் திசையிலுள்ள முகத்தில் எசுர்வேதம், நிறம் வெண்மை, சாதி அரசனாம். மேற்கு முகத்தின் நிறம் புட்பராகத்தின் நிறமாம், அது சாம வேதம், சாதி வேதியன். சாற்றுகின்ற வடமுகத்தில் அதர்வண வேதம் பிறக்கின்றது. நிறம் குமுதம். சாதி நான்காம் வருணமான சூத்திரன். ஓதுகின்ற உதாத்தம் என்பது வேதியன் சாதி. அனுதாத்தம் உயர்வுடைய மன்னர் சாதி. சுவரிதம் என்பதோ வணிகன். பிரசயம் என்பது சூத்திரன். இத்தகைய உருவத்தைப் பெறுகின்ற வேதமாகிய புருடனுக்குரிய பாதங்கள் சந்தசு, கல்பம் இரு கைகளாம், கண்கள் சோதிடம், நிருக்தம் பலவாய காது, சிட்சை என்பது மூக்கு, வியாகரணம் என்பதோ கூறுகின்ற முகமாம். இவையே வேத அங்கங்களான ஆறு.

(வி-ரை) நால்வகை வேதங்களை முகமாக்கி, வேதத்தை மனித உருவப்படுத்தும் பாங்கு தனித்தன்மையுடன் திகழ்கின்றது. நாலு வேதத்திற்கும் சாதி, நிறம் கூறலும் அவ்வாறே. ஆறங்கங்களை உடல் உறுப்பு நிலையில் இணைப்பதும் அந்நிலையதே.

உதாத்தம், அனுதாத்தம், பிரசயம், சுவரிதம் என்பனவற்றிற்குச் சாதிப் பாகுபாடு அமைதலும் நவமாம். இவை, வேதம் படித்தற்குரிய ஏற்ற-இறக்க ஒலி நிலை பற்றிய அமைப்புகளாம் (திருவிளை, தடாதகை 8; தமிழ் லெக்சிகன்).

58. சுருதியொரு நான்குபின் னுபவேத நான்கதின்
சுருதியர்க் காயுள்வேதந்
தூயதனுர் வேதமர சர்க்குவணி கர்க்குறுஞ்
சோராத வர்த்தவேதங்
கருதுகாந் தருவவே தஞ்சதுர்த் தர்க்குறுங்
காக்கரிய மிருதிவகையோ
காத்தியா யனமிருதி சங்கலிகித நிர்ணயங்
கழறுமனு மிருதியுடனோ
அரியகௌ தமமிருதி பாரத் துவாஜமும்
அத்திரியாக் [1]காவற்கியம்

* 1 கௌவற்கியம்

அங்கிரன் வசிட்டனுஞ் சாதாள முந்தக்கம்
அரியமஞ் சம்வர்த்தமும்
திருமருவு றும்விண்டு ஔரித மிருதியுஞ்
சேருமா பஸ்தம்பமும்
செம்பொன் வியாசருமவரவர்கள் பேரினாற்
செப்புபதி னெண்மிருதியே.

இது, உபவேதம் நான்கு, பதினெண் ஸ்மிருதி என்பனவற்றின் பட்டியல்.

(இ-ள்) வேதங்கள் நான்கு, பின்பு உபவேதங்களும் நான்கு. அதில் வேத சாதியர்க்கு ஆயுள்வேதம், தூய தனுர் வேதம் அரசருக்கு. வணிகர்க்கு உறுவது சோராத அர்த்த வேதம். கருதுகின்ற காந்தருவவேதம் நான் காம் சாதியர்க்குச் சேரும். காத்தற்கு அரிய ஸ்மிருதி வகைகள், காத்தியாயன மிருதி, சங்கலிகித நிர்ணயம், கூறும் மனுமிருதியுடன் அரிய கௌதம மிருதி, பாரத்வாஜம், அத்திரி, யாக், ஆவற்கியம், அங்கிரன், வசிட்டன், சாதாளம், தக்கம், அரியமம், சம்வர்த்தம் திருவை மறுவாக உற்ற விஷ்ணு, ஔரித மிருதியும், சேருகின்ற ஆபஸ்தம்பம், செம்பொன் வியாசர், என்று அவரவர் பெயரினால் கூறுகின்றவை பதினெட்டு மிருதிகளாம்.

(வி-ரை) பொருட்டொகை நிகண்டு, மனுமிருதி கிருதயுகத்திற்கு, கௌதமம்- திரேதம், சங்கலித- துவாபரம், பராசரம்-கலி (924-27) எனச் சார்த்தித் தருகின்றது. 'தருமநூல் பதினெட்டு' என்பதில் முழுப்பட்டியல் அமைக்கின்றது.

தருமநூல் பதினெட் டாமவை தாமது
பிரகற் பதியமந் தக்கங் கௌதம
மங்கிரம் யாஞ்ஞவல் லியம்பிர தேசஞ்
சாதா தபம்பரா சரஞ்சம் வர்த்த
முசனஞ் சங்கம் லிகித மத்திரி
விட்டுணு வாபத் தம்ப மாரித
மிவைவை திககரு மங்களையியம்புஞ்
சங்கஞ் சங்க லிதமென வும்படும் (923).

59. ஸ்ரீருத்திரம் பிரகதா [1]ருணியம் முண்டீரஞ்
சிரவணங் காலாக்கினி
செப்புஞ் சுவேதா சுவதரம மிருதபிந்து
தெசோபிந்து கைவல்லியம்
ஆருணி கடம்வல்லி காத்தியா யனம்பிரம
மங்கிசம் பரமாங்கிஷம்
ஆனநா ராயண பாற்கர மாண்டுக
மறியும்வாச் யாயநீயம்
பேருற்ற போதாய னீயமும் மெளண்டிரம்
பிரமபிந்து சவுனகீயம்
பிரம்மபா லமாக வலய நீயம்
பிறங்குவாச் ராயநீயம்
பாருற்ற கிம்புரோ டியம்நலந் தருபக்வ
பஞ்சசிவ சங்கற்பமாம்
பரவுபுகழ் சாங்கியாய நீயமா முலகில்முப்
பத்திரண் டுபனிடதமே.

இது, முப்பத்திரண்டு உபநிடதங்களின் பட்டியல்.

(இ-ள்) ஸ்ரீருத்திரம், பிரகதாருணியம், முண்டீரம், சிரவணம். காலாக்கினி, செப்புகின்ற சுவேதாசுவதரம், அமிருத பிந்து, தெசோபிந்து, கைவல்லியம், ஆருணி, கடம், வல்லி, காத்தியாயனம், பிரமம், அங்கிசம், பரமாங் கிஷம், ஆன நாராயணம், பாற்கரம், மாண்டூகம், அறிகின்ற வாச்யாயநீயம், பேர்பொருந்திய போதாய நீயம், மெளண்டிரம், பிரமபிந்து, சவுனகீயம், பிரம்ம பாலம், ஆகவலயநீயம், பிறங்குகின்ற வாச்ராய நீயம், பார் (பாராகம்?), உற்ற கிம்புரோடியம் நலம் தரு கின்ற பக்வபஞ்சம், சிவசங்கற்பம், பரவுகின்ற புகழு டைய சாங்கியாய நீயம் ஆகும், உலகில் முப்பத்திரண்டு உபநிடதமே.

(வி-ரை) பொருட்டொகை நிகண்டும் உபநிடதப் பட்டியலை அமைக்கின்றது (964).

---

* 1 ருணிய...ண்டீரஞ்

குறிப்பு: கையெழுத்துப் பிரதி, இவ்விடுபாட்டை நிறைக்கும் முயற்சியை, 'ருணிய(ங் க)ண்டீரஞ், எனத் தருவது, பொருந் தவில்லை.

தீபிகை 'காத்தியாயன மிருதி' என முன்பு (58) குறிப்பிட்ட போதும் இங்கும் 'காத்தியாயனம்' உபநிடதமாகத் தரப்படல் சிந்திக்கத் தக்கது.

60. காரண மியோகசஞ் சிந்தியம் ரௌரவம்
கருதுசுப் பிரபேதகம்
காமிகம் பேதமுஞ் சூக்குமஞ் சித்தஞ்ச
கத்திரந்தீப் தம்விசயம்
வீரநிசு வாசம் புரோற்கீத மிலளிதம்
விமலஞ் சுவாயம்புவம்
விம்பமொடு சந்தான சருவோத் தமம்பார
மேச்சுரம் விமலமனலம்
கிரணம் வாதுளம் சிதமுட னஞ்சுமான்
கிளர்சந்திர ஞானமென்னும்
கிளர்த்துமெழு நான்காகுமே யுலகில்வாழ் ஞானமருள்
கிருபைச்சி வாகமம்நான்
பாரின்மண் கல்லுலோ கஞ்செங்கல் மெழுகுதரு
பகர்கண்ட சர்க்கரைசுதை
பதிக்கும்வண் ணந்தந்த மாகுமே பத்துசிற்
பத்தொழிற் குரியதாமே.

இது, சிவாகமம் இருபத்தெட்டின் பட்டியல், சிற்பத் தொழிற்கு உரிய பத்து என்பனவற்றைக் கூறுகின்றது.

(இ-ள்) காரணம், யோகசம், சிந்தியம், ரௌரவம், கருதுகின்ற சுப்பிரபேதகம், காமிகம், பேதமும், சூக்குமம், சித்தம், சகத்திரம், தீப்தம், விசயம், வீரம், நிசுவாசம், புரோற்கீதம், இலளிதம், விமலம், சுவாயம்புவம், விம்பமொடு, சந்தான சருவோத்தமம், பாரமேச் சுரம், விமலம், அனலம், கிரணம், வாதுளம், அசித முடன், அஞ்சுமான், கிளர் சந்திரஞானம் என்று கூறு கின்ற 28 ஆகும். உலகில் வாழ்கின்ற அறிவு அளிக் கின்ற கிருபையுடைய சிவாகமம் தான். உலகில், மண், கல், உலோகம், செங்கல், மெழுகு, மரம், பகரும் கண்ட சர்க்கரை, சுதை, பதிக்கின்ற வண்ணம், தந்தம் என்பன, சிற்பத் தொழிலுக்கு உரிய பத்து ஆகும்.

(வி-ரை) இந்தச் சிவாகமப் பட்டியலில் 'விமலம்' என்பது இரு முறை அமைந்து, 'மகுடம்' என்பது விடப்பட்டது.

பொருட்டொகை நிகண்டு இவ்விரு பட்டியல்களையும் தருகின்றது (954,842).

.61 விச்சுவே சம்விசுவ கருமம்விச் சுவசாரம்
விச்வகா சிபமிந்திரம்
விசாலம்விச் சுவபோதம் வித்தா்ர மனுமான்
விருத்தமொடு வாத்துபோதம்
இச்சைதரு நளம்வத்து வித்தியா பதிநல்ல
விசைபெற்ற மானசாரம்
இயம்புதா வட்டஞ் சிருட்டமுட னரிடிக
மெழிலுற்ற கற்பாரியம்
உச்சிதம தானபா ராசரீய மொடுபானு
வோங்குபுகழ் மகதந்திரம்
உரியகா பிலகால யூபஞ்ச யித்திக
முயர்சவும மாதிசாரம்
வச்சிரம் வெகுச்சுருத நாமசங் கிதைசித்ரம்
வசையற்ற மானபேதம்
வண்மைபெறு [1]சாத்திகமோ டெண்ணான் கெனபுகல்
வளர்வுற்ற சிற்பநூலே.

இது, சிற்ப நூல் முப்பத்திரண்டின் பட்டியல்.

(இ-ள்) விச்சுவேசம், விசுவகருமம், விச்சுவசாரம், விச்சுவகாசிபம், இந்திரம், விசாலம், விச்சுவ போதம், வித்தாரம், அனுமான், விருத்தம் மொடு, வாத்து போதம், இச்சை தருகின்ற நளம், வத்து வித்தியாபதி, நல்ல புகழ் பெற்ற மானசாரம், இயம்புகின்ற தாவட்டம், சிருட்டம்உடன், அரிடிகம், அழகுடைய கற்பாரியம், மிகச் சிறந்த பாராசரீயம் மொடு, பானு, ஓங்கு புகழுடைய மக தந்திரம், உரிய காபிலகாலயூபம், சயித்திகம், உயர்வுடைய சவுமம், ஆதிசாரம், வச்சிரம், வெகுச்சுருதம், நாமசங்கிதை, சித்ரம், குற்றமற்ற மானபேதம், வண்மை பெறுகின்ற சாத்திகம் மொடு முப்பத்திரண்டு என வளர்வுறுகின்ற சிற்ப நூலைக் கூறுக.

(வி-ரை) இதன்கண் முப்பத்தொரு வகைகளே உள. மயம் விடப்பட்டுள்ளது. விசுவகருமம் என்பது பிறவிடத்து விச்சுவ தருமம் என அமைகின்றது.

---

* 1 சாத்திமோ

பொருட்டொகை நிகண்டு இந்தப் பட்டியலையும் (965) தருகின்றது.

62. சிவதீட்சை வகைசமய தீட்சையு நிர்வாண
தீட்சையும் விசேடதீட்சை
சேரும்நய னத்தீட்சை ஔத்தரிய தீட்சையுந்
தேடரிய சாத்ரதீட்சை
தவமானத தீட்சைநிர் பீஜதீட் சைபரிசத்
தீட்சை வாகுதீட்சை
சபிசதீட் சையோக தீட்சையீ ராறுமாம்
சாற்றிடு மாதிசைவம்
நவமுறும நாதியனு சங்கிரியா யோகமு
நாலுபா தச்சைவமும்
நவிலுமத் வாசைவம் சுத்தமந் தரசைவம்
ஞானபே தச்சைவமும்
பவமுறுங் குணசைவ நிர்க்குணச் சைவமும்
பாரமா மூர்த்தசைவம்
பகர்ந்திடு மகாசைவ மென்னுமிப் பாரினிற்
பதினாறு சைவமாமே.

இது, சிவதீட்சையின் பன்னிரு வகைகளும், சைவம் பதினாறும் பற்றிக் கூறுகின்றது.

(இ-ள்) சிவதீட்சை வகைகள், சமய தீட்சையும், நிர்வாண தீட்சையும், விசேட தீட்சையும், சேருகின்ற நயனத் தீட்சை, ஔத்தரிய தீட்சையும், தேடுதற்கு அரிய சாத்ர தீட்சை, மிகுந்த மானததீட்சை, நிர்பீஜ தீட்சை, பரிசத் தீட்சை, வாகு தீட்சை, சபிச தீட்சை, யோக தீட்சை என்ற பன்னிரண்டும் ஆகும். சாற்றிடுகின்ற ஆதிசைவம், புதுமை பொருந்திய அனாதி, அனுசம், கிரியா, யோகமும், நாலுபாதச் சைவமும், நவில்கின்ற அத்துவா சைவம், சுத்தம், அந்தர சைவம், ஞானம், பேத, அபேதச் சைவமும், பவமுறுகின்ற குணசைவம், நிர்க்குணச்சைவமும், பாரமான ஊர்த்த சைவம், பகர்ந்திடு கின்ற மகாசைவம் என்னும் இவ்வுலகில் பதினாறு சைவமாம்.

(வி-ரை) பொருட்டொகை நிகண்டு, சைவம் பதினாறு பற்றிய பட்டியலைத் தருகின்றது (919).

63. மன்னர்செய் சோடச மகாதான வகையினை
வழுத்துதுலை தானமச்சசு
வத்தங் கருங்காலி கூவிளை பலாசெனு
மரத்தாலு மிருநான்முழம்
உன்னதத் [1]தூணட்டு மதினிடையி னாறுமுழ
முத்திரஞ் சேர்த்திசைத்து
உற்றகய மெட்டும் பரிக்கச்செய் மண்டபத்
தூடெண்டு லாத்தேனினும்
அன்னியி லறுதுலாஞ் செம்பிற் றராசுசெய்
தகலமோ மூன்றரைச்சாண்
ஆனவொரு தட்டினர சனையுமறு தட்டிற்பொ
னரசனிடை யாய்நிறுத்த
பொன்னைமறை யோர்கள்சொல் லாகம விதிப்படி
பூசித்த பொன்னினர்த்தம்
பூசுரர்க்குப் பாதி கோயிலுக் கிடுவதாய்ப்
புகலுவர் துலாதானமே.

இது, பதினாறுவகைத் தானங்களுள் துலாதானத்தை விளக்குகின்றது.

(இ-ள்) அரசர் செய்கின்ற பதினாறுவகையான பெரிய தானத்துள் துலைதானம் அச்சாகும்.நெட்டிலிங்கம்,கருங்காலி, கூவிளை, பலாசு எனும் மரங்களால் எட்டு முழம் உயரமான தூண்கள்நட்டு, அதன் இடையில் ஆறுமுழ உத்திரம் சேர்த்துக்கட்டி, எட்டுத் திக்கு யானைகளும் நிற்கும்படிச் செய்த மண்டபத்தில், எட்டு அல்லது ஆறு துலாம் நிறையான செம்பில் தராசு செய்து, அதன் தட்டுகளின் அகலம் மூன்றரைச் சாணாகக் கொண்டு, ஒரு தட்டில் அரசனையும், மற்றொரு தட்டில் அரசனுக்கு எடையாகப் பொன்னையும் நிறுத்து. அப் பொன்னை அந்தணர் கூறும் வேதாகம முறைப்படி, பூசித்த பொன்னையுடையவரான பூசுரருக்கும் பாதி கோவிலுக்கும் கொடுப்பதாய்க் கூறுவது துலாதானம்.

(வி-ரை)தானம் பற்றிய பலவகை எண்ணம் காணப்படுகின்றது. தலைப்படுதானம், இடைப்படுதானம், கடைப்படுதானம் எனக் கொடைநிலையில் மூவகை உள; அன்றியும் துலாபுருடதானம்

---

* 1 தூண்டிடு

முதலாக திலதானம் ஈறாக இருபத்தைந்தென நீண்டபட்டியலும் உண்டு(பக்.124-125, தொகை அகராதி ), இதன்கண்தீபிகை கூறும் துலாபுருடதானம், இரணிய கருப்பதானம், பிரமாண்டதானம், பஞ்சலங்கலதானம், சுவர்ணபூதானம், கற்பக லதா தானம், இரணியசத்த சாகர (ஆழி யெழு)தானம்,இரத்தின தேனுதானம், சுவர்ணகும்ப(மாகட)தானம்,விஷ்ணுவிம்ப(விசுவநேமி?) தானம் எனும் பத்தும் இடம் பெறுகின்றன. இதனால் தானங்களின் எண்ணிக்கை குறித்த பலவகை எண்ண நிலைகள் இருப்பது புலப்படுகின்றது.

அத்துடன், அபிதான சிந்தாமணி(பக் 812), தானங்கள் பல வகைப்படும் எனவும் அவற்றுள் பதினாறு . சிறந்தன எனவும் மொழிந்து முப்பத்தொருவகைகளை விரிக்கின்றது (பக்812-815). அவை இரண்யகர்ப்பம், இரண்யாச்வம், இரண்யாச்வரதம், உபயகோமுகி,கனக கல்ப லதிகா,கனக காமதேனு,கல்பவிருக்ஷம், கர்ப்பாஸம், கிருதபர்வதம், கிருஷ்ணாஜினம், குடதேனு, குட பர்வதம், கோ சகஸ்திரம், சர்க்கராபர்வதம், சப்தசாகரம், சுவர்ணபர்வதம், சையம்,தரா, தான்ய பர்வதம், திக்பாலகர், திலபர்வதம், துலாபுருஷன், பஞ்சலாங்கலம், பிரமாண்டம்,மகா பூதகடம், ரத்னதேனு, ரத்னபர்வதம், ரௌப்பியபர்வதம், லவணபர்வதம், விச்வசக்கரம்,ஹேமஹஸ்திரம் என்பன.இன்னும் தீபம்,குடை, மராடி(மரஅடி/பாதுகை)போன்ற பலஅமையலாம்.

துலா தானம் பற்றிய எண்ணம் இளங்கோவடிகளின் சிலம்பு வாயிலாகப் புலப்படுகின்றது (27.173-176). சேரமன்னன், மாடலனுக்குத் தன்னிறையளவு பொன் அளித்தல் இதில் அமை கின்றது.

64. [1]சாற்றிய துலைப்படியின் மண்டப மமைத்து
சகத்திரக் கழஞ்சிபொன்னாற்
[2]றகுகுழிசில் செய்தஞ்சு நூறுறு கழஞ்சியிடை
தன்னின்மேன் மூடிபொருகிப்
பார்த்திபன் றனையதி லிருத்தி யொருசாமம்
படிந்தபி னுதித்ததாகப்
பண்புறுஞ் சாதகக் கருமங்கள் செய்துமுப்
பதுகழஞ் சிப்பொன்மாதை
[3]ஏற்றமுற மன்றல்செய் தேதுலைப் படியீய்த
லிரணிய [4]கருப்பதானம்

* 1 சாத்திய 2 றகுருமிசில் 3 ஏத்தமுற 4 கருப்பதாறாம்

இருபது பலத்தாதி யாயிரம் பலம்வரையி
னேமத்தின் விரலிருத்தில்
தேற்றமுள நூறுவிர லுயரத்தி னண்டமாய்ச்
செய்ததைப் பூசைபண்ணி
சீர்துலைப் படியீய்தல் பிரமாண்ட தானமாய்ச்
செப்புவர்கள் பெரியோர்களே.

இது,இரணிய கருப்பதானம், பிரமாண்டதானம் என்பனவற்றை விளக்குகின்றது.

(இ-ள்) மேற்கூறியபடி துலாமண்டபம் அமைத்து, ஆயிரம் கழஞ்சு பொன்னால் தக்க கலசம் செய்து, அதற்கு ஐந்நூறு கழஞ்சு எடை பொன்னால் மேல்மூடி செய்து பொருத்தி, அரசனை அதின் உள்ளே இருத்தி, அவ்வாறு ஒருயாம நேரம் இருந்தபின்பு, புதியதாகப் பிறந்த தாகக் கொண்டு, பண்புடைய சாதகம் எழுதுதல் முதலிய கருமங்கள் செய்து, பின்பு முப்பது கழஞ்சுப் பொன்னால் செய்த பெண்பாவையை மணம்புரிவித்து, துலாபாரத்தில் கொடுத்தது போல அவற்றைக் கொடையளிப்பது இரணிய கருப்ப தானமாம். இருபது பலம் எடை முதலாக ஆயிரம் பலம் வரையிலான பொன்னினால் அளவாக அமைத்து(?) தேற்றமான நூறுவிரல் உயரமுடைய பொன் அண்டமாகச் செய்ததை பூசை நடத்தியபின் சீருடைய துலைதானம் போலவே கொடுப்பதைப் பிரமாண்ட தானம் எனப் பெரியோர் கள் கூறுவர்.

(வி-ரை) சிறப்புப் பெயரகராதி (பக்.466) பிரமாண்ட தானத்தை, 'பொன்னினால் உலகம் ஒன்று செய்வித்து எட்டுத் திக்கு யானை கள் செய்து அவ்வுலகத்தைத் தாங்கச் செய்து நான்முகனைப் போல் உருவம் ஒன்று செய்து நடுவில் அமைத்து அந்தணரை முறைப்படி பூசித்து அவர்களுக்கு வழங்குவது' என விரிக்கின்றது. இதை நோக்க தீபிகை எண்ணம் வேறுபடுகின்றது.

தமிழ் மன்னர் இரணியகருப்பம் மேற்கொண்டது வரலாற் றுச் செய்தியாகும் (பார்க்க, தமிழ் லெக்சிகன், தொகுதி 1.பக்-310).

65. இருபது பலத்தாதி யோர்பல [1]மிறாகென
வேமநா லானைபூண்ட
இரதஞ்செய் தேவிதிப் படிபூசை செய்தபி
னீய்தல்கரி யிரததானம்
தருசந் தனந்தேக் கினாற்கலப் பைகளுடன்
றசவே றலங்கரித்துத்
தக்கணை யுடன்புரி வதேபஞ்ச [2]லாங்கல
தானமா குமொருதுலாம்
வரையினே மத்தகடு சதுரத் தின்மேரு
மற்றதீ வும்பொறித்து
மாலைந்து கோவும ருள்சொர்ண பூதானம்
வழுத்தாழி யெழுதானமோ
உரையேழ் பலத்தாதி யாயிரம் பலம்வரையி
னுயர்பொனேழ் குழியாழமோ
ஒட்டையா மகலமோர் முழமதைப் பூசைசெய்
துடன்விதிப் படியீய்வதே.

இது, கரியிரத தானம், பஞ்சலாங்கல தானம், சொர்ண பூதானம், ஆழியெழுதானம் என்பனவற்றை விளக்குகின்றது.

(இ-ள்) இருபது பலம் முதலாக ஒரு பலம் ஈறாக, பொன்னினால், நான்கு யானைகள் பூண்ட தேர் செய்தே விதிப்படி பூசை செய்த பின்பு கொடுத்தல் கரியிரத தானம். தருகின்ற சந்தனம் அல்லது தேக்கு மரத்தினாலான கலப்பைகளுடன் பத்துக் காளைகளை அலங்கரித்துக் காணிக்கையுடன் தானம் புரிவது பஞ்சலாங்கலதானமாகும். ஒரு துலாம் வரையில் பொன் தகடு சதுரமாக அமைத்து அதன் மீது மேரு மலையும், பிற தீவுகளும் பொறித்து பெருமையுடைய ஐந்து மாடுகளையும் அருளுதல் சொர்ணபூ தானம். வாழ்த்தப்படத்தக்க ஆழியெழு தானம் என்பது, கூறுகின்ற ஏழு பலம் முதல் ஆயிரம் பலம் வரையில் உயர்ந்த பொன்னால் ஏழுகுழிகள், ஆழம் பத்து விரற் கடையாகவும், அகலம் ஓர் முழமாகவும் செய்து, அதைப் பூசைகள் செய்து, உரிய விதிப்படி ஈவதாம்.

---

* 1 மிறானென 2 லாங்கூல

(வி–ரை) கூர்மபுராணம் 'பஞ்சலாங்கல தானம்' (தானமுறை 64) பற்றிக் கூறுவதைத் தமிழ் லெக்சிகன் வழி அறிய முடிகிறது: ஐந்து ஏர்களை நிலத்துடன் அந்தணர்க்கு உதவும் தானம் (தொகுதி 4, பக் 2411) என்ற இதன் விளக்கம் தீபிகைக் கருத்தை ஒட்டி அமைகின்றது.

'சிறப்புப் பெயரகராதி' (பக் 693-4) இரணிய பூதானம் எனச் சொர்ண பூதானத்தைச் சுட்டி விளக்குகின்றது: 'ஒரு துலாம் பொன்னினாலாவது அரைத்துலாம் பொன்னினாலாவது சதுரத்தகடு செய்வித்து அதில் ஏழு தீவுகள், ஏழு கடல்கள், ஏழு மலைகள், ஆறுகள், மரங்கள் முதலியன அமைப்பித்து வேள்வி முதலிய சடங்குகள் செய்து பஞ்ச கவ்ய பூசை தகட்டிற்குச் செய்வித்து, அந்தணர்கட்கு அன்னதானஞ் செய்து தகட்டை உத்தமனாகிய அந்தணனுக்கு வழங்குவது இரணிய பூதானம்.'

ஆழியெழுதானம், அபிதான சிந்தாமணியில் சப்த சாகரத் தானம் எனப்படுகின்றது. (பக் 813) : ஐந்து முதற் கொண்டு 1000 பலம் அளவுள்ள பொன்னால் சாண் அளவுள்ள 7 கும்பங்கள் செய்வித்து முதற் கும்பத்தில் உப்பு நிறைத்து அதில் சரஸ்வதியுடன் கூடிய பிரம தேவனையும், இரண்டாவதில் பால் நிறைத்து விஷ்ணு மூர்த்தியினையும், 3-வதில் நெய் நிறைத்துச் சிவ மூர்த்தியையும், 4 வதில் வெல்லம் நிறைத்து சூரியனையும், 5- வதில் தயிர் நிறைத்துச் சந்திரனையும், 6-வதில் சர்க்கரை நிறைத்து லக்ஷ்மியையும், 7- வதில் சுத்தோதகம் நிறைத்துப் பார்வதியார் முதலியவர்களை யெழுந்தருளுவித்து விதிப்படி பூசித்துத் தானாதிகளைச் செய்வது.

66. பலமெழு நான்குமுத லாயிரம் பலம்வரைப்
 பைம்பொற் றகட்டின்மீது
பதினாறு கோணம்லி கித்தபின் மாலைப்
 பதித்தபின் [1]சூழவேச
கலயிதர தேவதை களைலிகித் துப்பின்பு
 கண்ணனைப் பூசைசெய்து
கழறுதெக் கணையுடன் விதிப்படிக் கீய்வதை
 காண்விசுவ நேமிதானம்
சொலுமா யிரம்பலந் தொட்டைந்து பலம்வரைச்
 சொர்ணலதை கனிகாயுடன்
துய்யகின் னரர்செய்து பூசித்து யீய்வதே
 சொல்கற்ப [2]லதைதானமாம்

---

1 குழவேச 2 லகை

திலமுடனுப் பும்பரத் தியதின் மேற்றுலை
செம்பொற் றகட்டினாவும்
சிறுகன்று மெழுதியுறு தெக்கணையு மருடல்ரத்ன
தேனுதா னமுமாகுமே.

இது, விசுவநேமி தானம், கற்பலதை தானம், இரத்ன தேனு தானம் என்பனவற்றை விளக்குகின்றது.

(இ-ள்) இருபத்தெட்டுப் பலம் முதல் ஆயிரம் பலம் வரை எடையுள்ள பைம்பொன் தகட்டின் மேல் பதினாறு கோணம் எழுதிய பின்பு, திருமாலின் உருவைப் பதித்த பின்பு, அதனைச் சூழவே எல்லா, பிற தேவதைகளை வரைந்து பின்பு கண்ணனைப் பூசை செய்து, கூறுகின்ற காணிக்கையுடன் விதிமுறைக்கு ஏற்பக் கொடுப்பதைக் காண்க, விசுவநேமி தானம். சொல்லுகின்ற ஆயிரம் பலம் முதல் ஐந்து பலம் வரைப் பொன்னால் செய்த கொடியைக் கனி, காய்களுடன், தூய்மையான கின்னரர் (பறவை/தேவர்?) செய்து, பூசை புரிந்து கொடுப்பதே, சொல்க,கற்பலதை தானமாம். எள்ளுடன் உப்பும் பரப்பி அதன்மேல் துலை செம்பொன் தகட்டில் பசுவும் சிறு கன்றும் வரைந்து உற்ற காணிக்கையும் அருள்தல் ரத்னதேனு (இரத்தினப் பசு) தானமும் ஆகுமே,

(வி-ரை) விச்வ சக்ர தானம், 'ஆயிரம் முதல் 250பலம் பொன்னால் பதினாறு இலைகளுள்ள விச்வ சக்கரத்தை ஏழு ஆவர்ணத்தோடு கூடியதாகச் செய்வித்துச் சங்குசக்கிர தரனாகிய விஷ்ணுமூர்த்தியை எட்டுத் தேவியருடன் பிம்பத்திற் செய்வித்திருத்தி விஷ்ணு மூர்த்தியின் தசாவதார பதுமைகளை நிருமித்து விதிப்படி பூசித்துத் தானஞ் செய்வதாம்' (பக் 815, அபிதான சிந்தாமணி).

கனக கல்ப லதிகா தானம், 5முதல் 1000 பலமுள்ள பொன்னால் நீர்க் காக்கை அன்னம் முதலிய பக்ஷிகள் வித்தியாதர பிரதிமைகள் முதலியவற்றோடு கூடிய 10 கல்பகக் கொடிகளைச் செய்வித்து விதிப்படி பூசித்துத் தக்க வேதியர்க்குத் தானம் செய்வதாம் (பக் 812, மேற்படி).

ரத்ன தேனு தானம், வச்சிரம், பவளம், வைடூர்யம் கோமேதகம், புஷ்பராகம், மரகதம், மாணிக்கம், சர்க்கரை பெல்லம் முதலியவற்றால் புராணாதிகளில் கூறிய படி ரத்ன பசுசெய்வித்து விதிப்படி பூசித்துத் தானாதிகளைச் செய்வதாம் (பக் 814, மேற்படி).

67. நேரா யிரங்கழஞ் சியினேம கற்பதரு
நிலைபெற நிறுத்தியோர்சாண்
நீளமுறு சாகை தளிர்மலர் கள்கனி
நவரெத்தினத் தாலமைத்து
பாரோர் புகழ்ப்படிக வேதிகை யமைத்ததின்
படிகசிவ லிங்கம்வைத்து
பண்புடன் பூசித்து வந்தணர்க் கீய்தல்கற்
பகவிருக் கத்தானமாம்
சீரான மூன்றுலைப் படிமண்ட பப்பூசை
செய்துபா லுண்டுமூன்று
[1]தினமிருந் தெண்டேனு வுக்கணி படத்தாற்
சிறப்பித்தோ ரிடபத்தையும்
ஆராத னைக்குரிய தூசுபொன் மணியா
லலங்கரித் தந்தணர்க்கே
ஆயிரத் தெண்பசுத் தானங்கொ டுப்பதே
அவனியிற் கோதானமே.

இது, கற்பகவிருக்கத் தானம், கோதானம் என்பனவற்றை விளக்குகின்றது.

(இ-ள்) நேர்ந்த ஆயிரம் கழஞ்சியில் பொன்னால் கற்பக தருவினை நிலைபெறும்படி நிறுத்தி, ஒருசாண் நீளம் பொருந்திய கிளை, தளிர், மலர்கள், கனி என்பன நவரத்தினத்தால் அமைந்து, உலகத்தவர் புகழும் படி பளிங்கினால் பீடம் அமைத்து, அதில் பளிங்கு சிவலிங்கம் வைத்து, பண்புடன் பூசைசெய்து அந்தணருக்குக் கொடுப்பது கற்பகவிருக்கத்தானம். *சீரான மூன்று துலைப்படி மண்டபம் பூசை செய்து (?) பால் உண்டு, மூன்று நாள் இருந்து, எட்டுப் பசுக் களுக்கு அணிகின்ற பட்டாடையால் சிறப்பித்து, ஒரு காளையையும், வழிபடுதற்குரிய ஆடை, பொன், மணி

---

* 1 திருமிருந்

என்பனவற்றால் அழகுபடுத்தி, அந்தணர்க்கு ஆயிரத் தெட்டுப்பசுக்களைக் கொடையாகக் கொடுப்பது உலகில் கோதானமாம்.

**(வி-ரை)*** இப்பகுதி,'சீரான முன் றுலைப் படி மண்டலப் பூசை செய்து' என இருக்கலாம். துலா பாரத்தோடு ஒப்புமையும் பசுவைச் சுற்றி வந்து (மண்டலம்) பூசை செய்தலும் குறிக்கப் பட்டிருக்கலாம். இப்பகுதி இன்னும் தெளிவுபடற்குரியது.

கல்ப விருக்ஷ தானம் 3பலம் முதல் 1000பலம் வரையில் பொன்னால் திருமூர்த்தி பிரதிமைகளுடன் 5 கிளைகளோடு நானாவித பக்ஷிகள் பழங்கள் முதலியவற்றுடன் கற்பகத்தரு செய்வித்துக் கிழக்கில் சகளத்திர காமதேவ யுக்தமான சந்தான விருக்ஷத்தையும், தெற்கில் லக்ஷ்மியோடு கூடிய மந்தார விருக்ஷத்தையும், மேற்கில் சாவித்திரியோடு கூடிய பாரிசாத விருக்ஷத்தையும், வடக்கில் சுரபியோடு கூடிய ஹரிச் சந்தன விருக்ஷத்தையும் நிருமித்து விதிப்படி ஓமாதிகள் பூஜை முதலிய செய்து நமஸ்கரித்துத் தானஞ் செய்வதாம் (பக் 812, அபிதான சிந்தாமணி). இது தீபிகைக் கருத்திலிருந்து வேறுபட்டும் விரிந்தும் அமைகின்றது.

கோ சகஸ்திர தானம் பற்றி அபிதான சிந்தாமணி கூறுவதும் (பக் 813), தீபிகையின் கோதானத்திலிருந்து வேறுபட்டே வருகின்றது-'3 பலம் முதல் கொண்டு 1000 பலமுள்ள பொன்னால் பத்து பசுக்கள் செய்வித்து அவற்றினிடையில் ஒரு பொன் விருக்ஷம் செய்வித்து நிறுத்திப் பின் 1000 பசுக்களை பொன் வெள்ளி முதலானவைகளா லலங்கரித்து விதிப்படி பூசித்து தானஞ் செய்வதாம்'.

683 கனகக் கழஞ்சி யாயிர முதற்பதத்துக்
கழஞ்சியி றாய்ச்செய்பசு
கன்றுபத் துக்கழஞ் சியினுமி ரண்டுங்
கழஞ்சிமுப் பதுதெட்சிணை
தனையும் விதிப்படிக் கீதல்கோ தானமாய்
சாற்றா யிரங்கழஞ்சி
தமனியத் தாலுநூற் [1]றெண்கழஞ் சியினிறுதி
தகுபஞ்ச கலியாணியாய்ச்

---

* 1 றெண்கடிஞ்

செனிக்கமுன் விதிப்படி யுபரிவை யுங்கழஞ்
சியினீதல் பரிதானமாம்
திரிபலத் தாதிபொன் னாயிரம் பலம்வரைத்
தேருடன் புரவிநான்கும்
புனைதல்பின் பூசைசெய் தருளிரத தானமும்
புகலொட்டை நூறங்குலம்
பொன்றமா கடமதைப் பூசைசெய் தருள்வதே
பொங்குமா கடதானமே.

இது, கோதானம், பரிதானம், இரத தானம், மா கடதானம் என்பனவற்றை விரிக்கின்றது.

(இ-ள்) பொற்கழஞ்சு ஆயிரம் முதல், பத்துக் கழஞ்சு முடிய, செய்யப்பட்ட பசு பத்துக் கழஞ்சும், கன்று இரண்டு கழஞ்சுமாகவும், காணிக்கை முப்பது கழஞ்சாகவும் அமைத்து, அதனை விதிமுறைப்படிக் கொடுத்தலும் கோதானமாய்க் கூறுக. ஆயிரம் கழஞ்சு பொன்னாலும் நூற்றெட்டுக் கழஞ்சு முடிய, தகுதியுடைய பஞ்ச கலியாணியான (ஐவகைக் கதியுடைய) குதிரையாக உருவாகும்படி, முன்பு கூறிய விதிப்படி, உபரியான வை யும் (புல்) கழஞ்சியில் (பொன்), கொடுத்தல் பரிதான மாம். மூன்று பலம் முதலாக ஆயிரம் பலம் பொன் வரையாகச் செய்யப்பட்ட தேருடன் நான்கு புரவியும், அலங்கரித்துப் பின்பு பூசை செய்து கொடுத்தல் இரத தானம். புகல்கின்ற பத்து விரற்கடையும் நூறு அங்குல மும் ஆன பொன் தன் மாகட(பெரிய குட)த்தைப் பூசை செய்து கொடுப்பது பொங்குகின்ற மாகடதானம்.

(வி-ரை) தீபிகை முன்பாடலிலும் (67) இங்குமாக இருவகைக் கோதானங்களைத் தருகின்றது. முன்பு பசுக்களைக் கொடுத்த லும், இங்குப் பொற் பசுக்-கன்று கொடுத்தலும் அமைகின்றது. இரத்தின தேனு தானம் பற்றிய முன் செய்தியும் (66) இங்கு நினைக்கத்தக்கது. கனக காமதேனு தானம் என அபிதான சிந்தாமணி கூறுவதும் (பக் 812) இங்கு இணைத்துக் கருதத் தக்கது: ‘1000, 500, 250 கணக்குள்ள பலத்தோடு கூடிய பொன்னால் கன்றோடு கூடிய பசு செய்வித்து விதிப்படி பூசித்துத் தானஞ் செய்வதாம்.’

பரிதானம், இரததானம் என்பன சிறிது வேறுபட்டு அபிதான சிந்தாமணியின் இரண்யாச்வ தானம், இரண்யாச்வ

ரத தானம் (பக் 812) என்பனவற்றில் அமைகின்றன. மாகட தானம் என்பதோடு ஓரளவு ஒத்து அதன் மகா பூத கட தானம் காணப்படுகின்றது. 'நூறு அங்குல நீளமுள்ளதாய், நாநாவித ரத்தினங்கள் இழைத்த கும்பத்தைப் பால், நெய் முதலியவை களால் நிறைத்து அதில் ஒரு சுவர்ண கற்ப விருக்ஷத்தை நிறுவி விதிப்படி பூசித்துத் தானம் செய்வதாம்' (பக் 814).

தானங்கட்குரிய பயன்களைத் தீபிகை கூறாத போதும், அவை பற்றிய எண்ணம் நிலவியதை அபிதான சிந்தாமணியின் விளக்கங்கள் தொடர்ந்து அமைக்கின்றன.

69. பதுமமன் பத்தஞ் சுவராக மூவெட்டு
பாகவத மீரொன்பதாம்
பவுடிகம் பதினால் சகத்திரத் தஞ்ஞூறு
பன்னொன்று லிங்கமச்சம்
அதிகமீ ரேழ்பிர மகைவர்த்த மீரொன்ப
தாகுமார்க் கண்டமயுதம்
ஆக்கினே யம்பதி னைந்திலறு நூறுகுறை
யயுதம்வா மனமீராறு
உதவுபிர மாண்டமேழு கூருமம் பதினேழு
முறுநார தீயமைந்
துறுசைவ முப்பத்து மூன்றெனும் வைணவ
மோதுமிரு பத்தின்மூன்றாம்
விதியயுத மிருபதி னொன்றுகுறை காருட
மிகுகாந்த லெக்கமாக
விண்ணாலிலக் கமும்பதி னெண்ணா யிரமுடன்
மேவுசத மொன்பதாமே.

இது, பதினெண்புராணப் பட்டியலைக், கிரந்த எண்களுடன் தருகின்றது.

(இ-ள்) பதுமபுராணம் ஐம்பத்தைந்து ஆயிரம் கிரந்தங்களுடையது. வராகம் இருபத்தி நான்கு ஆயிரம். பாகவதம் பதினெட்டு ஆயிரம். பவுடிகம் பதினாலாயிரத்தஞ்ஞூறு. லிங்கம் பதினொன்று ஆயிரம். மச்சம்மிக்க பதினான்கு ஆயிரம். பிரமகைவர்த்தம் பதினெட்டு ஆயிரமாகும். மார்க்கண்டம் பதினாயிரம். ஆக்கினேயம், பதினைந்தில் அறுநூறு குறைந்த பதினாயிரம் (?). வாமனம் பன்னீராயிரம். உதவுகின்ற பிரமாண்ட (மெனும் வாயவிய)

புராணம் ஏழுஆயிரம்; கூர்மம் பதினேழுஆயிரம்.
உறுகின்ற நாரதீயம் ஐந்துஆயிரம். உறுகின்ற சைவம்
முப்பத்து மூன்றுஆயிரம் எனும். வைணவம் கூறுகின்ற
இருபத்துமூன்றாயிரம். விதி(எனும்பிரமம்)பதினாயிரம்,
இருபதில் ஒன்று குறைந்த ஆயிரம் காருடம். மிக்க
காந்தம் ஒரு லட்சம் ஆக,கூறு, நாலு இலட்சமும்,
பதினெண்ணாயிரமுடன் மேவுகின்ற நூறு ஒன்பதாகும்.

(வி-ரை) சிவபுராணம் பத்து, விஷ்ணுபுராணம்நான்கு, பிரமபுராணம் இரண்டு, சூரியன் அக்கினிபுராணங்கள் ஒவ்வொன்றெனப் பதினெண்புராணமும் பகுக்கப்படுகின்றன (பொருட்டொகை நிகண்டு, 928- 933). பதினெண்புராணப் பெயர்களைத் திவாகரமும் தருகின்றது (பக் 305-306).கிரந்த எண்கள் பற்றிய எண்ணத்தைப் பிங்கலத்தின்(444) அடிக்குறிப்பு தருகின்றது. ஆயின் எண்ணிக்கை வேறுபாடு அமைதல் புலப்படுகின்றது

| புராணம் | பிங்கலக்குறிப்பு | தீபிகைவேறுபடுதல் |
|---|---|---|
| மச்சம் | பதினாலாயிரம் | |
| கூர்மம் | ஆறாயிரம் | பதினேழாயிரம் |
| வராகம் | இருபத்து நாலாயிரம் | |
| வாமனம் | பதினாலாயிரம் | பன்னீராயிரம் |
| பதுமம் | ஐம்பத்தைந்தாயிரம் | |
| வைணவம் | ஆறாயிரம் | இருபத்துமூன்றாயிரம் |
| பாகவதம் | பதினெண்ணாயிரம் | |
| பிரமம் | பதினாயிரம் | |
| சைவம் | இருபத்துநாலாயிரம் | முப்பத்துமூன்றர்யிரம் |
| இலிங்கம் | பதினோராயிரம் | |
| பௌடியம் | முப்பத்தோராயிரம் | பதினாலாயிரத்தைஞ்ஞூறு |
| நாரதீயம் | இருபத்தையாயிரம் | ஐந்துஆயிரம் |
| காருடம் | ஆறாயிரம் | இருபதின் ஒன்று குறைந்த ஆயிரம் |
| பிரமகைவர்த்தம் | பன்னீராயிரம் | பதினெட்டாயிரம் |
| காந்தம் | இலட்சம் | |
| மார்க்கண்டேயம் | முப்பத்திராயிரம் | பதினாயிரம் |
| ஆக்கினேயம் | எண்ணாயிரம் | பதினைந்தில் அறுநூறுகுறை அயுதம் |
| பிரமாண்டம் | பன்னீராயிரம் | ஏழாயிரம் |

மொத்தமாகப் புராணங்கள் பதினெட்டிற்கும் கிரந்தத் தொகை நாலிலக்கத் தெண்ணாயிர மாகும்(பக் 236,தொகை யகராதி,மழவை மகாலிங்கையர் பதிப்பு(?).

70\. நவிலுப புராணம் பராசர மாரீச
நாரதீ யஞ்சாம்பவம்
நாரசிங் கங்காளி பார்க்கவந் துர்வாச
நந்திசெள ரமாங்கிரஞ்
சிவதரும முடனுசனம் வாமனங் கபிலம்வ
சிட்டஞ் சனற்குமாரஞ்
சீர்வருண மீரொன்ப தாமுடற் குற்றமோ
தீயபசி நீர்வேட்டலும்
உவகைநோய் வெகுளியு [1]நரைபிறப் பும்வெகு
வுறக்கமும் பலநினைப்பும்
உற்றமர ணமின்ப மதிசயங் கையற
முன்மத்த முந்துக்கமும்
எவரிடத் திலும்வேண்டல் மெய்யினில் வேர்வையு
மின்பமுட னதிபீதியும்
ஈரொன்ப தாங்குற்ற மாகுமென் றுரைசெய்வ
ரிப்புவியில் [2]மானிடர்க்கே.

இது, உபபுராணம், உடற்குற்றம் என்பனவற்றினைப் பட்டியல் செய்கின்றது.

(இ-ள்) கூறுகின்ற உபபுராணம், பராசரம், மாரீசம், நாரதீயம், சாம்பவம், நாரசிங்கம், காளி, பார்கவம், துர்வாசம், நந்தி, செளரம், ஆங்கிரம், சிவதருமமுடன், உசனம், வாமனம், கபிலம், வசிட்டம், சனற்குமாரம், சீருடைய வருணம் எனப் பதினெட்டாகும், உடற்குற்றமோ தீயபசி, நீர்வேட்டல், உவகை, நோய், வெகுளி, நரை, பிறப்பு, வெகு உறக்கம், பலநினைப்பு, உற்றமரணம், இன்பமான அதிசயம், கையறம், உன்மத்கம், துக்கம், எவரிடத்திலும் வேண்டல், உடம்பினில்வேர்வை, மிக்கஇன்பமுடன், மிக்க அச்சமும் என பதினெட்டாகும் மானிடர்க்குக் குற்றம் என்று இந்த உலகில் கூறுவர்.

---

*1நரைமிறப் 2 மாண்டர்க்கே

(வி-ரை)தீபிகையின் உபபுராணப் பட்டியலின் ஆங்கிரம், வாமனம், கபிலம் என்பனவற்றிற்கு வேறாக, பிரம்மாண்டம், மானவம், காபாலம் என அமைவது உண்டு (பக் 48, தொகை அகராதி). திவாகரம் ஆங்கீரம், ஆனவம், கபிலம் என்கிறது (பக் 306). பிங்கல நிகண்டு நாரசிங்கம் முதல் உபபுராணம் பதினெட்டு என்கின்றது (பொருட் டொகை, 936):

நார சிங்கஞ் சநற்கு மாரம்
நார தீயம் சிவதன்மந் துருவாசம்
நந்தி கேச்சுர மவுசனங் காளிகம்
வாருணஞ் சாம்பேசம் பராசரம் பார்க்கவம்
காபில மானவம் வாசிட்ட லைங்கம்
சவுர மாரீச பிரமாண்ட மென்னும்
ஈரொன் பானுப புராண மென்ப (445)

உடற்குற்றம் பற்றிய பட்டியலிலும் கருத்து வேறுபாடு ஏற்படலா மென்பதனைப் பொருட்டொகை நிகண்டைப் பார்க்கும் போது தெரிகின்றது:

யாக்கைக் குறுகுற்றம் பதினெட் டவை
பசி நீர்வேட்டல் பயஞ் சினமுவகை
வேண்டல் நினைப்பு நரை நோ யுறக்க
மரணம் பிறப்பு மத மின்ப மதிசயம்
வியர்த்தல் கேதங் கையற வென்ப
ரிவற்றுட் சிற்சில பேதமா வியம்புவர் (935)

குற்றமற்ற யாக்கையைத் திவாகரம் 'வச்சிர யாக்கை' (பக் 305) என்கிறது.

71. ஆதுலர்க் குச்சாலை யோதுவா ருக்குணவு
மறவைப் பிணஞ்சுடுதலும்
ஆறுசம யத்தவர்க் குண்டிபெண் போகமு
மையமுங் கோவுக்கிறை
மாதர்தா னஞ்சிறைச் சோறுசுண் ணந்தட
மகப்பாற லைக்கெண்ணையும்
மகப்பே றுடன்சிசு வளர்த்தலுங் காதோலை
மடம்விலங் கிற்கூன்களும்
சீதவுத கப்பந்தல் விலைகொடுத் துயிர்காத்தல்
சிலநோவு கண்மருந்து

செப்பும்வண் ணார்நாவி தன்கூலி கண்ணாடி
செயடின் பண்டநல்கல்
கோதில்பிறர் துயர்காத்தல் ஆவுரிஞ் சித்தறி
குறித்தவற வைச்சோறுடன்
கோவேறு விடுதலற வைத்துரி யஞ்சோலை
கூறுமெண்ணான் கறமீதே.

இது, முப்பத்திரு அறங்களின் பட்டியல்.

(இ-ள்) ஆதுலர்க்குச் சாலை, ஓதுவாருக்குணவு, அறவைப் பிணம் சுடுதல், ஆறு சமயத்தவர்க்கு உணவு, பெண் போகம், ஐயம், பசுவுக்கு வாயுறை, கன்னிகா தானம், சிறைச்சோறு, சுண்ணம், தடம், மகப்பால், தலைக்கு எண்ணெய், மகப்பெறுவித்தலுடன், குழந்தை வளர்த்தல், காதோலை, மடம், விலங்கிற்கு உணவு, குளிர்ந்த நீர்ப்பந்தல், விலை கொடுத்து உயிர் காத்தல், சில நோவுகளுக்கு மருந்து, கண் மருந்து, செப்புகின்ற வண்ணான் கூலி, நாவிதன் கூலி, கண்ணாடி செய்தல், தின்பண்டம் நல்கல், குற்றமற்ற பிறர் துயர் காத்தல், ஆவுரிஞ்சு தறி, குறித்த அறவைச் சோறுடன், கோவேறு விடுதல், அறவைத் துரியம், சோலை-எனக் கூறுகின்ற முப்பத்திரண்டு அறங்கள் இவையே.

(வி-ரை) நிகண்டுகளும் பிற நூல்களும் இத்தகு பல்வகை அறங்கள் பற்றி மொழிவதுடன், சிற்சில மாற்றங்களும் தருகின்றமை புலப்படுகின்றது. பொருட்டொகை நிகண்டு, இப்பட்டியல் தந்து முடிக்குமிடத்துக் கூறும் எண்ணம் இங்குச் சுட்டத்தக்கது.

....... கன்னிகா தான மென்னப்
பிங்கல நிகண்டிற் பிறங்கச் சொற்றனர்
காஞ்சிப் புராணங் கழுவாய்ப் படலந்
தனிற்சில வேறு சாற்றினர் காண்கவே(958)

சேந்தன் திவாகரம் 'பூணூல்' 'மகச்சோறு' என்பதையும் பட்டியலில் உட்படுத்துவது (பக் 307-308)தீபிகையில் காணப் படவில்லை. அறவைச்சோறு, விலங்கிற்குணவு எனத் தீபிகை தருவன திவாகரத்தில்லை.

72. அக்கர விலக்கண மிலிகிதங் கணிதமு
மாகம புராணவேதம்

அலகுறு வியாகரண நீதிசாத் திரமந்ர
மழியாத தருமசாஸ்த்திரம்
ஆன்சகு னஞ்சிற்ப மிதிகாச முருவமு
மலங்கார மும்பண்டிதம்
அசுவப ரிட்சையுட னஸ்தரப் பரீட்சையு
மாகாய கமனம் வசியம்
சுக்கிலத் தம்பனம் வாயுவாக் குதிட்டி
சோதிடங் கசகர்ணமும்
சுழலுகோ கரணமுந் தாளம்வீ ணைவேணு
தும்பிப்ப ரிட்சை[1]நட்டம்
சொல்லுசத் தப்பிரம மதுரபா ஷாணமுமா
தோரணவ குப்புமுட்டி
சோராத யோகமிந் திரசால மோகனந்
தோராத மல்லயுத்தம்
[2]மிக்கமதன் சாத்திரம் பூமிப்ப ரிட்சையும்
வித்வேடணங் காருடமு
மேலாமி ரத்தினப் பரிட்சையா [3]கருடண்மேவு
மக்கினி ஸ்தம்பனம்
வெட்டுகட் கஸ்தம் பனஞ்சலத் தம்பன
மீறும கேந்திரசாலம்
வேறுகா ய்ப்பிர வேசமுட னதிரிசய
மேலான விரதவாதம்
கற்கரிய காவியம் பைபீல வாதங்
கவுத்துகா வாதமுடனே
கனகப் பரிட்சையுச் சாடன நாடகங்
கழறுமிர தப்பரிட்சை
காந்தருவ வாதமு மிருதங்க முந்தாது
கனனதம் பநிருத்தம்
கருதவத் தைப்பிர யோகசங் [4]கிராமலக்
கணக்கலைக ளெட்டெட்டிதே.

இது, அறுபத்து நான்கு கலைகளின் பட்டியல்.

(இ-ள்) அக்கரவிலக்கணம், இலிகிதம், கணிதமும், ஆகம புராணம், வேதம், பகுப்புகளுடைய வியாகரணம், நீதிசாத்திரம், மந்திரம், அழியாத தரும சாஸ்த்திரம்,

---

* 1 நாட்டம் 2 மிக்கமத 3 கருண 4 கராமலக்

ஆன சகுனம், சிற்பம், இதிகாசம், உருவமும், அலங்காரமும், வைத்தியம், அசுவ பரிட்சையுடன், அஸ்தரப் பரீட்சையும், ஆகாயகமனம், வசியம், சுக்கிலத்தம்பனம், வாயு, வாக்கு, திட்டி, சோதிடம், யானை போலக் காதசைத்தலும், பசுவைப் போன்று சுழலும் வண்ணம் காதினையசைத்தலும், தாளம், வீணை, வேணு, தும்பிப்பரிட்சை, நட்டம், சத்தப்பிரமம், மதுர பாஷாணமும், ஆதோரண வகுப்பு, முட்டி, சோராத யோகம், இந்திரசாலம், மோகனம், ஓயாத மல்லயுத்தம், மிக்க மதன சாத்திரம், பூமிப்பரிட்சையும், வித்வேடணம், காருடமும், மேலான இரத்தினப் பரிட்சை, ஆகருடணம், மேவுகின்ற அக்கினிஸ்தம்பனம், வெட்டுகின்ற கட்க ஸ்தம்பனம், சலத் தம்பனம், மீறுகின்ற மகேந்திர சாலம், வேறுகாயப் பிரவேசமுடன், அதிரிசயம், மேலான இரசவாதம், கற்பதற்கரிய காவியம், பைபீலவாதம், கவுந்துகாவாத முடனே, கனகப் பரிட்சை, உச்சாடனம், நாடகம், கழறும் இரதப் பரிட்சை, காந்தருவ வாதமும், மிருதங்கமும், தாது, கனனதம்பம், நிருத்தம் கருதுகின்ற அவத்தைப் பிரயோகம், சங்கிராம லக்கணம் எனக் கலைகள் அறுபத்து நான்கு இவையே.

(வி-ரை) பிரபந்தத் திரட்டு, நூல் முடிவுக்குப் பின்னுள்ள உரைநடைப் பகுதியில் 'அறுபத்து நான்கு கலைஞானம்' எனப் பட்டியல் தருகின்றது (533). பொருட்டொகை நிகண்டு (973) போன்றனவும் பட்டியல் அமைக்கின்றன. இவையனைத்தும் பெரும்பாலும் ஒத்து வந்த போதும் சிறுபான்மை வேறுபாடுகள் காட்டுகின்றன. மிகப் பரப்பும் விரிவுமுடைய கலைஞானத்தை '64' என அடக்கும் முயற்சி பற்றி சில விடப்பட்டும், வேறு சில புதியதாகச் சேர்க்கப்பட்டும் தரும் இந்நிலை ஏற்பட்டிருக்கலாம்.

73. உலகிலுறு மானவர்க் கீரேழு முகமதி
னுலோலித [1]மஞ்சிதமுகம்
உறுமதோ முகமுட னாகம்பி தாநந
முத்வாகி தஞ்சௌந்தரம்
உற்றபிர கம்பித மாலோலி தஞ்சம
மோதுபரி வாகிதமுசம்

---

* 1 மஞ்சிமுகம்

ஒண்டுதம் விதுதமும் பராவிருத் தாநந
முயர்திரச் சீனமதிலே
சிலவருத் தத்தினிரு தோண்மீது தலைசாய்த்தல்
செய்திடி னஞ்சிதமுகம்
சென்னிகீழ் நோக்கிட லதோமுகஞ் சம்மதித்
திசைமேல் கீழதாகச்
சிரசினை யசைத்திட னாகம்பி தாநநஞ்
செப்புமதி செயநோக்கியே
சிற்றலை யசைத்திடின் பிரகம்பி தாநநஞ்
சிலதாசை யாலழைத்தல்
மலருமா லோலிதஞ் சிந்தையோர் தோளின்மேல்
வைத்ததலை சாய்த்தலாலே
வருமுலோ லிதமுகந் தலையணாந் தேபார்த்து
வருதலுத் வாகிதமுகம்
மருகுநா ணின்தலை யாட்டல் திரச்சீன
மாகுந்தி யானமாக
மாறாதி ருப்பதே சமமுக மகிழ்ச்சியால்
மலர்சவுந் தரவாநநம்
நலமைவேண் டாதற்கு யிடம்வலந் தலையாட்டல்
நற்றுத முணவணிமுதல்
ஞாலம்வேண் டாமையா லுந்தலை நடுக்கிடல்
நவில்விதுத வதனமாகும்
நாளும்வேண் டாதற்கு முகமாறி வைத்திடல்
நயபரா விர்த்தவதனம்
நன்மதத் தொருபுறஞ் சாய்ந்துதலை சுற்றிடில்
நற்பரி வாகிதமே.

இது, பதினான்கு வகை முகநிலைகளைப் பட்டியல் செய்து விளக்குகின்றது.

(இ-ள்) உலகில் உள்ள மனிதர்களுக்குப் பதினான்கு வகை முகம் அமைகின்றன. அவற்றுள், உலோலிதம், அஞ்சித முகம், உறுகின்ற அதோமுகமுடன், ஆகம்பித ஆனனம், உத்வாகிதம், சௌந்தரம், உற்ற பிரகம்பிதம், ஆலோ லிதம், சமம், ஓதுகின்ற பரிவாகிதமுகம், ஒண்மையான துதம், விதுதமும், பராவிருத்த ஆனனம், உயர் திரச் சீனம்; அதில், சில வருத்தத்தினால் இரண்டு தோள் மீது தலை சாய்த்து அமைந்தால் அஞ்சிதமுகம், தலை குனிந்து பார்த்தல் அதோமுகம், சம்மதித்து இசைவு

காட்ட மேல்கீழாகத் தலையை அசைத்திடுதல் ஆகம்பித ஆனனம், செப்புகின்ற அதிசயம் நோக்கியே சிறிதாகத் தலையை அசைத்தால் பிரகம்பித ஆனனம், சிலது ஆசையால் அழைத்தல் மலருகின்ற ஆலோலிதம், சிந்தை காரணமாக ஒரு தோளின் மீது தலையைச் சாய்த்து வைத்தலால் வருவது உலோலிதமுகம், தலையை அண்ணாந்து பார்த்து வருவது உத்வாகித முகம், மருகும் நாணத்தால் தலையாட்டுதல் திரச் சீனம் ஆகும், தியானமாக மாறாது இருப்பதே சம முகம், மகிழ்ச்சியால் மலர்வது சவுந்தர ஆனனம், நலமாக, வேண்டாமையைக் குறிக்க இடம்வலமாகத் தலையாட்டுதல் நல்ல துதம். உணவு, அணி முதலாக உலகு வேண்டாமையாலும் தலையை நடுக்குதல் கூறு கின்ற விதுதவதனம் ஆகும், நாளும் வேண்டாததற்கு முகம் மாறி வைத்திடல் நயமான பராவிர்த்த வதனம், நல்ல மதம் காரணமாக ஒரு புறம் சாய்த்துத் தலையைச் சுற்றினால் நல்ல பரிவாகிதம் ஆகும்.

(வி·ரை) இப்பதினால் வகை முகங்களை விளக்கமுடன் சில நிகண்டு கூறுகின்றன (பொருட்டொகை 899-913). நாடகம் அல்லது நாட்டியத்தின் அவத்தை, அபிநயம் பற்றி இத்தகு முக அமைப்பு வகைகள் பற்றிய எண்ணமும், விளக்கமும் ஏற் பட்டிருக்கலாம். மகாபரத சூடாமணி, 'அவயவ பேத நிருபணம்' என்பதன் முதல் வகையாக, 'சிரோ பேதப் பிரகரணம்' கூறும் போது பத்தொன்பது வகையாகத் 'தலை' அமைவதைத் தருகின்றது. அவை — 1. சமம், 2. உத்வாகிதம், 3. அதோ முகம், 4 ஆலோலிதம், 5. கம்பிதம், 6. துதம், 7. பரா விருத்தம், 8. உட்சிப்தம், 9. பரிவாகிதம், 10. நிகஞ்சிதம், 11. அஞ்சிதம், 12 விதூதம், 13. ஆதூதம், 14. அவதுதம், 15. அகம்பிதம், 16. இசுகாந்தானம், 17. திரியக்க தானனம், 18. அராதிகம், 19. பார்சுவாபி முகம் என்பன.

ஆயின், இதன் மூல நூலான நாட்டிய சாஸ்திரம் பதின் மூன்று வகைகளையே கூறுகின்றது என இதன் அடிக்குறிப்பு வழி உணர முடிகின்றது. அவை — அகம்பித, கம்பித, துத, விதுத, பரிவாகித, உத்வாகித, அவதுத, அஞ்சித, நிஹஞ்சித, பராவிருத்த, உத்க்ஷிப்த, அதோகத, லோலித என்பன.

அபிநய தர்ப்பணம் எனும் தமிழ்நூல் ஒன்பது வகைகளையே மொழிகின்றது.

வருசம முகத்தோ டுத்து வாகித முகமே யென்ப
விருமதோ முகமே யாலோ லிதமுகந் துதமுகந் தானே
பரவிருத் தங்கம் பிதஞ் சீர் படருமுட் சித்த மென்ப
பரிவாகி தத்தி னோடொன் பதுவகை சிரசு தானே (1)

இவ்வாறு பல நூல்களும் பல எண்ணிக்கை தரும்போது பிரபந்த தீபிகை பதினான்கு மொழிவது பல வகையான எண்ணங்கள் நிலவுவதை உணர்த்துகிறது.

74. எட்டுவகை யின்மணஞ் செய்மாத ரிருகுலத்
தெய்துவகை யுமுணர்ந்து
எண்டலமண் [1]டன்மைவைத் தேற்றமா தின்சில
மெனில்வேத மோதுமிடமண்
எடுத்திடில் வித்தையுண் டாம்பசுத் தொழுமனோ
யெய்திடும் பால்பாக்கிய
மிருநிலச் சாலிமண் [2]ணலமுண் டாமிக
வேற்றபூ மண்ணோசிசு

மட்டவிழு மடுமணோ பதிவிரதை யுவர்மணோ
மலடியிமம் விதவையாம்
மந்தைமண் விபசாரி யெண்வகை யறிந்தபின்
வரனுடைய நெறியறிந்து
மாதினை யலங்கரித் தீதலே பிரமமாம்
வழங்கவிரு பத்தைந்தெனும்
வம்சமீ டேறும்யா கத்திருத் துக்கீடு
மாதெக்கி ணையீடாய்

கட்டழகு மாதீதல் தெய்வமண மாங்குலங்
கரையேறு மூவேழுதான்
கருதிய வரன்றலைக் கிச்சையா யீய்தலே
கனப்பிரா ஜாபத்தியம்
காணவன்பன் னேழுகுலம் வளரு மிருபசுக்
கன்றுட னேத்துயீய்தல்
காய்கனி யருந்துவோர் மணமதின் பன்னைந்து
கணிதகுல மீடேறுமாம்

* 1 டன்டை 2 னமுண்

சட்டமுட னேயிருவர் தன்னிச்சை யாகவே
தழுவல்காந் தருவமாகும்
தனமிகவு மேகவர்ந் தாயிழையை யீய்தலே
தானவவி வாகமாகும்
சாருநித் திரைசெயு மாதைக் கவர்ந்துமே
தான்மணஞ் செய்பிசாசம்
சமர்செய் தடித்துமண மேபுரிதல் ராக்கதந்
தானாகு மணமெட்டுமே.

இது, எண்வகையான திருமணங்களை விரிக்கின்றது.

(இ-ள்) எட்டு வகையில் திருமணம் செய்கின்ற பெண்டிர், இரு வகைக் குலத்தில் எய்துகின்ற வகையும் உணர்ந்து, எட்டு வகையான இடங்களின் மண்ணின் தன்மையை வைத்து பொருத்தமான பெண்ணின் குணம் என்ன வென்றால், வேதம் ஓதுகின்ற இடத்தின் மண் எடுத் தால்கல்வியறிவு உண்டாம், பசுத்தொழுவின் மண்ணோ எனின் பால் பாக்கியம் எய்தும், பெரிய நிலத்தின் சாவி மண் ஆயின் நலம் உண்டாம், மிகவும் ஏற்பு டைய பூபோன்ற மண்ணோ குழந்தை, தேன் ஒழுகும் (மணம் வீசுகின்ற) மடுவின் மண்ணாயின் பதிவிரதை, உவர் மண்ணாயின் மலடி, உறைபனி விதவையாம் மந்தையின் மண் விபசாரி, என எட்டுவகையையும், அறிந்த பின்பு, கணவனாக வரிக்கப்படுபவனது நெறி யறிந்து பெண்ணை அலங்கரித்துக் கொடுப்பது பிரம மாம். அவ்வாறு வழங்க இருபத்தைந்து வம்சம் ஈடேறும். யாகத்தில் இருத்துதற்கு ஈடாகிய பெரிய காணிக்கை ஈடாக மிக அழகிய பெண்ணினை அளித் தல் தெய்வமணமாம். சிறந்த குலமாகக் கூறுகின்ற காளை இருபத்தொன்று, தான் கருதிய வரனிடத்தில் விருப்பமாக அளித்தல் உயர்வான பிரஜாபத்தியம். கலவிக்குரிய அன்பனின் ஏழ்குலம் வளருமாறு பெரிய பசுவைக் கன்றுடன் புகழ்ந்து அளித்தல் காய்-கனி அருந்தும் முனிவரின் திருமணம் (ஆரிடம்). அதனால் பதினைந்து தலைமுறை ஈடேறும். நேர்மையாக இருவர் தம் விருப்பாகவே தழுவுதல் காந்தருவம் ஆகும். பொருள் மிகுதியாகக் கவர்ந்து பெண்ணைக் கொடுத்தல் தானவ விவாகமாகும் (ஆசுரம்). சார்கின்ற உறக்கம் கொள்ளும் பெண்ணைக் கவர்ந்து சென்று தான் மணம் செய்தல் பிசாசம். போர் செய்து அடித்து மணம் புரிதல் இராக்கதம்தான் என ஆகும் எண்வகைமணம்.

(வி-ரை) எண்வகை மணம் பற்றிய எண்ணம், பெயர்நிலை விளக்கங்களுடன் நிகண்டு போன்றவற்றில் அமையினும் மண்ணும் அதனால் புலப்படும் மகளிர் மாண்பும் பற்றிய செய்திகள் புதுமையாகும். இவற்றின் முன்னோடி புலப் பட்டிலது.

தொல்காப்பியம் களவு-கற்பு என்ற இரு நிலையைப் பற்றி மொழிய இறையனார் அகப்பொருள் உரை எண்வகை மணப் பட்டியல் தந்து அதன் கந்தருவத்தைக் களவுடன் ஒக்க வைத்து நினைக்கின்றது. எண்வகை மணங்களை வேறு பெயர் கொண்டு சுட்டும் பாடலொன்றையும் தருகின்றது.

அறநிலை யொப்பே பொருள்கோள் தெய்வம்
யாழோர் கூட்டம் அரும் பொருள் வினையே
இராக்கதம் பேய்நிலை யென்றிக் கூறிய
மறையோர் மன்ற லெட்டவை அவற்றுள்
துறையமை நல்லியாழ்த் துணைமையோர் இயல்பிதன்
பொருண்மை என்மனார் புலமையோரே (சூ, 1-உரை)

அறநிலை- பிரமம்; ஒப்பு- பிரசாபத்தியம்; பொருள் கோள்-ஆரிடம்; யாழோர் கூட்டம் - கந்தர்வம்; அரும்பொருள் வினை நிலை-அசுரம்; பேய்நிலை- பைசாசம்.

75. முகிலூர்தி தேவர்முனி வோர்துயர் களைந்திடு
முதன்மையுக மாந்திரேதம்
மூன்றாம் யுகங்கலியின் மறைவினோர் பாரவுணர்
மூவுலகர் மன்னர்தேவர்

இகலரசர் வசுதேவன் னெறியினால் வழுதிசுதை
யேமநய நன்னிரண்ணியன்
இன்பெலியு ரன்னிருதர் மன்கஞ்ச னாரியரை
யின்சொற்ற ரித்தெடுத்தும்

பகுத்திருத் திக்கோறி வென்றமர் சிதைத்துப்
பகைத்துமா றாழிவிதிதம்
பம்மதிதி ரேணுகை கோசலையு ரோகிணி
பண்புதே வகிமறையவன்

வகியகடின் மீனாமை பன்றிநர சிங்கம்வா
மனராம ராமபலரா
மன்கிஷ்ண னாமினிப் பரிமுகங் கொண்டு
மாதவ னவதாரமே.

இது, தசாவதாரச் செய்தி கூறுகின்றது.

(இ-ள்) மேகத்தை வாகனமாக உடைய இந்திரன், தேவர்கள், முனிவர் என்பவர்கள் துன்பத்தை நீக்குகின்ற முதல் யுகமான கிருதமும், திரேதமும், மூன்றாம் யுகமான துவாபரமும், கலியுக முடிவிலும்; பரப்புடைய அரக்கர், மூவுலகத்தர், அரசர், தேவர், பகை மன்னருக்காக;பரவாசுதேவனான திருமால் முறையாக; மன்னன், அமுதம்,பொன்கண்ணனான இரணியாக்கன்,இரணியன், இனிமையான மாபலி, ஆற்றல், அரக்கர், மன்னர், கஞ்சன் , ஆரியர் என்பவரை; இன்சொல், தரித்து, எடுத்து, பகுத்து, இருத்தி, கொன்று, வென்று, போர், சிதைத்து, பகைத்தும்; ஆறு,கடல்,விதி,தூண், அதிதி, ரேணுகை,கோசலை, உரோகிணி, பண்புடைய தேவகி, மறையவன் என்பவரிடம்; போழ்ந்த வயிற்றையுடைய மீன், ஆமை, பன்றி, நரசிங்கம், வாமனம், பரசுராமன் தசரதராமன், பலராமன், கிருஷ்ணன் என ஆனான், இனி குதிரை முகம்கொண்டு மாதவனின், அவதாரம் அமையும்.

(வி-ரை) திருமாலின் தசாவதாரம் பற்றிய இச் செய்திகள், முன்பு விளக்கப்பட்ட உற்பவமாலை எனும் பிரபந்த வகையின் தெளிவுக்காக இங்குக் கூறப்படுவதாகக் கொள்ளலாம். தசாவதாரச் செய்திகள் ஓரளவு நிரனிறையாகப் பொருந்தும் வண்ணம் இங்குத்தரப்படுகின்றன. யுகங்களையும் அவதாரங்களையும் இணைத்து நினைக்க வாய்ப்பு அமைவதனைப் பாடலின் தொடக்கம் காட்டுகின்றது. முதல் யுகமான கிருதம், இரணியாக்கன், இரணியன், மாபலி தொடர்பான வராக, நரசிங்க, வாமன அவதாரங்களை உட்கொள்ளுகின்றது. மச்ச, கூர்ம அவதாரங்கள் இவ்யுகத்தின வாகவோ முற்பட்டதாகவோ பொருந்தலாம். இரண்டாவதான திரேதம் பரசுராம, தசரத ராம அவதாரங்களைப் பெறுகின்றது. துவாபரம் பலராமன், கண்ணன் தோற்றங்களை உடையது. கலியுகமுடிவு கல்கியவதாரத்திற்குக் களனமைக்கின்றது.

காரணம், செயல், வழி, உரு எனும் அவதாரச் சார்புச் செய்திகள் இதில் முறையே ஓரளவு முழுமையாகக் கூறப் படுகின்றன. வழுதி-இன்சொல்-ஆறு-வகியகடின்மீன் என்பதில் முதலாவதான மச்சாவதாரம் குறிக்கப்படுகின்றது. சிறுமீனாக, கிருதமாலா ஆற்றில் தோன்றி சத்தியவரதன்எனும் ராஜரிஷிக் குக் காணப்பட்டுப் பின்பு முறையே வளர்ந்து,பெரு வெள்ளத் திலிருந்து அவனைக் காத்து, அயக்கிரீவன் என்னும் சோமுகா சுரன் மறைத்து வைத்த இன்சொல்லாகிய வேதத்தை-மறையை மீட்ட நிலைகள் இதில் இணைகின்றன. சுதை-தரித்து-ஆழி ஆமை என்பதில் இரண்டாவதான கூர்மாவதாரச் செய்திகள் வருகின்றன. அமுதம் தோன்றிய போது,பாற்கடலில்,கடையும் மந்தார மலையான மத்தினைத் தாங்கியமையாக இதுபொருந்து கின்றது. ஏமநயனன்-எடுத்து-விதி-பன்றி என்பதில் வராக அவ தாரநிலை அமைகின்றது. இரணியாக்கன் உலகத்தினைக் கொண் டொளிக்கவே, மால் பிரமனிலிருந்து பன்றியாகித் தோன்றி, நிலத்தை வெளியே எடுத்தமை இதில் வருகின்றது. இரணியன் பகுத்து-தம்பம்-நரசிங்கம் என்பதில் ஸ்தம்பத்தில் தோன்றிய நரசிம்மம் இரணியனைப் பிளந்தது குறிக்கப்படுகின்றது. பெலி இருத்தி-அதிதி-வாமனம் என்பதில் அதிதியின் புதல்வனாக வாமனன் தோன்றி மூவடி மண்கேட்டு, மாவலியை நிலத்தில் ஆழும்படி இருத்தியது வருகின்றது. உரன்-கோறி-ரேணுகை ராம என்பதில், ரேணுகையின் புதல்வனாகப் பரசுராமன் தோன்றி, மன்னரைக்கொன்று வலியடக்கிய அவதாரச்செய்தி யமைகின்றது.நிருதர்-வென்று-கோசலை-ராம என இராமாவதார அரக்கர் அழிவு நிலை சுட்டப்படுகின்றது. மன்-அமர்-ரோகிணி பலராமன் என்பதால் உரோகிணியின் மகனாகிப் பலராமன் கம்சனின் தம்பியராகிய மன்னரைப் பொருதமை பொருந்து கின்றது. கஞ்சன்-சிதைத்து- தேவகி- கிஷ்ணன் எனக் கண்ணன வதாரக் கம்சன் வதமும் கௌரவர் சிதைவுதந்த மாபாரதப் போரும் ஆகியசெயல்கள் இடம் பெறுகின்றன.ஆரியர்-பகைத்து மறையவன்-பரிமுகம் என்பதில் கல்கி அவதாரம் நினைக்கப் படுவதாகக் கொள்ளலாம்.

76. சொல்லரிய ஆழ்வார்கள் [1]பதின்மரதி னுற்பவந்
தொல்புவியி னிற்காஞ்சியிற்
சோலைசூழ் பொற்றா மரைத்தடா கத்தினிற்
றும்பியிரா சாசீருகம்

---

1 பதிமாதி

தல்லியோன் வேதெளலி மாசமோ ணத்தினிற்
சங்கம்ச மாம்பொய்கையார்
தக்ககடல் மல்லையின் மாதவிப் பூவினிற்
றொலிமா சமவிட்டம்

வல்லகவு மோதகத் தம்சமுறு பூதத்தர்
வரமான திருமயிலையில்
மாலாதி கேசவன் கோவிற் [2]கிணற்றினுள்
வண்டுநறை யுண்டுமகிழ்செவ்

வல்லியின் றுலைமாத முயர்சதைய நாளினி
லவதரித்தார் நாந்தகத்
தம்சமாய் வந்தபே யாழ்வா ரெனச்சொலு
மவனியிற் சுருதிநூலே.

77. திருமழிசை நகரின்முன் [1]பார்க்கவர்க் குரிய பத்
தினிவயிற்றிற் பிண்டமாய்த்
திங்கள்மக ரந்தனில் மகத்தினி லுதித்திடு
சுதெரிசனத் தம்சமாக

வருமுரிய பிண்டத்தை வேரலடி யிற்போட
வாயசம் வளர்க்கவளரும்
மகிமைபெறு திருமழிசை யார்கொல்லி நகரத்துள்
வஞ்சிமன் னன்மரபினிற்

பொருபரா பவவருட மாசிமா தம்புனர்
பூசத்தினிற் கவுத்துவம்
புனிதவ மிசத்தினி லுதித்தகுல சேகரர்
புகழுற்ற வுறையூரினிற்

துரிதமுறு கலிநூற் றியொன்பதாம் வருடமேற்
றன்மதி விருச்சிகத்திற்
சொல்லுரோ ணிநெலின் ஸ்ரீவத்ஸ அமிசமாய்த்
தோன்றுந் திருப்பாணரே.

78. வில்லிபுத் தூரினிற் பூர்வசிகை வேயர்குல
விப்பிர முகுந்தயங்கார்
மீதுகுரோ தனவருஷ மானிமா ஸஞ்சோதி
மிக்கச்சரு டாம்சத்தினில்

---

* 1 பார்கவக் 2 கிணத்தினுள்

சொல்லரிய விண்டுசித் தன்பெரிய வாழ்வார்
துலங்குமவர் பட்டர்பிரான்
சோலை சூழ்ந்திலகு மண்டகுடி யினிற்கலி
தோன்றுமேற்பரா பவவருடம்
யெல்லித்தனு விற்கேட்டை நாளினிற் பூர்வசிகை
யெய்திடும் வேதசாரர்க்
கின்புறும் விப்பிரநா ராயண ரெனுந்துளசி
யின்னம்ச மாயுதித்த
நல்லதொண் டரடிப் பொடியாரந் திருவாலி
னாட்டினிற் குறையிலூரில்
நான்கான வருணத்தி லேகலி பிறந்திடு
நானான்கு மிருநூறிலே.

79. தக்கநள வருடத்தில் விருச்சிகத் திங்களிற்
றாரமோ கார்த்திகையினிற்
சக்கரத் தம்சமாந் திருமங்கை யாழ்வார்
தனக்குமே கலியரென்பார்
மிக்ககுரு கூரினில் வழுதிநா டன்சுதன்
மேவறந் தாங்கிபுதல்வன்
விறல்சக் கிரபாணி சேயச்சு தப்பெருமான்
விரும்புசேய் செந்தாமரை
யக்கியனு தவுசெந்தா மரைக்கண்ணருக் குரியசே
யானநவம் போருகத்
தையனருள் பொற்கையா வன்சுதன் காரியார்க்
கானமனை யாட்டிதேடிப்
புக்கிவன் பரிசார மீதுடைய நங்கையைப்
பூமாலை சூடியன்னான்
புத்திரற் காய்க்குறுங் குடியாரை யேதொழப்
புனிதனருள் கிருபையாலே.

80. கலியுக முதித்தநாற் பத்திமூன் றாந்தினம்
கருதுவிக்கிரமவாண்டுவை
காசிமா தஞ்சுக்கிர வாரம்வி சாகமுங்
கடகலக் கனமீதினில்
ஒலிதிரைப் பரவைசூழ் மானிலம் புகழவு
முதித்தநம் மாழ்வார்தனக்
குரியநாமஞ்சட கோபன்மா றன்றின்ன
ஓதுவர்கள் விஷ்ணுசித்தன்

மலிவாரு நந்தா வனங்கள் பெயர்த்திட
வனமூல மீதிருந்து
மகியம்ச மாய்க்கலியி [1]ளளவருட மாடியின்
மன்னுபூ ரத்துதித்து
சிலிமுக விழிக்கணுஞ் செங்கமல வதனமாய்
சென்மித்த வாண்டாளையே
செப்புவர் கள்சூடிக் கொடுத்தா ளெனும்பெயர்
சேர்கோதை நாச்சியாரே.

இவை, ஆழ்வார்களின் பிறப்பு- வரலாறு கூறுகின்றன.

(இ-ள்) சொல்லுவதற்கு அரிய ஆழ்வார்கள் பத்துப் பேரின் பிறப்பு: பழமையான உலகினில், காஞ்சிபுரத்தில், சோலை சூழ்ந்த பொற்றாமரைக் குளத்தில் வண்டு மூசுகின்ற அரச தாமரையைத் தாயாகப் பெற்றவர், துலாம் (ஐப்பசி) மாதம், திரு ஓண நட்சத்திரத்தில் திருமாலின் சங்கு ஆயுதத்தின் (பாஞ்சசன்யம்)அம்சமான பொய்கையார்; தக்க கடன்மல்லையில் மாதவிப்பூவில் துலாம் (ஐப்பசி) மாதம், அவிட்ட நட்சத்திரத்தில் வலிமையான தண்டாயுதத்தின் (கதை) அம்சம் பொருந்தியவராக பூதத்தார்; வரமான திருமயிலையில் திருமாலாகிய ஆதிகேசவப் பெருமாள் கோவில் கிணற்றி னுள் வண்டுகள் தேன் உண்டு மகிழ்கின்ற செவ்வல்லி மலரில் துலாம் (ஐப்பசி) மாதம், உயர்ந்த சதைய நட்சத்திரத்தில் அவதரித்தார், திருமாலின் வாள் படையின் அம்சமாக வந்த பேயாழ்வார், என உலகி லுள்ள சுருதிநூல் சொல்லும்.

திருமழிசை நகரில் பார்க்கவருக்கு உரிய மனைவி யின் வயிற்றில், பிண்டமாக, மகர (தை) மாதத்தில், மக நட்சத்திரத்தில் உதித்திடுகின்ற சக்கரத்தின் அம்சமாக வருகின்ற உரிய பிண்டத்தைப் பிரப்பம் செடி யின் அடியில் போட, அதனை ஒரு காகம் வளர்க்க வளருகின்றது, மகிமை பெற்ற திருமழிசை ஆழ்வார்; கொல்லி நகரத்துள் (சேரநாட்டுத் திருவஞ்சைக்களம்) சேரமன்னன் மரபில், பொருகின்ற பராபவ ஆண்டின் மாசி மாதத்தில் புனர்பூச நட்சத்திரத்தில், கவுத்துவ

* 1 ளாள

மணியின் தூய அமிசமாக உதித்தவர் குலசேகரர்; புகழ் பொருந்திய உறையூரில், விரைவுடைய கலியுகத்தின் நூற்றியொன்பதாம் ஆண்டான துன்மதியில், விருச்சிக (கார்த்திகை) மாதத்தில், சொல்கின்ற உரோகிணி நட்சத்திரத்தில், நெல் கதிரில், ஸ்ரீ வத்ஸ அம்சமாகத் தோன்றியவர் திருப்பாணாழ்வார்.

திருவில்லிபுத்தூரில் பூர்வ சிகை வேதியர் குலத்தில் உள்ள விப்பிரமுகுந்தயங்காரின் மகனாக, குரோதன ஆண்டு, ஆனி மாதம், சோதி நட்சத்திரத்தில் மிக்க கருடனுடைய அம்சமாக வந்தவர் சொல்லுவதற்கரிய விஷ்ணு சித்தன் என்னும் பெரியாழ்வார்; துலங்குகின்ற அவரே பட்டர்பிரான். சோலை சூழ்ந்து விளங்கும் மண்டகுடி எனும் ஊரில் கலியுகத்தில் தோன்றிய மேலான பிரபவ வருடத்தில் ஒளியுடைய தனு (மார்கழி) மாதத்தில் கேட்டை நட்சத்திரத்தில் பூர்வ சிகை எய்திடுகின்ற வேதசாரர்க்கு, இன்புறும் விப்பிர நாராயணர் எனும், துளசியின் அம்சமாய்ப் பிறந்த நல்ல தொண்ட ரடிப்பொடியார்; அழகிய திருவாலி நாட்டினில், திருக்குறையலூரில், சூத்திர வருணத்தில், கலியுகம் பிறந்த பின் இருநூற்றுப் பதினாறாம் ஆண்டிலே,

தக்க நளவருடத்தில், விருச்சிக (கார்த்திகை) மாதத்தில், கார்த்திகை நட்சத்திரத்தில் சக்கராயுதத்தின் அம்சமாகியவர், திருமங்கை யாழ்வார், 'நம் கலியர்' எனவும் கூறப்படுவார்; மிக்க குருகூரினில் பாண்டிய நாட்டுத் தலைவனின் மகன், மேவிய அறம் தாங்கிய புதல்வன், வலிமையுடைய சக்கிரபாணியின் மகன் அச்சுதப் பெருமாள், அவன் விரும்புகின்ற புதல்வன் செந்தாமரைக் கண்ணன், உதவுகின்ற செந்தாமரைக் கண்ணருக்கு உரிய மகன் ஆனந வம்போருகத் தையன் (தாமரை முகத்தான்?), அவன் அருளிய பொற்கையான் அவன் மகனான காரியார்க்கு, அமைந்த மனைவியைத் தேர்ந்து அடைந்து திருமாலுக்கு ஊழியம் செய்யும் அவ் உடைய நங்கையை மணந்து, அத்தகையவன், மகனுக்காக,குறுங்குடியில் அமர்ந்த கடவுளைத் தொழ, அந்தப் புனிதனின் அருளாகிய கிருபையால்,

> கலி யுகம் பிறந்த நாற்பத்து மூன்றாம் நாள், கருதுகின்ற விக்கிரம ஆண்டு, வைகாசி மாதம், வெள்ளிக்கிழமை, விசாக நட்சத்திரம் கூடிய கடக லக்னத்தில், ஒலிக்கின்ற திரைகளையுடைய கடல் சூழ்ந்த பெரிய நிலம் புகழும் வண்ணம் பிறந்த நம்மாழ்வாருக்கு உரிய பெயர் சடகோபன், மாறன் எனவும் தன்னைக் கூறுவார்கள்; விஷ்ணு சித்தன் என்னும் பெரியாழ்வார் நெருக்கம் நிறைந்த நந்தவனங்களில் நிலம் கொத்தும் போது, துளசியின் அடியிலிருந்து மகியின் (பூமி) அம்சமாக, கலி யுகத்தின் நளவருடத்தில், ஆடி மாதத்தில், நிலைபெறுகின்ற பூர நட்சத்திரத்தில் பிறந்து, வண்டு போன்று விழிக்கும் கண்களும், செந்தாமரை முகமுமாய்ப் பிறந்த ஆண்டாளை, சூடிக் கொடுத்தாள் எனக் கூறுவர், கோதை நாச்சியார் என்ற பெயரும் சேரும்.

(வி-ரை) இங்குப் பத்து ஆழ்வாரும் (பதின்மர், 76), கோதை நாச்சியாருமாகப் பதினொருவரே கூறப்படுகின்றனர். ஆழ்வார் பதினொருவர் என்ற குறிப்பும் மரபில் உள்ளமை எண்ணத் தக்கது. பன்னிருவர் என்ற பட்டியலில் வருகின்ற மதுரகவியாழ்வார் இங்குச் சுட்டப்படவில்லை. நம்மாழ்வாரின் மாணவர் என்ற நிலையில் இவர் அங்கு அடங்கித் தனிக் குறிப்புப் பெறவில்லை எனலாம்.

கலைக்களஞ்சியம், 'ஆழ்வார்கள் பதின்மர்: அவர்கள் பொய்கையாழ்வார், பூதத்தாழ்வார், பேயாழ்வார், திருமழிசையாழ்வார், நம்மாழ்வார், குலசேகராழ்வார், பெரியாழ்வார், தொண்டரடிப்பொடி யாழ்வார், திருப்பாணாழ்வார், திருமங்கையாழ்வார் எனப்படுவர். ஸ்ரீ ஆண்டாளையும், ஸ்ரீ மதுரகவியாழ்வாரையும் சேர்த்துப் பன்னிருவர் எனக் கூறுதலுமுண்டு' என அமைக்கின்றது (தொகுதி 1, பக். 454).

'ஆழ்வார்கட்குத் துவாபர யுக விறுதியும் கலி யுகாரம்பமும் அவதார காலங்களாகக் கொண்டு, அவரவர் அவதரித்த கலியப்தம், வருஷ மாச திதி வார நக்ஷத்திரங்கள் இவையென்று பிற்பட்ட குருபரம்பரைகள் கூறுகின்றன' என்பர் (ஆழ்வார்கள் கால நிலை, மு. இராகவையங்கார், மணிவாசகர் நூலகம், 1981, ப. 26). இந்நூல், மதுரகவியாழ்வாரை நீக்கிப் பதினொருவருக்கே முதன்மை கொடுப்பது எண்ணத்தக்கது.

நம்மாழ்வாரின் பிறப்பைத் தீபிகை தரும்போது, தந்தை-தாயரான காரியாரையும், உடைய நங்கையையும் சுட்டுவதுடன் அமைந்து விடாது, காரியாரின் முன் தலைமுறைகளைக் கூறுவது சிறப்பாக எண்ணத்தக்கது.

81. எழுவகைத்தோற்ற முரைசெய் குவம்பக்க
மேர்தெய் வமாகும்
இருநிலத் துறுமக்க ளொன்பதி னிலக்கமா
மியல்பத் திலக்கமதுவோ
பழுதிலா வல்விலங் காகுமே புட்களும்
பத்துறு மிலக்கமாகும்
பாரினூர் வனமதின் பன்னொன்றி லக்கமாம்
பன்னீரி னுற்பவங்கள்
வழுவிலா தோர்பத் திலக்கமாம் பெருகுதா
வரமுமிரு பதிலக்கமாம்
வரைவுற்ற வெண்பத்து நாலிலக் கந்தனை
வழுத்துமுயர் தேவர்வகையின்
நழுவாது ருத்திரன் பன்னொன்று வசுவெட்டு
நயவச்சு வினிதேவர்கள்
நவிலிரண் டாதித்தர் பனிரெண்டு மேசேர்த்து
நண்ணுமுப் பத்துமூன்றே.

இது, எழுவகைப் பிறப்புகளும் அதன் எண்ணிக்கையும் தருவதுடன் தேவர்முப்பத்து மூவரையும் தருகின்றது.

(இ-ள்) எழுவகையான பிறப்புகளைக் கூறுவோம். பதினான்கு நூறாயிரமோ அழகிய தெய்வம் ஆகும். பெரிய நிலவுலகில் அமையும் மக்கள் ஒன்பது இலட்சமாம். இயல்கின்ற பத்து இலட்சம் என்பதுவோ குற்றம் இல்லாத வன்மையான விலங்குகளாகும், பறவைகளும் பத்து இலட்சமாகும். நிலத்தில் ஊர்கின்றவற்றில் பதினொன்று இலட்சமாம். பல நீரில் பிறந்தவைகள் குறைவற்றது ஒருபத்து இலட்சமாகும். பெருகுகின்ற தாவரங்களும் இருபது இலட்சமாம். வரையறை பெற்ற எண்பத்து நாலு இலட்சம் எனும் இதனில் வாழ்த்துகின்ற உயர்வுடைய தேவர் வகையில், விலகாத உருத்திரன் பதினொன்று, வசு எட்டு, நயமான அச்சுவினி தேவர்கள் கூறுகின்ற இரண்டு, ஆதித்தர் பன்னிரண்டு என்றிவற்றைச் சேர்த்து நண்ணுகின்ற முப்பத்து மூன்றாம்.

(வி-ரை) பொருட்டொகை நிகண்டு பிறப்பேழும் அவற்றின் எண்ணிக்கையும் விரிக்கின்றது (609-615). தீபிகையின் ஒத்த கருத்தைக் கூறுவதுடன், தேவர்-தாவர வகையில் எண்ணிக்கை மாறுபடும் பிறிதொரு கருத்து அமைவதையும் தருகின்றது:

தேவர் பதினாறிலக்கந் தாவரம்
பதினெட் டிலக்கம் பகருவர் சில்லோர் (615)

தேவர் முப்பத்து மூவகையினர் எனும் புராண எண்ணத்தையும் நிகண்டு அளிக்கின்றது (திவாகரம், பக் 308).

82. செகமீது சைவத்தி லேபேறு [1]பெற்றவர்கள்
தில்லைவாழு மந்தணர்கள்
திருநீல கண்டரு [2]மியற்பகை யாரோடு
சீர்தடுத் தாட்கொண்டவர்
நிகரில் விறல்மிண்ட னிளையாங் குடிமாற
நேசமுறு கண்ணப்பனும்
நேரிழை யெனும்பாவை நாச்சியா ருந்திரு
நீலநக் கர்மூர்த்தியார்
மிகவுமெறி பத்தனா ரேனாதி நாயனார்
மிக்கவா னாயநாயனார்
மெய்த்தசண் டேசர் காரைக்கா லமைமிக
வேதிருநா வுக்கரசராம்
புகழமர் நீதியா ருருத்திர பசுப்பதி
போற்றுதிரு மூலதேவர்
பொற்புறு சிறுத்தொண்டர் நமிநந்தி சத்தியன்
போர்மூர்க்க னாயனாரே.

83. திருக்குறிப் புத்தொண்டர் மெய்ப்பொருள் சோமாசி
செய்யசாக் கியனாயனார்
சிறப்புலி குலச்சிறை யுடனரி வாட்டாயர்
சேர்தண்டி யடிகள்முருகன்
பெருமே[1]மயர் கோன்கலிக் காமனார் கலையரோடு
பெரியமிழ லைக்குறும்பன்
பேர்பெறும் பொய்யடிமை யில்லாத புலவரும்
பின்னுமப் [2]பூதியடிகள்

---

* 1 பெத்தவர் 2 மியல்ப்

1 ஙமயர் கோன்நலிக் 2 பூர்த்தி

நரசிங்க முனையருந் திருஞான சம்பந்தர்
நல்லமா னக்கஞ்[3]சாறர்
நன்மை பெறு சேரமான் காரியார் வாயிலா
நாயனொடு நெடுமாறனும்
மருவுபுகழ்ச் சோழ னதிபத்தி கலிநீதி
மன்னுங் கலிக்காமனார்
மன துடன் பரமனைப் பாடுவர் கூற்றுவர்
மறைபுகழு முனையடுவரே.

84. கணநாதர் கோட்புலி கழற்சிங்க திருநீல
கண்டபா ணன்னாயனான்
கணம்புல்ல நாயன்செருத் துணையிடங் கழியையடி
[1]கள்கா டவர்கோன்
குணமொடும் பத்தராய்ப் பணிவார் புகழ்த்துணை
கோச்சோழர் நேசர்சடையர்
குரம்பையின் முழுநீறு பூசுமுனி வன்பூசர்
குலமங்கை யர்க்கரசியர்
திணிமாட மாரூர் பிறந்தவன் முப்பொழுது
திருமேனி தீண்டுவாரும்
சித்தஞ் சிவன்பாலும் வைத்தவர் இசைஞானி
செய்யதிரு வேரன்னையும்
அணியாரு மப்பாலு மடிசார்ந்த வர்க்கடிய
ராகவறு பத்துமூன்றும்
அதிகமாஞ் சிவபக்தர் பேறு[2]பெற் றவர்பத்து
மாகவெழு பத்துமூன்றே.

இவை, சைவத்தில் பெயர்பெற்ற நாயன்மாரைப் பட்டியல் செய்கின்றன.

(இ-ள்) உலகத்தில் சைவத்தில் சிறப்புப் பெற்றவர்கள், தில்லை வாழும் அந்தணர்கள், திருநீலகண்டரும், இயற்பகையாரோடு, சீருடைய தடுத்தாட்கொண்டவர், நிகரில்லாத விறல்மிண்டன், இளையான்குடி மாறன், அன்பு பொருந்திய கண்ணப்பன், சிறந்த பெண்ணாகிய பரவை நாச்சியாரும், திரு நீலநக்கர், மூர்த்தியார், மிகவும்

---

* 3 சாரார்
1 களா 2 பெத்த

எறிபத்தனார், ஏனாதி நாயனார், மிக்க ஆனாய நாயனார், மெய்த்த சண்டேசர், காரைக்காலம்மை, மிகவே திருநாவுக்கரசராம், புகழ் அமர்நீதியார், உருத்திர பசுபதி, போற்றும் திருமூலதேவர், பொற்புடைய சிறுத்தொண்டர், நமிநந்தி, சத்தி நாயனார், போர் புரியும் மூர்க்க நாயனார்,

திருக்குறிப்புத் தொண்டர், மெய்ப்பொருள் நாயனார், சோமாசி, செம்மையான சாக்கிய நாயனார், சிறப்புலி, குலச்சிறை யுடன், அரிவாட்டாயர், சேர் தண்டியடிகள், முருகன், பெரும் ஏயர்கோன் கலிக் காமனார், குங்கிலியக் கலையரோடு, பெரிய மிழலைக் குறும்பன், பெயர் பெற்ற பொய்யடிமை யில்லாத புலவரும், பின்னும் அப்பூதி யடிகள், நரசிங்க முனையரும், திருஞான சம்பந்தர், நல்ல மானக்கஞ்சாறர், நன்மை பெறுகின்ற சேரமான், காரியார், வாயிலா நாயனொடு, நெடுமாறனும், மருவு புகழ்ச்சோழன், அதிபத்தி, கலி, நீதி மன்னுகின்ற கலிக்காமனார், மனதுடன் பரமனைப் பாடுவார், கூற்றுவர், மறை புகழ்கின்ற முனையடுவார்,

கணநாதர், கோட்புலி, கழற்சிங்கர், திருநீலகண்ட யாழ்ப்பாணன் நாயனான், கணம்புல்ல நாயன், செருத்துணை, இடங்கழி, ஐயடிகள் காடவர்கோன், குணத்துடன் பத்தராய்ப் பணிவார், புகழ்த்துணை, கோச் சோழர், நேசர், சடையர், உடம்பில் முழுநீறு பூசு முனிவன், பூச(ல)ர், குலமடந்தையான மங்கையர்க்கரசியர், திணிந்த மாடங்களுடைய ஆரூர் பிறந்தவன், முப்பொழுதும் திருமேனி தீண்டுவாரும், சித்தம் சிவன் பால் வைத்தவர், இசைஞானி என்னும் செவ்விய திருவும் அழகுடைய அம்மையும், அணி பொருந்திய அப்பாலுமடிசார்ந்தவர்க் கடியார் ஆக அறுபத்து மூவரும், மிகுதியாக, சிவ பக்தராகப் பேறுபெற்றவர் பதின்மரும் ஆக எழுபத்து மூவர் ஆவர்.

(வி-ரை) சேக்கிழாரின் திருத்தொண்டர் புராணத்திற்கு முன்பு நம்பியாண்டார் நம்பியின் திருத்தொண்டர் அந்தாதியும், நம்பியாரூரரின் திருத்தொண்டத் தொகையும் நாயன்மார் பற்றிய எண்ணிக்கைத் தெளிவுக்கு அடிகோலுகின்றன. தனியடியார் தொகையடியார் என்பனவற்றின் இணைவில் எழுபத்து மூவர் சுட்டப்படுகின்றனர் எனல் போதரும்.

நம்பியாரூரர் தனியடியார் அறுபத்திருவர், தொகையடியார் ஒன்பதின்மர் ஆக எழுபத்தொருவர் பற்றிக் கூறுகின்றார். நம்பியாரூரரையும் இணைக்க எழுபத்திரண்டாகும்.

கூட்ட மொன்பானோ டறுபத்து மூன்று தனிப்பெயரா
ஈட்டும் பெருந்தவத்தோ ரெழுபத்திரண்டாம் (87)

எனத் திருத்தொண்டர் திருவந்தாதியும் கூறுகின்றது.

தீபிகை 73 என ஒரு எண் மிகுதி தருவதால், பின்னுள்ள அடியாரையெல்லாம் ஒரு தொகையாக இணைக்கின்றார் எனலாம். 'அணியாரு மப்பாலுமடி சார்ந்தவர்க் கடியராக' (84) என்பதால், அப்பாலுமடி சார்ந்தாரும், அவர்க்கு அடியரும் என நினைக்கப்படலாம்.

85. மதுரைமீ னாட்சியருள் சங்கத்தர் கோவூர்
வனக்கிழார் கபிலர்பரணர்
மாமூலர் கீரர் நல்கூரின் வேள்வியார்
மருத்துவன் றாமோதரன்
அதுலனரி சிற்கிழார் கோதமன் நத்தத்த
ராலங்குடி வங்கனார்
[1]ஆசிரியர் நல்லந்து வன்சிறு மேதாவி
அக்கார கனிநச்சுமன்
சதுரன் றொடித்தலை விழுத்தண்டி [2]சீத்தலைச்
சாத்தர்மாங் குடிமருதனார்
தமிழ்நிலைக் கல்லாடர்[3] பொத்தியார் நரிவெரித்
தலைநாய கன்றேவனார்
முதுமொழிக் கவுணிய னெறிச்சலூர் மலாடனார்
மோசிகீ ரனச்சுமன்
முகையலூர் சிறுகருந் தும்பியார் உறையூர்
[4]முதுக்கூத்தர் பொன்முடியரே.

86. பாரதம் பாடிய பெருந்தேவ னார்காவிரிப்
பட்டினக் காரிக்கணர்
பண்களத் தூர்க்கிழார் மதுரை யின்மேவு
பாலாசிரியர் தேனீக்குடிக்

---

* 1 ஆசரியர் 2 சித்தலே 3 பொக்கியார் 4 முதுக் கூற்றர்

கீரனிழி கட்பெருங் கண்ணன்வெள்ளி வீதியார்
கிரந்தை யார்[1]குலபதி
கேடிலை மதுரைத் தமிழரசுசெங் குன்றூர்க்
கிழார்பெருஞ் சித்தர்சீர்க்கா
வேரியார் மகனெனுஞ் சாத்தனப் பாலத்தர்
வியன்மதுரை யறுவைவணிகர்
வேளிள வேட்டனார் மதுரைப் பெருமருதர்
மிக்கசெய லூர்ச்செங்கணர்
மாருத்திர சன்மகனார் கொடிஞாழன் மணிபூதன்
மதுரைத் தமிழ்நாயகன்
வண்ணக்கஞ் சாத்தர் கவிப்பெருஞ் சாகரன
வர்க்குக்கிர வழுதியிறையே.

இவை, சங்கப் புலவர் பட்டியல் தருகின்றன.

(இ-ள்) மதுரை மீனாட்சி அருள் பெற்ற சங்கத்தினர், கோவூர் வனக் கிழார், கபிலர், பரணர், மாமூலர், கீரர், நல்கூர் வேள்வியார், மருத்துவன் தாமோதரன், ஒப்பற்ற அரிசிற் கிழார், கோதமன், நத்தத்தர், ஆலங்குடி வங்கனார், ஆசிரியர் நல்லந்துவன், சிறுமேதாவி, அக்காரக்கனி நச்சுமன், வல்லமையுடையவனான தொடித்தலை விழுத் தண்டி (னார்), சீத்தலைச் சாத்தர், மாங்குடி மருதனார், தமிழ் நிலைக் கல்லாடர், பொத்தியார், நரிவெரூஉத் தலையார், நாயகன் தேவனார், முதுமொழியினனான கவுணியன், எறிச்சலூர் மலாடனார், மோசிகீரன், அச்சுமன், முகையலூர் சிறுகருந்தும்பியார், உறையூர் முதுக் கூத்தர், பொன் முடியார்.

பாரதம் பாடிய பெருந்தேவனார், காவிரிப் பட்டினக் காரிக் கண்ணனார், பண் களத்தூர்க் கிழார், மதுரை (யில் மேவுகின்ற) பாலாசிரியர், தேனீக்குடிக் கீரன், இழிகட் பெருங்கண்ணன், வெள்ளி வீதியார், கிரந்தையார், குலபதி, கேடில்லாத மதுரைத் தமிழாசிரியர் (அரசு?) செங்குன்றூர்க் கிழார், பெருஞ்சித்திரனார், சீர்க் காவேரியார் மகன் எனும் சாத்தன், நப்பா

* 1 குப்பதி

> லத்தர், வியன் மதுரையறுவை வணிகர்வேள் இள் வேட்டனார், மதுரைப் பெருமருதர், மிக்க செயலூர்ச் செங்கணர், சிறந்த உருத்திரசன் மகனார், கொடி ஞாழன் மணிபூதன், மதுரைத் தமிழ் நாயகன், வண்ணக்கஞ் சாத்தர், கவிப்பெருஞ் சாகரன். அவர் களுக்கு அரசன் உக்கிர வழுதி.

(வி-ரை) ஆழ்வார், நாயன்மார் எண்ணிக்கையும், பட்டியலும் தந்தது போல, தமிழிலக்கியம் படைத்துச் சிறந்த பிறிதொரு குழுவினரான பழம் சங்கப் புலவரையும் பட்டியல் படுத்தும் பாங்கு இங்குப் புலப்படுகின்றது. பாண்டிய அரசன் உக்கிரப் பெருவழுதியின் தலைமையில் சங்கம் இருந்து, தமிழ்பாடிய நாற் பத் தொன்பதின்மரைப் பற்றிய எண்ணம் இறையனாரகப் பொருளில் உண்டு.

> இனிக் கடைச் சங்க மிருந்து தமிழா ராய்ந்தார் சிறுமேதாவியாரும், சேந்தம் பூதனாரும், அறிவுடையர னாரும், பெருங்குன்றூர் கிழாரும், இளந்திரு மாறனும், மதுரை ஆசிரியர் நல்லந்துவனாரும், மதுரை மருத னிள நாகனாரும், கணக்காயனார் மகனார் நக்கீ ரனாரும் என இத் தொடக்கத்தார் நாற்பத் தொன்பதின்மர் பாடினார் என்ப... அவர்களைச் சங்க மிரீஇயினார் கடல்கொள்ளப்பட்டுப் போந்திருந்த முடத்திருமாறன் முதலாக உக்கிரப் பெருவழுதி ஈறாக நாற்பத் தொன்பதின்மர் என்ப... (சூ1, உரை).

இப்பட்டியலில் உள்ள ஒருசிலரே தீபிகையில் தரப்படுவது சுட்டியறியத்தக்கது. ‘திருவள்ளுவமாலை’யில்உள்ள கவிஞர் பலர் இப்படியலில் சுட்டப்படல் எண்ணத் தக்கது.

சங்க இலக்கியத்தின் வழி, 473 புலவர்களின் பெயர்கள் கிடைக்கின்றன (சங்க இலக்கியம் - பாட்டும் தொகையும், (பதி) எஸ். வையாபுரிப்பிள்ளை, சைவ சித்தாந்த மகா சமாஜம், பாரி நிலையம், சென்னை, (2ஆம்), 1967, பக் 1486-1502). தீபிகை தரும் சில பெயர்கள் அதில் காணப்படாமையும் உண்டு; சில சிறிது வேறு பட்டும் அமைகின்றன.

| தீபிகை | | சங்க இலக்கியம் |
|---|---|---|
| 1. | கோவூர் வனக்கிழார் | கோவூர் கிழார் |
| 2. | கபிலர் | கபிலர் |
| 3. | பரணர் | பரணர் |
| 4. | மாமூலர் | மாமூலனார் |
| 5. | கீரர் | நக்கீரர் |
| 6. | நல்கூரின் வேள்வியார் | — |
| 7. | மருத்துவன் றாமோதரன் | உறையூர் மருத்துவன் தாமோதரனார் |
| 8. | அரிசிற்கிழார் | அரிசிற்கிழார் |
| 9. | கோதமன் | — |
| 10. | நத்தத்தர் | இடைக்கழி நாட்டு நல்லூர் நத்தத்தனார் |
| 11. | ஆலங்குடி வங்கனார் | ஆலங்குடி வங்கனார் |
| 12. | ஆசிரியர் நல்லந்துவன் | நல்லந்துவனார் |
| 13. | சிறுமேதாவி | நல்லூர்ச் சிறுமேதாவியார், நன்பலூர்ச் சிறுமேதாவியார் |
| 14. | அக்காரக்கனி நச்சுமன் | — |
| 15. | தொடித்தலை விழுத்தண்டி | தொடித்தலை விழுத்தண்டினார் |
| 16. | சீத்தலைச் சாத்தர் | சீத்தலைச் சாத்தனார் |
| 17. | மாங்குடி மருதனார் | மாங்குடி மருதனார் |
| 18. | கல்லாடர் | கல்லாடனார் |
| 19. | பொத்தியார் | பொத்தியார் |
| 20. | நரிவெரித்தலை | நரிவெரூஉத்தலையார் |
| 21. | நாயகன் றேவனார் | தேவனார், மதுரைத் தமிழ்க்கூத்தன் நாகன் தேவனார் |
| 22. | கவுணியன் | மதுரைக் கவுணியன் பூதத்தனார் |
| 23. | எறிச்சலூர் மலாடனார் | கோனாட்டு எறிச்சலூர் மாடலன் மதுரைக் குமரனார் |
| 24. | மோசி கீரன் | மோசி கீரனார் |
| 25. | நச்சுமன் | — |
| 26. | முகையலூர் சிறுகருந்தும்பியார் | சோணாட்டு முகையலூர்ச் சிறுகருந் தும்பியார் |
| 27. | உறையூர் முதுக்கூத்தர் | முது கூத்தனார் |
| 28. | பொன் முடியர் | பொன் முடியார் |
| 29. | பாரதம் பாடிய பெருந்தேவனார் | பாரதம் பாடிய பெருந்தேவனார் |

| | | |
|---|---|---|
| 30. | காவிரிப் பட்டினக் காரிக் கணர் | காவிரிப் பூம் பட்டினத்துக் காரிக் கண்ணனார் |
| 31. | களத்தூர்க் கிழார் | — |
| 32. | மதுரைப் பாலாசிரியர் | மதுரைப் பாலாசிரியர் சேந்தன் கொற்றனார், மதுரைப் பாலா சிரியர் நப்பாலனார், மதுரைப் பாலாசிரியர் நற்றாமனார் |
| 33. | தேனீக்குடிக் கீரன் | — |
| 34. | இழிகட் பெருங்கணன் | பெருங்கண்ணனார், விழிக்கட் பேதை பெருங்கண்ணனார் |
| 35. | வெள்ளி வீதியார் | வெள்ளி வீதியார் |
| 36. | கீரந்தையார் | கீரந்தையார் |
| 37. | குலபதி | கிடங்கில் குலபதி நக்கண்ணனார் |
| 38. | மதுரைத் தமிழாசிரியர் செங்குன்றூர்க் கிழார் | — |
| 39. | பெருஞ் சித்தர் | பெருஞ்சித்திரனார் |
| 40. | காவேரியார் மகனெனுஞ் சாத்தன் | — |
| 41. | நப்பாலத்தர் | நப்பாலத்தனார் |
| 42. | மதுரை அறுவை வணிகர் வேளிள வேட்டனார் | மதுரை அறுவை வணிகன் இள வேட்டனார் |
| 43. | மதுரைப் பெரு மருதர் | மதுரைப் பெருமருதனார் |
| 44. | செயலூர்ச் செங்கணர் | செங்கண்ணனார் |
| 45. | உருத்திரசன் மகனார் | உருத்திரனார் (?) |
| 46. | கொடி ஞாழன் மணிபூதன் | பூதனார் |
| 47. | மதுரைத் தமிழ் நாயகன் | மதுரைத் தமிழ்க் கூத்தனார் (?) |
| 48. | வண்ணக்கஞ் சாத்தர் | வண்ணக்கன் சோரு மருங்கும ரனார் (?) |
| 49. | கவிப்பெருஞ் சாகரன் | — |

தீபிகை தரும் பட்டியலை ஓரளவு அவ்வாறே தொகையக ராதி (கழகம்) தருவது இக்கருத்தின் பரப்பை வெளிப்படுத்து கின்றது. 'நாமக ளமிசமாய கடைச்சங்கப் புலவர்' என இவர் தரப்படுகின்றனர் (பக் 142 -143) .... நல்கூர் வேள்வியார், கோதமனார், அக்காரக் கனி நச்சனார், போக்கியார் (பொத்தி யார் ?), நாகன் றேவனார், கவுணியனார், நச்சமனார், உறை யூர் முதுகூற்றனார், இழிகட் பெருங்கண்ணனார், பெருஞ்சித் திரனார், செயிர்க் காவிதியார் மகனார் சாத்தனார், செயலூர்க் கொடுங்கண்ணனார், உருத்திர சன்ம கண்ணர், மதுரைத் தமிழ்

நாகனார், வண்ணக்கஞ் சாத்தனார், கவிசாகரப் பெருந்தேவனார் போன்று பெயரில் சில சிறு வேறுபாடு உள. இப் பட்டியல்களின் அடிப்படை திருவள்ளுவ மாலை யாகும்.

ஐம்பத்தொருவர் என ஒவ்வொரு பெயர் இரண்டாகப் பிரிக்கப்பட்ட நிலையில் அமைவதைத் தொகையகராதியின் பழைய பதிப்பு வழி (மழவை மகாலிங்கையர்?) யும் காண முடிகின்றது. அங்கும் ஒவ்வொரு பெயரில் சிறு வேறுபாடு உள. சான்று— கல்லாடர் > பல்லாடர் ; நல்கூர் வேள்வியார் > நங்கூர் வேள்வியார்.

87. மன்னவர் தசாங்கம் வகுத்துரைப் பாம்வான
மட்டுமுயர்ந் தமலையும்
வண்டற் கொழிக்கு[1]நெடு நீர்யாறும் வளநாடு
வண்மைபெறு திருநகரமும்
பொன்னிலகு மாலையும் மாதர்மன மனமும்
பொருங்கதலி மடல்போற்செவீ
பொற்பத முன்பினிருத் திவதனம் பான்மை
போலாகி யெண்பத்திரண்
டன்னவங் குலியுயர்க் குதிரையும் வாலுங்கை
யங்கோச மடியேழுமே
[2]அவனியிற் றோய்ந்துபால் சங்கம்ப தத்துகிர்கி
ளாயெவ்வி தஞ்சூழ்ந்துமே
மின்னுமெய் கைவால் மருப்புப் பதத்தி[3]னுயிர்
வீழ்த்திமுழ மேழுமுயர்ந்து
மேவுமொன் பதுநீண்ட யானையுங் கொடிமுரசும்
வெற்றியிர தமுமாகுமே.

இது, அரசனின் தசாங்கம் கூறுகின்றது.

(இ-ள்) அரசரது தசாங்கங்களை வகுத்துக் கூறுவோம். வானம் அளவும் உயர்ந்த மலையும், வண்டல் கொழிக்கின்ற நெடு நீர் ஆறும், வளநாடும், வண்மைபெறுகின்ற திரு நகரமும், பொன் ஒளிர்கின்ற மாலையும், பெண்கள் மனம் போன்ற மனமும், வாழைமடல் போன்ற செவியும், பொன் பாதங்கள் முன்னும் பின்னும் வைத்து, முகம் பால் போல் வெண்மையாகி, எண்பத்திரண்டு விரலளவு

* 1 நேரு 2 அவனியற் 3 னுயர்

உயர்ந்த குதிரையும், வாலும், கை, அழகிய கோசம், நான்கு கால்கள் என்ற ஏழுஉறுப்பும் நிலத்தில் படும் படி, பாலையும் சங்கையும் ஒத்த வெண்ணிற நகங்களு டைய கால், கோபமுற்று எந்தவிதம் சூழ்ந்தாலும் மின்னுகின்ற உடல், கை, வால், கொம்பு, கால்கள் என்பனவற்றால் உயிர்க் கொலை செய்து, ஏழுமுழம் உயர்ந்து ஒன்பதுமுழம் நீண்ட யானையும், கொடி, முரசும், வெற்றித்தேரும் ஆகுமே.

(வி-ரை) தசாங்கப் பத்து, தசாங்கத்தயல் எனப் பிரபந்தங்கள் பற்றிப் பேசுகின்றமையால், தீபிகை தசாங்கங்கள் எவை எனும் பட்டியலை இங்குத் தருகின்றது எனலாம்.

சேந்தன் திவாகரம், தசாங்கங்களைப் பல் பொருட்கூட்டத் தொரு பெயர்த் தொகுதியில் (பக் 303)தருவதுடன்,'அரசுவாவின் குறிவகை' என (பக் 313) அரசனின் யானையின் இயல்பையும் விரிக்கின்றது. தீபிகையின் கருத்துக்கு இதனை முன்னோடி எனலாம்.

இதுபோன்றே, அரசகுதிரையின் இயல்பு, பிங்கலத்தில்,

மாதர்தம் மணமென மிக்க மணத்தது
வாழை மடலென வளர்ந்த செவியது
நாலு தாளு மெருத்து முகனும்
வெந்நு முன்னும் வெண்மை யுடையதாய்
எண்பத் திருவிர லுயர முயர்ந்தது
பண்புடை யரசர்க் காவது பரியே (1493)

எனக் கூறப்படுகின்றது. இங்கு 'மணம்' எனக்கூறப்படுவது தீபிகை யில் 'மனம்' என அமைவது கவனித்தற்குரியது.

88. அரசர்க் குறுஞ்சின்ன மிருபத்தி யொன்றான
தரியா சனமிரத்னத்
தமைகிரீட முபய சாமர மிணைக்கய
லதிருமும் முரசங்[1]குடை
விரைகமழ்ந் தொழுகுபூ மாலைபூ ரணகும்பம்
விண்டலத் தெழுபதாகை
வேலைநிகர் மடுவுடுத் திடுபுரிசை தோரண
மேவிவா டாததீபம்
புரையிறுங் குடிலமன மதமொழுகு யானையொடு
பொங்குகட லாமை[2]கொலைகள்

* 1 கொடை 2 கோல்கள்

புரிசிங்க மருவுமக ரந்தோட்டி சங்காழி
பொருதிடப மாகுமேலே]
தரமான சுருதியிற் சொல்லரிய செங்கோல்
தரித்தரசு புரிமன்னவர்
தம்மியல் மதிப்பறம் பொருளின்ப மன்புபுகழ்
தருமறுமை யேழாகுமே.

இது. அரசர்க்குரிய சின்னங்கள் இருபத்தொன்றும், இயல்பு ஏழும் கூறுகின்றது.

(இ-ள்) அரசருக்கு அமைகின்ற இருபத்தொன்றான சின்னங்கள், அரியாசனம், இரத்தினத்தால் அமைகின்ற முடி, இரு சாமரம், இணைக்கயல்கள், அதிருகின்ற மூன்று முரசம், குடை, மணம் கமழ்ந்து ஒழுகுகின்ற பூமாலை, பூரணகும்பம், விண் தலத்தில் எழுகின்ற கொடி, கடலை ஒத்த அகழியைச் சுற்றிலும் பெற்ற மதில், தோரணம் பொருந்தி, வாடாத விளக்கு, குற்றம் இல்லாத வஞ்ச மனத்த மதம் ஒழுகும் யானையொடு, பொங்குகின்ற கடல், ஆமை, கொலைகள் செய்யும் சிங்கம், மருவுகின்ற மகரம், தோட்டி, சங்கு, சக்கரம், பொருகின்ற இடபம்என்பன ஆகும். மேலே தகுதியான வேதத்தில், சொல்லுதற்கரிய செங்கோல் தாங்கி அரசு செய்கின்ற மன்னவர் தம் இயல்பு, மதிப்பு, அறம், பொருள், இன்பம், அன்பு, புகழ் தருகின்ற மறுமை, என்ற ஏழுமாகும்.

(வி-ரை) தாசாங்கம் மட்டுமன்றிப் பிற சிலவும் அரசனுக்குரியனவாக அமைதல் பற்றி இங்குச் சின்னப் பட்டியல் தருகின்றார் எனலாம். பொருட்டொகை நிகண்டு, பழம்புலவர் கோட்பாடாக இப் பட்டியலைத் தருகின்றது (945).

திவாகரம் செங்கோல் வேந்தனின் எழுவகைப் பேறுகளாகத் தருவனவற்றில் மதி, பொறுமை என்பன, தீபிகையில், மதிப்பு, மறுமை என மாறியது சிந்தித்தற்குரியது:

அறம் பொருள் இன்பம் அன்பு பொறுமை
திறம்பாப் புகழ் மதி என்றிவை ஏழும்
பெருஞ் செங் கோலின் எழுவகைப் பேறே (பக் 296).

89. அரசருக் குக்குழு புரோகிதர் சாரர்சே
னாபதிமந் திரிதூதர்
ஐந்தாகு மரசருக்குத் துணைவர்மந் திரிகரு
மாதிகாரர் சுற்றமும்
அணிநகர மாக்கள்கடை [1]காப்பாளர் பரிவீரர்
ஆனைசே னைத்தலைவரெட்
டானவவ் வரசருக் குறுதியின் சுற்றநட்
பாளர்மறை யந்தணாளர்
மருத்துவக் கலைஞரு நிமித்திகப் புலவரு
மடைத்தொழில ராகவைந்தாம்
மன்னுமர சியலணிப் படைமேவு குடிகூழ
மைச்சுநட் பரணாறதாம்
[2]வருமர சியலாறு வகையான தோதத்தம்
வருணத்தை விட்டுநீங்கா
மன்னுநிலை பெறப்பாது காத்துயி ரளித்தலே
மாறாத வறநிலையறம்
நிரைமீட்டு வருபகையை வென்றுசெஞ் சோறுண்ட
நீள்கடன் கழியாரையே
நிறைவுறத் தண்டித்து குறைவுறச் செய்தல்மற
நிலையறஞ் சென்னெறிவழி
நின்றுதத் தந்நிலை முயன்றுபெறு [3]பொருளற
நிலைமேவு பொருளாகுமே
நேர்பகைவர் பொரு[4]டிறைப் பொருள்சூதில் வெல்
பொருளு
நிலைமற நிலைப்பொருளதாம்
பருவமுங் குலமுமொ ழுக்கமுங் குணமொத்த
பாவையைத் தீவேட்டுமே
பதிவினி லிருத்தலே யறநிலை யினின்பமாய்ப்
பகர்வரே றைத்தழுவியும்
பாணத்தை வில்லில் வைத்திலக் கந்தனை
பாராத் திருந்தெய்துமே
பண்பிலா நெறியிலும் பாவையை மணத்தலே
பரமற நிலையின்பதே.

இது, அரசர்குரிய குழு, துணைவர், உறுதிச் சுற்றம், அரசியலணி அரசியல்வகை என்பனவற்றைக் கூறுகின்றது.

---

* 1 கார்ப்பாளர் 2 மரு 3 பொருளுற 4 டிறப்

(இ-ள்) அரசருக்கு உரிய குழு, புரோகிதர், சாரர், சேனாபதி, மந்திரி, தூதர் என ஐந்து ஆகும்; அரசருக்கு உரிய துணைவர், மந்திரி, கருமாதிகாரர், சுற்றம், அழகிய நகர மக்கள், கடைகாப்பாளர், குதிரை வீரர், யானை வீரர், சேனைத் தலைவர் என எட்டாகும்; அவ் அரசனின் உறுதிச் சுற்றம், நட்பாளர், மறை ஓதும் அந்தணாளர், மருத்துவக் கலைஞர், நிமித்திகப் புலவர், படைத்தொழிலர் என ஐந்தாகும்; நிலைத்திருக்கின்ற அரசியலணி, படை, மேவுகின்ற குடி, கூழ், அமைச்சர், நட்பு, அரண் என்ற ஆறுமாம்; வரும் அரசியல் வகை ஆறாக ஓதப்படுகின்றது - தத்தம் வருணத்தை விட்டு நீங்காது நிலைத்து, நிலைபெறப் பாதுகாத்து உயிர் அளித்தல் மாறாத அறநிலையறம், ஆநிரையை மீட்டு, வருகின்ற பகையை வென்று செஞ்சோற்றுக் கடன் கழியாதோரைத் தண்டித்துக் குறைவுறச் செய்தல் மறநிலையறம்; செல்லுதற்குரிய வழியில் சென்று தத்தம் நிலையினால் முயன்று பெறுகின்ற பொருள் அறநிலைப் பொருள்; நேரிடுகின்ற பகைவரின் பொருள், திறைப் பொருள், சூதில் வென்ற பொருள் என்பன மறநிலைப் பொருள்; பருவமும், குலமும், ஒழுக்கமும், குணமும் ஒத்த பெண்ணைத் திருமணம் புரிந்து மனம் ஊன்றி வீட்டில் இருப்பது அறநிலை இன்பம் எனக் கூறுவர்; ஏறு தழுவியும், அம்பினை வில்லில் வைத்து இலக்கினை நோக்காது இருந்து எய்தும், பண்பு இல்லாத வழியிலும் பெண்ணை மணத்தல் வேறுபட்ட மறநிலை இன்பம்.

(வி-ரை) அரசர்க் குழு ஐந்தும் அவரின் விளக்கமும் பொருட்டொகை நிகண்டில் விரிவாகக் கூறப்படுகின்றன (362—367). சாரர் எனத் தீபிகை கூறுவதை அந்நூல் சாரணர் எனத் தருகின்றது. அரசர்க்குத் துணைவர் எண்மரின் பட்டியலும் இங்கு உண்டு (659). ஐம்பெருங்குழு, எண் பேராயம் பற்றிப் பண்டைத் தமிழர் எண்ணமும் இங்கு நினைக்கத் தக்கது (சிலம்பு 5.157 அடியார்க்கு நல்லார் உரையில் இரண்டும் விளக்கம் பெறுகின்றன. அரும்பதவுரையாசிரியரிடம் சிறிது கருத்து வேறுபாடு உண்டு.

ஐவகை உறுதிச் சுற்றம் பற்றியும் மேற்படி நிகண்டு நூல் விரிவாக மொழிகின்றது (371-376). அரசியலணி எனத் தீபிகை

கூறும் ஆறுபொருளைத் திவாகரம் அரசியலறுவகைப் பெயர் (பக் 292) எனத் தருகின்றது. வள்ளுவரின்,

படைகுடி கூழ் அமைச்சு நட்பரண் ஆறும்
(உடையான் அரசருள் ஏறு) (381)

என்ற கருத்துத் தொடர்ச்சியாக இவை அமைகின்றன.

அரசியல் வகையின் ஆறு வகை நிலைகளையும் அவற்றின் விரிந்த விளக்கங்களையும் திவாகரம் தருவது (பக் 293-294) தீபிகைக்கு முன்னோடி எனலாம்.

90. தூயகிருத யுகமீது முடிபுனைந் தியல்புடன்
சுருதிமுறை தவறாமலே
துகிர்முத்தம் விளைகடலு டுத்தபுவி மன்னரிற்
சுடர்முடிப் பலிவந்தனன்
மீயுயர் திரிசங் கரிச்சந் திர[1]னளன்
மிக்கபுகழ் புருகுச்சனும்
மேனாடர் காணுமாந் தாதாபு ரூரவா
மீளிமுசு குந்தனோடு
சீயநிகர் விறலதித் தியாகியுன் னாபனுஞ்
செப்புமிர ணியவர்மனும்
செல்வமிகு வைரவா னந்தன் விரோசனன்
றெள்ளுபுவி சக்கிரவர்த்தி
காயுமதி மன்னர்முடி யீடறுமிரு தாளினான்
கனதீர வாணாசுரன்
ககனர்பணி யிரணியாட் சன்னமரர் துயர்களை
கதித்தவை ரோசனனுமே.

இது, கிருத யுகத்தில் ஆண்ட மன்னர் பட்டியல்.

(இ-ள்) தூய கிருதயுகத்தில் கிரீடம் அணிந்து, இயல்பாக, வேத நெறி தவறாது, பவளமும் முத்தும் விளைகின்ற கடல் சூழ்ந்த உலகை ஆண்ட அரசரில், ஒளிவிடும் கிரீடம் அணிந்த மாபலி வந்தான். மேல் உயர்ந்த திரிசங்கு, அரிச்சந்திரன், நளன், மிகுந்த புகழுடைய புருகுச்சனும், மேல் நாட்டினர் காண்கின்ற மாந்தாதா, புரூரவா, பெருமையுடைய முசுகுந்தனோடு, சிங்கத்தை ஒத்த வீரமுடைய அதித்தியாகி, உன்னாபனும், கூறும் இரணிய

---

* 1 ளாளன்

வர்மனும்,செல்வம் மிக்க வைரவானந்தன்,விரோசனன், தெளிவான உலக சக்கிரவர்த்தி; சினமுடைய அறிவுடைய அரசரின் முடிகளை இடறுகின்ற இருகால்களையுடைய மிக்க வீரனான வாணாசுரன், தேவரை ஏவல் கேட்கும் இரணியாட்சன், தேவர் துன்பங்களை மிகுதிப்படுத்திய வைரோசனனுமாம்.

(வி-ரை) முதல் யுகமான கிருதம், பதினேழு லக்ஷத்துஇருபத்தெண்ணாயிரம் ஆண்டுகளையுடையது (அபிதான சிந்தாமணி, பக் 444). இக் கால மன்னர் பற்றிய இப்பட்டியலின் அடிப்படை தெளிவுபடவில்லை. இவரில் ஒரு சிலரைக் குறித்த புராணச் செய்திகள் கிடைக்கின்ற போதும், எல்லோரைப் பற்றிய செய்திகளும் தெளியுமாறில்லை.

அறுவகைச் சக்கரவர்த்திகளைப் பிங்கலம் பட்டியல்செய்யும் போது, இந்த, தொடர்ந்தயுக மன்னர் ஒரு சிலர் அடங்குகின்றனர்.

அரிச்சந் திரனளன் முசுகுந்தன் புரூரவாச்
சகரன் கார்த்த வீரிய னென்றிவர்
அறுவகைச் சக்கர வர்த்திக ளென்ப (736)

ஒலக்க அரசர் இருபத்திருவரைத் தொகையகராதி(ப.64)கூறுவதும் இங்கு ஒப்பு நோக்கத் தக்கது: அரிச்சந்திரன், நளன், புருகுச்சன், புரூரவன், முசுகுந்தன், கார்த்த வீரியன், கயன், அம்பரீடன், சசிபிந்து, சிபி,பிருது, மருத்துவான், பரதன், சுகோத்திரன், இராமன், திலீபன், இரகு, அந்திதேவன், யயாதி, மாந்தாதா, பகீரதன், அணங்கன்.

91. பீடுறு திரேதா யுகத்திற் சுவாயம்பு
பிறபலச் சுவாரோசிஷன்
பெருமைமிகு சகரனயம் மாதன் பகீரதன்
பிழையிலா யுவராசனும்
சேடுறும் ருத்திர ...... னங்கார கீசன்
சசிபிந்து பார்க்கவராசனும்
சிங்கா தனத்துறு மம்பரீடன்சிபி
திகழணிப் பிந்துராசன்
ஆடுகே சராசன குடன்நந்தி தேவ
னடல்காத்த வீரியனத்திரன்

அவனிமுழு துஞ்சர்வ சித்தியாக தெக்கணைக்
கருள்செயும் பரசுராமன்
நீடுபுகழ் காகுத்தன் மசுமா லீரெகு
நெறியுறு திலீபவ(ர)சனாம்
நித்தமும் முரசார்ந்த தயரதனி ராமனு
நிதமுறு குசலவனுமே.

இது, திரேதா யுகத்தில் ஆட்சி செய்தவர் பட்டியல்.

(இ-ள்) பெருமை பொருந்திய திரேதாயுகத்தில் சுவாயம்பு, பிரபலமான சுவாரோசிஷன், பெருமை மிக்க சகரன், அயம்மாதன், பகீரதன், பிழை இல்லாத யுவராசனும், அழகு அமைந்த உருத்திரன், ...அங்காரகிசன், சசிபிந்து, பார்க்கவராசன், அரியணையில் உற்றஅம்பரீடன், சிபி, திகழும் அழகினனானபிந்துராசன், வெற்றியுடைய கேசராசன், நகுடன், நந்திதேவன், வலிமையுடைய காத்தவீரியன், அத்திரன், உலகம் முழுவதும், முழுமையாகத் தனக்கு வெற்றியாக, தான்கேட்கும் தட்சணைக்குக் கொல்லாமல் அருளிய பரசுராமன், பெரும்புகழுடைய காகுத்தன், மசுமாலீ, இரகுவம்சத்தில் உள்ள திலீபன் அரசனாம், என்றும் வெற்றி முரசமைந்த தயரதன், இராமனும், தகுதியுடைய குசன் லவன் என்பவரே.

(வி-ரை)இரண்டாவதான திரேதாயுகத்திற்குக் காலம் 12, 96,000 ஆண்டுகள்.

கம்பராமாயண பாலகாண்ட குலமுறை கிளத்துப்படலம் மனு, இட்சுவாகு, ககுத்தன், நிமி, மாந்தாதா, திலீபன், சிபி, சகரர், பகீரதன், சுநாசன், குவலையாசுவன், ரகு, அயன் எனத் தசரதனுக்கு முந்தியவர்களைத் தருகின்றது (637- 49). இவருள் சிலர் மேற்கண்ட நிருத, இத்திரேதா யுகமன்னராகச் சுட்டப் படுகின்றனர்.

கதிரவன் வழிமுறையினரான நூற்றுப் பதினறுவரைத் தொகையகராதி (ப.68)சுட்டுவதில், இவ்யுகமன்னர் சிலரின் பெயர் அமைகின்றது.

92. புகழ்பெறு துவாபர யுகத்துவிறன் மன்னரிற்
பொருநர்முடி யிடறுசோழன்
பொன்னார் புயத்தனெதி ரொன்னார்கள் வெந்நிடப்

பொருதுவீரச் சசிபுதன்
திகழொளி பரப்பிடுந் திங்கள்வெண் குடையினான்
றிண்புயத் தாராபுதன்
தினமுமன்ன வரறம் வழுவாமல் வளமுடன்
செய்யுமர்ச் சுனபுதனோடும்
மகமுனிவ ரந்தணர்க ளாதுரர்க் காதித்திய
மனமகிழ்ந் தெக்காலமும்
மாறா தளிக்குமுயர் கொடையினான் மன்னர்க்கு
மன்னனிந் திரத்தும்மினன்
தகைபெறும் பாரிசாதன் சந்தனன் பாண்டு
தாலத்துளோர் கள்மெச்சும்
தரமான மனுநெறிக ளொருபோது மழிவிலாத
தருமபுத் திரமன்னுமே

இது, துவாபர யுகத்து மன்னர் பட்டியல்.

(இ-ள்) புகழ் பெறும் துவாபர யுகத்தின் வலிமையுள்ள அரசரில் போர் செய்கின்றவரின் முடிகளை இடறுகின்ற சோழன், பொன் ஒத்த புயங்களையுடையவன், எதிர்க்கின்ற பகைவர்கள் புறமுதுகிடப் போர் செய்யும் சசிபுதன், விளங்குகின்ற ஒளிபரப்பும் நிலவு போன்ற வெண் குடையை யுடையவனான வலிமையான தோள்களை யுடைய தாராபுதன், நாள்தோறும் அரசர்க்குரிய அறம் வழுவாது வளமுடன் செய்யும் அர்ச்சுனபுதன், மகவு, முனிவர், அந்தணர்கள், நோயாளிகளுக்கு ஆன உப சரணை, மனம் மகிழ்ந்து எல்லாக் காலமும் மாறாது கொடுக்கும் உயர்கொடை காரணமாக மன்னர்க்கு மன்னனான இந்திரத்துய்ம்மன், தகுதி பெறும் பாரி சாதன், சந்தனு, பாண்டு, உலகத்தினர் போற்றும் தகுதியான மனுநெறிகள் ஒருபோதும் அழிவு இல்லாத தருமபுத்திரன் என்னும் அரசனுமாம்.

(வி-ரை) மூன்றாவதான துவாபர யுகத்துக்கு 8,94,000 ஆண்டு கள் காலமாம்.

வில்லிபாரதம், ஆதிபருவ, குருகுல-சம்பவச் சருக்கங்களில் தரும் சில மன்னர் பெயர் முன்னும் இங்கும் பொருந்துகின்றன. சந்திரகுல வரலாற்றில், சந்திரன், புதன், புரூரவசு, ஆயு, நகுடன், யயாதி, பரதன், அத்தி, குரு, சந்தனு, திருதராட்டிரன், பாண்டு, தருமன்... என்போர் சுட்டப்படுகின்றனர்.

93. கலியாதி யிற்றர் மராசன் பரீட்ஷித்து
கமையுறுஞ் செனமேசெயன்
கனமான பதுமகந் திருவனோடு தயராககர்
கார்பருப் பதராசனுங்
கருதுபல் லாளசக் கரவர்த்தி செயதேவர்
கனமகோ தரகேயூரன்
கார்முக முறும்ராச சேகரன் ருத்திரசெயர்
கரியொத்த சந்திரகுத்தன்
பெலவிஷ்ணு வர்த்தனொடு மீரேழு வரவர்களுட
பெண்வழியில் விக்கிரமார்க்கன்
பின்புசாலி வாகனன் போச ராசர்
பின்ராசாதி ராசநரேந்திரன்
பேசரிய மாதவர் மன்கோட கன்னருள்
பெருகுகலி காலசோழன்
பிரசித்தன் யவனசோழன் பாண்டிய ராசனொடு
பெருமையுறு மன்னரொன்பான்
இலகுமுன் மன்னரைப் பொருதியவ் வரசுசெ
யின்பயாத வராயனும்
ஏர்நீல கண்டருத் திரராயர் மன்னர்பணி
யெழில்பெற்ற சம்புராயன்
இசைபெறும் பல்லாள ராயனுட னேயனு
வேமசக் கரவர்த்தியும்
இகல்மன்ன ரைக்கோறு மூர்கண்டி ராயனு
மிசைபெறு ப்ரதாபருத்ரன்
பலபுகழ் சிறந்தம்ப தேவாரி கரராயர்
பண்புபிரபு டர்கிருஷ்ணரும்
படிவீர ஸ்ரீநரசிம் மனலாங் கூலதேச
பதிவிருப் பாட்சிசிக்கா
பதிகிரீ புருடோத்த மன்னன்நா நாயக்கர்
பலராம தேவரத்தர்
பார்த்திடும் ராமராஜனைக் கோநதி வேங்கட
பதியுமிரு பத்துமூன்றே.

இது, கலியுக மன்னரைத் தருகின்றது.

(இ-ள்) கலியின் தொடக்கத்தில் தருமராசன், பரீட்சித்து, பொறுமையுடைய செனமேசெயன், சீர்மையுடைய பதுமகந்திருவனோடு, தயராககன் (?), கரியபருப்பதரா சனும், கருது பல்லாளன், சக்கரவர்த்தி, செயதேவர், சீரிய மகோதரகேயூரன், வில் தாங்கிய ராசசேகரன்,

உருத்திர செயர், யானை ஒத்த சந்திரகுத்தன், வலிமை யான விஷ்ணுவர்த்தனொடும் பதினால்வர் ; அவர்களு டைய பெண்வழியில் விக்கிரமார்க்கன், பின்பு சாலி வாகனன், போச ராசன், பின்பு ராசாதிராச நரேந் திரன், பேசுதற்கு அரிய மாதவர்மன், கோடகன், அருள் பெருகுகின்ற கலிகால சோழன் ( கரிகால் ? ), பிரசித்தனான யவனசோழன், பாண்டியராசனொடு பெருமை பொருந்திய மன்னர் ஒன்பதின்மர்; விளங்கு கின்ற முன்னைய அரசரைப் பொருது அவ் அரசினை ஆட்சி செய்யும், இன்ப யாதவ ராயனும், அழகிய நீல கண்டருத்திர ராயர், அரசர்கள் வணங்கும் அழகு பெற்ற சம்புராயன், புகழ் பெற்ற பல்லாளராயனு டனே, அனுவேம சக்கரவர்த்தியும், பகை மன்னவரைக் கொல்லும் ஊர்கண்டிராயனும், புகழ் பெறுகின்ற பிரதாபருத்திரன், பல புகழ் சிறந்த அம்ப தேவாரிக ராயர், பண்புடைய பிரபுடர், கிருஷ்ணரும், படிகின்ற வீர ஸ்ரீ நரசிம்மன், அலங்கூல கேசபதி, விருப்பாட்சி, சிக்காபதி, ஸ்ரீ புருடோத்த மன்னன், நாநாயக்கன், பலராம தேவரத்தர், பார்த்திடும் ராமராணைக்கோன், அதிவேங்கட பதியும் என இருபத்து மூவரே.

(வி-ரை) நான்காவதான கலியுகத்திற்கு ஆண்டுகள் 4, 33,000 ஆகும்.

தருமனுக்குப்பின் மரபு தொடர்வது, அபிதான சிந்தாமணி வழியறியப் படுகின்றது (ப. 1601). அர்ச்சுநன் குமரன் அபிமன்யு தேவி உத்தரை - குமரன் பரீக்ஷித்து, தேவி மாத்திரை - குமரன் ஜநமேஜயன், குமரன் சதானீகன் .... என இது செல்கின்றது.

சந்திரகுத்தன் என்பதால் குப்த மன்னரும், விஷ்ணுவர்த்தன் என்பதால் சாளுக்கிய வம்சமும் எண்ணப்படுதல் தெரிகின்றது.

விஜயநகர வேந்தர் பிரபுடர் (பிரவிட தேவராயன் :1419-44) கிருஷ்ணர் (கிருஷ்ண தேவராயன் :1509-1530), வீர ஸ்ரீ நரசிம்மன் (வீர நரசிம்ம ராயன் : 1497-1508) என்பதால் நினைக்கப் படுகின் றனர் போலும்.

கீழைச் சளுக்கியருக்குப் பின் ஆந்திர தேசாதிபதிகளாக இருந்தவரில் பிரதாபருந்திரன் (?–1187) என்பவன் அறியப்படு கின்றான்.

பதினான்கு, ஒன்பது, இருபத்து மூன்று என மன்னர்களை எண்தொகை கூறுதல் இன்னும் சிந்தித்தற்குரியது.

இம் மன்னர்களைப் பற்றிய முழுமையான தெளிவு கிடைத்திலது.

94. இந்துகுல வழுதியர னேகமதி லேசுந்த
ரேசர்திரு விளையாடலோ
எட்டெட்ட றிந்திடும் பாண்டியரிற் குலசேக
ரேந்திரன் மலையத்துவசன்
இன்புறு தடாதகை கணவனென வருசுந்த
ரேசரருளுக் கிரபாண்டியன்முதல்
வீரனபி ஷேகன் விக்கிரம குலோத்துங்க
ராசசே கரபாண்டியன்
சுந்தரேசப் பாதசே கரன்ராச சன்றுலத்
துவசன் குங்குமன்
சோளசூ டாமணி யனந்தகுணன் வரகுணன்
சூடாமணிச் சுகுணனும்
சொல்துவச ராசகுலோத்தமன் பிரதாப
சூரியன் சுரதபாண்டியன்
தூயகுல பூஷணன் சித்ரத்துவ சன்ராச
சூடாமணி செண்பகன்
சிந்தைமகிழ் வங்கிச சூடாமணி யுக்கிர
சேனன் விக்கிரமகஞ்சகன்
சித்திர தருமன் சமரகோ லாகலன்
சித்ரசேன னுஞ்சத்துருஞ்
சயன்சித்ர விரதன் குலசூடா மணிவங்க
சேகரன துலகீர்த்தி
சித்திரவிக் கிரமனதுல விக்கிரம னுடன்குல
சேகர னரிமர்த்தனன்
மந்தர புயன்வீர பாக்கரன் பிரதாப
மார்த்தண்டன் வம்சத்துவசன்
வம்சவிச் சிரோமணி ரிபுமர்த் தனன்வீர
வாகுவிக் கிரமவாகு
வங்கபூ ஷாசக னாதன் பராக்கிரமன்
வாகுவும் பாண்டீசுவரன்
மால்பராக் ரமராச சார்த்தூல ராச
[1]மார்த்தாண்டர் பாண்டியவம்சனே.

---

1 மார்த்தார்த்தர்

95. பந்தமுறு ராசகெம் பீரன்ரா சேந்திரனும்
பாண்டிய[1]வங் கியப்பதாகன்
பாண்டியவங் கிஷதீ பனும்புரந் தரசித்து
பகர்சோழ வம்சாந்தகன்
பாலனாம் ராச பயங்கரன் கற்பூர
பாண்டியன் ராசராசன்
பணிராஜ குஞ்சரனா யோதனப் பிரதா
பன்சித்ரப் பூஷணன்
அந்தமுறு கீர்த்திபூ ஷணமன்ன காருணி
யண்டருமா சத்ருதன்
ஆனபுரு டோத்தமன் கூன்சவுந் தரபாண்டிய
னநமுறு குலசேகரன்
ஆகவெழு பத்துமுன் றாம்வழுதி மோகமா
யணைகணிகை புதல்வனானோன்
அய்யனர சுக்குரிய மகவேழை யாகையா
லவ்வரசு தவறாமலே
உந்துகுல சேகர மாவலிவா ணன்மக
னுக்குடைய வன்போலவே
உயரழகா டுமைவலு வாலுலகி லறுநூறு
வுறுபாகம் மறையவர்க்கு
உதவுதெய் வச்சிகா மணிமா வலிவாண
னுந்தவன் புத்திரனாகி
ஓங்குபுகழ் சுந்தரத் தோழமா வலிவாண
னுதவுகுல சுப்ரதீபன்
நந்தகன் படுநாடு வெட்டுமா வலிராச
னனுசன் புத்திரன்
ஞானகுல சேகரச் சோலைமா வலிவா
ணன்மகள் மகன்ராகவா
நந்தனெ மூமரச நீதமு மமைச்சர்க
ணடத்தையும் பலமறிந்து
நாளுநாள் வடுகர் சீமையைக் கொள்வதாய்
நாடியே (க)டல்சென்றே.

இவை, மதுரையை ஆண்ட பாண்டிய வமிசத்தினர், வாணர் முதலியவர் பட்டியல்.

---

* 1 ......ப்பதாகன்

(இ-ள்) இந்து குலத்துஅரசர்கள் மிகப்பலர். அதில் சிவபிரான் திருவிளையாடல்கள் அறுபத்துனான்கில் அறிந்திடும் பாண்டியரில், குலசேகரேந்திரன், மலையத்துவசன், இன்பம் சேர்கின்ற தடாதகையின் கணவன் என வரு கின்ற சுந்தரேசர், அருளிய உக்கிர பாண்டியன் முதல், வீரன், அபிஷேகன், விக்கிரம, குலோத்துங்க, ராஜசேகர பாண்டியன், சுந்தரேச பாதசேகரன், இராசசன், தூலத்துவசன், குங்குமன், சோள(ம?) சூடாமணி, அனந்தகுணன், வரகுணன், சூடாமணிச்சுகுணனும், துவசராசகுலோத்தமன், பிரதாபசூரியன், சுரதபாண்டி யன், தூயகுலபூஷணன், சித்திரத்துவசன், ராசசூடா மணி,செண்பகன்,உள்ளம் களிக்கின்ற வங்கிசசூடாமணி, உக்கிரசேனன், விக்கிரம கஞ்சகன், சித்திரதருமன்,சரம கோலாகலன், சித்ரசேனனும், சத்துருஞ்சயன், சித்ர விரதன், குலசூடாமணி, வங்க சேகரன், அதுல கீர்த்தி, சித்திரவிக்கிரமன், அதுலவிக்கிரமனுடன், குலசேகரன், அரிமர்த்தனன், மந்தரபுயன், வீரபாக்கரன், பிரதாப மார்த்தாண்டன், வம்சத்துவசன், வம்ச விச்சிரோமணி, ரிபுமர்த்தனன்,வீரவாகு, விக்கிரமவாகு, வங்கபூஷாசக நாதன், பராக்கிரமன், வாகுவும், பாண்டீசுவரன்,மால் பராக்ரம, ராசசார்த்தூல, ராசமார்த்தாண்டர், பாண்டிய வம்சனே.

தொடர்பு கொள்ளும் இராச கெம்பீரன், ராசேந் திரனும், பாண்டிய வங்கியப்பதாகன், பாண்டியவங்கிஷ தீபனும்,புரந்தர சித்து, பகர்கின்ற சோழவம்சாந்தகன், பாலனான நாசபயங்கரன், கற்பூரபாண்டியன், ராச ராசன், பணிகின்ற ராஜகுஞ்சரன், ஆயோதனப் பிரதாபன், சித்ரப் பூஷணன், முடிவு பெறுகின்ற கீர்த்தி பூஷணமன்னன், காருணி, அனுகுதற்கு அரிய மாசத்ருதன் ஆன புருடோத்தமன், கூன், சவுந்தர பாண்டியன், அநமுறு(?)குலசேகரன் ஆக எழுபத்து மூன்று பாண்டியர்; மோகம் கொண்டு அணைந்த கணிகையின் மகனானவன் அய்யன், அரசுக்கு உரிய குழந்தை ஏழை ஆகையால்,அந்த ஆட்சிதவறாமல் நடத்த, குல்சேகர மாவலிவாணன் மகனுக்கு, உரியவன் போலவே, உயர் அழகு ஆடு உமை(?)வலுவால் உலகில்

அறுநூறு உறுபாகம், மறையவருக்கு உதவுகின்ற தெய்வ சிகாமணி மாவலிவாணன் நடத்த, அவன் மகனாகி ஓங்குகின்ற புகழுடைய சுந்தரத்தோழ மாவலிவாணன் உதவுகின்ற குல சுப்ரதீபன், நந்தகன், படு நாடு எட்டும் மாவலிராசன் அனுசன் புத்திரன் ஞானகுலசேகரச் சோலை மாவலிவாணன் மகள் மகன் இராகவானந்தன், ஏழாம் அரச நீதமும், அமைச்சர்கள் நடத்தையும், ஆற்றல் அறிந்து, எந்நாளும் வடுகர் சீமையைக் கைக் கொள்வதை நாடிக் கடலில் சென்று கொண்டு, (தென்னவன் மதுரையில் அரசு புரிந்தான்).

(வி-ரை)திருவிளையாடற் புராணம் பாண்டிய மன்னர் பட்டியல் தருவது மிக்கும் குறைந்தும் முறைமாறியும் இங்கு அமைவதாகத் தோன்றுகின்றது. குலசேகர பாண்டியன் முதல் கூன்பாண்டியன் வரை எழுபத்து நால்வர் அமைய(அபிதான சிந்தாமணி,ப,1615) தீபிகை குலசேகரேந்திரன் முதல் குலசேகரன் வரை எழுபத்து மூன்று தருகின்றது (அட்டவணை பார்க்க).ஏறத்தாழ அறுபத்து மூன்று பெயர் நிலைகள் ஓரளவு ஒத்து அமைகின்றன.வீமத்தேர் மன்னன், சேரவம்சாந்தகன், பாண்டிவம்சேசன், ஜகந்நாதன் என்பன தீபிகையில் காணப்படவில்லை. மந்தரபுயன், வீர பாக்கரன், குலசேகரன் எனத் தீபிகை மிகுதியாகப் பெயர்கள் தருகின்றது. தீபிகையில் மூன்றுமுறை குலசேகரன் (1, 39, 73) என்பது அமைகின்றது.

வாணாதிராயர் குலத்து முதல்வன் மாவலிவாணன்; மாவலி வாண வமிசத்தினர் 8-ஆம் நூற்றாண்டு வரையிலும் வட நாட்டிலும் தொண்டை நாட்டிலும் அரசு செலுத்தினர்.இறு தியில் பாண்டிய மன்னரிடத்துப் படைத் தலைவராயும் சிறுநாடு களுக்குத்தலைவராயும் இருந்து வந்தனர்என்பர் (கலைக்களஞ் சியம், தொகுதி 5,ப.423).

பாண்டியரில் இறுதியான மாறவர்மன் குலசேகரன் 1268-1308),பட்டத்து மனைவியின் புதல்வனாக சுந்தரபாண்டி; யனையும், காமக்கிழத்தியின் மகனாக வீரபாண்டியனையும் கொண்டதும், பின்னவனை அரசனாக்கியமையால் உரிமைப் போர் எழுந்ததும் பற்றிய செய்திகள் உள (மதுரை நாயக்கர் வரலாறு, அ.கி.பரந்தாமனார், பாரிநிலையம், சென்னை ,1966. பக் 33-34). இதனையே, பாண்டியர் - வாணர் பட்டியலுக்கு இடைப்பகுதியில் தீபிகை குறிப்பிடுகிறது எனலாம்.

# மன்னர் பட்டியல்.

| தீபிகை | | திருவிளையாடல் | |
|---|---|---|---|
| 1. | குலசேகரேந்திரன் | 1. | குலசேகர பாண்டியன் |
| 2. | மலையத்துவசன் | 2. | மலயத்துவச- |
| 3. | சுந்தரேசர் | 3. | சோமசுந்தர- |
| 4. | உக்கிர பாண்டியன் | 4. | உக்ரகுமார- |
| 5. | வீரன் | 5. | வீர- |
| 6. | அபிஷேகன் | 6. | அபிஷேக- |
| 7. | விக்கிரம | 7. | விக்ரம- |
| 8. | குலோத்துங்க | 9. | குலோத்துங்க- |
| 9. | ராசசேகர பாண்டியன் | 8. | இராஜசேகர- |
| 10. | சுந்தரேசப் பாதசேகரன் | 18. | சுந்தரேசபாதசேகர- |
| 11. | ராசசன் | 13. | இராஜேச- |
| 12. | தூலத்துவசன் | (55 | குலத்துவச-) |
| 13. | குங்குமன் | 69. | குங்கும- |
| 14. | சோள சூடாமணி | 57. | சோம சூடாமணி- |
| 15. | அனந்தகுணன் | 10. | அநந்தகுண- |
| 16. | வரகுணன் | 19. | வரகுண- |
| 17. | சூடாமணி | (60 | பூப சூடாமணி-) |
| 18. | சுகுணன் | 21. | சுகுண- |
| 19. | துவச ராசகுலோத்தமன் | 31. | துவிஜராஜகுலோத்தம- |
| 20. | பிரதாப சூரியன் | 47. | பிரதாப சூர்ய- |
| 21. | சுரத பாண்டியன் | 67. | சுரத- |
| 22. | குல பூஷணன் | 11. | குலபூஷண- |
| 23. | சித்ரத் துவசன் | 24. | சித்திரத்துவச- |
| 24. | ராச சூடாமணி | 29,59 | இராஜ சூடாமணி- |
| 25. | செண்பகன் | 46. | சண்பக- |
| 26. | வங்கிச சூடாமணி | (46. | அல்லது வங்கிய சூடாமணி) |
| 27. | உக்கிர சேனன் | 35. | உக்கிரசேந- |
| 28. | விக்கிரம கஞ்சகன் | 40. | விக்ரமகஞ்சுக- |
| 29. | சித்திர தருமன் | (25 | சித்திர வர்ம-) |
| 30. | சமர கோலாகலன் | 41. | சமர கோலாகல- |
| 31. | சித்திர சேனன் | 26. | சித்திர சேந- |
| 32. | சத்துருஞ்சயன் | 36. | சத்ருஞ்ஜய- |
| 33. | சித்ர விரதன் | 22. | சித்திர விரத- |
| 34. | குல சூடாமணி | 58. | குல சூடாமணி- |

| | | | |
|---|---|---|---|
| 35. | வங்க சேகரன் | 45. | வாங்கிய சேகர்- |
| 36. | அதுலகீர்த்தி | 43. | அதுல கீர்த்தி- |
| 37. | சித்திர விக்கிரமன் | 27. | சித்திர விக்ரம- |
| 38. | அதுல விக்கிரமன் | 42. | அதுல விக்ரம- |
| 39. | குலசேகரன் | (61 | குலேச-) |
| 40. | அரிமர்த்தனன் | 62. | அரிமர்த்தன- |
| 41. | மந்தர புயன் | | — |
| 42. | வீர பாக்கரன் | | — |
| 43. | பிரதாப மார்த்தண்டன் | 39. | பிரதாப மார்த்தாண்ட- |
| 44. | வம்சத் துவசன் | 48. | வம்சத் துவச- |
| 45. | வம்ச விச் சிரோமணி | 53. | வம்ச சிரோமணி- |
| 46. | ரிபுமர்த்தனன் | 49. | இரிபுமர்த்தன- |
| 47. | வீரவாகு | 64. | வீரவாகு- |
| 48. | விக்கிரமவாகு | 65. | விக்ரமவாகு- |
| 49. | வங்க பூஷா சகனாதன் | (56 | வம்ச விபூஷண-) |
| 50. | பராக்கிரமன் | 66. | பராக்ரம பாகு- |
| 51. | வாகு | 68. | வாகுபல- |
| 52. | பாண்டீசுவரன் | 54. | பாண்டீச்சுர- |
| 53. | மால்பராக்ரமன் | (38 | வீம பராக்ரம-) |
| 54. | ராச சார்த்தூல(ன்) | 30. | இராஜ சார்த்தூல- |
| 55. | ராச மார்த்தாண்ட பாண்டிய(ன்) | 25. | இராஜ மார்த்தாண்ட- |
| 56. | ராச கெம்பீரன் | 14. | இராஜகம்பீர- |
| 57. | ராசேந்திரன் | 12. | இராஜேந்திர- |
| 58. | பாண்டிய வங்கியப் பதாகன் | 17. | வங்கிய பதாக- |
| 59. | பாண்டிய வங்கிஷ தீபன் | 15. | வங்கியதீப- |
| 60. | புரந்தரசித்து | 16. | புரந்தரசித்துப்- |
| 61. | சோழவம்சாந்தகன் | 50. | சோழ வம்சாந்தக- |
| 62. | ராச பயங்கரன் | 34. | இராஜ பயங்கர- |
| 63. | கற்பூர பாண்டியன் | 70. | கருப்பூர- |
| 64. | ராசராசன் | 20. | இராஜ ராஜ- |
| 65. | ராஜ குஞ்சரன் | 33. | இராஜ குஞ்சர- |
| 66. | ஆயோதனப் பிரதாபன் | 32. | ஆயோதனப் பிரவீண- |
| 67. | சித்ரப் பூஷணன் | 23. | சித்திர பூஷண- |
| 68. | கீர்த்தி பூஷண மன்ன(ன்) | 44. | கீர்த்தி பூஷண- |
| 69. | காருணி | 71. | காருண்ய- |
| 70. | சத்ருதன் | 73. | சத்துரு சாதன- |

71. புருடோத்தமன் 72. புருஷோத்தம-
72. கூன் சவுந்தர பாண்டியன் 74. கூன்-
73. குலசேகரன் —

96. மதுரையிற் றென்னவ னரசுபுரி காலையில்
வடுகப்பிர பஞ்சமாகி
வழுதியைத் தென்காசி புகவிரட் டுந்திறல்
வடுகரர சாட்சிபகர்வாம்
மால்விசுவ நாதநா யக்கர்கிஷ் ணப்பவேள்
வளர்பெரிய வீரப்பமால்
மன்னுபுகழ் குமரகிஷ் ணப்பநா யகர்புர
வல்லவந டாத்துமதுலன்
அதியோக கஸ்தூரி ரங்கப்ப நாயக்கர்
அகிலமெல் லாஞ்செலுத்தும்
அகண்டலன் பெரியமுத்து வீரப் பர்கன
மானதிரு மலைநாயகர்
அருள்பெருகு முத்து வீரப்ப நாயக்கனு
மன்புறுஞ் சொக்கனாதன்
அபையரெங்க கிஷ்ண முத்துவீரப்பனுல
காள்மங்க மாள்வனிதையும்
பதியான விசயரங் கச்சொக்க நாயக்கர்
பார்த்திபன் பாவலர்க்கும்
பண்பான கொடையருளு மீனாட்சியம்மையோடு
பதிமூன்று பட்டமாகும்
பகருவர தன்பின்பு நாயனரு ளாலும்
பவுத்தரு மிகுந்தவனியைப்
பகைஞரை யடர்ந்தவனி யரசுறு நபாபெனு
பண்பார் நபாபுவென்றும்
கதியோக னானசந் தாசாய்பு நபிமார்
கனம்பெறு படேசாயவென்னும்
கதிர்மகுட கோசரை முத்து லாக்கனும்
நபாபுமம் மலிகானுடன்
காக்குமு ராரிகோற் படைசாய்பு மாபூசல்
கானடல் மேஸ்தாலிகான்
கனவீர கான்சாய்பு வுடனெட்டு நிருபருக்
கப்பாற்சு வேதாரமே.

இது, மதுரையை ஆண்ட நாயக்கர், நவாபு போன்ற மன்னர் பட்டியல்.

(இ-ள்) மதுரையில் பாண்டியன் அரசாளும் போது, வடுகரின் உலகு ஆகி, பாண்டியனைத் தென்காசியில் புகும் படி விரட்டும் வலிமை கொண்ட வடுகரின் அரசாட்சி கூறுவேன்- சிறந்த விசுவநாத நாயக்கர், கிருஷ்ணப்ப வேள், வளர்கின்ற பெரிய வீரப்ப மால், நிலைத்த புகழுடைய குமர கிருஷ்ணப்ப நாயகர், புரத்தை வல்லமையுடன் நடத்தும் அதுலன், மிக்க யோகமுடைய கஸ்தூரிரங்கப்ப நாயக்கர், உலக மெங்கும் செலுத்தும் அகண்டலனான பெரிய முத்து வீரப்பர், உயர்வுடைய திருமலை நாயகர், அருள் பெருகுகின்ற முத்து வீரப்ப நாயக்கனும், அன்பு பொருந்திய சொக்கநாதன், அபயரங்க கிருஷ்ண முத்து வீரப்பன், உலகை ஆளும் மங்கம்மாள் எனும் பெண்ணும், தலைவனான விசய ரங்க சொக்க நாயக்கர் அரசன், பாவலருக்கும் பண்பான கொடை ' அளிக்கும் மீனாட்சியம்மையோடு பதின்மூன்று பட்டத்து அரசராகும் எனக் கூறுவர். அதன் பின்பு தலைவன் (நாயக்கன் ?) அருளாலும், பவுத்தரும் (பௌஜ்தார் ?) பெருகி உலகத்தினை, பகைவரை நெருக்கி, உலக அரசுடைய நவாபு என்ற, பண்பு பொருந்திய ஆர்(க்காட்டு) நவாபு என்றும், மிக்க உபாயமுடையவனான சந்தா சாகிபு என்னும் நபிகள், பெருமை பெற்ற படேசாய என்னும் கதிர் மகுட கோசரை (?) முத்துலாக்கனும் நவாபும் (?) அந்த அலிகானுடன், காக்கும் முராரி (முராரிராவ் ?), கோல் படை சாய்பு (?) மா பூசல்கான் (மாபூஸ்கான் ?), அடல் மேஸ்தாலிகான், கன வீர கான் சாய்புவுடன் எட்டு அரசருக்கு அப்பால் வெள்ளையர் (சுபேதார் ?) ஆட்சியாம்.

(வி-ரை) நாயக்கர் ஆட்சியின் பதின்மூன்று அரசர் பற்றிய செய்தி வரலாற்றில் தெளிவு படுத்தப்படுகின்றது (அட்டவணை பார்க்க). தீபிகை கஸ்தூரி ரங்கப்ப நாயக்கரை ஆட்சிபுரிந்த தாகத் தந்து முத்துக் கிருஷ்ணப்ப நாயக்கரை விடுகின்றது.

நவாபுகள் ஆட்சி பற்றிய செய்தி இது போன்று தெளிவாக அமைந்திலது. கர்நாடக நவாபுகளின் வம்சாவழிப் பட்டியல்,

| | |
|---|---|
| சதத்துல்லா கான் | 1710 — 1732 |
| தோஸ்து அலி | 1732 — 1740 |

| | |
|---|---|
| சப்தர் அலி | 1740 — 1742 |
| முகமது சாயித் கான் | 1742 — 1743 |
| அன்வருதீன் கான் | 1743 — 1749 |
| முகமது அலி | 1749 — 1795 |
| உமதுத்துல்லா உமாரு | 1795 — 1801 |
| அசீம் உத்துல்லா | 1801 — 1820 |

எனத் தெளிவாக அமைபினும் (தமிழக வரலாறு: 1565-1980, அ. கணபதி, மல்லிகை பதிப்பகம், மதுரை, 1980, ப. 104). மதுரையை ஆண்டவர் பற்றிய எண்ணங்கள் முற்றிலும் தெளிவறவில்லை

ஆர்க்காட்டு நாவப் 'பௌஜ்தார்' எனப்படுதல் உண்டு (தமிழக வரலாறு : 1565-1967, ந. சுப்ரமண்யன், என்னெஸ் பப்ளிகேஷன்ஸ், மதுரை, 1980). தோஸ்த் அலியின் மருமகனான சந்தா சாஹேபு, சூழ்ச்சியால் மதுரையை நாயக்கர் அரசி மீனாட்சியிடமிருந்து கைப்பற்றியாண்டான். சந்தாசாஹேபின் ஒரு சகோதரனான பூதாசாஹேபு மதுரையில் காவல் மேற்கொண்டான். 1741-இல் மராட்டியர் திருச்சியில் சந்தாசாஹேபைச் சிறைப்படுத்தி முராரிராவ் என்பவனைக் காவல் பணியில் அமைத்தனர். அப் போரில் பூதசாஹேபு மாண்டான். 1749 ஆம்பூர் போரில் தோல்வியுற்ற முகமதலிகான் திருச்சியில் தஞ்சம் புகுந்து, எதிர்த்த சந்தாசாஹேபை வென்றான். முகமதலிக்காகத் தஞ்சையைக் கைப்பற்ற மாபூஸ்கான் உதவினான்.

ஆர்க்காட்டு நவாபின் படையில் கமாண்டராக இருந்த கான்சாகிபு; நவாப் ஆட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் வரிவசூலித்து பிரிட்டிஷ் கம்பெனியாருக்கு உதவி மதுரையின் சுபேதார் ஆனான் கான்சாகிபு சண்டை இவனது சுய ஆட்சி முடிந்த போரைத் தருகின்றது தொடர்ந்து ஐரோப்பியரின் முழுமை ஆட்சி இந்தியச் சுதந்திரம் வரை மதுரையில் தொடர்கின்றது.

அட்டவணை

## மதுரை நாயக்கர்கள் பட்டியல் *

(1) விசுவநாத நாயக்கர்
(1529 - 64)

|

(2) கிருஷ்ணப்ப நாயக்கர் I
(1564 - 72)

|

(3) வீரப்ப நாயக்கர்
(1572 - 95)

- (4) கிருஷ்ணப்ப நாயக்கர் II (1595 - 1601)
- விசுவப்ப நாயக்கர்
- கஸ்தூரி ரங்கப்ப நாயக்கர்

விசுவப்ப நாயக்கர்

|

(5) முத்துக் கிருஷ்ணப்ப நாயக்கர்
(1601 - 09)

- (6) முத்து வீரப்ப நாயக்கர் I (1609 - 23)
- (7) திருமலை நாயக்கர் (1623 - 59)
- குமாரமுத்து நாயக்கர்

(7) திருமலை நாயக்கர்

|

(8) முத்து வீரப்ப நாயக்கர் II
(1659)

|

(9) சொக்க நாத நாயக்கர்
(1659 - 82)
(மனைவி மங்கம்மாள்)

|

(10) முத்து வீரப்ப நாயக்கர் III
(1682 - 89)

|

(11) மங்கம்மாள்
(1689 - 1706)

|

(12) விஜயரங்க சொக்கநாத நாயக்கர்
(1706 - 32)

|

(13) மீனாட்சி அரசி
(1732 - 36)
(விஜயரங்க சொக்க நாதர் மனைவி)

---

* மதுரை நாயக்கர் வரலாறு — அ. கி. பரந்தாமனார், பாரி நிலையம், சென்னை. (2-ஆம்) 1966, பக் xix.

97. சிவனுமைக் கும்வில்வ மாதவன் மாவனந்
திசைமுகன் வாணிவனசஞ்
செவ்வலரி துர்க்கையைங் [1]கரனறுகு நீபமோ
செவ்வேள் [2]வலாரிதருவே
சுவர்பர வுச்சியிம மெல்லிக ரணம்மலை
சொல்லுத்தி வனசமறையோன்
சோழனுக் காத்தியுஞ் சேரனுக் குப்பனை
தொல்வழுதி மாலைநிம்பம்
பவனா சனக்கேது வுக்கோ வலம்புரி
பகருரு சன்சீரகம்
பாதசர்க்குக் குவளைகுங் குமப்பூத் தொடை
பவுத்தர்க்கு வடுகர்தன்னோ
டவதிசெய் கள்ளர்மற வர்க்ககம் படியர்க்கும்
ஆயர்தொட்டி யர்பின்னோர்க்கும்
ஆமுல்லை மாலிகை சமரத்தில் வென்றவர்க்
காம்வாகை மாலைதானே.

இது, தேவர், அரசர், மக்கள் போன்ற பலர்க்குரிய மாலைகளைக் கூறுகின்றது.

(இ-ள்) சிவனுக்கும் உமைக்கும் வில்வம்; மாதவனுக்குப் பெருமையுடைய துளசி; பிரமனுக்கும் வாணிக்கும் தாமரை; செவ்வலரி துர்க்கைக்கு; ஐங்கரனுக்கு அறுகு; வெண் கடம்பு செவ்வேள்; இந்திரனுக்குக் கற்பகம்; ... ... ... தாமரை அந்தணனுக்கு, சோழனுக்கு ஆத்தியும், சேரனுக்குப் பனையும், பழமையுடைய பாண்டியனுக்கு மாலை வேம்புமாம். இராசியான கேதுவுக்கோ வலம் புரி. கூறுகின்ற வைசியனுக்குச் சீரகம். சூத்திரர்க்குக் குவளை. [குங்குமப் பூமாலை பௌத்தர்க்கு. வடுகர் தன்னோடு அளவிடற்குரிய கள்ளர், மறவர்க்கும், அகம்படியர்க்கும், ஆயர், தொட்டியர், பின்னோர்க்கு முல்லை மாலையாகும்; போரில் வென்றவருக்குத்தான் வாகை மாலை ஆகும்.]

(வி-ரை) நிகண்டுகள், இரத்தினச்சுருக்கம், அறுவகை இலக்கணம், பிரபந்தத் திரட்டு போன்ற சில நூல்கள் இறைவர், மக்கட் குலத்தினர், போன்ற சிலர்க்கு மலர்-மாலை சூட்டுவதுண்டு.

---

* 1 கான்தகு

சேர சோழ பாண்டியர்க்குரிய மாலைகள் பண்டைத் தமிழ் இலக்கியங்களிலேயே சுட்டப்படுகின்றன. வாகை வெற்றி மாலை ஆகுதலும் பண்டைச் செய்தியாம்.

தீபிகையாசிரியர் மாலையை மட்டும் கூறுவது எண்ணத் தக்கது. பிற நிகண்டு வகை நூல்கள் பெரும்பாலும், பல செய்தியுள் ஒருகூறாக வன்றி இதனைத் தனியே கூறுதல் அருமை.

இப்பாடலின் இடைப்பகுதியின் பொருள் தெளிவுபட்டிலது.

98. ஆசுமது ரஞ்சித்ரம் விஸ்தார நான்குகவி
யரியபொரு ளடிபாவணி
யானது கொடுத்துமற் றொருவர்பா டென்னவே
யறைகுவோ னாசுகவியாம்
அதிபொருட் செல்வமுஞ் சொற்செல்வ முந்தொடையு
மாந்தொடை விகற்பஞ்செறிந்
தணியுரு வகம்முதல் லின்னிசை யினமுதத்
தாற்றுவோன் மதுரகவியாம்
பேசுசக் கிரமேக பாதமொடு சுழிகுளம்
பேர்பாவி னப்புணர்ப்பு
பெறுமாலை மாற்றோ ரெழுத்தின முதலாய்ப்
பிதற்றுவோன் சித்திரகவியாம்
பெற்றபன் மணிமாலை மும்மணிக் கோவையிசை
பிள்ளைக் கவிக்கிரீடை
பெருங்காப் பியம்பரணி யாதியாய்ச்
சொல்லுவோன்
பிரதாபவித் தாரகவியாம்
மாசிலா நற்கவி கமகன்வா தீவாக்கி
மதிநால்வ ரதிலாசுவும்
மதுரஞ்சித் ரமும்பிற வித்தார மும்பாடும்
வல்லவன் கவியாகுமாம்
மாறாத மதியினாற் றுன்ன ரும்பொருள்
மன்னுசெம் பொருளுடையதாய்
வடிவோடுங் காட்டியே விவகரிப் போனுலகில்
மறுவிலாக் கமகனாகும்
காசினிக் காரணமு மேற்கோ ளெடுத்துமே
காட்டிபிறன் கோளையே
கதமுடன் மறுத்துமே தன்மத நிறுத்துவோன்
காசிலா வாதியாகும்

கனிவுறு மறத்தையும் பொருளையின் பத்தையுங்
கதிதரும் வீடுநான்கின்
கருத்துறு திறத்தையும் விரித்துரைத் தருளுவோன்
காக்கும்நல் வாக்கியாமே.

இது, நாற்கவி, நாற்புலவர் பற்றிய விளக்கம் தருகின்றது.

(இ-ள்) ஆசு, மதுரம், சித்ரம், விஸ்தாரம் எனக் கவி நான்கு. அரிய பொருள், அடி, பா, அணி என்பன கொடுத்து, மற்றொருவர் பாடு எனக் கூறவே, சொல்பவன் ஆசு கவியாம் ; மிக்க பொருள் சிறப்பும், சொல்லாற்றலும், தொடையும், ஆகின்ற தொடை விகற்பமும் செறிந்து அணி, உருவகம் முதல் இனிய இசையின் அமுதம் போன்று பாடுவோன் மதுரகவியாம் ; சொல்கின்ற, சக்கரம், ஏகபாத மொடு, சுழிகுளம், பெரிய பா இனப் புணர்ப்பு, பெறும் மாலை மாற்று, ஒரெழுத்தினப் பாட்டு, முதலாகப் பாடுவோன் சித்ரகவியாம் ; பெற்ற பன்மணிமாலை, மும்மணிக் கோவை, இசைக்கும் பிள்ளைக் கவி, கிரீடை, பெருங்காப்பியம், பரணி முதலாகச் சொல்பவன் புகழுடைய வித்தார கவியாம். குற்றம் இல்லாத நல்ல கவி, கமகன், வாதி, வாக்கி எனப்புலமையுடையவர் நால்வர்; அதில் ஆசுவும் மதுரம் சித்ரமும் பிற வித்தாரமும் பாடும் ஆற்றலுடையவன் கவியாகும்; மாறாத அறிவினால் நெருங்குதற்கு அரிய பொருளை நிலைத்த செம்பொருள் உடையதாய் வடிவோடும் காட்டியே விவரிப்பவன் உலகில் மறுவில்லாத கமகனாகும். உலகக் காரணமும் மேற்கோளும் எடுத்துக் காட்டிப் பிறன் கொள்கையைச் சிற்றத்துடன் மறுத்தும் தன் மதம் நிறுவுபவன் குற்றம் இல்லாத வாதியாகும். கனிவு பொருந்திய அறத்தையும், பொருளை, இன்பத்தையும் நெறி அமைகின்ற வீடு ஆகிய நான்கின் கருத்து அமைந்த திறத்தையும் விரித்துக் கூறி அளிப்பவன் காக்கும் நல் வாக்கியாம்.

(வி-ரை) நாற்கவி பற்றிய எண்ணம் யாப்பு பாட்டியல்களில் அமைகின்றன. நிகண்டுகளும் இத்தகு செய்திகள் தருவதுண்டு. பெரும்பாலும் இவை ஒத்து அமையினும், சித்திரகவி, வித்தார கவி பற்றிய பட்டியல்களில் ஒவ்வொரு நூலில் வேறுபாடு அமைய வாய்ப்புண்டு.

முதல் நிகண்டான திவாகரம் தந்த இச் செய்திகள் யாப் பருங்கல விருத்தியில் இடம் பெற்றுப் பிந்தைய பாட்டியல்கள் பெரும்பாலனவற்றிலும் தொடர்கின்றன. தண்டி போன்ற அணி நூல்கள் சித்திர கவியைத் தம் பகுதியில் இணைக்கின்றன.

தனிப்பாடற் காலம், காளமேகம் போன்ற ஆசுகவிகளைத் தருகின்றது. மதுரகவி எனும்போது, மதுரகவி யாழ்வார் நினைக்கத் தக்கவர். திருக்கச்சூர் நொண்டி நாடகம் பாடிய மதுரகவி ராயரையும் எண்ணலாம். சித்திரகவிகளுள் மாலை மாற்று, எழுகூற்றிருக்கை போன்ற சில சம்பந்தரால் பாடப் பட்டு பக்திக்கால ஆக்கமாகின்றன. பல புராணங்கள் நாக பந்தம் போன்ற சித்திரகவிகளைப் பயன் கொண்டுள்ளன. வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள் பாம்பன் குமர குருதாச சுவாமிகள் முதலியோர் மிகுதியாக ஏகபா தம் போன்ற சித்திர கவிகளைப் பாடியுள்ளனர். ஓரெழுத்துப்பாட்டு அருணகிரி நாதரிடம் உண்டு. வித்தார கவி, காப்பியம் பிரபந்த வகைகளை உட்கொள்கின்றது.

காமகன், வாதி, வாக்கி பற்றிய எண்ணங்கள் புலமையின் வரையறையைக் காட்டுவதுடன், அரங்கேற்றம், வாதிடுதல் போன்ற சூழற் பயனையும் உணர்த்துகின்றன.

99. அங்கங் கலிங்கங் கன்னாடங் கிராட
மவந்திகுருக் குலிந்தம்
அருணங் குருக்குடக மகதமச் சம்போட
மாந்திரஞ் சூரசேனம்
கொங்கணங் கன்னடங் கேகயஞ் சோனகங்
குந்தள மிலாடநிடதம்
கோசலம் விதர்பந் திராவிடஞ் சாலவங்
கொல்லதே பாளம்யவனம்
தெங்கணம் பல்லவம் பாண்டியம் பப்பரஞ்
சிந்துகாந் தாரசீனம்
சிங்களங் காசமலை யாளகாம் போசகாச்
சிமீரமொட் டியமாளவம்
வங்கம் யுகந்தரங் கூர்ச்சரம் பாஞ்சாலம்
[1]வங்களங் கருசந்துளு
வஞ்சகங் கேரளஞ் சோழஞ் சவ்வீரம்
மராடம் புலிந்தமாமே.

---

1 வங்களஞ் கஞ்சந்துளு

இது, தேசங்களின் பட்டியல்.

(இ-ள்) அங்கம், கலிங்கம், கன்னாடம், கிராடம், அவந்தி, குரு, குலிந்தம், அருணம், குருக், குடகம், மகதம், மச்சம், போடம், ஆந்திரம், சூரசேனம், கொங்கணம், கன்னடம், கேகயம், சோனகம், குந்தளம், இலாடம், நிடதம், கோசலம், விதர்ப்பம், திராவிடம், சாலவம், கொல்லம், நேபாளம், யவனம், தெங்கணம், பல்லவம், பாண்டியம், பப்பரம், சிந்து, காந்தாரம், சீனம், சிங்களம், காசம், மலையாளம், காம்போசம், காச்சிமீரம், ஒட்டியம், மாளவம், வங்கம், யுகந்தரம், கூர்ச்சரம், பாஞ்சாலம், வங்காளம், கருசம், துளுவம், சகம், கேரளம், சோழம், சவ்வீரம், மராடம், புலிந்தம் ஆமே.

(வி-ரை) ஐம்பத்தாறு தேசங்கள் பற்றிய எண்ணம், பொருட்டொகை நிகண்டு (971), பிரபந்தத் திரட்டு (500-02) முதலிய வற்றில் உண்டு. குமரிக் கண்டத்தின்கண் அமைவனவாக இவற்றைப் பிரபந்தத் திரட்டு அமைக்கின்றது. பல வேறுபாடு அமைய வாய்ப்பு உண்டு (அட்டவணை காண்க). பதினெண் பாடை பற்றிய எண்ணங்களின் பிற்பட்ட வளர்ச்சியாக இப் பல தேசக் கருத்து அமையலாம். பொருட்டொகை நிகண்டும் தீபிகையும் முழு அளவில் ஒத்துச் செல்கின்றன.

## ஐம்பத்தாறு தேசங்கள்

| | பொருட்டொகை நிகண்டு | பிரபந்தத் திரட்டு | | பொருட்டொகை நிகண்டு | பிரபந்தத் திரட்டு |
|---|---|---|---|---|---|
| 1. | அங்கம் | அங்கம் | 12. | காசம் | — |
| 2. | அருணம் | — | 13. | காச்மீரம் | காச்மீரம் |
| 3. | அவந்தி | அவந்தி | 14. | காந்தாரம் | காந்தாரம் |
| 4. | ஆந்திரம் | — | 15. | காம்போஜம் | — |
| 5. | இலாடம் | விலாடம் | 16. | கிராடம் | — |
| 6. | யவனம் | — | 17. | குருகு | — |
| 7. | ஒட்டியம் | ஒட்டியம் | 18. | குடகம் | குடகம் |
| 8. | கருசம் | — | 19. | குந்தளம் | — |
| 9. | கலிங்கம் | கலிங்கம் | 20. | குரு | — |
| 10. | கன்னடம் | கன்னடம் | 21. | குலிந்தம் | குலிங்கம் |
| 11. | கர்நாடம் | — | 22. | கூர்ச்சரம் | குச்சரம் |

| | பொருட்டொகை நிகண்டு | பிரபந்தத் திரட்டு |
|---|---|---|
| 23. | கேகயம் | கேகயம் |
| 24. | கேரளம் | — |
| 25. | கொங்கணம் | கொங்கணம் |
| 26. | கொல்லம் | — |
| 27. | கோசலம் | கோசலம் |
| 28. | சகம் | — |
| 29. | சவ்வீரம் | — |
| 30. | சாலவம் | சாளுவம் |
| 31. | சிங்களம் | சிங்களம் |
| 32. | சிந்து | சிந்து |
| 33. | சீனம் | சீனம் |
| 34. | சூரசேனம் | — |
| 35. | சோழம் | சோழம் |
| 36. | சோனகம் | — |
| 37. | திராவிடம் | — |
| 38. | துளுவம் | துளுவம் |
| 39. | தெங்கணம் | — |
| 40. | நிடதம் | நிடதம் |
| 41. | நேபாளம் | — |
| 42. | பாஞ்சாலம் | பாஞ்சாலம் |
| 43. | பப்பரம் | பப்பரம் |
| 44. | பல்லவம் | பல்லவம் |
| 45. | பாண்டியம் | பாண்டி |
| 46. | புலிந்தம் | — |
| 47. | போடம் | — |
| 48. | மகதம் | மகதம் |
| 49. | மச்சம் | மச்சம் |
| 50. | மராடம் | மாறாடம் |
| 51. | மலையாளம் | — |
| 52. | மாளவம் | மாளவம் |
| 53. | யுகந்தரம் | — |
| 54. | வங்கம் | வங்கம் |
| 55. | வங்காளம் | பங்களம் |
| 56. | விதர்ப்பம் | விதர்ப்பம் |
| | | தெலுங்கம் |
| | | குருக்கேத்திரம் |
| | | கொங்கம் |
| | | விராடம் |
| | | சேதி |
| | | மகாசீனம் |
| | | திகத்தம் |
| | | இராட்டம் |
| | | சவுராட்டம் |
| | | குகுதம் |
| | | கொப்பம் |
| | | ஆரியம் |
| | | வத்தவம் |
| | | காம்பீரம் |
| | | மிதிலை |
| | | கடாரம் |
| | | தொட்டியம் |
| | | பஞ்சமம் |
| | | கவுடம் |
| | | காம்பீலி |
| | | கொந்தளம் |
| | | ஈழம் |
| | | சேரம் |
| | | கூபகம் |

100. பாதிமதி கங்கையுந் தும்பையணி சோமேசர்
பங்கில்வளர் தேவிநீலி
பனிவரைப் புதல்விவா னரவீர மதுரைநகர்
பாலியா னந்தவல்லி
மாதிரு பதக்கமல மலர்சென்னி சூடுவோன்
மாவிலக் கணசாகர
வாணிகுடி கொண்டகவி ராசபண் டிததீரன்
மகளனு வயன்சகாப்தம்
ஓதுவர் சகத்திரத் தெழுநூற்றி யெழுபதி
னொன்றுவரு டம்சவும்யம்
உவாமீன ரவிதேவி தத்தினி வளகையி
னோங்குவேம் பத்தூர்வளர்
வேதியன் முத்துவெங் கிடசுப்ப நாவலன்
விள்ளும் பிரபந்ததீப
மிக்கதமிழ் வாழிசுந் தரராச மால்வாழி
மேதினியர் வாழிதானே.

இது, நூலாசிரியன் பெயர், வழிமுறை, காலம், நூற்பெயர் கூறி வாழியும் தருகின்றது.

(இ-ள்) பிறைச் சந்திரன், கங்கை, தும்பையும் அணிகின்ற சோமேசரின் பக்கத்தில் அமைகின்ற தேவியான நீலி, இமயமலையின் புதல்வி, சிறந்த பாம்பு எல்லை வகுக்க மதுரைநகரைப் பாதுகாப்பவள், ஆனந்தவல்லி,ஆகிய பெண்ணின் இரு பாதக் கமல மலர்களைத் தலையில் சூடுபவன், பெரிய இலக்கணக் கடலான, சரசுவதி குடியிருக்கும் கவிராசபண்டித தீரனது மகளைக் கலந்தவன், சக ஆண்டான 1771, சௌமிய ஆண்டு, உவா மதி, மீன(பங்குனி)மாதம், கொள்ளும் விதத்தின் இவ் அளகாபுரிபோல ஓங்குகின்ற வேம்பத்தூரில் வளரும் அந்தணன், முத்துவெங்கிட சுப்ப நாவலன், கூறும் பிரபந்த தீபம் எனும் மிக்க தமிழ் வாழி, சுந்தர ராச மால் வாழி, உலகோர் வாழி.

(வி-ரை) காலம் கி.பி 1849 எனப் புலனாகின்றது. கி.பி79-இல் சகம் முதலாமாண்டு என்பது குறிப்பு (1771+78).

நூலின்பெயர் பிரபந்த தீபிகை எனாது பிரபந்ததீபம் என அமைவது எண்ணத் தக்கது.

திருவிளையாடற் புராணத்தின் ஆலவாயான படலம், வங்கிய சேகர பாண்டியன் காலத்தில் பிரளயத்தால் மதுரைப்பதியின் எல்லை தோன்றாத போது, சிவபிரான் தன் கங்கணமான பாம்பினை விடுத்து நகர எல்லையைக் காட்டியதைத்தருகின்றது. இதனையே தீபிகை 'வானரவீரமதுரைநகர்' எனத் தந்தது போலும்.

# பாட்டு முதற்குறிப்பு

(எண்-பக்கம்)


| | |
|---|---|
| அக்கர விலக்கணம் | 156 |
| அகவலி னோசை | 46 |
| அங்கங் கலிங்க | 204 |
| அரசர்க்குறுஞ் சின்ன | 181 |
| அரசருக்குக் குழு | 189 |
| அரிய தமிழ் | 8 |
| அரிய வொருபோகு | 29 |
| அலகுறு கலம்பக | 40 |
| ஆசுமதுரஞ் சித்ரம்விஸ்தார | 202 |
| ஆசுமதுரஞ் சித்ர வித்தார | 5 |
| ஆதியிடை மூலை | 96 |
| ஆதியினிலக்கண | 25 |
| ஆதலர்க்குச் சாலை | 155 |
| ஆனகுணமுறு | 134 |
| ஆனந்தபயிரவி | 131 |
| இந்துகுல வழுதி | 191 |
| இராகத்துறுந் தொகுதி | 132 |
| இருநாலுகலை | 85 |
| இருபது பலத்தாதி | 146 |
| இருவகைப்பட்ட | 32 |
| ஈரொன்பதின் | 112 |
| உலகிலுறு மானவர் | 158 |
| உவமையியை | 97 |
| எட்டுவகையின் | 161 |
| எழுவகைத்தோற்ற | 171 |
| ஐந்தெனுநிலக்கரு | 91 |
| ஒருபொருடனை | 71 |
| கடவுளர் வணக்கமும் | 78 |
| கண்ட மாலய | 1 |
| கணநாதர் | 173 |
| கலித்துறையினாலு | 59 |
| கலியாதியிற்றர்ம | 189 |
| கலியுகமுதித்த | 167 |
| கனகக் கழஞ்சி | 150 |
| கனவிலொரு மாதி | 57 |
| காரணமியோகச | 140 |
| கொண்ட கணவன் | 116 |
| சங்கீத முறைமை | 123 |
| சமரத்தி லறுபட்ட | 50 |
| சாதகம் பிள்ளைக்கவி | 12 |
| சாருமாசிரிய | 81 |
| சாற்றிய துலைப்படி | 144 |
| சிவதீட்சை கை | 142 |
| சிவனுமைச்கும் | 201 |
| சீ(ரா)ரும் பொன் | 3 |
| சீருறுந் தெண்டி | 43 |
| சுருதியொருநான்கு | 137 |
| செகமீது சைவத்திலே | 172 |
| செய்ய பாவின முதற் | 116 |
| சொல்லரிய ஆழ்வார்கள் | 165 |
| தக்க நளவருட | 167 |
| தகுதியின்மைக்கு | 98 |
| தலைவனும் பவனி | 76 |
| தவமுனிவர் | 69 |
| தாளமோ சச்சர்ப் | 121 |
| திருக்குறிப்புத் தொண்டர் | 172 |
| திருமழிசைநகரின் | 166 |
| தூய கிருதயுக | 185 |
| தேறு நேரசை | 83 |
| நவிலுப புராணம் | 154 |
| நெடிலடிச்செய்யுட் | 53 |
| நேராயிரங்கழஞ்சி | 149 |
| பகரும் வெண்பா | 38 |
| பத்துக் கலித்துறை | 66 |
| பத்து வெண்பா | 54 |
| பதுமமன்பத்தஞ்சு | 152 |

| | |
|---|---|
| பந்தமுறு ராச | 129 |
| பயிரவி பூபாள | 128 |
| பலமெழுநான்கு | 147 |
| பாட்டுடைத்தலைவ | 64 |
| பாதிமதிகங்கை | 20 |
| பாரதம் பாடிய | 175 |
| பாலைநில வேடர் | 92 |
| பீடுறு திரேதா | 186 |
| புகழ்பெறு துவாபர | 187 |
| பூதலத்துறுபெருங் | 113 |
| பொங்க மன்றி | 75 |
| மகிதலத்துறு | 89 |
| மதிநாக நதி | 4 |
| மதுரை மீனாட்சி | 175 |
| மதுரையிற்றென்னவ | 197 |
| மருதக்கருப்பொரு | 95 |
| மருவலர்களூர் | 51 |
| மருவு சொற்சீரடி | 43 |
| மன்னர்செய்சோடச | 143 |
| மன்னவர் தசாங்கம் | 180 |
| மாற்றலர்கள் | 48 |
| முகிலூர்தி | 163 |
| முல்லைக் கருப்பொருள் | 93 |
| மேவுமாண் மகனுடன் | 34 |
| வமிசத்துறு மிட்ட | 86 |
| வானநா டுற்றிடும் | 114 |
| விச்சுவேசம்விசுவ | 141 |
| வில்லிபுத்தூரினிற் | 166 |
| விள்ளரிய பூபாள | 129 |
| வெண்பாக் கவித்துறை | 36 |
| வெம்போர்முகத் | 27 |
| வேண்டவணி | 99 |
| வைத நான்முக | 136 |
| வந்தரும் வேந்தரை | 62 |
| வைகறை யிராகமோ | 134 |
| ஸ்ரீ ருத்திரம் | 139 |

# சொல்லகராதி

(எண்-பக்கம்)


அகநானூறு 34

அகப்புற மரபிலக்கணம் 7

அகப் பொருள் 136

அகப்பொருள் இலக்கணம் 92

அகப்பொருட்கோவை 19, 32-34

அகப் பொருட் பாடல் 121

அகராதி நிகண்டு 32

அகனைந்திணை 59

அங்கமாலை 19, 34-35, 66

அட்ட மங்கலம் 19, 34-36

அடியார்க்கு நல்லார் 123, 125, 184

அணிகள் நூறு 97-105

அணிகள் முப்பத்தைந்து 105 112

அந்தாதி 55

அநுராக மாலை 20, 35, 36,

அப்பர் 35

அபிதான சிந்தாமணி 115, 144, 147-159, 186, 190, 194

அபிதானப் பொருத்தம் 8, 9

அபிநயதர்ப்பணம் 161

அமிர்த கவிராயர் 34

அரங்கேற்றம் 204

அரச இயல்பு 182

அரச சின்னம் 84, 181-182

அரசத் துணைவர் 183-184

அரசர் உறுதிச்சுற்றம் 183-184

அரசர்க் குழு 183-184

அரசன் விருத்தம் 23, 66-67, 84

அரசியல் வகை 183, 185

அரசியலணி 183, 184

அரசுவா 181

அருணகிரி நாத(யா)ர் 84, 86, 204

அருணந்தி சிவாச்சாரியர் 61

அரும்பதவுரையாசிரியர் 184

அலங்கார பஞ்சகம் 23, 67-68

அவையடக்கம 4

அவையடக்கியல் 75, 76

அறுபத்து நான்கு கலை 156-158

அறுவகை இலக்கணம் 201

ஆசிய ஜோதி 26

ஆசிரிய விருத்தம் 3, 25, 26

ஆத்திசூடி 32

ஆந்திர தேசம் 119, 190

ஆதோரண மஞ்சரி 21, 52

ஆர்க்காட்டு நவாபு 199

ஆழ்வார் 73, 177

ஆழ்வார் பிறப்பு 26, 165-170

ஆற்றுப்படை 22, 60-61

இசைப்பிறப்பு 123-124

இணைமணிமாலை 20, 36-37

இந்திய சுதந்திரம் 199

இந்திர காளியம் 27

இந்துகுலம் 191

இயன்மொழி வாழ்த்து 24, 83-85

இரட்டை நாக பந்தம் 96-97

இரட்டைப் புலவர் 31

இரட்டைமணிமாலை 20, 36-37

இரத்தினச் சுருக்கம் 201

இராகவையங்கார், மு 170

இராசவிர்த்தி 84

இராமாநுஜ நூற்றந்தாதி 56

இருபொருள் 2

இருபா இருபஃது 20, 60-61

இலக்கணக்கடல் 25

இலக்கணம் 4

இலக்கண விளக்கம் 19, 33, 36, 44, 45, 47, 49, 53, 54, 55, 58, 59, 64, 65, 73, 74, 84
இலக்கியம் 4
இறையனார் அகப்பொருள் 163, 177
ஈங்கோய்மலை எழுபது 50
உடற்குற்றம் 154-155
உபநிடதம் 139
உபபுராணம் 154-155
உபவேதம் 137-138
உமாபதி சிவம் 74
உயிர் வருக்க மாலை 42
உலா 22, 55-57, 71, 74, 132, 133
உலா மடல் 22, 57-58
உவமான சங்கிரகம் 90
உழத்திப் பாட்டு 24, 78-80
உழிஞை மாலை 21, 51-52
உற்பவ மாலை 21, 43-45, 164
ஊசல் 81
ஊஞ்சல் 24, 81-82
ஊர் நேரிசை 22, 64-65
ஊர் வெண்பா 22, 64-65
ஊரின் னிசை 22, 62, 64
எண்செய்யுள் 21, 48-49
எண்பேராயம் 184
எண்மணம் 161-163
எழுகூற்றிருக்கை 24, 81, 82
எழுவகைப் பிறப்பு 171
ஏழிசை 123-127
ஐங்குறு நூறு 34, 44, 56, 73, 74
ஐந்திணை இராகம் 132-133
ஐந்திணைச் செய்யுள் 19, 32-34
ஐந்திலக்கணம் 6
ஐம்பத்தாறு தேசம் 205-206
ஐம் பெருங் குழு 184
ஐரோப்பியர் 199
ஒட்டக் கூத்தர் 27
ஒருபா ஒருபஃது 22, 59-61
ஒலியலந்தாதி 22, 53-54
ஒலியந்தாதி 54
ஓலக்க அரசர் 186
கட்டளைக் கலித்துறை 26
கடவுள் வாழ்த்து 2, 4
கடிகை வெண்பா 24, 81-82
கடைநிலை 23, 69-70
கண்படை நிலை 22, 62-63
கதிரவன் வழி 187
கம்பராமாயணம் 26, 187
கம்பன் 45, 68
கமாண்டர் 199
கர்நாடக நவாபு 199
கருப்பொருள் 91-96, 122
கல்வெட்டு 44
கலம்பகம் 19, 29 31, 82
கலம்பக மாலை 20, 40-41
கலித்தொகை 34, 59
கலியுகம் 186
கலியுக மன்னர் 18 -191
கலைக் களஞ்சியம் 170
கலைக் கோட்டுத் தண்டு 113
கவிதை 134
களவழி நாற்பது 29
காஞ்சிப் புராணம் 156
காஞ்சி மாலை 21, 50-51
காப்பியம் 24 68, 86-87, 204
காப்பு மாலை 20, 43-44, 61
காரைக் காலம்மை 37
கால ராகம் 134-135
காளமேகம் 204
கிருதயுகம் 185
கிருதயுக மன்னர் 185-186
கீழ்க்கணக்கு 34, 73, 82, 112-113
குண ராகம் 134-135
குப்த மன்னர் 191
குமர குருதாச சுவாமிகள் 54,204
குமரிக் கண்டம் 205

குரு பரம்பரை 170
குவலயாநந்தம் 103
குழமகன் 23, 71-73
குழுவநாடகம் 78
குற்றாலக் குறவஞ்சி 78
குறத்திப் பாட்டு 78
குறவஞ்சி 24, 74, 76-78
குறிஞ்சிக் கருப்பொருள் 91-92
கூறியறி சிந்து 78
கூர்ம புராணம் 147
கேசாதிபாதம் 23, 66-68
கேட்போர் 4
கைக்கிளை 22, 57-59
கையறுநிலை 23, 69-70
கோட்பாடு 182
சக்கரவர்த்தி 186
சகம் 207
சங்க இலக்கியம் 54, 177
சங்கப் புலவர் 175-177
சங்கம் 175, 177
சங்கீத முறைமை 123-124
சங்கீத ரத்னாகரம் 125
சதகம் 23, 72, 74
சதுரகராதி 5, 26, 78, 80, 88
சந்திராலோகம் 100, 102, 103
சம்பந்தர் 204
சம்பந்தர் தேவாரம் 82
சரமகவி 71
சாதகம் 19, 25-26, 145
சாமுத்திரிகா லக்ஷ(ட்ச)ணம் 36, 66
சாளுக்கியவம்சம் 190
சித்திர(க்) கவி 82, 97, 203, 204
சித்திரமடல் 59
சிதம்பரப்பாட்டியல் 19, 26, 39, 40, 42, 61, 66
சிந்தாமணி 114
சிருங்கார பிரகாச 121
சிருங்கார மஞ்ஜரீ 119
சிலப்பதிகாரம் (சிலம்பு) 7, 45, 47, 82, 88, 123, 125, 144, 184
சிலேடை 45
சிவதீட்சை 142
சிவப்பிரகாசர் 39
சிவாகமம் 140
சிற்பத்தொழில் 140
சிற்ப நூல் 141
சிறப்புப் பெயரகராதி 145, 147
சிறுகாப்பியம் 88
சின்னப்பட்டியல் 189
சின்னப்பூ 24, 71, 83
சுப்பிரமணிய பாரதி 5
சுருதி நூல் 166
சுவாமிநாதம் 19, 29, 31, 37, 41, 56, 58, 68, 74, 86, 88
செந்தமிழ் 1, 3, 4
செப்பேடு 44
செய்யுள் இராகம் 132-133
செயங்கொண்டார் 29
செருக்களவஞ்சி 21, 50-51
செவியறிவு றூஉ 24, 75-76
சேக்கிழார் 174
சேர சோழ பாண்டியர் 202
சேரமான் பெருமாள் 57
சைவம் 142
சோடச தானம் 143-152
ஞாயிறு ஆயிரம் 50
தசாங்கங்கள் 181
தசாங்கத்தயல் 23, 66-67, 181
தசாங்கப்பத்து 23, 69, 71, 181
தசாங்கம் 45, 47, 57, 68, 84, 180, 182
தசாவதாரம் 163-165
தண்டகமாலை 21, 46-47
தண்டபாணி சுவாமிகள் 34, 54, 68, 86, 204

தண்டி (யலங்காரம்) 7, 88, 97, 105-112, 204
தத்துவராயர் 83
தமிழக வரலாறு 19
தமிழிலக்கியம் 177, 202
தனிப்பாட்டு 71
தனிப்பாடல் 74, 84, 88, 204
தனியடியார் 174, 175
தாண்டகம் 23, 71-72, 74
தாரகைமாலை 20, 43-44, 45
தாலாட்டு 63
தாள சமுத்திரம் 123
தாளம் 121-123
தாளவகை யோத்து 123
தானஙகள் 143 152
தானைமாலை 21, 46-47
திருக்குறள் 73
திருத்தொண்டத் தொகை 174
திருத்தொண்டர் திருவந்தாதி 174, 175
திருத்தொண்டர் புராணம் 174
திருப்புகழ் 74
திருமங்கை மன்னன் 58
திருமாலின் அவதாரம் 45
திருவள்ளுவமாலை 177, 180
திருவாய்மொழி 56
திருவிசைப்பா 68
திருவிளையாடல் 2, 191
திருவிளையாடற்புராணம் 194, 208
திரேதாயுகம் 186
திரேதாயுக மன்னர் 186-187
தில்லைத் திருவாயிரம் 50
திவ்வியப் பிரபந்தம் 68
திவாகரம் 153, 155, 156, 181, 182, 185, 204
தும்பைமாலை 21, 51-52
துயிலெடைநிலை 22, 62-63
துவாபரயுகம் 187
துவாபரயுக மன்னர் 187-188
துறை 36
தூது 23, 71-72, 74
தெண்டியாசிரியர் 105
தேசம் 204-206
தேவர் 171
தேவாரம் 133
தொகை அ(ய)சுராதி 93, 95, 144, 154, 155 179, 180, 186, 187
தொகை நிலைச்செய்யுள் 21, 53-54
தொகையடியார் 174, 175
தொண்டரடிப்பொடியாழ்வார் 63
தொண்டை நாடு 194
தொண்ணூற்றாறு பிரபந்தம் 4, 15, 19
தொல்காப்பியம் 33, 53, 56, 59, 61, 6 , 65, 70, 73, 76, 82, 84, 88, 89, 92, 133, 163
தொன்னூல் விளக்கம் 19, 39, 42, 47, 49, 51, 56, 57, 68, 71, 82, 88
தோடையம் 132, 133
நஞ்செழுத்து 71
நந்திக் கலம்பகம் 31
நம்பியகப்பொருள் 33, 92, 93, 133
நம்பியாண்டவர் நம்பி 174
நம்பியாரூரர் 174, 175
நயனப்பத்து 23, 64, 66
நவநீதப்பாட்டியல் 19, 35, 36, 56, 61, 65, 66, 67, 74, 81, 82, 84
நவமணிமாலை 20, 38-39
நாச்சியப்பன், நாரா 27
நாட்டியக்கலை 120, 121

நாட்டிய சாஸ்திரம் 160
நாட்டுப்புற விளையாட்டு 82
நாடகத்துறை 77, 78
நாடகப்பாங்கு 80
நாடகவியல் 120
நாமமாலை 20, 38-40
நாயகன் நாயகி வகை 7, 116-121
நாயன்மார் 172-175, 177
நாவுக்கரசர் 74
நாழிகை வெண்பா 82
நாற்கவி 5, 202-203
நாற்பது 23, 71-73
நாற்புலவர் 202-203
நான்மணிமாலை 20, 38-39
நானாற்பது 73
நிகண்டு 26, 27, 90, 156, 160
163, 172, 201, 202, 203
நுவல்பொருள் 4
நூல்யாப்பு 25
நூலாசிரியர் 206-207
நூலின் காலம் 207
நூற்பெயர் 207
நூற்றந்தாதி 22, 55-56
நெய்தல் கருப்பொருள் 92-93
நொச்சிமாலை 21, 50-51
நொண்டி நாடகம் 204
நோக்கம் 4
பக்திக்காலம் 73, 204
பட்டினத்தார் 39, 61
பண்ணை விசித்திரம் 80
பத்துப்பாட்டு 61, 113-114
பத்துப்பொருத்தம் 4, 8
பதம் 119, 121
பதிகம் 23, 71-73
பதிற்றந்தாதி 22, 55
பதிற்றுப்பத்து 56, 73
பதின்பத் தந்தாதி 56
பதினெண்பாடை 205
பதினெண் புராணம் 152-154
பதினெண் ஸ்மிருதி 137-138
பதினோராம் திருமுறை 82
பயோதரப்பத்து 23, 64, 66
பரணி 19, 28, 29, 51, 132-133
பரத கலைச் சித்திரம் 120
பரத சாஸ்திரம் 128
பரதர் 119
பரந்தாமனார், அ.கி 194, 200
பரிசில் விடை 70
பரிசிற்றுறை 70
பரியாயச் சொல் 10
பல்சந்தமாலை 20, 38-40
பவனிக்காதல் 24, 58, 72, 74
பழிப்பதுபோல் புகழ்வது 2
பள்ளியெழுச்சி 63
பறந்தலைச் சிறப்பு 50
பன்மணிமாலை 20, 40-41
பன்னிரு பாட்டியல் 19, 26, 28, 31, 37-42, 44, 45, 47, 51, 53-56, 58-61, 63, 65, 66, 68, 70, 73, 74, 76, 78, 80, 82-84, 88
பாகம் 6, 7
பாட்டும் தொகையும் 177
பாண்டிக்கோவை 34
பாண்டியர் 191-197
பாதாதி கேசம் 23, 66-68
பாரதி 39, 64, 71
பாலைக் கருப்பொருள் 92-93
பிங்கலம் 153, 155, 156, 181, 186
பிரபந்த இலக்கணம் 26
பிரபந்தங்கள் 14-15
பிரபந்தத் திரட்டு 19, 26, 27, 29, 34, 41, 56, 57, 74, 78, 80, 84, 88, 90, 92, 115, 158, 201, 205

பிரபந்த தீபம் 19, 25, 36, 38, 40, 42-44, 47, 49, 51, 53, 54, 56, 59 61, 63 65, 67, 68, 70, 73, 74. 76, 78, 82, 84, 85, 88
பிரபந்தப் பட்டியல் 12-24
பிரபந்தம் 4, 204
பிரபந்த மரபியல் 5, 19, 28, 31, 36, 39, 40, 43-45, 47-49, 51, 52, 56-58, 60, 68, 71, 74, 82, 84
பிரிட்டிஷ் கம்பெனி 19
பிள்ளைக்கவி 5, 19, 25-27, 132, 133
பிள்ளைத்தமிழ் 44, 82,
புகழ்ச்சி மாலை 20, 40-42
புராணச் செய்தி
புராணம் 5, 88, 172, 186
புருடராகம் 128-131
புலமை 204
புலவர் 6
புறத்திணை 51
புறத்துறை 56
புறநானூறு 70, 76, 82, 84
புறநிலை 22, 60-61
புறநிலை வாழ்த்து 24, 75-76
புறப்பொருள் வெண்பா மாலை 52
பெயர் நேரிசை 22, 64-65
பெயரின்னிசை 22, 62, 65
பெரிய திருமொழி 42
பெரியாழ்வார் 27
பெருங்காப்பியத் தமிழ் 113
பெருந்திணை 59
பெருமகிழ்ச்சி மாலை 20, 40 41, 43
பெருமங்கலம் 24, 87-89
பொருட்டொகைநிகண்டு 55, 26, 138-140, 1 2, 153, 155, 156, 155, 156, 158, 160, 172, 182, 184, 205
பொருத்தம் 131
போர்க்கெழுவஞ்சி 21, 48-49
மக்களிலக்கியம் 80
மகாபாரத சூடாமணி 119, 125, 129, 132, 133, 135, 160
மங்கலச்சொல் 9, 10
மங்கல வெள்ளை 23, 71-73
மங்களம் 132, 133
மடல் 68
மணிமாலை 20, 40-42
மணிவாசகர் 40, 63, 71, 74
மதுரகவியாழ்வார் 204
மரபு 5, 26
மருதக் கருப்பொருள் 95, 96
மன்மதன் 89-90
மாணிக்கவாசகர் 34, 82
மாபாரதப்போர் 165
மாலைகள் 201
மாவலிவாணன் 194
முக்கூடற்பள்ளு 80

முகம் 158-161
முத்தமிழ் 121
முத்துவீரியம் 19, 26, 31, 34, 36, 38,40, 42, 47-49, 51, 53, 54, 56, 59, 61, 63-65, 67, 69, 70, 73, 74, 76, 82, 84, 85
முத்தொள்ளாயிரம் 57, 59
முதலாழ்வார் 56
முதுகாஞ்சி 24, 81-82
முப்பத்திரு அறம் 155-156
முப்பத்திருராகம் 128-129
மும்மணிக்கோவை 19, 30-32
மும்மணிமாலை 21, 46-47
முல்லைக் கருப்பொருள் 93-95
மூவருலா 57
மெய்க்கீர்த்திமாலை 20, 43-44
மெய்க்கீர்த்தி வஞ்சி 44
மொழி முதல் எழுத்து 9, 32
மதுரை 175, 192, 194, 197, 198, 199, 200, 207, 208,
மதுரைநாயக்கர் 194, 197-198 200
யாப்பருங்கலம் 6, 82, 204
யானைத் தொழில் 53
யுகம் 163, 164, 185-190
ரஸ சாஸ்திரம் 119
ரீதி 6, 7
வகுப்புறு ராகம் 131-132
வச்சிராங்கி 111
வசந்தமாலை 20, 43-44
வடமொழி 7, 125
வரையறுத்த பாட்டியல் 9, 10
வள்ளலார் 76
வள்ளுவர் 185
வளமடல் 22, 57-59
வாகைமாலை 21, 52
வாணர் 192-193, 194
வாணாதிராயர் 194
வாதிடுதல் 204
வாதோரணமஞ்சரி 53
வாயுறை வாழ்த்து 24, 75-75
வாழி 206
விண்மாதர் 114-115
வித்தாரகவி 203
விருத்தம் 14
விருத்த விலக்கணம் 24, 83-84
விருத்தி 6, 7
வில்லிபாரதம் 188
விளக்கு நிலை 23, 64-66
விஜயநகரம் 190
வீரசோழியம் 74,
வீரமாமுனிவர் 5, 31
வீரவெட்சிமாலை 21, 46-47
வெண்பா 3, 26
வெண்பாப் பாட்டியல் 19, 31, 38 37, 39-41, 45, 49, 51-53, 56, 59, 60, 64, 65, 67, 68, 70, 71, 73, 76, 81, 88
வெள்ளணி 87, 88
வெற்றிக்கரந்தை மஞ்சரி 21, 48-49
வேதநாயகர் 57
வேதம் 136-137

வண்ணத் தியல்பு 86
வண்ணத் திரட்டு 86
வண்ணம் 24, 85-86, 136
வர்க்கமாலை 20, 40-42
வரலாற்று வஞ்சி 21, 48-49
வருக்கக்கோவை 19, 30-32, 42
வேத ஸ்வரம் 136-137
வேதாங்கம் 136-137
வேனில் மாலை 20, 43-44
வையாபுரிப்பிள்ளை, எஸ். 177
ஜன்யாராகா 132
க்ஷேத்ரக்ஞர் 119